கழக வெளியீடு: ௯௱௮

# சேந்தன் திவாகரம்

MADURAI UNIVERSITY LIBRARY
24 MAR 1970
MADURAI.

திவாகர முனிவர்

அருளிச்செய்தது

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition: May, 1958.

SENTHAN THIVAGARAM

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office*:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200.

# பதிப்புரை

உலகமெல்லாம் புகழ்ந்தேத்தும் உயர்தனிச் செம்மொழியாகிய நம் மொழியில் முதன்மை பெற்று விளங்கிய நூல் நிகண்டு என்பது. முதலில் நிகண்டு கற்றுப் பின்னர் இலக்கியம் பல பயின்று அதன்பின் இலக்கணம் முறையாகக் கற்றவர்களே பண்டைக்காலப் புலவர். நிகண்டு கல்லாதவர் புலமையைச் செல்லாத காசு என மதித்தனர் அக்கால மக்கள். நன்னூற் காண்டிகையுரை (ஆறுமுக நாவலர் பதிப்பு)யில் "யாப்பு - நிகண்டுகற்று இலக்கியப் பயிற்சி செய்தபின் இந்நூல் கேட்கத்தக்கது" என வரைந்திருப்பதும் இதனை வலியுறுத்தும். "நிகண்டு" என்ற சொல்லின் பொருள் "உண்மை" எனவே தெரிகிறது. இதனை ஆய்ந்தால் "நிகழ்ந்தது" என்ற சொல் உலக வழக்கில் இவ்வாறு மருவித் திரிந்து வழங்கியதென்று கொள்வதே பொருத்தமாகும். நாட்டில் நிகழுஞ் சொற்களை இன்ன சொல்லுக்கு இன்ன பொருள், இன்ன பொருளுக்கு இன்ன பெயர் எனக் கண்டு அவ்வுண்மையை வரைந்த நூல்தான் நிகண்டு எனப் பெயர்பெற்றது போலும். இதனைக் கற்றபின்தான் பல இலக்கியம் பயிலும் நிலைமைக்கு ஒருவன் வருவன். அங்ஙனம் பல இலக்கியங் கற்றவனே இலக்கணங் கற்குந் தகுதியுடையவன்; இலக்கணங் கற்றவனே புலமை நிறைந்தவன்; அவனே புலவன், பாவலன், நாவலவன் எனக் காவலராற் பாராட்டிப் பரிசில் வழங்கத்தக்கவனாய் வாழ்வன். எனவே மொழிப்புலமை வேண்டுவோர் முதற்பயிலும் தகவுடையது நிகண்டு என்பது தானே விளங்கும்.

தொல்காப்பியம் என்ற இலக்கணம் மட்டும் இருக்கின்றதே; அக்காலத்தில் இருந்த நிகண்டு எது என்று நாம் ஆராயப்புகுந்தால் அதனைக் காண்பதற்கு வழியின்று;

கடல்கோளாற் பல நூல்கள் அழிந்தனபோல நிகண்டு நூல்களும் அழிந்தன என்றே கோடல்வேண்டும். தொல்காப்பியம் மட்டும் எஞ்சி நின்றது தமிழர் செய்த தவப்பேறே. தொல்காப்பியம் உரியியற் சூத்திரங்கள் ஒரு நூற்றில் முன்னிரண்டும் பின்னெட்டும் நீக்கி எஞ்சிய தொண்ணூறும் ஆதிநிகண்டு ஆக அமைந்து கிடக்கின்றன. "வெளிப்படு சொல்லே கிளத்தல்வேண்டா, வெளிப்படவாரா வுரிச்சொன் மேன" என்ற சூத்திரத்தால் பொருள் விளங்காத உரிச்சொற்களுக்கு மட்டுமே பொருள் கூறினர் தொல்காப்பியர் எனக் காண்கின்றேம். மற்றைப் பெயர் வினைகட்குப் பொருள் காண்பதற்குரிய நிகண்டு நூல் அக்காலத்தில் இருந்ததா? இல்லையா? என்பதை ஆராய்வதற்கு வழியொன்றும் இன்று. எட்டாம் நூற்றாண்டில் திவாகரம் என்னும் நூல் தோன்றியதாக அறிஞர் ஆய்ந்து கண்டனர். இதற்கு முதனூல் யாது? திவாகர முனிவர் இது குறித்துப் பாயிரத்தில் ஏதேனும் குறிப்புக் காட்டியுள்ளனரா? அதுவும் இல்லை. எதனை முதனூலாகக்கொண்டு இந்நூல் செய்தார் என்பதற்குச் சான்று கிடைத்திலது. இலக்கணத்தின் முதனூல் தொல்காப்பியம் என்பதுபோல இலக்கியத்தின் முதனூல் திவாகரம் என்பது மட்டும் தெளிவாக விளங்குகிறது.

ஆதி திவாகரம் என்று ஒன்று விரிவாய் அளவின்றிப் பரந்து சிறந்த நூலாக முன்னிருந்தது; பிங்கலர் அதனைச் சுருக்கிப் "பிங்கலந்தை" என்ற நூல்செய்தார் என்பர் சிலர். அது பொருத்தமின்று. திவாகரம் என்பது இஃது ஒன்றேயாம். சூடாமணி நிகண்டு இயற்றிய மண்டல புருடர்க்கு முதனூல்களாயிருந்தன திவாகரமும் பிங்கலந்தையுமே. அந்நூற் சிறப்புப்பாயிரத்தில்,

"செங்கதிர் வரத்திற் றேன்றும் திவாகரர் சிறப்பின் மிக்க
பிங்கல ருரைநூற் பாவிற் பேணினர் செய்தார் சேர
இங்கிவை யிரண்டுங் கற்க வெளிதல வென்று சூழ்ந்து"

என்ற பாவில் இரண்டும் என முற்றும்மை கொடுத்திருப்பதே தக்க சான்றாகும். சிலப்பதிகாரம் சிந்தாமணி முதலிய

நூல்களின் உரையாசிரியர்களான் மேற்கோளாகக் காட்டப் பட்டுள்ளனவும் திவாகரச் சூத்திரங்களே. ஆதி திவாகரம் என ஒன்றிருந்தால் பண்டைக்கால உரையாசிரியர்களால் ஒன்றிரண்டாவது மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கு மன்றோ? அங்ஙனம் காட்டப்படாததால் ஆதி திவாகரம் உண்டு என்பது அறியாதார் கூற்றென விடுக்க. இன்று நாம் காணும் சேந்தன் திவாகரமே ஆதி திவாகரம் என்பது: வேறு நூலன்று என்று ஆய்ந்து தெளிக. இதன் பின்வந்த நூல் பிங்கலந்தை என்பதும் இவ்விரண் டினையும் முதனூலாகக்கொண்டு மண்டலபுருடர் விருத்தப் பாவிற் "சூடாமணி நிகண்டு" என்ற நூல் யாத்தனர் என்பதும் தெற்றென விளங்கும்.

சேந்தன் திவாகரம் என்ற பெயரால் இதனை ஆக்கி யோன் திவாகரன் எனவும், ஆக்குவித்தோன் சேந்தன் எனவும் அறியலாம். சேந்தன் என்பவன் யார்? எக்காலத் திருந்தவன்? என்பது ஆராய்ச்சிக்குரியது. அபிதான சிந்தாமணி தொகுத்தவர் சேந்தன் என்னும் பெயருடையவ ராக மூவரைக் காட்டுகின்றார். புகார் என்ற நகரில் வாழ்ந்து பட்டினத்தடிகள் கருவூலக் கணக்கராயிருந்து அவர் பொருளைச் சூறையிட்ட குற்றத்திற்காகச் சிறைப் படுத்தப்பட்டுப் பின் சிறை நீங்கித் தில்லையை யடைந்து திருப்பல்லாண்டு திருவிசைப்பா என்ற நூல் பாடிய ஒரு வரை முதலிற் காட்டியிருக்கின்றனர். அடுத்துக் காவிரிக் கருகில் அம்பர் என்ற ஊரில் வாழ்ந்து கல்விகேள்வியிற் சிறந்து வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லவனாகி வண்மையிற் சிறந்தவனாகவும் புகார்த்தெய்வத்தைக் குறித்து அந்தாதியும் இராமன் கோதண்டம் அருச்சுனன் வில்லாகிய காண்டீபம், முருகன் வேல் இவற்றைப் புகழ்ந்து பாடியவனாகவும் ஔவையாராற் பாடல் பெற்றவனாகவும், கல்லாடனாராலும் பாடல்பெற்றவனாகவும் ஒருவரைக் காட்டுகிறார். மூன்றாவதாகத் தஞ்சையை யடுத்த 'அம்பல்' என்னும் ஊரில் மறையவர் குலத்திற் பிறந்து வளர்ந்து அருவந்தை என்னும் ஊரில் அரசுபுரிந்து தென்மொழியும்

வடமொழியுந் தேர்ந்த ஒருவரைக் காட்டுகின்றார். அவரே திவாகரம் என்னும் நிகண்டு நூல் செய்வித்தவர் என்றுங் கூறுகிறார்.

அபிதான சிந்தாமணி தொகுத்த ஆசிரியர் காட்டிய முதற் சேந்தனார் காலம் முந்தியது எனப் புலவர் ஆய்ந்திருப்பதாலும் சைவ சமயத்திற் சிறந்த பற்றுடையவராகித் திருவிசைப்பா திருப்பல்லாண்டு பாடிய அவர் இந் நிகண்டு நூலை ஆக்குவித்தாரென எண்ணுதற்கு ஒரு சிறிதும் இடமின்று. மூன்றாமவனும் மறையவர் குலத்திற் பிறந்தவன் என்றும் சிறந்த புகழ்வாய்ந்தவன் அல்லன் என்றும் தோன்றுவதால் அவனும் இதனைச் செய்வித்தான் எனல் பொருந்தாது. இரண்டாமவனாக எடுத்துக் காட்டிய சேந்தனே இந்நூலைச் செய்வித்தான் எனத் துணியலாம். புறநானூற்றில் (385) அம்பர்கிழான் அருவந்தை என வரைந்திருக்கின்றதே யன்றிச் சேந்தன் என்ற பெயர் அவன் பெற்றிருந்தான் என்பதை யெங்கணும் குறிப்பிடவில்லை. அன்றியும் சங்ககாலத்திலிருந்த அம்பர் கிழான் திவாகரம் செய்வித்தான் என்று கூறுவது கால மாறுபாடு ஆகும்.

இந்நூலில் மக்கட் பெயர்த் தொகுதியில் "வேள் புலவரசர் சளுக்குவேந்தர்" எனவும், பல்பொருட்கூட்டத் தொருபெயர்த்தொகுதியில் "கேழல் வேள்புலவரசர் கொடியே" எனவும், வேளிர்குலத்து மன்னர் பெயரும் கொடியும் கூறியிருப்பதால் சளுக்கிய மன்னர் அரசாட்சிக்குப்பின் இந்நூல் பாடியதென்பது வெளிப்படை. சளுக்கு வேந்தர் அரசு துவங்கியகாலம் ஆறாம் நூற்றாண்டு நடுவில் தான். அதற்குமுன் குந்தளநாட்டரசர் ஆகிய சளுக்கியர் பெயர் தமிழ்நாட்டுக்கு வருவதற்குக் காரணம் ஒன்றும் இன்று. ஆதலால் ஏழாம் நூற்றாண்டிற்குப் பின்தான் இந்நூல் இயற்றியிருத்தல் வேண்டும் என்று கொள்வதே பொருத்தமாகும்.

இந் நூலாசிரியர் தமக்கு உதவிபுரிந்த சேந்தனை நிகண்டு நூலில் தாம் வகுத்த பன்னிரண்டு தொகுதியுள்

ஒவ்வொரு தொகுதியின் இறுதியினும் புகழ்ந்து பாடி முடித்திருக்கின்றனர். 'வடநூற்கரசன் தென்றமிழ்க் கவிஞன்' எனவும், 'அம்பற்கிழவன் சேந்தன்' எனவும், 'அருவந்தை ஆரியன்' எனவும், 'ஒளவை பாடிய அம்பற் கிழவன்' எனவும், 'காவிரிப்பெரும்பதி அம்பற்கதிபதி' எனவும், 'அண்ணல் செம்பாதிக்காணியாட்டியைப் பெண் ணணங்கே மூவுலகும் பெற்ற வம்மையைச் செந்தமிழ் மாலை யந்தாதி புனைந்த நாவலன்' எனவும், 'அரக்கரைப் பொருத முரட்போர் வில்லும் பாரதம் பொருத பேரிசைச்சிலையும், தாருகற்கடிந்த வீரத்தயிலும் பாடிய புலவன்' எனவும் புகழ்ந்திருப்பதால் சேந்தன் காவிரிநாட்டு அம்பல் என்னும் பதியில் வளர்ந்து அருவந்தை என்னும் ஊரில் அரசுபுரிந்த மன்னன் என்றும், வடமொழி தென்மொழி வல்லவன் என்றும், கவிபாடும் ஆற்றல் வாய்ந்தவன் என்றும், இறைவன் இடப்பாகத்தமர்ந்த அம்மையின் மீது அந்தாதி பாடியவன் என்றும், இராமன் வில், அருச் சுனன் வில்லாகிய காண்டீபம், தாருகனைக்கொன்ற காளி யின் மூவிலை வேல் இவற்றைப் புகழ்ந்து கவிபுனைந்தவன் என்றும் காண்கின்றோம். எனவே அபிதான சிந்தாமணி தொகுத்தவர் காட்டியவாறு மூன்றாவது சேந்தனை இந் நிகண்டு நூல் செய்வித்தவனாகக்கொள்வது தகுதியின்று. இரண்டாவதாகக் காட்டியுள்ள சேந்தனே இந் நூல் செய்வித்தோனவன் என்பது வெள்ளிடைமலை.

சேந்தன் என்னும் பெயர் முருகனை யுணர்த்துவதால் அப்பெயர் படைத்தவனும் சைவசமயத்தவனவன். அவன் உதவிபெற்றுப் பாடியவனும் அச்சமயத்தவன் எனக் கோடலே பொருத்தமுடைத்து. அன்றியும் திவாகரர் தாம் பாடிய நூல்முகத்தில் "தந்திமுகத் தெந்தை" என விநாயகர் வணக்கம் கூறுவதும் இதனை வலியுறுத்தும். சூடாமணி நிகண்டு நூலாசிரியர்போலத் தொகுதிதோறும் அருகன் வணக்கம் கூறாமலும் தெய்வப்பெயர்த் தொகுதி யில் அருகனுக்குப் பெயர் மிகுத்துக் கூறாமலும் விடுத்தது அவர் சைன மதத்தினர் அல்லர் என்பதையும் புலப்

படுத்தும். திவாகரரைச் சமணர் எனச் சிலர் கூறுவது ஆராயத்தக்கது.

நிகண்டு நூல்களுள் இந்நூல் முற்பட்டதாகத் தோன்றுவதாலும், சைவசமயஞ் சார்ந்தோர் செய்ததும் செய்வித்ததுமாகத் தோன்றுவதாலும் இதனை நன்முறையிற் பதித்து வெளியிடவேண்டுமென்று எம் கழகம் கருதிற்று. இந்நூல் வெளியீடு பலவும் வாங்கி ஒப்புநோக்கி ஆய்ந்து பிழையின்றி நன்முறையில் வெளியிடவேண்டுமென்பதும் கழகத்தின் நோக்கம் ஆகும். முந்திய பதிப்புக்களில் இன்ன பொருளுக்கு இத்தனை பெயர் எனக் காணும்படி முதலில் வரைந்து கூட்டுத்தொகை எண் கொடுத்து நூற்பாவைப் புணர்ச்சி விதிப்படி வரைந்திருந்தது. அதில் சொற்றொடரைப் பிரித்து இன்ன இன்ன சொல் எனக் காண்பது இடர்ப்பாடு எனத் தெரிந்தது. பின்வந்த ஒரு பதிப்பு மட்டும் ஒரு தாளிற் பாதியில் நூற்பாவை வரைந்து நேர்பாதியில் பொருளின் பெயர்களையும் கூட்டுத்தொகையையும் வரைந்திருந்தது. அப் பதிப்பிற் பத்துத்தொகுதி மட்டுமே கண்டோம். இப்பதிப்பு எளிதிற் பொருள் காண்பதற்குரியதுதான் எனினும் காட்டிய சொற்களையே பின்னும் பாதியில் எடுத்து வரைவதால் வீணே தாள் அதிகம் செலவாவதன்றிப் பயன் மிகுதியும் இன்று எனக் கண்டோம். எனவே இவ்விரு முறையும் விடுத்துப் புது முறையிற் பதித்திருக்கின்றோம்.

இன்ன பொருளின் பெயர் இத்தனை என்று தலைப்பில் வரைந்து அத்தனை பெயர்களையும் பிரித்துத் தனித்தனியாக வரைந்து காற்புள்ளி கொடுத்து அவற்றை யெண்ணியவுடன் கூட்டுத்தொகை வேறுபாடின்றித் தெரியும்படி குறியிட்டிருக்கிறோம். பொருளின் பெயர் நடுவில் வந்தாலும் முதலில் வந்தாலும் முக்காற்புள்ளி அல்லது முழுப்புள்ளியிட்டுக் காட்டியுள்ளோம். எல்லாரும் எடுத்துப் பார்த்தவுடனே இன்ன பொருளுக்கு இத்தனை பெயர், அவை இன்ன இன்ன என்று தெளிவாக விளங்கும். இன்ன இன்ன பொருளின் பெயர் இன்ன இன்ன பக்கத்தில்

அமைந்திருக்கின்றன என்று எளிதிற் கண்டு எடுத்துப் பார்ப்பதற்காகப் பெயர்களை அகர முதல் வரிசையாகக் காட்டி அவற்றின் பக்கங்காட்டும் எண்களையுங் குறித்து இறுதியில் அமைத்திருக்கின்றோம். இந்நூற் பதிப்பின் அருமையும் பெருமையும் புத்தக வெளியீட்டுப் பணிப் பயிற்சியுடையார்க்கே தோன்றும். முன்னுள்ள "சேந்தன் திவாகரம்" என்ற நூலின் பதிப்பு வெளியீட்டுப்படிவங்கள் பலவற்றையும் இந்நாள் எமது கழக வாயிலாக வெளிவரும் படிவத்தையும் காண்பார் வியப்பும் நயப்பும் எய்தி இதனை உவந்து போற்றுவர் என்பது ஒருதலை.

இது பழமைவாய்ந்த நூற்பா அகவலாக அமைந்துள்ளது. மொழிநூற்புலமை நிரம்புவார்க்குப் பன்னூற்றுக்கணக்கான சொற்களின் பயிற்சி இன்றியமையாததாகும். அப்பயிற்சிக்குத் தக்கது இதுவே. இத்திவாகர நிகண்டு போன்று அகராதிகள் பயன்தாரா. இந்நாளில் ஆட்சிமொழியும் கல்லூரிமொழியும் தமிழ் ஆகவே அமைந்துள்ளமையால் புதிய புதிய சொற்கள் பல வேண்டப்படும். அச்சொற்களை முட்டின்றிப் பொருத்தமுற ஆய்ந்து அமைப்பதற்கு இது மிகவும் உறுதுணையாகும். எனவே, பொதுமக்கள், ஆட்சித்துறையினர், அலுவலகத்தினர், ஆசிரியர், மாணவர் அனைவரும் வாங்கிக் கற்றுப் பயன் பெறுக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| ௧. | தெய்வப் பெயர்த்தொகுதி | ௧ |
| ௨. | மக்கட் பெயர்த்தொகுதி | ௨௫ |
| ௩. | விலங்கின் பெயர்த்தொகுதி | ௫௧ |
| ௪. | மரப் பெயர்த்தொகுதி | ௭௫ |
| ௫. | இடப் பெயர்த்தொகுதி | ௯௬ |
| ௬. | பல்பொருட் பெயர்த்தொகுதி | ௧௨௪ |
| ௭. | செயற்கைவடிவப் பெயர்த்தொகுதி | ௧௩௭ |
| ௮. | பண்புபற்றிய பெயர்த்தொகுதி | ௧௬௬ |
| ௯. | செயல்பற்றிய பெயர்த்தொகுதி | ௧௯௬ |
| ௧௦. | ஒலிபற்றிய பெயர்த்தொகுதி | ௨௨௩ |
| ௧௧. | ஒருசொற்பல்பொருட் பெயர்த்தொகுதி | ௨௪௩ |
| ௧௨. | பல்பொருட் கூட்டத்தொரு பெயர்த்தொகுதி | ௧௫௨ |
| | பெயர் முதற்குறிப்பு அகரவரிசை | ௩௧௭ |

MADURAI UNIVERSITY LIB...
MADURAI

உ
திருச்சிற்றம்பலம்

# சேந்தன் திவாகரம்

## க. தெய்வப்பெயர்த்தொகுதி

### மூலபாடம்

#### காப்பு

தந்திமுகத் தெந்தை சதங்கைப் பதம்போற்றிச்
சிந்தை விளக்காந் திவாகரத்துள்—வந்த
தொகுதியொரு பன்னிரண்டுஞ் சோராமல் நேரே
பகுதி யுறமனமே பற்று.

**சிவன்பெயர் :** கூ௩

சங்கரன்,இறையோன், காமதகனன்,
கங்காதரனே, கறைமிடற்றண்ணல்,
கூற்றையுதைத்தோன், குன்றவில்லி,
ஏற்றுவாகனன், திரியம்பகன்,சோதி,
நக்கன்,சடையோன், நாரிபாகன்,
முக்கட்பகவன், பசுபதி,பரமன்,
கொன்றைசூடி, கொலைமழுவாளி,
ஈமத்தாடி, பிஞ்ஞகன்,பித்தன்
ஆனையுரித்தோன், அரன்,சிவன்,உருத்திரன்,
காலகாலன், கபாலமூர்த்தி,
நீலகண்டன், நீறணிகடவுள்,

அரவாபரணன், ஆரழலாடி,
பிறையதுசூடி, பெருமான்,உமாபதி,
அழலதுவேந்தி, அமலன்,ஆநந்தன்,
பரசுபாணி, சுடலையாடி,
மானிடமேந்தி, மறைமுதல்,யோகி,
புலித்தோலுடையோன், புரமூன்றெரித்தோன்,
பிஞகபாணி, பேயோடாடி,
பூதநாதன், புணர்கங்காளன்,
ஞானமூர்த்தி, ஈசன்,அஞதி,
ஐம்முகன்,பகவன், ஆதி,பாண்டரங்கன்,
அந்திவண்ணன், ஆலமர்கடவுள்,
நந்தி,நம்பன், நாதன்,தற்பரன்,
கண்ணுதன்மூர்த்தி, கைலையாளி,யென்
றெண்ணியநாமம் இன்னமுப்பலவே.

திருமால்பெயர் : ௩௭

மாயோன்,மாதவன், நாரணன்,கேசவன்,
சீதரன்,திருமகன், பூமிகொழுநன்,
விண்டு,விறலரி, திரிவிக்கிரமன்,
உந்திபூத்தோன், உவணமுயர்த்தோன்,
வாமனன்.கண்ணன், கோவிந்தன்,அச்சுதன்,
ஆழ்கடற்றுயின்றோன், அரவணைச்செல்வன்,
சக்கராயுதனே, சங்கமேந்தி,
கருங்கடல்வண்ணன், கமலக்கண்ணன்,
சாரங்கபாணி, தருபஞ்சாயுதன்,
உலகமுண்டோன், உலகினையளந்தோன்,
நாரசிங்கன், ஆதிவராகன்,
பதுமநாபன், மதுசூதனனொடு,
தாமோதரனே, தருபீதாம்பரன்,

காவற்கடவுள், முராரி,முகுந்தன்,
பெருமான்,பிரமன் தந்தை,யென்றிவைமுதல்
திருமாற்கனந்தம் சிறந்ததொல்பெயரே.

பிரமன்பெயர்: உஎ

உந்தியிலுதித்தோன், ஒளிமலர்மிசையோன்,
அன்னவூர்தி, அன்னமுயர்த்தோன்,
நான்முகன்,மான்மகன், நலங்கேழ்எண்கணன்,
வானவர்முதல்வன், மண்பொதுத்தந்தை,
இறைவன்,குரவன், மறையோன்,விரிஞ்சன்,
அந்தணன்,ஞானன், அயன்,வரன்,திசைமுகன்,
பிதாமகன்,விதாதா, கமலயோனி,
வேதா,போதன், விதி,பரமேட்டி,
இரணியகருப்பன், படைப்போன்,இவைமுதல்
அரணியல்பிரமற் கனந்தம்பெயரே.

இந்திரன்பெயர்: உக

புரந்தரன்,புனிதன், பொன்னகர்க்கிறைவன்,
வாசவன்,அமரர்கோன், மால்,முகிலூர்தி,
வேள்விநாயகன், விண்முழுதாளி,
ஆயிரங்கண்ணன், அயிராணிகேள்வன்,
மருத்துவன்,மகவான், வலாரி,விருத்திராரி,
வெள்ளைவாரணன், இமையவர்வேந்தன்,
பாகசாதனன், ஆகண்டலனே,
வச்சிரபாணி, சதக்கிரு,தென்றிவை
எச்சமிலிந்திரற் கியன்றதொல்பெயரே.

கணபதியின்பெயர்: கூ

ஒற்றைக்கொம்பன், விநாயகன்,ஐங்கரன்
வெற்றியானைமுகவன்,கணபதி,
பாசாங்குசதரன், ஆகுவாகனனே.

**முருகன்பெயர் : உகூ**

முருகன்,சூர்ப்பகை, செட்டி,குமரன்,
அறுமீன்காதலன், சேவலங்கொடியோன்,
கார்த்திகேயன், கடம்பன்,சுவாமி,
வேலுடைக்கடவுள், மேலவர்க்கிறைவன்,
வரைபகவெறிந்தோன், வள்ளிமணாளன்,
அரன்மகன்,குறிஞ்சிமன், சரவணத்துதித்தோன்,
அறுமுகன்,விசாகன், குகன்,சேய்,செவ்வேள்,
தேவர்சேனபதி, மயிலாளி,சேந்தன்,
கந்தன்,காங்கேயன், வேள்,எனச்செப்புவர்.

**காமன்பெயர் : கச**

வேனிலாளி, வேள்,மதன்,அனங்கன்,
மாரன்,பூவாளி, மன்மதன்,கந்தர்ப்பன்,
பஞ்சபாணன், கருப்புவில்லி,
இரதிகாதலன், மகரமுயர்த்தோன்,
திருமால்புதல்வன், வசந்தன்,என்றிவை
வருமால்காமற் கியன்ற*பெயரே.

**வைரவன்பெயர் : ௨**

வைரவன்,காரி, வடுகக்கடவுள்.

**ஐயனார்பெயர் : ச**

கோழிக்கொடியோன், சாதவாகனன்,
காரி,சாத்தன், கடனிறவையன்.

**வச்சிரவண்ணன்பெயர் : கஙு**

மந்திரி,குபேரன், நிதிக்கோன்,இயக்கன்,
பிங்கலன், அரற்குப்பிரியாத்தோழன்,
வடதிசைத்தலைவன், இயக்கர்வேந்தன்,

---

(பாடம்) * கியன்றவன்.

அளகையாளி, ஆயமுற்காவலன்,
புட்பகவூர்தி, தனதன்,மரகதனென,
வைப்பர்நாமம் வச்சிரவணற்கே.

**அருகன்பெயர் : ௬௩**

அநகன்,அசலன், அதிகுணன்,அபயன்,
அமைவன்,அறிவன், அதிசயன்,அமலன்,
பூரணன்,புங்கவன், புணர்முக்குடையோன்,
அசோகுடைச்செல்வன், அண்ணல்,தத்துவன்,
ஆதியங்கடவுள், அறவாழியந்தணன்,
அரியணைச்செல்வன், அருளாழிவேந்தன்,
பண்ணவன்,பகவன், எண்குணன்,மாசேனன்,
விண்ணவன்,தேவன், விறலோன்,விளங்கொளி,
பொன்னெயினாதன், பூமிசைநடந்தோன்,
முனைவன்,வீரன், முதல்வன்,புனிதன்,
காமற்காய்ந்தோன், கமலவூர்தி,
சிநேந்திரன்,திகம்பரன், சாந்தன்,புண்ணிய
மூர்த்தி,ஆசான், முழுதொருங்குணர்ந்தோன்,
வரதன்,சினன்,வரன், என்றிவைமுதலா
அருகற்கின்னும் அனந்தம்பெயரே.

**புத்தன்பெயர் : ௨௩**

அண்ணல்,வாமன், அருங்கலைநாயகன்,
புண்ணியமுதல்வன், ஆதிபுங்கவன்,
பாரின்மிசையோன், சாந்தன்,புனிதன்,
பகவன்,சைனன், அறவமூர்த்தி,
போதிவேந்தன், சினன்,வரன்,புத்தன்,
ஏகதேவன், முக்குற்றங்கடிந்தோன்,
அருணெறிசுரக்கும் செல்வன்,அனந்த

லோசனன்,வளர்ந்த பூமிசைநடந்தோன்,
அகளங்கன்,மூத்தன், புண்ணியமூர்த்தி,
பஞ்சதாரைவிட் டவுணர்க்கூட்டிய
எஞ்சலில்பெருமாற் கின்னவும்பலவே.

**நமன்பெயர் : கo**

அந்தகன்,தருமன், தென்றிசைமுதல்வன்,
சண்டன்,மறலி, கூற்று,சமன்,நமன்,
செங்கோற்கடவுள், இயமன்,என்றிவை
தங்கியநமன்மேற் றரும்பெயராகும்.

**காலன்பெயர் : ச**

சண்டனும்,மறலியும், கூற்றும்,சமனுமென்,
றிந்தவகைப்பேர் காலற்குமாகும்.

**உமையவள்பெயர் : அ**

காமக்கோட்டி, அம்பிகை,கௌரி,
ஆரியை,சத்தி, அயிராணி,பார்வதி,
இமயவல்லி, உமையவள்பேரே.

**கங்கையின்பெயர் : சு**

பகீரதி,சானவி, வரநதி,சுரநதி,
திரிபதகை,மந்தா கினி,யிவைகங்கை.

**காடுகாள்பெயர் : எ**

காடுகாள்,மோடி, காரிதாய்,கொற்றி,
மாரி,சூரி, வடுகி,மூதணங்கே.

**திருமகள்பெயர் : கஉ**

பொறி,மா,ஆக்கம், செல்வி,பொன்,பூமகள்,
செய்யாள்,இந்திரை, திருமகள்பெயரே;

கமலை,பதுமை, விமலை,கோகனகை,
அனையவுமவள்பெயர் ஆகுமென்ப.

**வாக்கின்செல்வியின்பெயர் : கச**

பாரதி,வாணி, பனுவலாட்டி,
வெண்டாமரையாள், வெள்ளைமேனியாள்,
நான்முகன்கிழத்தி, நாமகள்,கலைமகள்,
உலகமாதா, ஊர்பூரவாகனி,
ஞானமூர்த்தி, நற்பாமடந்தை,
சாவித்திரியே, காயத்திரியென,
வாக்கின்செல்வியை நோக்கியபெயரே.

**சேட்டையின்பெயர் : அ**

முகடி,தௌவை, கலதி,மூதேவி,
காக்கைக்கொடியாள், கழுதைவாகனி,
கேட்டை,கெடலணங்கு, சேட்டையின்பெயரே.

**இந்திராணியின்பெயர் : ச**

சுந்தரி,சசியே, அயிராணி,புலோமசை,
இந்திரன்றேவிக் கெய்தும்பெயரே.

**காளியின்பெயர் : கச**

சூலி,எண்டோளி, தாருகவிநாசனி,
மாதரி,வீரி, கௌரி,முக்கண்ணி,
பைரவி,குமாரி, சாமுண்டி,சண்டிகை,
யோகினி,வேதாளி, யாமளை,மாகாளி.

**பகவதியின்பெயர் : உஉ**

கொற்றவை,ஐயை, கார்த்திகை,கௌரி,
துர்க்கை,சூலி, மகிடற்காய்ந்தாள்,

நீலி,எண்டோளி, விந்தை,சயமகள்,
இருங்கலையூர்தி, எழிலரியேறி,
மேதித்தலைமிசை விசயை,அந்தரி,
மாலுக்கிளையாள், சக்கராயுதியே,
பாலைக்கிழத்தி, பண்ணைப்பணத்தி,
நாராயணியே, கன்னி,குமரி,
சீர்சால்பகவதி சிறந்ததொல்பெயரே.

**இடாகினியின்பெயர் : ௩**

வஞ்சனி,மாயவள், வலவை,யிடாகினி.

**யோகினியின்பெயர் : ௨**

சன்மினி,சூர்மகள் யோகினியாகும்.

**அமரர்மாதர்பெயர் : ௨**

அரம்பையர்,அரமகளிர் அமரர்மாதர்.

**தெய்வப்பெண்பொதுப்பெயர் : ௨**

அணங்குஞ்,சூரும் தெய்வப்பெண்பொதுப்பெயர்.

**தேவர்கள்பொதுப்பெயர் : ௧௬**

வானவர்,இமையவர், விண்ணவர்,கடவுளர்,
அமரர்,சுரர்,புலவர், அண்டர்,புத்தேளிர்,
ஐயர்,உம்பர், தேவர்கள்பொதுப்பெயர்;
பண்ணவர்,பகவர், தீர்த்தர்,பட்டாரகர்,
புங்கவர்,என்பவும் கடவுளர்பொதுப்பெயர்.

**அசுரர்பெயர் : ௫**

தானவர்,அவுணர், தகுவர்,தைத்தியரென்,
றினையநான்கும் நிசாசரரும்,அசுரர்.

**மாவலியின்பெயர் : ௨**

வைரோசனனே, மாவலி,அவுணன்.

**இராக்கதர்பெயர் : கூ**

அரக்கர்,இராக்கதர், நிசாசரர்,நிருதர்,என்
றுரைத்தநான்கும் ஒன்றன்பால;
சாலகடங்கடரும், பிசிதாசனரும்,
யாதுதானவரும், அவ்வினத்தவரே.

**வித்தியாதரர்பெயர் : உ**

விஞ்சையர்,கேசரர், வித்தியாதரர்பெயர்.

**கந்திருவர்பெயர் : ௩**

தந்திரர்,கின்னரர், வீணைவல்லவர்,
கந்திருவர்பெயரெனக் கருதல்வேண்டும்.

**பூதகணத்தின்பெயர் : ௫**

சாதகங்,கிருத்திமம், குறள்,கூளி,பாரிடம்
பூதகணமெனப் புகன்றனர்புலவர்.

**பேயின்பெயர் : கஉ**

கழுது,சோகு, கடி,கணம்,மண்ணை,
அலகை,கூளி, பிசாசு,வேதாளம்,
பிரேதகஞ்,சாவோ, டிணங்குகுணபாசி,யென்
றினையவீராறும் பேயெனல்வேண்டும்.

**ஆகாயத்தின்பெயர் : கஎ**

அந்தரம்,ஆசினி, அம்பரம்,அங்குல்,
அண்டம்,வானம், ககனம்,மீ,வெளி,
விண்,நாகம்மாகம், விசும்பு,தலை,யும்பர்,
இடம்,குடிலென்றுங் கிவைபதினேழும்
அடங்கலிலாகா யப்பெயராகும்.

**காற்றின்பெயர்: உ0**

வாதம்,கூதிர், வங்கூழ்,கால்,வளி,
ஊதை,அனிலம், கோதை,நீழல்,
உலவை,மாருதம், மருத்துப்,புவனம்,
வாடை,ஒலியே, கூதை,உயிர்ப்பே,
வேற்றலம்,கொண்டல், கோடை,யென்றிருபதும்
காற்றின்பெயரெனக் கருதல்வேண்டும்.

**பனிக்காற்றின்பெயர்: உ**

கூதிரும்,ஊதையும், குளிர்பனிக்காற்றே.

**வடகாற்றின்பெயர்: உ**

வாடை,வடந்தை, வடகாற்றாகும்.

**மேல்காற்றின்பெயர்: க**

கோடை,மேல்காற்று.

**கீழ்காற்றின்பெயர்: க**

கொண்டல்,கீழ்காற்று.

**தென்றலின்பெயர்: ச**

மந்தாநிலமே, மலயக்காலே,
தென்கால்,வசந்தன், தென்றலென்றிசைப்பர்.

**சுழல்காற்றின்பெயர்: உ**

சூறை,சாரிகை, சுழன்றெழுகாற்றே.

**நெருப்பின்பெயர்: உக**

அழல்,அங்காரகன், அங்கி,கனலி,
எரி,தழல்,தபனன், பாவகன்,தீ,யனல்,
செஞ்சுடர்ப்பகவன், ஞெகிழி,யுதாசனன்,

உதவகன்,தனஞ்சயன், வசு,எழுநா,அரி,
தென்கீழ்த்திசையோன், வன்னி,தேயுவென்,
றின்னவைபிறவும் நெருப்பின்பெயரே.

**வடவாமுகாக்கினியின்பெயர் : ச**

உத்தரம்,மடங்கல், ஊழித்தீயென,
வைத்தகடையனல், வடவாமுகமே.

**விளக்கின்பெயர் : உ**

தீபமுஞ்,சுடரும், விளக்கெனச்செப்புவர்.

**அனற்பொறியின்பெயர் : க**

புலிங்கம்,அனற்பொறி.

**அனற்றிரளின்பெயர் : க**

உற்கம்,அனற்றிரள்.

**காட்டேரியின்பெயர் : க**

தாவங்,காட்டெரி.

**தீக்கடைகோலின்பெயர் : உ**

அரணி,ஞெலிகோல், தீக்கடைகோலே.

**தீக்கடவுளின்பெயர் : க**

பாவகன்,அத்தீக் கடவுள்பெயரே.

**நீரின்பெயர் : ககூ**

அறலும்,புனலும், அப்பும்,பாணியும்,
உதகமுங்,கமலமும், அமுதமுங்,கவந்தமும்,
பயமுஞ்,சலிலமும், அயமும்,அளகமும்,
புவனமும்,வனமும், கோவுங்,கீலாலமும்,
காண்டமுந்,தோயமும், நாரமு,நீரே.

**வெள்ளநீரின்பெயர் : ௩**

நீத்தம்,பிரளயம், வாரி,வெள்ளநீர்.

**புனற்கரசன்பெயர் : க**

மற்றப்புனற்கரசன் வருணனாகும்.

**அருக்கன்பெயர் : ௩௩**

வெய்யோன்,இருள்வலி, பதங்கன்,சூரியன்,
சுடரவன்,தரணி, உதயன்,ஆதவன்,
எல்லை,மார்த்தாண்டன், தினகரன்,பனிப்பகை,
பரிதி,செங்கதிர், அலரி, பானு,
வெஞ்சுடர்க்,கிரணன், பகலவன்,வேந்தன்,
ஆயிரங்கதிரோன், அழலவன்,திவாகரன்,
இரவி,பாற்கரன், என்றூழ்,அருணன்,
ஆதித்தன்,கனலி, ஞாயிறு,விரிச்சிகன்,
சான்றோன்,அரியே, தபனன்,என்றினையவும்
ஆன்றவருக்கற் கனந்தம்பெயரே.

**சந்திரன்பெயர் : உ௦**

அம்புலி,திங்கள், குபேரன்,அருச்சிகன்,
நிசாகரன்,இமகரன், ஆலோன்,களங்கன்,
தண்சுடர்க்கலையோன், இராக்கதிர்,தானவன்,
வியோமத்துடுபதி, அமுதகிரணன்,
இந்து,சோமன், பிறை,மதி,சசி,விது,வென
வந்தனபிறவும் நிலவுஞ்,சந்திரன்.

**சேவ்வாயின்பெயர் : கக**

அங்காரகன்,குசன், ஆரல்,வக்கிரன்,
மங்கலன்,அறிவன், செந்தீவண்ணன்,
பூமகன்,நிலமகன், குருதி,சேய்,செவ்வாய்
நாமமென்று நவின்றனர்புலவர்.

**புதன்பெயர் : கச**

அருணன்,தூதுவன், அனுவழி,மேதை,
மதிமகன்,பாகன், மாலவன்,கணக்கன்,
புந்தி,புலவன், பண்டிதன்,சௌமியன்,
சிந்தைகூரியோன், அறிவன்,புதனென
வந்தநாமம் மற்றவற்காகும்.

**வியாழத்தின்பெயர் : கக**

மந்திரி,ஆசான், பீதகன்,சுரகுரு,
அந்தணன்,அரசன், ஆண்டளப்பான்,பிரகற்பதி,
சுந்தரப்பொன்,குரு, மறையோன்,வியாழம்.

**சுக்கிரன்பெயர் : கச**

பளிங்கு,பார்க்கவன், புகர்,புயல்,மழைக்கோள்,
விளங்குதிங்கள், பிரசுரன்,சல்லியன்,
ஒள்ளியோன்,சுங்கன், அசுரமந்திரியென,
வெள்ளி,சிதன்,பிருகு, சுக்கிரன்பெயரே.

**சனியின்பெயர் : கச**

மந்தன்,காரி, கரியோன்,முடவன்,
அந்தன்,நீலன், கதிர்மகன்,கீழ்மகன்,
பங்கு,மேற்கோள், சௌரி,முதுமகன்,
சந்தில்,சாவகன், சனியின்பெயரே.

**இராகுவின்பெயர் : க**

இராகுக்கோள் கரும்பாம்பு.

**கேதுவின்பெயர் : க**

கேதுக்கோள் செம்பாம்பு.

**அனந்தன்பெயர் : க**

அனந்தன்பெயரே சேடனுகும்.

**மேடவிராசியின்பெயர் :** ௬

வருடை,யுதள்,தகர், மறி,மை,கொறியென,
விரியுமாட்டின்பெயர் மேடவிராசி.

**இடபவிராசியின்பெயர் :** ௬

பாறல்,புல்லம், பாண்டில்,பசு,மூரி,
ஏறுமுதல்வந்தன இடபவிராசி.

**மிதுனத்தின்பெயர் :** ௬

பாடவை,யாடவை, இரட்டை,சயமகள்,
மேவுமியாழ்ப்பல்பெயர், தண்டே,மிதுனம்.

**கர்க்கடகத்தின்பெயர் :** ௬

அலவன்,நள்ளி, குளிர்,ஞெண்டு,ஆர்மதி,
கள்வனென்றிவை கர்க்கடகப்பெயரே.

**சிங்கத்தின்பெயர் :** ௪

அரிமா,புலி, ஐயானனம்,யாளி,
தெரியிற்புலிசீயப் பல்பெயர்சிங்கம்.

**கன்னியின்பெயர் :**

[1]பெண்மைப்பெயரே கன்னிக்குமாகும்.

**துலாத்தின்பெயர் :** ௬

நிறையே,கட்டளை, வாணிகன்,நிறுப்பான்,
துலையே,கோலெனத், துலாப்பெயர்பெறுமே.

**விருச்சிகத்தின்பெயர் :** ௫

தெறுக்கால்,பறப்பன், தேளே,விருச்சிகம்,
அலம்,என்பெயரும் தேளின்மேற்றே.

---

1. பெண்மை பற்றி வரும் பெயரெல்லாம் கொள்ளப் பெறும்.

**தனுவின்பெயர் : உ**

சாபம்,காண்டீபம், தனுவின்பெயரே.

**மகரத்தின்பெயர் : ௩**

மானே,கலை,சுறா மகரப்பெயரே.

**கும்பத்தின்பெயர் : உ**

குடமே,சாடி, பெயரேகும்பம்.

**மீனத்தின்பெயர் :**

மீன,மீனின், பலபெயர்பெறுமே.

**அச்சுவினியின்பெயர் : எ**

இரலை,ஐப்பசி,யாழ், ஏறு,தலையினாள்,
புரவி,மருத்துவநாள், அச்சுவினியென்ப.

**பரணிநாளின்பெயர் : அ**

காடு,கிழவோன், பூதம்,அடுப்பே,
தாழி,பெருஞ்சோறு, தருமனாள்,போதமெனப்,
பாகுபட்டது பரணிநாட்பெயரே.

**கார்த்திகையின்பெயர் : க௦**

அங்கி,யாரல், அளக்கர்,அளகு,இறால்,
பொங்கியநாடன், நாவிதன்,வாணன்,
தங்கொளிஅறுமீன், தழனாள்,கார்த்திகை.

**உரோகிணியின்பெயர் : அ**

பண்டி,பார்,சகடு, சாகாடு,வையம்,
ஒண்டிறல்உருள்தேர், அயனாள்,உரோகிணி.

**மிருகசீரிடத்தின்பெயர் : கo**

மாழ்கு,பேராளன், மான்றலை,இந்திரன்,
மார்கழி,நரிப்புறம், மதிநாண்,மும்மீன்,
பாலை,வெய்யோன், மிருகசீரிடப்பெயர்.

**திருவாதிரையின்பெயர் : சு**

மூதிரை,செங்கை,யாழ், ஈசர்தினமென,
ஆதிரைதன்பெயர் ஆகுமென்ப.

**புனர்பூசத்தின்பெயர் : அ**

அதிதிநாள்,மூங்கில், கரும்பு,ஆவணம்,
பாலை,புனிதம்,பிண்டி, புநர்தம்,புனர்பூசம்.

**பூசநாளின்பெயர் : சு**

கொடிறு,காற்குளம், சுரர்குருநாள்,வண்டு,
புணர்வதாகும் பூசநாட்பெயரே.

**ஆயிலியத்தின்பெயர் : உ**

அரவிநாள்,கௌவை, ஆயிலியப்பெயர்.

**மகத்தின்பெயர் : கா**

வேட்டுவன்,கொடுநுகம், எழுவாயெழுஞ்சனி,
வாய்க்கால்,பிதிர்நாள், மாசி,மகமாகும்.

**பூரத்தின்பெயர் : கா**

இடையெழுஞ்சனி, எலியே,துர்க்கை,
பகவதிநாள்,நாவிதன், கணையேபூரம்.

**உத்தரத்தின்பெயர் : ரு**

பங்குனி,கடைய தெழுஞ்சனி,பாற்குனி,
மானேறு,கதிர்நாள், உத்திரமாகும்.

**அத்தத்தின்பெயர் : எ**

கைம்மீன்,காமரம், களிறு,கௌத்துவம்,
நவ்வி,கன்னி, ஐவிரல்,அத்தம்.

**சித்திரைநாளின்பெயர் : சு**

நெய்,வான்மீன்,சுவை, பயற்றொடு,நேர்வான்,
செவ்விதிற்றுவட்டாநாள், சித்திரையென்ப.

**சோதிநாளின்பெயர் : ரு**

விளக்கே,வீழ்க்கை, வெறுநுக,மரக்கால்,
துளக்கமில்அனிலநாள், சோதிநாளாகும்.

**விசாகநாளின்பெயர் : ரு**

முறமே,முற்றில், வைகாசி,யனிலநாள்,
பெறுமேசுளகு, விசாகநாட்பெயரே.

**அநுடத்தின்பெயர் : எ**

பனை,தேள்,பெண்ணை, புல்,தாளி,போந்தை,
மித்திரநா,ளிவை அனுடப்பெயரே.

**கேட்டையின்பெயர் : சு**

துளங்கொளி,வல்லாரை, வேதி,யெரி,தழல்,
இளந்தவிந்திரநாள், பின்றுக்கேட்டை.

**மூலத்தின்பெயர் : அ**

கொக்கே,தேட்கடை, குருகு,வில்,அன்றில்,
முற்றும்,ஆனி, அசுரநாள்,மூலம்.

**பூராடத்தின்பெயர் : ௩**

உடைகுளம்,முற்குளம், நீர்நாள்,பூராடம்.

**உத்தராடநாளின்பெயர் : சு**

ஆடி,ஆனி, கடைக்குளம்,விச்சுவநாள்,
நாடிலுத்திராட நாளாகும்மே.

**திருவோணத்தின்பெயர் : கூ**

நலத்தகுவயிரம், நள்ளே,சிரவணம்,
உலக்கை,சோனே, மாயோனுள்,ஓணம்.

**அவிட்டத்தின்பெயர் : ரு**

ஆவணி,காக்கை, பறவை,புள்,வசுநாள்,
மேவியஅவிட்ட மீனின்பெயரே.

**சதயநாளின்பெயர் : ரு**

குன்று,போரே, சுண்டன்,பெருஞ்செக்கு,
தங்குவருணனுள், சதயநாளாகும்.

**பூரட்டாதியின்பெயர் : ங**

புரட்டாதி,முற்கொழுங்கோல்,பூரட்டாதி
உரைப்பர்நாழியும், அந்நாளுடனே.

**உத்திரட்டாதியின்பெயர் : சு**

முரசு,பிற்கொழுங்கோன், மன்னன்,இம்மூன்றினே
டுரைசெய்அறிவனுள், உத்திரட்டாதி.

**இரேவதியின்பெயர் : எ**

தொழுவே,நாவாய், தோணி,சூலம்,
பஃறி,புருடநாள், கடைமீன்,இரேவதி.

**அருந்ததியின்பெயர் : உ**

அருந்ததி,சாலி, வடமீனகும்.

**வான்மீனின்பெயர் : உ**

உடு,தாராகணம், ஒளிவான்மீனே.

**காலநுட்பத்தின்பெயர்: உ**

*துடியுங்,கலையும், தொடர்காலநுட்பம்.*

**நாழிகையின்பெயர்: ரு**

*கன்னலும்,இருத்தையும், கடிகையும்,பதமும்,*
*சொன்னவிகலையும், நாழிகைத்தொல்பெயர்.*

**பொழுதின்பெயர்: சா**

*வேலையும்,அமையமும், காலையும்,பதமும்,*
*எல்லையும்,காலமும், பொழுதெனப்படுமே.*

**முன்னைநாளின்பெயர்: உ**

*நென்னலும்,நெருநலும், முன்னைநாளாகும்.*

**பின்னைநாளின்பெயர்: உ**

*பிற்றையும்,பின்றையும், பின்னைநாளாகும்.*

**உச்சியின்பெயர்: க**

*நண்பகல்,உச்சி.*

**சந்தியின்பெயர்: க**

*அந்தி,சந்தி.*

**சாமத்தின்பெயர்: க**

*யாமம்,சாமம்.*

**பகலின்பெயர்: க**

*எல்லே,பகலாம்.*

**வெயிலின்பெயர்: உ**

*என்றூழ்,ஆதபம், வெயிலெனப்படுமே.*

**சந்திரிகையின்பெயர்: க**

*நிலவு,சந்திரிகை ஆகுமென்ப.*

**இரவின்பெயர் : கக**

எல்லியும்,கங்குலும், யாமமும்,மாலையும்,
அல்லும்,மங்குலும், இரசனியும்,அல்கலும்,
யாமினியும்,நிசியும், எல்லும்,இரவே.

**இருளின்பெயர் : ரு**

நிசியே,நத்தம், நீலமதனொடு,
திமிரமும்,தமமும், இருளாகும்மே.

**நாளின்பெயர் : கா**

பகலும்,வைகலும், திவசமுந்,தினமும்,
ஆனியமும்,திவாவும், நாளாகும்மே.

**அருணோதயத்தின்பெயர் : ந**

வைகறை,விடியல், புலரி,யருணோதயம்.

**திதியின்பெயர் : க**

திதியே,பக்கம்.

**மாதத்தின்பெயர் : உ**

மதியே,திங்கள், மாதமாகும்.

**முதற்பக்கத்தின்பெயர் : க**

பக்கமுதலது நந்தை,யாகும்.

**இரண்டாம்பக்கத்தின்பெயர் : க**

பத்திரை,யென்ப திரண்டாம்பக்கம்.

**மூன்றாம்பக்கத்தின்பெயர் : க**

மூன்றேசயை,பக்கம்.

**நான்காம்பக்கத்தின்பெயர் : க**

நான்கே,யிருத்தை.

**ஐந்தாம்பக்கத்தின்பெயர் : க**

ஐந்தாம்பக்கம் பூரணையாகும்.

**பாதிநாளின்பெயர் : ௩**

அரைநாளும்,பானுளும், அத்தநாளும்,பாதிநாள்.

**மாத்திரையின்பெயர் : க**

கணமே,மாத்திரை.

**நிகழ்காலத்தின்பெயர் : க**

வேலை,யென்பது நிகழுங்காலம்.

**வெப்பத்தின்பெயர் : க**

உருப்பம்,வெப்பம் ஆகுமென்ப.

**கோடையின்பெயர் : க**

வேனில்,கோடை மிசைப்பேராகும்.

**சிறுபொழுதின்பெயர் : உ**

ஒல்லை,சிறுவரை, சிறுபொழுதாகும்.

**அறுவகைப்பருவமாவன : சு**

காரே,கூதிர், முன்பனி,பின்பனி,
சிரிளவேனில், முதுவேனிலென்றாங்,
கிருமூன்றுவகைய பருவமவைதாம்
ஆவணிமுதலா இரண்டிரண்டாக
மேவினதிங்கள் எண்ணினர்கொளலே.

**பனியின்பெயர் : ச**

இமமும்,துகினமும், மஞ்சும்,நீகாரமும்,
பனியின்பெயரெனப் பகரப்படுமே.

**கார்காலத்தின்பெயர் : க**

காரெனுங்காலப் பெயர்;சாற்காலம்.

**கூதிர்க்காலத்துக்கும், பனிக்காலத்துக்கும்பெயர் : க**

கூதிர்க்காலமும் குளிர்பனிக்காலமும்
ஆகுமென்ப சிசிரநாளே.

**பருவத்தின்பெயர் : உ**

ஆனியமு,மிருதுவும், பருவமாகும்.

**காலமாவன : உ**

பருவமும்,யாண்டும், காலமாகும்.

**யுகத்தின்பெயர் : உ**

ஊழியும்,உறையுளும், யுகமாகும்மே.

**யுகமுடிவின்பெயர் : உ**

ஊழியும்,மடங்கலும், யுகமுடிவாகும்.

**நான்முகன்வாழ்நாளின்பெயர் : க**

நான்முகன்வாழ்நாள்; கற்பமாகும்.

**வாழ்நாளின்பெயர் : உ**

ஆயுள்,ஆயுகம், வாழ்நாளென்ப.

**மேலின்பெயர் : ச**

மேற்கு,வலம்,மீ, உம்பர்,மேலாகும்.

**கீழின்பெயர் : க**

கிழக்குக் கீழே.

**வருடத்தின்பெயர் : கஉ**

துவலை,பெயலை, துளியே,மாரி,
உறை,பெயல்,ஆலி, உதகம்,சிதறி,
தூவல்,சீகரம், தூறல்,வருடம்.

**மேகத்தின்பெயர் : கக**

மேகம்;சீதம், விசும்பு,வான்,விண்,முகில்,
கொண்மூ,மஞ்சு, கொண்டல்,மை,மழை,
எழிலி,கார்,குயின், கந்தரம்,விண்டு,
மங்குன்,மால்,செல், கனமும்,வரையார்.

**இடியேற்றின்பெயர் : ரு**

உருமும்,செல்லும், அசனியும்,உருமேறும்,
இடியும்,வானேறும், இடியேற்றின்பெயரே.

**மழைபெய்துவிடுதலின்பெயர் : க**

தலையல்,என்பது மழைபெய்துவிடுதல்.

**விடாதுசோரிதலின்பெயர் : உ**

சோனையும்,பனித்தலும், விடாதுசொரிதல்.

**பெருமழையின்பெயர் : க**

ஆசாரம்என்பது, பெருமழையாகும்.

**துளியின்பெயர் : ச**

துளி,பெயல்,ஆலி, உறை,துளியாகும்.

**ஆலங்கட்டியின்பெயர் : க**

ஆலி,யாலங் கட்டியாகும்.

**துவலையின்பெயர் : ரு**

சீகரம்,பிதிரே, சிதர்,அரி,சிகரம்,
தூவல்,என்றிவை துவலையாகும்.

**மின்னின்பெயர் : உ**

தடித்துத்,தடிமின்.

**இடியின்பெயர் : க**

இடிப்பெயர் இகுளி.

**பரிவேடத்தின்பெயர் : உ**

ஊர்கோள்,வட்டம், பரிவேடப்பெயரே.

**இந்திரவில்லின்பெயர் : க**

வானவில்,இந்திர வில்லெனஅறைவர்.

**காமன்காண்டீபத்தின்பெயர் : க**

காமன்காண்டீபம் கருப்புவில்லாகும்.

**திவாகரவரலாறு**

வடநூற் கரசன் தென்றமிழ்க் கவிஞன்
கவியரங் கேற்று முபயகவிப் புலவன்
செறிகுணத் தம்பற் கிழவோன் சேந்தன்
அறிவு கரியாகத் தெரிசொற் றிவாகரத்துள்

முதலாவது

தேய்வப்பெயர்த்தொகுதி

முற்றிற்று.

## ௨. மக்கட்பெயர்த்தொகுதி

**அருந்தவர்பெயர் : ௨௧**

துறவோர்,ஐயர், மாதவர்,முனிவர்,
அறவோர்,நீத்தோர், அறிஞர்,உயர்ந்தோர்,
தாபதர்,மெய்யர், தவத்தர்,தபோதனர்,
முனைவர்,இருடிகள், படிவர்,பண்ணவர்,
யோகிகள்,கடிந்தோர், பெரியோர்,உறுவர்,என்
றாகிய அந்தணர், அருந்தவர்பெயரே.

**சைவதவப்பாலோர்பெயர் : ௩**

மாவிரதியரும், காளாமுகரும்,
பாசுபதரும், சைவதவப்பாலோர்.

**நாராயணசமயத்தோர்பெயர் : ௧**

நாராயணசமயத்தோர் பாகவதரே.

**சமணர்பெயர் : ௩**

சாவகர்,அருகர், சமணராகும்;
ஆசீவகரும், அத்தவத்தோரே.

**புத்தர்பெயர் : ௪**

புத்தர்;சாக்கியர், தேரர்,பௌத்தர்,
வைத்தசீவகரும், அத்தவத்தோரே.

**சமணமுனிவர்பெயர் : ௧**

சாரணர்,சமண முனிவராகும்.

**சடைமுடியோர்பெயர் : ௧**

தாபதர்,சடைமுடியோர்.

பார்ப்பார்பெயர்: உ0

ஐயர்,வேதியர், இருபிறப்பாளர்,
மெய்யர்,மிக்கவர், மறையோர்,பூசுரர்,
அந்தணர்,நூலோர், அறுதொழிலாளர்,
செந்தீவளர்ப்போர், உயர்ந்தோர்,ஆய்ந்தோர்,
ஆதிவருணர், வேதபாரகர்,
விப்பிரர்,தொழுகுலத் தோர்,வேள்வியாளர்,
முப்புரிநூலோர், முனிவர்,என்றிவை
தப்பில்பார்ப்பார் தம்பெயராகும்.

நூலுரைப்போர்பெயர்: க

கணக்காயர், நூலுரைப்போர்.

கலைவல்லோர்பெயர்: க

கவிஞர், கலைவல்லோர்.

அறிவுடையோர்பெயர்: கூ

சான்றோர்,மிக்கோர், நல்லவர்,மேலவர்,
ஆய்ந்தோர்,உயர்ந்தோர், ஆரியர்,உலகு,என,
வாய்ந்தஆன்றோர், அறிவுடையோரே.

புலவர்பெயர்: கக

கவிஞர்,கலைஞர், கற்றவர்,மேதையர்,
சவையே,சங்கம், முதுவோர்,மூத்தோர்,
அவையே,யறிஞர், புதரே,புலவர்.

மிகவல்லோர்பெயர்: ௬

விபுதர்,நிபுணர், குசலர்,மிகவல்லோர்.

மூத்தோன்பெயர்: கசு

அடிகள்,அத்தன், ஐயன்,ஆசான்,
குரவன்,சாமி, கோமான்,பெருமான்,

உரவோன்,ஈசன், இறைவன்,தலைவன்,
விரவுபதி,நாதன், மூத்தோன்பெயரே.

**பெருமையிற்சிறந்தோன்பெயர் : ரு**

அண்ணலும்,குரிசிலும், ஏந்தலும்,தோன்றலும்,
செம்மலும்,பெருமையிற் சிறந்தோன்பெயரே.

**எப்பொருட்குமிறைவன்பெயர் : கரு**

நாதன்,நாயகன், அதிபன்,காந்தன்,
பதி,கோன்,ஈசன், செம்மல்,இறையே,
தலைவன்,மன்னவன், பிரானே,கொழுநன்,
அரசன்,ஆதி, எனப்பதினைந்தும்
உரைசெயெப்பொருட்கும் இறைவன்பேற்றே.

**உயர்ந்தோர்பெயர் : க**

உலகமென்ப துயர்ந்தோர்மாட்டே.

**திரண்டோர்பெயர் : எ**

சங்கமும்,குழுவும், கூட்டமும்,கணமும்,
தங்கிய தொகுதியும், சவையும்,அவையும்,
இங்கிவை திரண்டோர் யாவர்க்குமுரிய.

**அரசன்பெயர் : கஅ**

புரவலன்,கொற்றவன், பெருமான்,காவலன்,
அரையன்,ஏந்தல், கோவே,குரிசில்,
தலைவன்,மன்னவன், வேந்தன்,முதல்வன்,
நிருபன்,பூபாலன், நரபதி,பார்த்திவன்,
இறைவன்,அண்ணல் எனப்பதினெட்டும்
அரசன்தொல்பெயர் ஆகுமென்ப.

**குருகுலத்தரசர்பெயர் : உ**

பரதர்,கௌரவர், குருகுலத்தரசர்.

**கோச்சேரன்பெயர் : கஎ**

பூழியன்,உதியன், கொங்கன்,பொறையன்,
வானவன்,குட்டுவன், வானவரம்பன்,
வில்லவன்,குடநாடன், வஞ்சிவேந்தன்,
கொல்லிச்சிலம்பன், கோதை,கேரளன்,
போந்தின்கண்ணிக்கோன், பொருனைத்துறைவன்,
சேரலன்,மலயமான், கோச்சேரன்பெயரே.

**கோச்சோழன்பெயர் : கச**

சென்னி,வளவன், கிள்ளி,செம்பியன்,
பொன்னித்துறைவன், புலிக்கொடிப்புரவலன்,
நேரியன்,ஆர்த்தார்க்கோன், நேரிறை,அபயன்,
நேரிவெற்பன், கோழிவேந்தன்,
சூரியன்,புனனாடன், கோச்சோழன்பெயரே.

**கோப்பாண்டியன்பெயர் : கச**

செழியன்,தமிழ்நாடன், கூடற்கோ,தென்னவன்,
வழுதி,மீனவன், பஞ்சவன்,மாறன்,
கௌரியன்,வேம்பின்கண்ணிக்கோ,கைதவன்,
பொதியப்பொருப்பன், புனல்வையைத்துறைவன்,
குமரிச்சேர்ப்பன், கோப்பாண்டியனே.

**சளுக்குவேந்தர்பெயர் : க**

வேள்புலவரசர், சளுக்குவேந்தர்.

**குறுநிலவேந்தர்பெயர் : ச**

வேளிரும்,புரோசரும், குறுநிலவேந்தர்;
அரட்டரும்,குறும்பரும், ஆகுமென்ப.

**மந்திரிக்கிழவர்பெயர் : கூ**

முதுவர்,குரவர், மூத்தோர்,முன்னோர்,
உழையோர்,சூழ்வோர், நூல்வல்லோரே,

அமைச்சர்,தேர்ச்சித் துணைவர்,என்றுந்
திசைத்தமந்திரிக் கிழவர்க்கெய்தும்.

**நட்பாளர்பெயர் : க**

இனப்பெயர்தன்னட் பாளர்க்கெய்தும்.

**மந்திரித்தந்திரிக்குப்பெயர் : ந**

ஏனாதி,காவிதியர், ஆமாத்தியர்,எனும்பெயர்
ஆறுமந்திரித் தந்திரிக்கெய்தும்.

**கருமத்தலைவர்பெயர் : உ**

வள்ளுவன்,சாக்கை, எனும்பெயர்மன்னர்க்
குள்படுகருமத் தலைவர்க்கொன்றும்.

**போர்த்தலைவர்பெயர் : க**

பொரும்போர்த்தலைவர் பொருநர்,எனப்படும்.

**பரிவாரத்தின்பெயர் : க**

பரியாளம்,என்பது பரிவாரமாகும்.

**செட்டிகள்பெயர் : கஉ**

இப்பர்,பரதர், வைசியர்,கவிப்பர்,
எட்டியர்,இளங்கோக்கள், ஏர்த்தொழிலர்,
பசுக்காவலர்,ஒப்பிலால்நாய்கர், வினைஞர்,வணிகர்,என்
றத்தகுசிரேட்டிகள், செட்டிகள்பெயரே.

**காராளர்பெயர் : கக**

வினைஞர்,சூத்திரர், பின்னவர்,சதுர்த்தர்,
வளமையர்,வேளாளர், மண்மகள்புதல்வர்,
வார்த்தைதொழிலோர், வண்களமர்,உழவர்,
சீர்த்தஏரின் வாழ்நர்,காராளர்.

**கைக்கோளர்பெயர் : ௬**

செங்குந்தப்படையர், சேனைத்தலைவர்,
தந்துவாயர், காருகர்,கைக்கோளர்.

**மருத்துவர்பெயர் : ௬**

ஆயுள்வேதியர், மாமருத்துவநூலோர்,
மாமாத்திரரே, பிடகர்,மருத்துவர்.

**குயவர்பெயர் : ௪**

கும்பகாரர், குலாலர்,வேட்கோவர்,என்
றிங்கிவை குயவர் மட்பகைஞர்,என்ப.

**உப்பமைப்போர்பெயர் : ௨**

உமணர்,அளவர், உப்பமைப்போரே.

**சித்திரக்காரர்பெயர் : ௧**

ஓவியர்,சித்திரக் காரராகும்.

**கம்மாளர்பெயர் : ௧௦**

கம்மியர்,யவனர், கொல்லர்,தபதியர்,
அக்கசாலையர், சிப்பியர்,அதனொடு
வித்தகர்,வித்தியர், புனைவர்,அறிவர்,என்
றத்தகுகம்மாளர் பெயரென அறைவர்.

**தச்சர்பெயர் : ௨**

தபதியர்,மரவினையர், தச்சராகும்.

**கன்னார்பெயர் : ௨**

கன்னுவர்,கஞ்ச காரர்,கன்னார்.

**தட்டார்பெயர் : ௨**

செங்கொல்லர்,தட்டார் பொன்வினைசெய்வோர்.

வண்ணார்பெயர் : ௪
ஏகாலியர், தூசர், ஈரங்கோலியர்,
காழியர், வண்ணார் ஆகக்கருதுவர்.

உறைகாரர்பெயர் : ௧
காரோடர், உறைகாரர்.

ஊன்விலைஞர்பெயர் : ௧
சூனர், ஊன்விலைஞர்.

தோல்வினைஞர்பெயர் : ௧
பறம்பர், தோல்வினைஞர்.

நாவிதர்பெயர் : ௨
பெருமஞ்சிகரே, மயிர்வினைஞர், நாவிதர்.

செக்கார்பெயர் : ௨
சக்கிரி, நந்திகள், செக்காராகும்.

கள்விலைஞர்பெயர் : ௩
பழையர், துவசர், படுவர், கள்விலைஞர்.

மிலேச்சர்பெயர் : ௧
மிலேச்சர், ஆரியர்.

சோனகர்பெயர் : ௧
யவனர், சோனகர்.

சண்டாளர்பெயர் : ௭
குணுங்கர், வங்கர், கவுண்டர், கனகதர்,
இழிஞர், கொலைஞர், புலைஞர், என்றுந்
திசையும்பெயர்சண் டாளர்க்கெய்தும்.

**பாணர்பெயர் : ௬**

சென்னியர், வைரியர், சூதர், மாகதர்,
இன்னிசைகாரர், மதங்கர், பாணர்.

**பாடற்கீழ்மக்கள்பெயர் : ௨**

பண்டரும், ஒவரும், பாடற்கீழ்மக்கள்.

**தமிழ்க்கூத்தர்பெயர் : ௧**

வாயிலோர், தமிழ்க்கூத்தர்.

**கழைக்கூத்தர்பெயர் : ௧**

வேழம்பர், கழைக்கூத்தர்.

**தோற்கருவியிசைப்போர்பெயர் : ௧**

இயவர், தோற்கருவி இசைக்குமாக்கள்.

**நரப்புக்கருவிகொளற்குரியோர்பெயர் : ௧**

குயிலுவர், நரப்புக்கருவி கொளற்குரியோர்.

**தொழில்செய்வோர்பெயர் : ௨**

தொழுவர், கம்மியர், தொழில்செய்வோரே.

**புதியோர்பெயர் : ௨**

அதிதியர், வம்பலர், புதியோராகும்.

**மீகாமன்பெயர் : ௨**

நீகான், மரக்கலன், மீகாமனாகும்.

**அயலோர்பெயர் : ௨**

நொதுமலர், வம்பலர், அயலோராகும்.

**வழிச்செல்வோர்பெயர் : ௧**

பதிகர், என்ப வழிச்செல்வோரே.

**அடிமையின்பெயர்: ௨**

ஆளும்,தொழும்பும், அடிமையாகும்.

**மடையர்பெயர்: ௨**

வாலுவர்,கூவியர், மடையராகும்.

**ஏவல்செய்வோர்பெயர்: ௬**

சிலதர்,சிலதியர், சேடர்,சேடியர்,
பரிசனம்,உழையோர், ஏவல்செயற்பாலோர்.

**தூதர்பெயர்: ௩**

வினையுரைப்பாரும், வழியுரைப்பாரும்,
அனையபண்புரைப் பாரும்,தூதர்.

**ஒற்றர்பெயர்: ௨**

சாரணர்,உசாவே, ஒற்றெனச்சாற்றுவர்.

**வெறியாட்டாளன்பெயர்: ௫**

வேலன்,முருகன், வெறியாட்டாளன்,
தேவராளன், படிமத்தானே.

**செவிடர்பெயர்: ௧**

செவிடர்,வதிியர்.

**முடவன்பெயர்: ௧**

முடவன்,பங்கு.

**அலியின்பெயர்: ௫**

பேடர்,பேடியர், பெண்டகர்,பெண்டரென்,
றுசியநான்கும் அலிப்பெயராகும்.

**ஊமையின்பெயர்: ௨**

மூகையும்,மூங்கையும், ஊமையாகும்.

**குருடர்பெயர்: ௩**

ஆதர்,அந்தர், அந்தகர்,குருடர்.

**கூனின்பெயர் : ௧**

கூனே,கோணல் ஆமெனக்கூறுவர்.

**குறளின்பெயர் : ௩**

சிந்தே,குஞ்சம், குறளே,வாமனம்.

**கீழ்மக்கள்பெயர் : ௨0**

கயவர்,கனிட்டர், பூரியர்,நீசயர்,
சுமடர்,பேதையர், தீயோர்,மூடர்,
புல்லர்,தேரார், கலர்,பொறியற்றார்,
சித்தையர்,சிறுமையர், கையர்,கண்டகர்,
மூக்கர்,தீம்பர், மூகர்,முசுண்டர்,என்
றாக்கியபெயர்கீழ் மக்கட்காகும்.

**அறிவிலான்பெயர் : ௧௨**

முழுமகன்,சிதடன், இழுதை,மூடன்,
மண்ணை,மடன்,பேதை, குதலை,உஞ்ஞை,
அஞரே,யாதன், ஏழை,அறிவிலான்.

**தரித்திரர்பெயர் : ௬**

ஆதுலர்,வறியோர், இல்லோர்,எளியர்,
உறுகணாளர், நல்கூர்ந்தோர்,தரித்திரர்.

**துயருறுவோர்பெயர் : ௧**

ஆர்த்தர்,துயருறுவோர்.

**திருடர்பெயர் : ௬**

கரவடர்,சோரர், கள்வர்,பட்டிகள்,
தேனர்,புரையோர், திருடராகும்.

**உரியோர்பெயர் : ௧**

கிழவர்,உரியோர்.

**மூதுணர்ந்தோர்பெயர் : ௧**

முதுவர்,மூதுணர்ந்தோர்.

**வல்லாளன்பெயர் : ௨**

*வயவன்,மீளி, வல்லாளன்னே.*

**திறலோன்பெயர் : ௨**

*விறலோன்,விடலை, திறலோன்பெயரே.*

**நகரப்பதிவாழ்நர்பெயர் : ௨**

*நகரப்பதிவாழ்நர், சதுரர்,நாகரிகர்.*

**தூர்த்தர்பெயர் : ௫**

*விடரே,காமுகர், மிகுபோகம்விழையுநர்,*
*படிற்றொழுகர்,காமத்துப் பாலோர்,தூர்த்தர்.*

**கட்டிளமையோன்பெயர் : ௫**

*குமரன்,காளை, மழவன்,சேடன்,*
*முருகன்,கட்டிளமை யோனெனமொழிப.*

**ஏவுவான்பெயர் : ௧**

*வியவன்,ஏவுவான்.*

**புகழாளன்பெயர் : ௧**

*இயவுள்,புகழாளன்.*

**கரியோன்பெயர் : ௧**

*கள்வன்,என்கிளவி கரியோனென்ப.*

**கொண்டோற்பிழைத்துப்பெறும் புதல்வன்பெயர் : ௧**

*கொண்டோற்பிழைத்துப் பெறும்புதல்வன், குண்டகன்.*

**கைம்மையிற்பெறும்புதல்வன்பெயர் : ௧**

*கோளில்கைம்மையிற் பெறும்புதல்வன், கோளகன்.*

**கன்னியிற்பெறும்புதல்வன்பெயர் : ௧**

*கன்னியிற்பெறும்புதல்வன், கானீனன்,ஆகும்.*

**குலமுள்ளோர்பெயர் : க**

குலீனர்,என்ப குலமுள்ளோரே.

**வல்லோன்பெயர் : உ**

வலவை,வல்லுநன், வல்லோன்பெயரே.

**வல்லுநரல்லோர்பெயர் : உ**

வல்லார்,மாட்டாதார், வல்லுநரல்லோர்.

**கூவநூலோர்பெயர் : க**

உல்லியர்,கூவ நூலுரையுணர்வோர்.

**கவிகள்பெயர் : ௩**

நாவலர்,கற்றோர், பாவலர்,கவிகள்.

**கடிகைமாக்கள்பெயர் : உ**

மங்கலப்பாடகர், எட்டர்,கடிகைமாக்கள்.

**கூத்தர்பெயர் : அ**

கோடியர்,பொருநர், நாடகியர்,நிருத்தர்,
கண்ணுளர்,வயிரியர், விறலியர்,நடரென்,
றெண்ணியபெயர்கள் கூத்தர்க்கெய்தும்.

**புகழ்வோர்பெயர் : ௬**

மாகதர்,வந்தியர், சூதர்,வேதாளியர்,
பூகதர்,பப்புவர், புகழ்வோர்பெயரே.

**தேர்ப்பாகர்பெயர் : உ**

சூதரும்,வலவரும், தேர்த்தொழிற்பாகர்.

**யானைப்பாகர்பெயர் : உ**

ஆதோரணர்,வாதுவர், யானைப்பாகர்.

**குதிரைவடிப்போர்பெயர் : க**

வாதுவர்,பரிமா வடிப்போருமாகும்.

**இரப்போர்பெயர்: ௪**

இரவலர்,இரவோர், பரிசிலாளர்,
யாசகர்,என்றிவை இரப்போர்பெயரே.

**வரையாதுகொடுப்போர்பெயர்: ௧**

வரையாதுகொடுப்போர், வள்ளியோராகும்.

**தானைத்தலைவர்பெயர்: ௧௦**

மானவர்,வீரர், மறவர்,பொருநர்,
ஆனகலியர், மண்டர்,மள்ளர்,
ஏனைவாளுழவர், ஏருளர்,கூளியர்,
தானைத்தறுகண் ணாளர்தம்பெயரே.

**பகைஞர்பெயர்: ௨௩**

தரியலர்,தெவ்வர், மேவலர்,செறுநர்,
கருதலர்,சேரலர், இரிஞர்,ஒன்னார்,
ஒல்லார்,அரிகள் நள்ளார்,அமரார்,
ஒட்டார்,புல்லார், நேரார்,நிகரார்,
ஒட்டலர்,நேரலர், இகலோர்,எதிர்ந்தோர்,
விட்டவர்,மாற்றலர், முனைந்தோர்,என்றுங்
கொட்டியபிறவும் பகைஞரென்றுரைப்பர்.

**மேவினர்பெயர்: ௬**

ஒல்லுநர்,துன்னுநர், ஒட்டுநர்,ஒன்றுநர்,
நள்ளுநர்,தொடர்ந்தோர், மேவினர்நாமம்.

**உறவின்பெயர்: ௧௭**

ஒக்கல்,சுற்றம், உறவு,கிளை,கேள்,
நட்பு,மேவினர், சார்ந்தவர்,உற்றார்,
பந்தம்,கூளி, கடும்பு,குடும்பம்,
நந்தமர்,சிறந்தோர், நட்டோர்,பரிசனம்,
அந்தமிலுறவென் றறைந்தனர்புலவர்.

**ஆண்பாலின்பெயர் : ௯**

ஆடவர்,மைந்தர், காளை,குமரர்,
ஆடூஉ,மாந்தர், மகன்,புமான்,மணாளன்,
கூடியவாண்பெயர் ஆகக்கூறுவர்.

**பெண்பாலின்பெயர் : உஉ**

பேதை,அங்கனை, வனிதை,இளம்பிடி,
மாது,மடவாள், மகடூஉ,மங்கை,
மடந்தை,காரிகை, மானினி,மஞ்சனி,
மாயோள்,ஆட்டி, பாவை,தெரிவை,
தையல்,அரிவை, பெதும்பை,பிணா,மகள்,
நையுநுண்ணிடை நாரி,யென்றாங்
கிருபதுமிரண்டும் பெண்பாற்கெய்தும்.

**எழுவகைப்பருவப்பெண்பாலாவன : எ**

பேதை,பெதும்பை, மங்கை,மடந்தை,
அரிவை,தெரிவை, பேரிளம்பெண்,என
எழுவகைப்பருவப் பெண்பாற்கெய்தும்.

**தலைவிபெயர் : ௯**

கோமாள்,பெருமாட்டி, குரத்தி,ஐயை,
ஆசாள்,சாமி, இறைமையாட்டி,
அடிகள்,அத்தை, தலைவிபெயரே.

**அருந்தவப்பெண்பெயர் : உ**

பைம்மையும்,கௌந்தியும், அருந்தவப்பெண்பெயர்.

**கலன்கழிமகளிர்பெயர் : உ**

கைம்மையும்,கைனியும், கலன்கழிமகளிர்.

**மலடிப்பெயர் : உ**

மைம்மை,வந்தி, மலடிப்பெயரே.

**பொதுப்பெண்பெயர் : ௩**

பரத்தையும்,கணிகையும், சூளையும்,பொதுப்பெண்.

**நாடகக்கணிகைபெயர் : ௨**

நடியே,கூத்தி, நாடகக்கணிகை.

**பாண்மகள்பெயர் : ௫**

பாடினி,விறலி, பாட்டி,மதங்கி,
பாடன்மகடூஉ, பாண்மகளாகும்.

**அணியிற்பண்பில்உவமையோடுற்றன :**

வரைவிலாடூஉ மகடூஉப்பலபெயர்
வரலாற்றுமுறைமையின் வந்தனகொளலே.

**உடனிகழ்வான்பெயர் : ௧**

எமி,யுடனிகழ்வான்.

**தனியின்பெயர் : ௧**

தமி,தனியாகும்.

**குறிஞ்சிநிலமக்கள்பெயர் : ௫**

குறவர்,கானவர், குன்றவர்,புனவர்,
இறவுளர்,குறிஞ்சி நிலமக்கட்பெயரே.

**குறிஞ்சிநிலப்பெண்கள்பெயர் : ௨**

கொடிச்சியர்,குறத்தியர் குறிஞ்சிநிலப்பெண்பெயர்.

**குறிஞ்சிக்கிறைவன்பெயர் : ௭**

கானகநாடன், பொருப்பன்,பொருநன்,
ஆனமலையன், வெற்பன்,சிலம்பன்,
சிறந்தநண்பன்,என்றிவைமுதலாக்
குறிஞ்சிக்கிறைவன் பெயரெனக்கூறுவர்.

**பாலைநிலமக்கள்பெயர் : ௨**

மறவர்,எயினர் பாலைநிலமக்கள்.

**பாலைநிலப்பெண்கள்பெயர் : ௩**

*மறத்தியர், எயிற்றியர், வன்கட்பிணாக்கள்,*
*அனைத்துமனன்னிலத் தரிவையர்பெயரே.*

**பாலைக்கிறைவன்பெயர் : ௩**

*மீளியும், காளையும், விடலையும்ம், என்றிவை*
*பாலைக்கிறைவன் பெயரெனக்கூறுவர்.*

**பாலைநிலமக்கட்கு மந்நிலத்தலைவர்க்கும் பொதுப்பெயர் : ௧௧**

*கொலைஞர், எயினர், வனசரர், சவரர்,*
*சிலவர், கானவர், மாகுலவர், கிராதர்,*
*புளினர், மறவர், வேடர், என்றாங்*
*கனையவர்பொதுப்பெயர் ஆதல்வேண்டும்.*

**முல்லைநிலமக்கள்பெயர் : ௧௨**

*முல்லையாளர், கோவலர், இடையர்,*
*சொல்லியவண்டர், பொதுவர், ஆன்வல்லோர்,*
*குடவர், பாலர், தொறுவர், கோவிந்தர்,*
*அண்டர், கோபாலர், ஆயர், அமுதர்,*
*ஒன்றியமுல்லை நிலத்தவர்பெயரே.*

**முல்லைநிலமகளிர்பெயர் : ௫**

*ஆய்ச்சியர், தொறுவியர், பொதுவியர், குடத்தியர்,*
*வாய்த்தஇடைச்சியர், முல்லைநிலமகளிர்.*

**முல்லைநிலத்தலைமகன்பெயர் : ௪**

*அண்ணல், தோன்றல், குறும்பொறைநாடன்,*
*கானகநாடன், முல்லைத்தலைமகன்.*

**நெய்தநிலமாக்கள்பெயர் : ௬**

*பரதவர், நுளையர், கடலர், வலையர்,*
*சலவர், திமிலர், நெய்தநிலமாக்கள்.*

**நெய்தநிலப்பெண்பெயர்: ௩**

துளைச்சியர், பரத்தியர், நுளைகடற்பிணாக்கள்.

**நெய்தநிலத் துப்பமைப்போர்பெயர்: க**

அளவர், அந்நிலத் துப்பமைப்போர்பெயரே.

**நெய்தற்றலைமகன்பெயர்: ரு**

கொண்கன், துறைவன், மெல்லன், புலம்பன்,
தண்கடற்சேர்ப்பன், நெய்தற்றலைமகன்.

**மருதநிலமக்கள்பெயர்: அ**

களமர், தொழுவர், மள்ளர், கம்பளர்,
வினைஞர், உழவர், கடைஞர், கிளைஞர், என்
றனையவைகழனிக் கடைத்தவர்பெயரே.

**மருதநிலப்பெண்பெயர்: ௩**

உழத்தியர், கடைச்சியர், ஆற்றுக்காலாட்டியர்,
அடுத்தகழனிக் கடைத்தமகளிர்.

**மருதநிலத்தலைவன்பெயர்: ௩**

ஊரன், மகிழ்நன், கிழவன், என்றிவை
சாலிமருதத் தலைவன்பெயரே.

**மருதநிலத்தலைவிபெயர்: சு**

மனைவி, கிழத்தி, இல்லாள், இல், என்
றனையவைமருதத் தலைவிக்காகும்.

**முல்லைத்தலைவிபெயர்:**

அனையவைமுல்லைத் தலைவிக்குமாகும்.

**முன்றோன்றலின்பெயர்: உ**

முன்னை, முன்னிளவல், முன்றோன்றலாகும்.

**பின்றோன்றலின்பெயர்: உ**

பின்னை, பின்னிளவல், பின்றோன்றலாகும்.

**சேட்டையின்பெயர் : உ**

தௌவை,முன்பிறந்தாள், சேட்டையாகும்.

**தங்கையின்பெயர் : உ**

தங்கைபின்னை, எங்கையாகும்.

**வழித்தோன்றலின்பெயர் : ௩**

மருமான்,பிறங்கடை,உம் பல்,வழித்தோன்றல்.

**இளம்பிள்ளைகள்பெயர் : கா**

குழவியும்,மகவும், குட்டனும்,பிள்ளையும்,
மழவுஞ்,சேயும், இளமைக்கு வகுத்தனர்.

**பிள்ளைப்பன்மையின்பெயர் : உ**

மகாரும்,சிறாரும்,அவர் பன்மைவழக்கே.

**தோழன்பெயர் : ரு**

நண்பன்,பாங்கன், எலுவன்,கிளைஞன்,
தங்கியகேள்வன், தோழன்பெயரே.

**தோழன்முன்னிலையின்பெயர் : க**

ஏடா,என்பது தோழன்முன்னிலைப்பெயர்.

**பாங்கியின்பெயர் : ரு**

ஓரை,பொய்தல், இகுளை,யாய்ந்த
தோழி,சேடி, இணங்கியபாங்கி.

**தோழிமுன்னிலையின்பெயர் : உ**

எலாவும்,ஏடியும், தோழிமுன்னிலைப்பெயர்.

**காதலனென்னும்பெயர் : ௩**

கணவனும்,தோழனும், புதல்வனும்,காதலன்.

**காதலியென்னும்பெயர் : ௩**

மனைவியும்,தோழியும், புதல்வியும்,காதலி.

**துணைவனென்னும்பெயர் : உ**

தோழனும்,கணவனும், துணைவன்,என்றாகும்.

**படையின்பெயர் : கச**

தாரே,தண்டம், அனீகம்,வரூதினி,
தானை,பதாதி, பதாகினி,யூகம்,
வானி,யதிகம், பாடி,பகுதி,
சேனை,நிதானம், திரள்படையென்ப.

**கொடிப்படையின்பெயர் : ச**

தார்,நிரை,யாக்கம், தூசி,கொடிப்படை.

**கடைக்கூழையின்பெயர் : உ**

கூழை,சூழ்தல், கடைக்கூழையாகும்.

**படைவகுப்பின்பெயர் : ரு**

உருண்டையும்,கையும், ஒட்டும்,யூகமும்,
வந்தவணியும், படைவகுப்பின்பெயர்.

**மானிடர்பொதுப்பெயர் : ரு**

மக்கள்,மண்ணவர், மனிதர்,நரர்,என்
றொத்தமாக்கள், மானிடர்பொதுப்பெயர்.

**மக்களாண்பொதுப்பெயர் : உ**

மாந்தர்,மைந்தர், மக்களாண்பொதுப்பெயர்.

**மக்கட்பரப்பின்பெயர் : உ**

மன்பதை,பைஞ்ஞீன், மக்கட்பரப்பே.

**மக்கட்கூட்டத்தின்பெயர் : ச**

ஔவையும்,பண்ணையும், ஆயமும்,குழுவும்
கூறுபமாதோ மக்கட்கூட்டம்.

**உடலின்பெயர் : கஅ**

சட்டகம்,மெய்யே, தாவரம்,பூட்சி,

அங்கம்,காயம், புதை,உறுப்பு,யாக்கை,
ஆதாரம்,தேகம், உருவம்,படிவம்,என்
றோதினர் நூலோர், உடலின்பெயரே.

**பிணத்தின்பெயர் : ச**

அழனே,குணபம், களேபரம்,சவம்,
பிணமெனவைத்துப் பேசினர்புலவர்.

**உடற்குறையின்பெயர் : ௩**

யூபம்,கவந்தம், மட்டை,உடற்குறை.

**பாதத்தின்பெயர் : சா**

சரண்,பதம்,கால்,அடி, கழல்,தாள்,பாதம்.

**கரட்டின்பெயர் : ௩**

பரடே,காலடி, மிசைத்திரள்,கரடே.

**கணைக்காலின்பெயர் : க**

சங்கம்,கணைக்கால்.

**முழங்காலின்பெயர் : க**

சானு,முழந்தாள்.

**தொடைப்பற்றின்பெயர் : ௩**

வாமம்,ஊரு, கவான்,தொடைப்பற்றே.

**குறங்கின்பெயர் : ௩**

ஊருவும்,கவானும், சோகமும்,குறங்கே.

**அல்குலின்பெயர் : உ**

கடிதடம்,நிதம்பம், வடிவகலல்குல்.

**இடையின்பெயர் : உ**

நுசுப்பு,மருங்குல், நுண்ணிடையாகும்.

**மருங்குற்பக்கத்தின்பெயர் : உ**

ஒக்கல்,மருங்குல், பக்கமாகும்.

**வயிற்றின்பெயர் : எ**

குக்ஷி,துந்தம், உதரம்,சடரம்,என்
றுரத்தமடி,வயின், அகடு,ஒன்றியவயிறே.

**ஆண்குறியின்பெயர் : உ**

இலிங்கமும்,கோசமும், ஆண்குறியாகும்.

**பெண்குறியின்பெயர் : உ**

யோனியும்,பகமும், பெண்குறியாகும்.

**கொப்பூழின்பெயர் : ரு**

உந்தி,போகில், இலஞ்சி,இதலை,
வந்தநாபி, கொப்பூழாகும்.

**மார்பின்பெயர் : ரு**

அகலம்,மருமம்,நிறம், உரம்,ஆகம்,மார்பே.

**முலையின்பெயர் : அ**

கொங்கை,சுவர்க்கம், குயம்,தனம்,நகிலம்,
தங்கியகுருக்கண், அம்மம்,பயோதரம்,
இங்கிவைமாதர் முலையெனவிளம்புவர்.

**முலைக்கண்ணின்பெயர் : உ**

சூசுகம்,சிலீமுகம், முலைக்கண்சொல்லும்.

**தேமலின்பெயர் : கூ**

சுணங்கு,தேமல், பொறி,யுத்தி,திதலை,
[1] நுணங்கு,திதனி, வசந்திகை,துத்தி.

---

1. நுணங்கு என்பது தொடைச்சுவைப் பயன்கருதிய அடைமொழி யென்றறியாது சிலர் மயங்கிப் பரியாயமெனக்கொண்டனர். மற்றுமவ ரிவ்வாறுகொள்வன சிலவறிக.

**கைத்தலத்தின்பெயர் : ச**

*அத்தம்,பாணி, கரம்,தோள்,கைத்தலம்.*

**அகங்கையின்பெயர் : உ**

*அங்கை,குடங்கை, அகங்கையாகும்.*

**விரலின்பெயர் : க**

*அங்குலி,விரலாம்.*

**நகத்தின்பெயர் : க**

*உகிர்,நகமாகும்.*

**தோளின்பெயர் : ந**

*புயமும்,மொய்ப்பும், வாகுவும்,தோளே.*

**முதுகின்பெயர் : ந**

*வெரினும்,வென்னும், புறமும்,முதுகே.*

**தோள்மேலின்பெயர் : ந**

*சுவலும்,செகிலும், நிகலமும்,தோண்மேல்.*

**கழுத்தின்பெயர் : ரு**

*கண்டமும்,கிரீவமும், களனும்,மிடறும்,*
*கந்தரம்,ஐந்தும் கழுத்தெனக்கழறுவர்.*

**பிடரின்பெயர் : ச**

*கயிலே,சிறுபுரம், எருத்தம்,சுவல்,பிடர்.*

**பிறகின்பெயர் : ந**

*பிறமும்,பிறக்கும், அபரமும்,பிறகே.*

**முகத்தின்பெயர் : ந**

*வதனம்,ஆனனம், வத்திரம்,முகமே.*

**உதட்டின்பெயர் : ரு**

*அதரம்,பாலிகை, இதழே,ஓட்டம்,*
*முத்தம்,உதடென மொழிந்தனர்புலவர்.*

**பல்லின்பெயர் : ௩**

தந்தமும், தசனமும், தட்டமும், பல்லாம்.

**எயிற்றின்பெயர் : ௩**

முறுவலும், நகையும், மூரலும், எயிறும்.

**நகுதலின்பெயர் :**

நகுதற்குமவையே நாமமாகும்.

**அண்ணத்தின்பெயர் : ௧**

அணரி, யண்ணம்.

**கீழ்வாய்ப்புறத்தின்பெயர் : ௧**

அணல், கீழ்வாய்ப்புறம்.

**உண்ணாவின்பெயர் : ௧**

அண்ணம், உண்ணா ஆகலுமுரித்தே.

**நாவின்பெயர் : ௨**

தாலம், தாலு, நாவெனச் சாற்றுவர்.

**மூக்கின்பெயர் : ௩**

துண்டமும், நாசியும், கிராணமும், மூக்கே.

**கதுப்பின்பெயர் : ௪**

கபோலம், கவுள், அனு, கொடிறு, கதுப்பே.

**கண்ணின்பெயர் : ௧௧**

நாட்டம், நயனம், நேத்திரம், விலோசனம்,
நோக்கம், தாரை, அம்பகம், பார்வை,
அக்கம், விழிக், கோ, கண்ணகும்மே.

**நெற்றியின்பெயர் : ௭**

மத்தகம், இலாடம், முண்டகம், நுதல், குளம்,
நெற்றி, பாலம், எனநிகழ்த்தினரே.

**புருவத்தின்பெயர் : ௩**

புரூரம்,பிருகுடி, நுதலே,புருவம்.

**காதின்பெயர் : உ**

கன்னமும்,செவியும், காதின்பெயரே.

**தலையின்பெயர் : அ**

சிரமே,சென்னி, உச்சி,முடி,நவிரம்,
கம்மே,உவ்வி, சேகரம்,தலையாம்.

**ஆண்மயிரின்பெயர் : கூ**

குஞ்சி,நவிர்,உளை, குடுமி,தொங்கல்,
பங்கி,பித்தை, ஒரி,சிகை,யென்
றிங்கிவையெல்லாம் ஆண்மயிரென்ப.

**பெண்மயிரின்பெயர் : கச**

கோதை,நெடுமை, கூந்தல்,ஐம்பால்,
ஓதி,கூழை, பரிசாரம்,கதுப்பு,
கேசம்,அளகம், குழல்,குரல்,சுரியல்,
பேசின் மராட்டம், பெண்மயிரென்ப.

**மைந்தர்மயிரின்பெயர் : ௩**

கதுப்பே,கேசம், சுரியல்,மைந்தர்
மயிர்க்குமொருமொழி வருதற்குமுரிய.

**பிறமயிரின்பெயர் : சு**

ஓரி,பங்கி, உளையே,உரோமம்,
கேசம்,மராட்டம், பிறமயிராகும்.

**மயிர்ப்பரப்பின்பெயர் : உ**

சிரோரந்தம்,உரோமம், செறிமயிர்ப்பரப்பே.

**மயிர்க்குழற்சியின்பெயர் : ௩**

கொந்தம்,அளகம், விலோதம்,மயிர்க்குழற்சி.

**மயிர்முடியின்பெயர் : ௯**

பின்னகம்,பந்தம், முடி,முச்சி,கொண்டை,
மன்னுசிகழிகை, குழல்,சுடிகை,மௌலி,
இன்னவைமயிர்முடி ஆகுமென்ப.

**சடையின்பெயர் : ௪**

பின்னல்,சடிலம், கோடீரம்,வேணி,
மன்னுமயிர்ச்சடை எனவகுத்தனரே.

**உறுப்பின்பெயர் : ௫**

அவயவம்,காத்திரம், அங்கம்,உறுப்பே,
சினை,என்றுரைத்தலும் ஒருவழிச்சிவணும்.

**சந்தின்பெயர் : ௩**

கந்தும்,கொளுத்தும், கழுத்தும்,சந்தாம்.

**இறையின்பெயர் : ௧**

மெய்த்தகுமிறையே பிறங்கெனப்படுமே.

**உடற்றழும்பின்பெயர் : ௨**

செதுகை,அங்கிதம், செறியுடற்றழும்பே.

**கழலையின்பெயர் : ௧**

அரலை,கழலை யாகுமென்ப.

**நரம்பின்பெயர் : ௨**

நாடியும்,சிரையும், நரம்பினமம்.

**எலும்பின்பெயர் : ௩**

என்பு,அத்தி,அங்கம் எலும்பாகும்மே.

**தலையோட்டின்பெயர் : ௧**

வெண்டலையோடே கபாலம்,ஆகும்.

**கழியுடன்முழுவெலும்பின்பெயர்: ௧**

கழியுடன்முழுவென்பு கங்காளம்,ஆகும்.

**குடுமியின்பெயர்: ௫**

சிமி,சிகை,சிமிலி, சிக்கம்,குடுமி.

**உச்சியின்பெயர்: ௩**

நவிரம்,சுடிகை, சுழி,யுச்சிநாமம்.

**இந்திரியத்தின்பெயர்: ௫**

கரணம்,பொறி,வாயில், கந்தம்,இந்திரியம்.
அன்றியும் சுவையொளியூறோசை நாற்றமறியும்,
கருவிநாக்,கண், மெய்,செவி,மூக்கே.

**சீவன்பெயர்: ௮**

சீவன்,உயிர்,ஆதன், சேதனன்,புற்கலன்,
அணுவொடு,பசு, இயமானன்,ஆன்மா.

கற்ற நாவினன் கேட்ட செவியினன்
முற்ற வுணர்ந்த மூதறி வாளன்
நாகரிக நாட்டத் தாரிய னருவந்தை
தேறுங் காட்சிச் சேந்தன் திவாகரத்

திரண்டாவது

மக்கட்பெயர்த்தொகுதி

முற்றிற்று.

## ௩. விலங்கின்பெயர்த்தொகுதி

**சிங்கத்தின்பெயர் : ௧௧**

ஆளி,மடங்கல், அரி,கண்டீரவம்,
கேசரி,மிருக பதி,வயப்போத்து,
சீயம்,வயப்புலி, பஞ்சானனம்,வயமா,
மேவியசிங்கம் எனவிளம்பினரே.

**புலியின்பெயர் : ௧௧**

கொடுவரி,உழுவை, குயவரி,வேங்கை,
வல்லியம்,வயமா, சார்த்தூலம்,வியாக்கிரம்,
புல்,புண்டரீகம், வயவரி,யென்றிவை,
பல்பொறிப்புலியின் பெயரெனப்பகர்வர்.

**யானையாளிப்பெயர் : ௩**

அறுகு,பூட்கை, ஆளி,யெனவே
பெறுமேயானை ஆளிப்பெயரே.

**யானையின்பெயர் : ௩௮**

தும்பி,கடிவை, புகர்முகம்,தோல்,கரி,
உம்பல்,வயமா, பகடு,நால்வாய்,
கரிணி,குஞ்சரம், கயமே,களபம்,
மருண்மா,தந்தி, மாதங்கம்,ஒருத்தல்,
களிறு,சிந்துரம், கறையடி,எறும்பி,
வழுவை,வாரணம், வேழம்,வல்விலங்கு,
நாகம்,மதகயம், அத்தி,இபம்,கும்பி,
போதகம்,உவாவே, தூங்கல்,மாதிரம்,
மறமலிகைம்மா, ஆம்பல்,கோட்டுமா,
பிறவும்புழைக்கை,யோ டியானைப்பெயரே.

**களிற்றியானையின்பெயர் : உ**

மதகரி,தந்தி வன்களிற்றியானை.

**பெண்யானையின்பெயர் : உ**

கரேணு,பிடி,பெண் யானைப்பெயரே.

**யானைக்கன்றின்பெயர் : ௬**

போதகம்,துடியடி, கயம்,மூனி,கன்றும்.

**பிறந்தநிலப்பெயரையடுத்தியானை பெறும்பெயராவன : ௩**

கிரிசரம்,வனசரம், நதிசரம்,அடுத்துப்
பெறுமேயானை பிறந்தநிலப்பெயர்.

**குதிரையின்பெயர் : ௩௦**

துரகதம்,துரங்கம், வாசி,பாய்மா,
குரகதம்,கிள்ளை, கந்தருவம்,கற்கி,
மண்டிலம்,துரகம், மா,வேய்,இவுளி,
ஒண்டிறல்,உன்னி, உத்தரி,கோணம்,
குந்தம்,கொய்யுளை, கொக்குப்,பரி,அயம்,
அச்சுவம்,வயமா, புரவி,அரி,யோ
டித்திறம்அத்திரி, குதிரையினியற்பெயர்.

கனவட்டம்,பாடலம், கோரம்,கந்துகம்,
எனவும்பண்படுத் தெண்ணப்படுமே.

இப்பெயர்களுள்,
கனவட்டமென்பது வழுதியூர்மா,
பாடலமென்பது சேரனூர்மா,
கோரமென்பது சோழனூர்மா.

கந்துகம்,குறுநில மன்னரூர்மா.

**குதிரைக்குளம்பின்பெயர் : க**

குரமே,யவற்றின் குளம்பாகும்மே.

**குதிரைமார்க்கத்தின்பெயர் : க**

*மாதிகம்,அவற்றின் மார்க்கமாகும்.*

**பசுவின்பொதுப்பெயர் : சா**

*ஆவும்,பெற்றமும், பசுவும்,ஆனும்,*
*கோவும்,குரால்,தேனும், பசுச்சாதிப்பொதுப்பெயர்.*

**பெண்பசுவின்பெயர் : எ**

*சுரபி,தேனு, சுரை,கபிலை,சேதா,*
*குரமே,கோமளம், பெண்பான்மேன.*

**ஆண்பசுவின்பெயர் : கங**

*பாறல்,புல்லம், பாண்டில்,பசு,மூரி,*
*ஏறு,பூணி, இருலே,பெற்றம்,*
*எருது,சே,விடை, இடபம்,என்றிவை,*
*கருதிற்போத்தின் பெயரெனக்கருதுவர்.*

**எருமையெனும்பெயர் :**

*எருமைச்சாதி இருபாற்குமுரித்தே.*

**எருமைப்பொதுப்பெயர் : ச**

*மேதி,காரான், மகிடம்,கவரி,யென்*
*றோதியநான்கும் [1]எருமைப்பெயரே.*

**எருமையாணின்பெயர் : உ**

*பகடும்,கடாவும், அவற்றின்போத்தாம்.*

**மலட்டெருமையின்பெயர் : க**

*மைம்மை,யென்பது மலட்டின்கிளவி.*

---

1. *முன்சூத்திரத்தில் எருமையென்ப திருபாற்கு முரித்தென்றமையால், இச்சூத்திரத்தில் எருமையென்ப திருபாற் பொதுவாயிற்று.*

**காட்டாவின்பெயர் : ௨**

ஆமா,கவயம், காட்டாவாகும்.

**ஆட்டின்பொதுப்பெயர் : ௧௭**

மறி,உதள்,மோத்தை, மேழகம்,வருடை,
கொறியே,தகர்,கடா, கொச்சை,மேடம்,
துருவை,செம்மறி, பள்ளை,வெள்ளை,
புருவை,வற்காலி,மை, ஆடெனப்புகல்வர்.

**துருவாட்டின்பெயர் : ௩**

துருவை,கொறி,மை, துருவாடாகும்.

**வெள்ளாட்டின்பெயர் : ௪**

வெள்ளை,வற்காலி,மை, கொச்சை,வெள்ளாடே.

**துருவாடேற்றின்பெயர் : ௪**

ஏழகம்,தகரே, மேழகங்,கடா,வென
ஆகுந்துருவாட் டேற்றின்பெயரே.

**வெள்ளாட்டேற்றின்பெயர் : ௩**

உதளே,செச்சை, மோத்தை,வெள்ளாட்டின்
நிகரிலேறென நிகழ்த்தவும்படுமே.

**துருவாடாவது :**

துருவை,செம்மறியா ஆடு,எனச்சொல்லுவர்.

**ஆட்டுக்குட்டியின்பெயர் : ௫**

குட்டன்,சோரன், மணங்கு,மறி,பறழ்,
குட்டிப்பெயரெனக் கூறினர்புலவர்.

**வரையாட்டின்பெயர் : ௨**

வருடை,சரபம், வரையாடாகும்.

**கவரிமாவின்பெயர் : ௪**

மானமா,பட்டம், எகினம்,அன்னம்,
ஊனமில்கவரி மாவெனவுரைப்பர்.

**கழுதையின்பெயர் : ௬**

கத்தபம்,கோகு, வேசரி,கழுதை,
அத்திரி,கரம்,வா லேயமும்,ஆகும்.

**பன்றியின்பெயர் : ௧௨**

இருளி,கனலி, ஏனம்,சூகரம்,
கருமா,மோழல், வல்லுளி,கேழல்,
வன்றிறல்வராகம், எறுழி,கோலம்,
ஒன்றியகளிறு,இவை பன்றியாகும்.

**மருட்டுப்பன்றியின்பெயர் : ௪**

கிருட்டி,போத்து, கோலம்,கிரிகிரி,
மருட்டுப்பன்றிக்கு மாட்சிப்பெயரே.

**முட்பன்றியின்பெயர் : ௩**

எய்யே,முண்மா, சல்லியம்,முட்பன்றி.

**மானின்பெயர் : ௬**

சாரங்கம்,நவ்வி, மறி,பிணை,அரிணம்,
உழை,யெனச்சொல்லிய ஆறுமானின்பெயர்.

**மானேற்றின்பெயர் : ௨**

இரலையும்,கலையும், அவற்றினேறும்.

**புல்வாயின்பெயர் : ௧**

இரலை,புல்வாய் ஆகவுமுரித்தே.

**பூனையின்பெயர் : எ**

விலாளம்,பவனம், வெருகு,விடருகம்,
பூசை,பாக்கன், மார்ச்சாலம்,பூனை.

**ஆண்பூனையின்பெயர் : ௩**

விலாளமும்,கடுவனும், வெருகும்,ஆண்பெயர்.

**கரடியின்பெயர் : ௬**

உளியம்,எண்கு, பல்லம்,கரடி,
குடாவடி,என்றும் கூறவும்படுமே.

**நரியின்பெயர் : ௩**

இகலன்,சம்பு, கோமாயும்,நரியே.

**ஓரியின்பெயர் : ௧**

இகலன்,ஓரி என்றுமாகும்.

**கீரியின்பெயர் : ௩**

நகுலம்,காத்திரம் தீர்வை,கீரி.

**முயலின்பெயர் : ௧**

சசம்,முயலென்று சாற்றப்படுமே.

**கத்தூரியின்பெயர் : ௭**

மறுவி,நாவி, மான்மதம்,துருக்கம்,
நரந்தம்,நானம், மறுவல்,கத்தூரி.

**குரங்கின்பெயர் : ௧௦**

அரியே,கோகுலம், கடுவன்,கோடரம்,
கவியே,யூகம், மந்தி,மர்க்கடம்,
நிரந்தரம்,வானரம், என்றிவைபத்தும்
குரங்கின்பெயரெனக் கூறல்வேண்டும்.

**பெண்குரங்கின்பெயர் : ௨**

மந்தி,யூகம், மற்றதன்பெண்பெயர்.

**கருங்குரங்கின்பெயர் : ௨**

காருகம்,யூகம், கருங்குரங்காகும்.

**முசுவின்பெயர் : ௩**

ஓரியும்,கலையும், கடுவனும்,முசுவே.

**நாயின்பெயர் : ௮**

எகினன்,சூரன், ஞமலி,சுணங்கன்,
ஞமலி,குக்கன், ஞாளி,சுவா,நாய்.

**பெண்ணாயின்பெயர் : ௧**

முடுவல்,பெண்ணாய் ஆகலுமுரித்தே.

**உடும்பின்பெயர் : ௨**

உடும்பே:முசலிகை, கோதா,வாகும்.

**அணிலின்பெயர் : ௧**

வெளிலே,யணிலாம் எனவிளம்பினரே.

**ஓந்தியின்பெயர் : ௬**

அண்டசம்,ஓதி, சரடம்,சாயானதம்,
ஓமான்,தண்டு, ஓந்தியென்றிசைப்பர்.

**பச்சோந்தியின்பெயர் : ௧**

பச்சோந்தி:காமரூபிப்பெயரே.

**மூஞ்சூறின்பெயர் : ௩**

சுண்டன்,சூரன், சுசுந்தரி,மூஞ்சூறு.

**எலியின்பெயர் : ௨**

சிகரி,இரும்பன், எலியெனப்படுமே.

**காரெலியின்பெயர் : ௧**

கருப்பை,காரெலி.

**பெருச்சாளியின்பெயர் : ௨**

ஆகு,மூடிகம், ஆம்பெருச்சாளி.

**ஒருசார்விலங்கேற்றின்பெயர்: கஉ**

களிறும்,ஆவும், ஒருத்தலும்,ஏறும்,
போத்தும்,பகடும், கலையும்,உம்பலும்,
கடுவனும்,சேவலும் தகரும்,ஏட்டையும்,
ஒருசார்விலங்கின் ஏற்றிற்குரிய.

**இவற்றுள், களிறெனும்பெயர்:**

வேழமும்,கேழலும், விதந்துகளிறென்ப.

**மாவெனும்பெயர்:**

குதிரையும்,யானையும், பன்றியும்,மாவே.

**ஒருத்தலெனும்பெயர்:**

புலி,உழை,புல்வாய், மரையே,எருமை,
கவரி,யானை, பன்றி,கரடி,
உரியவாகும் ஒருத்தற்பெயர்க்கே.

**ஏறெனும்பெயர்:**

கவரி,பன்றி, மரை,உழை,புல்வாய்,
எருமை,எருது,சுறவு, ஏறெனப்படுமே;
துருவாடு,ஏறு என்னவும்படுமே.

**போத்தெனும்பெயர்:**

புலியே,மரையே, புல்வாய்,பெற்றம்,
எருமை,யென்றிவற்றின் ஏறுபோத்தே.
பூனையும்,நீர்வாழ் சாதியும்போத்தே.
குதிரையாணும் போத்தெனப்படுமே.
வெருகு,போத்து என்னவும்படுமே.

**பகடெனும்பெயர்:**

யானை,பெற்றம், எருமை,ஏற்றை
தானேபகடென் றுரைக்கத்தகுமே.

**கலையெனும்பெயர் :**

மானே,முசுவே, கலையொடுவருமே.

**உம்பலெனும்பெயர் :**

யானையும்,யாட்டின் ஏற்றையும்,உம்பல்.

**கடுவனெனும்பெயர் :**

குரங்கும்,வெருகும், கடுவனென்ப.

**சேவலெனும்பெயர் :**

கோழியும்,அன்னமும், சேவலாகும்.

**தகரெனும்பெயர் :**

சுறு,களிறு,ஆளி, துருவாட்டேற்றை,
தகரெனுநாமம் தக்கதென்ப.

**ஏட்டையெனும்பெயர் :**

எருமைப்பகடையும், வெருகினேற்றையும்
வருபவேட்டை எனவகுத்தனரே.

**சேவெனும்பெயர் :**

எருமை,புல்வாய், ஏறு,சேவே.

**ஒருசார்விலங்கின் பெண்பெயர் :**

பெட்டையும்,பிணையும், பிணவும்,ஆனும்,
நாகும்,மூடும், கடமையும்,பாட்டியும்,
மந்தியும்,ஒருசார் விலங்கின்பெண்பெயர்.

**பெட்டையெனும்பெயர் :**

ஒட்டகம்,குதிரை, கழுதை,மரை,யிவை
பெட்டையெனும்பெயர்க் கெண்ணப்பெறுமே.

45258
P31;D42:1:1
J8;2
MADURAI UNIVERSITY LIB

**பிணையெனும்பெயர் :**

புலி, உழை, புல்வாய், கவரி, யென்றிவை
பிணையெனும்பெயரிற் பேசப்படுமே.
யானை, குதிரை, ஒட்டகம், கழுதை,
ஆனபிணையென் றறைதற்குரிய.

**பிணாவெனும்பெயர் :**

பன்றி, புல்வாய், நாய், எனமூன் றும்
பின்றாக்காட்சிப் பிணாவொடுவருமே.

**ஆனெனும்பெயர் :**

எருமையும், பசுவும், மரையும், என்ன
வருபவைமூன் றும் ஆனெனப்படுமே.

**நாகெனும்பெயர் :**

மரையும், பெற்றமும், எருமையும், நாகே;
நீர்வாழ்சாதி பெண்ணின்நாகே.

**மூடு-கடமை-எனும்பெயர் :**

மூடும், கடமையும், ஆடலபெறாஅ.

**பாட்டியெனும்பெயர் :**

பாட்டியென்ப பன்றியும், நாயும்
நரியிற்பாட்டி நடைபெற்றியலும்
ஒருசார்விலங்கின் பெண்பெயர்க்குரைப்பர்.

**மந்தியெனும்பெயர் :**

குரங்கும், ஊகமும், முசுவும், என்றிவை
வருங்காற்பெண்பெயர் மந்தியென்றாகும்.

**பெண்ணெனும்பெயர் :**

பெண்பாலெல்லையும் பெண்ணெனப்படுமே.
அன்றியும்
பெண்பாலெல்லையும் பிணாவென்பவொருசார்.

**ஆனெனும்பெயர் :**

ஆண்பாலெல்லாவையும் ஆணெனப்படுமே.

**போதகமெனும்பெயர் :**

அரிமா,யானை, புலியேயனைய,
இனையவேற்றை போதகமென்ப.

**விலங்கின்பிள்ளைபெறும்பெயர் :**

குருளையும்,குட்டியும், பறழும்,பார்ப்பும்,
பிள்ளையும்,மறியும், கன்றும்,குழவியும்,
பெறுமே விலங்கின் பிள்ளைப்பெயரே.

**குருளை-பறழ்-என்னும்பெயர் :**

புலியே,பன்றி, முயல்,நாய்,நரி,யிவை
குருளை,பறழெனக் கூறினர்புலவர்.

**பிள்ளையென்னும்பெயர் :**

பிள்ளைப்பெயரே நாயன்றிப்பெறுமே.

**மறியெனும்பெயர் :**

ஆடு,மான்,குதிரை, அழுங்கு,மறியென்ப.

**கன்றெனும்பெயர் :**

கடமையும்,யானையும், குதிரையும்,கழுதையும்,
மரையும்,எருமையும், மானும்,ஒட்டகமும்,
கவரியும்,கராமும், கன்றெனப்படுமே.

**குழவியெனும்பெயர் :**

யானையும்,கடமையும், எருமையும்,மரையும்,
ஆனும்,குழவிப் பெயரோடடையும்.

**பறழ்-குட்டி-எனும்பெயர் :**

வெருகே,பன்றி, அணில்,எனமூன்றும்
பறழே,குட்டிப் பாலவாகும்.

**குருளை-கன்று-குழவி-குருளை-எனும்பெயர் :**

குருளையும்,கன்றும் ஆனிற்கொளலும்
குழவியும்,குருளையும் முசுவிற்பெறலும்
ஒருசார்விலங்கின் பிள்ளைப்பெயரே.

**பிள்ளை-பார்ப்பு-எனும்பெயர் :**

பிள்ளையும்,பார்ப்பும், தவழ்சாதிபெறுமே.

**ஏற்றை-குருளை-எனும்பெயர் :**

நந்தின்ஏற்றையும் அரவிற்குருளையும்
வந்துழியொருசார் வழங்குதற்குரிய.

**குரங்குமுதலிய கோடுவாழ்விலங்கிற்குரிய பிள்ளைப்பெயர் :**

குழவியும்,மகவும், குட்டியும்,பிள்ளையும்,
பறழும்,பார்ப்பும், பகரப்படுமே.

**கோடுவாழ்விலங்காவன :**

குரங்கு,முதலாயின கோடுவாழ்விலங்கே.

**விலங்கின்பொதுப்பெயர் : ௨**

மாவும்,மானும் விலங்கின்பொதுப்பெயர்.

**காலியினம்-அல்லது-பசுக்கூட்டத்தின்பெயர் : ௨**

காலியினநிரை தொழுவுமாகும்.

**விலங்கின்கூட்டத்தின்பெயர் : ௫**

கணமும்,சாலமும், வியூகமும்,குலமும்,
விருந்தமும்,கூட்டம், எனப்பெயர்பெறுமே
வந்துழிபெறுதற் குரியவென்ப.

**வாலுறுப்பின்பெயர் : ௪**

வாலதி,தோகை, கூலம்,இலாங்கூலம்
வாலுறுப்பாக மதித்தனர்புலவர்.

**வாற்கீழிடத்தின்பெயர்: க**

வெருகம்,என்பது வாற்கீழிடமாம்.

**யானைச்செவியின்பெயர்: உ**

யானைச்செவியே: கன்னம்,தாலம்.

**யானைமுதுகின்பெயர்: க**

மஞ்சு,முதுகெனா வகுத்தனர்புலவர்.

**யானைவாலின்பெயர்: உ**

வாலதி,தால வட்டம்,ஆகும்.

**யானைமதத்தின்பெயர்: உ**

கடமும்,தானமும், மதமாகும்மே.

**மதம்பாய்கவுட்சுவட்டின்பெயர்: க**

கரடம்,மதம்பாய் கவுட்சுவடாகும்.

**மும்மதமாவன:**

கன்னமதம்,கோசமதம், கைம்மதம்,மூவகையே.

**தாளின்பெயர்: உ**

காத்திரம்,அபரம், தாளாகும்மே.

**குதிரைவாயினும் யானைக்கையினுமுமிழ்நீரின்பெயர்: க**

இவுளிவாயினும் யானைக்கையினும்
உமிழ்நீர்,விலாழி,யென் றுரைக்கத்தகுமே.

**எருத்தின்முரிப்பின்பெயர்: க**

இமிலே,ஏற்றின் திரண்முரிப்பாகும்.

**முலைமேற்றிரள்சுரப்புவடிவின்பெயர்: க**

செருத்தன்,முலைமேல் திரள்சுரப்புவடிவே.

**முலையின்பெயர்: க**

சுரை,யென்பெயரே முலையிற்காகும்.

**கொம்பின்பெயர் :** ௩

கோடு,மருப்பும், உலவையும்,கொம்பே.

**தோலின்பெயர் :** ௧௦

வடகம்,கிருத்திமம், சருமம்,துவக்கு,
பச்சை,புறணி, உரி,போர்வை,அதள்,
ஒத்தஉருத்தி,யொடு பத்துந்தோலே.

**ஊனின்பெயர் :** ௧௩

தசை,தடி,விடக்கு, தூ,வள்ளூரம்,
பிசிதம்,புலால்,புண், புலவும்,ஊனே.

**ஆவினிறைச்சியின்பெயர் :** ௧

ஆவினிறைச்சி வள்ளூரம்,ஆகும்.

**உதிரத்தின்பெயர் :** ௧௦

எருவை,செந்நீர், இரத்தம்,புண்ணீர்,
குருதி,சோரி, நெய்த்தோர்,சுடுவல்,
கறை,சோணிதம்,என ஈரைங்கிளவியும்
உதிரமென்ப உணர்ந்திசினோரே.

**நிணத்தின்பெயர் :** ௩

நெய்யும்,இழுதும், விழுக்கு,நிணப்பெயர்.

**முடையின்பெயர் :** ௪

பூதி,ஊழ்த்தல், தசை,புலவு,முடையே.

**சூலின்பெயர் :** ௩

பீளும்,சினையும், கருவும்,சூலே.

**பாம்பின்பெயர் :** ௧௩

அரவே,நாகம், அங்கதம்,புயங்கம்,
உரகம்,பாந்தள், அரி,அகி,போகி,
பன்னகம்,கட்செவி, பணி,வியாளம்,பாம்பே.

**பெரும்பாம்பின்பெயர் : ௨**

பாந்தள்,மாசுணம், பெரும்பாம்பாகும்.

**பாம்பின்படத்தின்பெயர் : ௨**

பையும்,பணமும், பாம்பின்படமே.

**பாம்பின்படப்பொறியின்பெயர் : ௨**

உத்தியும்,துத்தியும், உரகபடப்பொறி.

**நஞ்சின்பெயர் : ௭**

கடுவே,ஆலம், காளகூடம்,
விடம்,காளம்,கரளம், காரி,நஞ்சே.

**கருடன்பெயர் : ௫**

வைனதேயன்,உவணன், பன்னகவைரி,
கலுழன்,புள்ளரசு, கருடனாகும்.

**கழுகின்பெயர் : ௨**

எருவையும்,உவணப் புள்ளும்,கழுகே.

**சரபத்தின்பெயர் : ௪**

சிம்புள்,வாருண்டகம், சம்பரம்,துரோணம்,
எண்காற்சரபத் தின்பெயராகும்.

**பருந்தின்பெயர் : ௩**

பாறும்,சேனமும், கங்கமும்,பருந்தே.

**சாதகப்புள்ளின்பெயர் : ௧**

வானம்பாடி, சாதகப்புள்ளே.

**கேகயப்புள்ளின்பெயர் : ௧**

அசுணமாவே, கேகயப்புள்ளே.

**குயிலின்பெயர் : ௩**

கோகிலம்,களகண்டம், பிகம்,குயிலாகும்.

**செம்போத்தின்பெயர் : உ**

குக்கில்,செம்போத்து சகோரமும்,அதற்கே.

**கோழியின்பெயர் : ௩**

குக்குடம்,சேவல், வாரணம்,கோழி.

**கூகையின்பெயர் : ௩**

கூகை,குடிஞை, குராலே,கோட்டான்.

**மயிலின்பெயர் : அ**

கேகயம்,சிகண்டி, சிகியே,மயூரம்,
தோகை,கேதாரம், மஞ்ஞை,பிணிமுகம்,
ஆயினவெல்லாம் மயிலெனவறைவர்.

**மயிற்பீலியின்பெயர் : ரு**

தொங்கலும்,கலாபமும், இறகும்,கூழையும்,
இங்கிவைமயிலின் பீலியென்ப
தங்கியவொருவழி கூந்தல்,எனத்தகும்.

**இறகினடிமுள்ளின்பெயர் : க**

முருந்தே,இறகின் முதன்முள்ளாகும்.

**மயிற்சிகையின்பெயர் : உ**

அனந்தம்,மயூரம், விரிசிகையாகும்.

**காக்கையின்பெயர் : சு**

காரி,வாயசம், கொடி,கரும்பிள்ளை,
தேறிஞன்கும் காக்கையாகும்.

**வலியன்பெயர் : உ**

வலியன் : பாரத்து வாசன்,வயவன்.

**கரிக்குருவியின்பெயர் : ௩**

கஞ்சனம்,வலியன், கயவாய்,கரிக்குரீஇ.

**கிளியின்பெயர் : அ**

வன்னி, தத்தை, சுகம், அரி, சுவாகதம்,
கிள்ளை, அவந்திகை, கீரம், கிளியே.

**கருங்கிளியின்பெயர் : உ**

கீரம், கிள்ளை, கருங்கிளியாகும்.

**புறவின்பெயர் : சு**

தூதுணம், களரவம், பாராவதத்தொடு,
சீர்சால்கபோதமும், புறவெனப்படுமே.

**மாடப்புறவின்பெயர் : க**

காளபதமே, மாடப்புறவாம்.

**கரும்புறவின்பெயர் : உ**

கபோதம், பாராவதம், கரும்புறவாகும்.

**கவுதாரியின்பெயர் : ந**

இதலே, பூழான், சிவல், கவுதாரி.

**அன்றிலின்பெயர் : க**

கிரவுஞ்சம், அன்றில்.

**ஊர்க்குருவியின்பெயர் : க**

சகடம், ஊர்க்குருவி.

**சிவலின்பெயர் : உ**

இதலே, பகண்டை, சிவலாகும்மே.

**பகண்டையின்பெயர் : க**

சில்லை, பகண்டை ஆமெனச்செப்புவர்.

**நாகணவாய்ப்புள்ளின்பெயர் : உ**

பூவை, சாரிகை, நாகணவாய்ப்புள்.

**காடையின்பெயர் : க**

குறும்பூழ்,காடையின் பெயரெனக்கூறுவர்.

**மீனெறிசிறுபறவையின்பெயர் : உ**

சிரலே,சிச்சிலி, மீனெறிசிறுபறவை.

**பறவைப்பொதுப்பெயர் : எ**

புள்ளுப்,போகில், சகுணம்,பிணிமுகம்,
ஒள்ளியபறவைக் கெல்லாம்பொதுப்பெயர்.
பதங்கமும்,ககமும், விகங்கமும்ஆகும்.

**அன்னத்தின்பெயர் : ரு**

ஓதிமம்,அஞ்சம் எகினம்,அன்னம்,
நீதியின்உன்னமும், அவ்வினப்பறவை.

**அன்னச்சிறகின்பெயர் : க**

தூவி,அன்னச் சிறகெனச் சொல்லுவர்.

**சக்கரவாகத்தின்பெயர் : உ**

நேமிப்புள்ளும், சகோரமும்,என்றிவை
ஆகுஞ்சக்கர வாகப்பெயரே.

**பெருங்குருகின்பெயர் : க**

யானையுண்குருகு, பெருங்குருகாகும்.

**கொய்யடிநாரையின்பெயர் : உ**

குருகு,வெண்டானம், கொய்யடிநாரை.

**பெருநாரையின்பெயர் : உ**

பெருநாரை:போதா, பிதாவும்ஆகும்.

**வெண்ணாரையின்பெயர் : க**

வெண்ணாரை:சாரசம்.

**கருநாரையின்பெயர் : ௧**

*கருநாரை:சிகரி.*

**நிலாமுகியின்பெயர் : ௨**

*சகோரம்,போராந்தை, தண்ணிலாமுகியே.*

**நீர்க்காக்கையின்பெயர் : ௧**

*கரண்டம்,நீர்க்காக்கை.*

**சம்பங்கோழியின்பெயர் : ௧**

*கம்புள்,சம்பங்கோழி.*

**கொக்கின்பெயர் : ௨**

*குரண்டமும்,பகமும், கொக்கின்பெயரே.*

**வண்டின்பெயர் : ௧௯**

*அளியே,கேசரம், அறுபதம்,கழுதொடு,*
*வரியே,சுரும்பு, தேன்,சூதம்,*
*அரி,மா,பிரமரம், அராபதம்,வரிக்,கடை,*
*பிரசம்,தும்பி, மதுகரம்,மிஞிறு,*
*விரவியதேனி, வண்டெனப்படுமே.*

**ஆண்வண்டின்பெயர் : ௧**

*சுரும்பு,அவற்றுணெனச் சொல்லவும்படுமே.*

**தும்பியின்பெயர் : ௧**

*மதுகரம்,தும்பி ஆகவும் வைப்பர்.*

**இந்திரகோபத்தின்பெயர் : ௨**

*ஈயல்,மூதா, இந்திரகோபம்.*

**விட்டிற்பறவையின்பெயர் : ௨**

*பதங்கமும்,சலபமும், விட்டிற்பறவை.*

**சிள்வீட்டின்பெயர் : ௩**

சிதடி,நெடி,சில்லிகை, சிள்வீடாகும்.

**நுளம்பின்பெயர் : ௬**

அளலம்,முளல்,வளு, நொள்ளல்,நுளம்பே,

**கொசுகின்பெயர் : க**

மசகம்,கொசுகென வகுத்தனர்புலவர்.

**துருஞ்சிலின்பெயர் : க**

துருஞ்சில்:ஆலாலம்.

**வாவலின்பெயர் : க**

அஞ்சலிகை:வாவல்.

**சேவலெனும்பெயர் :**

மயிலொழித்தெல்லாப் பறவையினாண்பெயர்
பயிலுஞ்சேவல் என்மொழிப்பால.

**போத்தெனும்பெயர் :**

மயிலே,எழாலொடு, போத்தெனப்படுமே.

**புள்ளின் பெண்பெயர் : ௩**

பெட்டை,பெடை,பேடை, புள்ளின்பெண்பெயர்.

**அளகெனும்பெயர் :**

கோழி,கூகை, பெண்பெயரல்லன
ஆயுங்காலை அளகெனவறைவர்.

**பார்ப்பு பிள்ளையெனும்பெயர் :**

பார்ப்பும்,பிள்ளையும் பறப்பவற்றிளமை.

**பறவைமுட்டையின்பெயர் : உ**

அண்டமும்,சினையும் அவற்றின்முட்டை.

**வாயலகின்பெயர் : உ**

துண்டமும்,மூக்கும் வாயலகாகும்.

இறகின்பெயர் : சா

பறையும்,தூவியும், சிறையும்,பிச்சமும்,
குரல்,கூழை,யென்றிவை இறகின்பெயரே.

புள்ளொலிக்கூட்டத்தின்பெயர் : க

துழனி,புள்ளொலி கூட்டமாகும்.

புள்ளீட்டத்தின்பெயர் : க

தொழுதி,புள்ளீட்டம்.

முதலையின்பெயர் : ரு

கிஞ்சுமாரமும், இடங்கரும்,கராமும்,
முசலியும்,வன்மீனும், முதலையாகும்.

ஆண்முதலையின்பெயர் :

கராம்,அவற்றுணென கருதல்வேண்டும்.

சுறுமீனின்பெயர் : க

மகரம்,சுறுமீன் ஆகவைப்பர்.

இறல்மீனின்பெயர் : க

இறவே,இறுல்மீன்.

கெளிற்றுமீனின்பெயர் : க

கெடிறு,கெளிற்றுமீன்.

மீனின்போதுப்பெயர் : ந

மயிலை,மீனம், மற்சம்,மீன்பொதுப்பெயர்.

பெருமீனின்பெயர் : உ

யானைமீன்,திமி, பெருமீனகும்.

யானைமீனைவிழுங்குமீனின்பெயர் : க

யானையைவிழுங்குமீன்: திமிங்கிலம்,என்ப.

**திமிங்கிலத்தைவிழுங்குமீனின்பெயர் :**

அம்மீனைவிழுங்குமீன் திமிங்கிலகிலமே.

**மலங்கின்பெயர் : க**

ஏனைமலங்கு: நூறை,யென்றுகும்.

**சங்கின்பெயர் : எ**

நந்து,பணிலம், வளை,நாகு,சுரிமுகம்,
கம்பு,கோடு, சங்கெனப்படுமே.

**சிறந்தசங்கின்பெயர் : உ**

சங்கிற்சிறந்தது சாதிவலம்புரி,
பொங்கியகொக்கரை, என்றும்புகல்வர்.

**வலம்புரியிற்சிறந்தசங்கின்பெயர் : க**

அங்கதிற்சிறந்தது சலஞ்சலம்என்ப.

**சலஞ்சலத்திற்சிறந்தசங்கின்பெயர் : க**

அதிலுஞ்சிறந்தது பாஞ்சசன்னியம்.

**நத்தையின்பெயர் : ரு**

கருநந்து,நாகு, சுரிமுகம்,கூன்,நத்தை.

**கிளிஞ்சிலின்பெயர் : ந**

இறல்,எருந்து,ஏரல், கிளிஞ்சிலென்ப.

**சிப்பியின்பெயர் : உ**

இப்பி,சுத்தி, சிப்பியாகும்.

**பல்லியின்பெயர் : ந**

புள்ளி,கௌளி, கோகிலம்,பல்லி.

**தவளையின்பெயர் : ரு**

அரி,மறை,நீகம், தேரை,மண்டூகம்,
வருபவையைந்தும் தவளைப்பெயரே.

ஆமையின்பெயர் : ௩
கச்சபம்,கூர்மம், கமடம்,ஆமை.

பெண்ணாமையின்பெயர் : ௧
துளி,பெண்ணாமை.

அட்டையின்பெயர் : ௧
சளுகம்,அட்டை.

நண்டின்பெயர் : ௬
அலவன்,நள்ளி, குளிர்ஞெண்டு,ஆர்மதி,
களவன்,என்றிவை கர்க்கடகப்,பெயரே.

ஆணண்டின்பெயர் :
அலவன்,ஆணெண் றறைதற்குமுரித்தே.

உளுவின்பெயர் : ௧
உளுவு:சுவாவே.

எறும்பின்பெயர் : ௧
உறவி,யெறும்பே.

தேளின்பெயர் : ௫
தெறுக்கால்,பறப்பன், தேளே,விருச்சிகம்,
அலம்,என்பெயரும் தேளின்மேற்றே.

சிலந்தியின்பெயர் : ௨
சிலம்பியும்,உலூதையும், சிலந்தியென்றாகும்.

நாகரவண்டின்பெயர் : ௧
நாகரவண்டின் நாமம்:நொள்ளை.

கறையானின்பெயர் : ௩
சிதலை,யாழல், செல்லே,கறையான்.

**புழுவின்பெயர் : உ**

கிருமியும்,கீடமும், புழுவின்பெயரே.

**கோற்றேனின்பெயர் : க**

கோற்றேன்:பிரசம்.

**தேன்கூட்டின்பெயர் : க**

இறால்,தேன்கூடே.

**கோற்புழுவின்பெயர் : உ**

கோற்புழு:உலண்டு, கீடமும்,ஆகும்.

காதலி கையிற் போதிப் பெருந்தவன்
தெவ்வடு கால வைவே லெழிலி
அவ்வை பாடிய வம்பற் கிழவன்
றேன்றூர்ச் சேந்தன் றெரிசொற் றிவாகரத்துள்

மூன்றாவது

**விலங்கின்பெயர்த்தொகுதி**

முற்றிற்று.

---

## ௬. மரப்பெயர்த்தொகுதி

**தருவின்வருக்கமாவன: ரு**

சந்தானம்,தேவ தாரம்,கற்பகம்,
மந்தாரம்,பாரி சாதம்,என்ப.

**சந்தனத்தின்பெயர்: ரு**

சாந்தம்,மலயம், சந்திர திலகம்,
ஏய்ந்தவாரம், சந்து,இவைசந்தனம்.

**அகிலின்பெயர்: ௩**

அகருவும்,பூழிலும், அகிலெனஅறைவர்,
பகரில்;காக துண்டமும்,ஆகும்.

**ஆச்சாமரத்தின்பெயர்: ௩**

சால,மராமரம், ஆவே,ஆச்சா.

**மகிழ்மரத்தின்பெயர்: ௨**

வகுளம்,இலஞ்சி, மகிழ்மரமென்ப.

**தேக்கின்பெயர்: க**

சாதி,தேக்கே.

**சண்பகத்தின்பெயர்: க**

சம்பகம்,சண்பகம்.

**ஆலின்பெயர்: கா**

பூதவம்,கான்மரம், வடமரம்,தொன்மரம்,
ஒதியபழுமரம், கோளி,ஆலே.

**அரசின்பெயர்: கா**

கணவம்,பணையே, மராமரம்,போதி,
அச்சுவத்தம், பிப்பிலம்,அரசே.

**அசோகின்பெயர் : ௩**

பிண்டி,செயலை, காகோளி,அசோகு.

**இரத்தியின்பெயர் : ௧**

இரத்தி:இல்லி.

**மருதின்பெயர் : ௧**

அருச்சுனம்,மருதே.

**கொன்றையின்பெயர் : ௩**

இதழி,கடுக்கையார், அக்குவதம்,கொன்றை.

**குராவின்பெயர் : ௨**

கோட்டம்,குடிலம், குராவெனக்கூறுவர்.

**நாவலின்பெயர் : ௧**

சம்பு,நாவல்.

**வேம்பின்பெயர் : ௧**

நிம்பம்,வேம்பே.

**அத்தியின்பெயர் : ௨**

அதவு,தும்பரம், அத்தியாகும்.

**புளிமாவின்பெயர் : ௩**

ஆம்பிரம்,சூதம், மாழை,புளிமா.

**தேமாவின்பெயர் : ௪**

சூதம்,சேதாரம், ஆம்பிரம்,கொக்கு,
தேர்மாமரத்திவை தேமாவாகும்.

**இருப்பையின்பெயர் : ௧**

மதூகம்,இருப்பை எனவகுத்தனரே.

**செருந்தியின்பெயர் : ௨**

பஞ்சரம்,செங்கோடு, செருந்தியாகும்.

கோங்கின்பெயர் : ரு

ஞாழல்,துருமோற்பலம், கன்னிகாரம்,
பவனி,பிணர்,இவ் வைந்துங்கோங்கே.

பச்சிலைமரத்தின்பெயர் : உ

பசும்பிடி,தமாலம், பச்சிலையாகும்.

வன்னியின்பெயர் : ந

கலி,கஞ்சமியே, குலிசம்,வன்னி.

கருங்காலியின்பெயர் : க

கதிரம்,கருங்காலி.

எட்டியின்பெயர் : க

காஞ்சிரை,எட்டி.

செங்கருங்காலியின்பெயர் : க

சிறுமாரோடம், செங்கருங்காலி.

புன்னையின்பெயர் : க

புன்னை:புன்னாகம்.

சுரபுன்னையின்பெயர் : க

வழை,சுரபுன்னை.

புனமுருங்கையின்பெயர் : க

புன்கு,என்கிளவி புனமுருங்கைப்பெயர்.

ஆத்தியின்பெயர் : உ

ஆரே,தாதகி, ஆத்தியாகும்.

மஞ்சாடிமரத்தின்பெயர் : க

திலகம்,மஞ்சாடி.

இலவமரத்தின்பெயர் : க

இலவம்:பொங்கர்.

நெல்லியின்பெயர் : க

ஆமலகம்,நெல்லி.

கடுமரத்தின்பெயர் : க

அரிதகி,கடுமரம்.

புளியின்பெயர் : ரு

சிந்தம்,சிந்தூரம், சிறந்தஆம்பிரம்,
வந்ததிந்திருணி, எகினம்,புளியே.

குருந்தின்பெயர் : க

குருந்து:குந்தம்.

வெட்பாலையின்பெயர் : க

குடசம்,வெட்பாலை.

கும்மிழின்பெயர் : உ

கூம்பல்,கடம்பல், கும்மிழெனக்கூறுவர்.

குடைவேலின்பெயர் : க

உடை,குடைவேலே.

பாதிரிமரத்தின்பெயர் : க

பாடலம்,பாதிரி.

முருக்கின்பெயர் : உ

கவிரே,கிஞ்சுகம், முருக்கெனக்கருதுவர்.

தேற்றின்பெயர் : க

இல்லம்,தேற்றும்.

விளாவின்பெயர் : க

வெள்ளில்,விளாவாம்.

வில்வத்தின்பெயர் : ௩

கூவிளம்,வில்வம், மாலூரம்,கூவிளை.

வேங்கையின்பெயர் : ௩

திமிசும்,திமிலும், கணியும்,வேங்கை.

கடம்பின்பெயர் : ௩

கதம்பம்,விசாலம், நீபம்,கடம்பே.

வெண்கடம்பின்பெயர் : ௧

மரா,வெண்கடம்பின் பெயராகும்மே.

பலாவின்பெயர் : ௨

பனசம்,வருக்கை, பலாவெனப்பகர்வர்.

ஈரப்பலாவின்பெயர் : ௧

ஆசினி,ஈரப் பலாவாகும்மே.

அழிஞ்சிலின்பெயர் : ௨

அழிஞ்சில்:சேமரம், அங்கோலம்,ஆகும்.

மாதுளையின்பெயர் : ௨

மாதுளம்,கழுமுள், மாதுளையாகும்.

தாதுமாதுளையின்பெயர் : ௧

தாடிமம்,தாது மாதுளையென்ப.

எலுமிச்சையின்பெயர் : ௨

சம்பீரம்,முருக்கு, எலுமிச்சையாகும்.

நாரத்தையின்பெயர் : ௧

நரந்தம்,நாரத்தை ஆகுமென்ப.

குருக்கத்தியின்பெயர் : ௨

குருகே,மாதவி, குருக்கத்தியாகும்.

அகத்தியின்பெயர் : ௩

அச்சம்,கரீரம், முனியே,அகத்தி.

**எருக்கின்பெயர் : க**

அருக்கம்,எருக்கே.

**களாவின்பெயர் : க**

களவு,களாவே.

**இலந்தையின்பெயர் : உ**

இரத்தி,வதரி, இலந்தையாகும்.

**காயாவின்பெயர் : உ**

காசை,பூவை, காயாவாகும்.

**ஞாழலின்பெயர் : ந**

நறவன்,சுள்ளி, நாகம்,ஞாழல்.

**புன்கின்பெயர் : க**

நத்தமாலம், புன்கெனநவில்வர்.

**குங்குமமரத்தின்பெயர் : உ**

மரவம்,துருக்கம், குங்குமமாகும்.

**சதுரக்கள்ளியின்பெயர் : ந**

வச்சிராங்கம், கண்டீர்வத்தொடு,
வச்சிரம்,சதுரக் கள்ளிக்குவைப்பர்.

**அனிச்சத்தின்பெயர் : ந**

நறவம்,சுள்ளி, அருப்பலம்,அனிச்சம்.

**தணக்கின்பெயர் : க**

நுணவு,தணக்கே.

**ஓடையின்பெயர் : க**

உலவை,ஓடை.

**ஓடுவின்பெயர் : க**

ஒடுவே,உடுப்பை.

**உழிஞ்சிலின்பெயர் : க**

உன்னம்,உழிஞ்சில்.

**சேமரத்தின்பெயர் : உ**

எகினம்,சேமரம் ஆண்மரம்,என்ப.

**கமுகின்பெயர் : ங**

கந்தி,பூகம், பூக்கம்,கமுகே.

**பனையின்பெயர் : ச**

பெண்ணை,தாலம், புற்றாளி,போந்தை,யென்
றெண்ணியநாமம் பனையெனஇசைப்பர்.

**இளம்பனையின்பெயர் : க**

போந்தை,இளம்பனை ஆகவும்புகல்வர்.

**தெங்கின்பெயர் : ரு**

நாளிகேரம், இலாங்கலி,ஏடகம்,
தாழை,கேளி, தெங்கெனச் சாற்றுவர்.

**மூங்கிலின்பெயர் : உரு**

காம்பு,திகிரி,கண், வேழம்,சந்தி,
தூம்பு,முளை,வெதிர், விண்டு,வேரல்,
முந்தூழ்,தட்டை, கீசகம்,வேய்,பணை,
அம்பு,வரை,வேணு, கழை,அமை,ஓங்கல்,
பாதிரி,கிளை,அரி, பாண்டில்,உள்பட
வருபவைமூங்கில் எனவகுத்தனரே.

**கரும்பின்பெயர் : ச**

கழை,வேழம்,இக்கு, கன்னல்,கரும்பே.

**தாழையின்பெயர் : ரு**

கண்டல்,கேதகை, மடி,கைதை,முடங்கல்,
வண்டமர்தாழை எனவகுத்தனரே.

**வாழையின்பெயர் : உ**

கதலியும்,அரம்பையும், வாழையாகும்.

**பூவாதுகாய்க்குமரத்தின்பெயர் : க**

கோளி,பூவாது காய்க்குங்குளிர்மரம்.

**வண்டுணுமலர்மரமாவன : உ**

சண்பகமும்,வேங்கையும், வண்டுணுமலர்மரம்.

**மரப்பொதுப்பெயர் : ரு**

பாதவம்,தாரு, தருவே,தாவரம்,
ஓதியவிருக்கம், மரப்பொதுப்பெயரே.

**மரச்செறிவின்பெயர் : க**

பொதும்பர்,மரச்செறிவு.

**மரப்பொதும்பின்பெயர் : க**

கோடரம்,பொதும்பே.

**நந்தனவனத்தின்பெயர் : கக**

தேம்பொழில்,மரக்கா, தோட்டம்,துடவை,
உய்யானம்,சோலை, வனம்,உத்தியானம்,
தண்டலை,கானம், அடவி,பதினொன்றும்,
ஈண்டியநந்தன வனமெனவிசைப்பர்.

**காட்டின்பெயர் : உரு**

கடம்,வியல்,பழுவம், கட்சி,குறும்பொறை,
கடறு,காந்தாரம், அடவி,கான்,வனம்,
ககனம்,காண்டம், கட்டம்,முளரி,
சுரம்,அத்தம்,ஆரணியம், கானம்,களரி,
இரணி,பொச்சை, விடர்,தில்லம்,காடே.

**இலையுதிர்ந்தமுதுகாட்டின்பெயர் : க**

முதையல்,இலையுதிர்வு பிறங்கியமுதுகாடே.

கரிகாட்டின்பெயர் : உ

பொச்சையும்,சுரமும், பொதிகரிகாடே.

காவற்காட்டின்பெயர் : உ

அரண்,இளை,காவல் காடெனவறைவர்.

ஒருமரமொருபெயர் உரைக்குங்கிளவி :

வரைவிலவென்மனர் வள்ளியோரே.

தூற்றின்பெயர் : உ

இறும்பே,மிடை,தூறு.

இண்டையின்பெயர் : க

இண்டை:ஈங்கை.

முள்ளுடை மூலத்தின்பெயர் : க

முண்டகம்,முள்ளுடை மூலமென்ப.

முள்ளின்பெயர் : உ

கண்டகம்,கடுவே, முள்ளெனக்கருதுவர்.

மரக்காழின்பெயர் : ரு

ஆசினி,கரியே, அரியே,வைரம்,
சேகு,மரத்தின் காழெனச்செப்புவர்.

பிரம்பின்பெயர் : ௩

வேத்திரம்,சாதி, சூரல்,பிரம்பே.

ஆண்மரத்தின்பெயர் : உ

அகக்காழ்,வன்மரம், ஆண்மரமாகும்
அவைகருங்காலி முதலாயுள்ளன.

பெண்மரத்தின்பெயர் : உ

புறக்காழ்,வன்புல் பெண்மரமாகும்.
அவைதாம்,
தெரிக்கிற்பனைகமுகு தெங்குமூங்கில்.

**அலிமரத்தின்பெயர் :**

முருக்குநார்பால் மரமுதலாயின
வேறலிமரமெனும் விகற்பம்பெறுமே.

**சிறுதூற்றின்பெயர் : உ**

அறலே,பதுக்கை, சிறுதூறுகும்.

**மருந்தெனும்பெயர் : ரு**

புல்லும்,மரனும், புதலும்,பூடும்,
வல்லியும்,பெயர்க்கொடை மருந்தெனப்படுமே.

**அத்திரசத்திரந்தைத்த புண்ணுற்று மருந்தின்பெயர் : க**

தைத்தவத்திரம் சத்திரந்தணிக்கும்
மெய்த்தநன்மருந்தே : சல்லியகரணி.

**துணிபட்டவுறுப்பினைப் பொருத்துமருந்தின்பெயர் : க**

துண்டமான உறுப்புத்துணிவினை
சந்திசெய்மருந்தே : சந்தானகரணி.

**விரணந்தழும்புகளை நீக்குமருந்தின்பெயர் : க**

விரணமுந்தழும்பும் நீக்கிமெய்யினை
தகைமைசெய்மருந்தே : சமனியகரணி.

**உயிர்தருமருந்தின்பெயர் : க**

உயிர்தருமருந்தே : மிருதசஞ்சீவனி.

**மரமுதலிளமையின்பெயர் : ச**

பிள்ளை,குழவி, கன்று,போத்து,என
கொள்பமரமுத லிளமைப்பெயர்க்கொடை.

**அவ்விளமைப்பெயர்க்குரியவல்லன : உ**

நெல்லும்,புல்லும், நேராவப்பெயர்.

மரக்கொம்பின்பெயர் : கக

பொங்கர்,கம்பு, சாகை,உறுப்பு,
கோடு,பிறக்கம், சினை,பணை,உலவை,
கோடரம்,விடபம், தருமரக்கொம்பே.

தழையின்பெயர் : க

உலவை,தழையே.

இளங்கொம்பின்பெயர் : க

வளார்,இளங்கொம்பே.

இலையின்பெயர் : கo

பத்திரம்,ஓலை, பாசடை,தண்ணடை,
சாகம்,தமாலம், தழை,பாசிலை,அடை,
பேசிய பன்னம், இலையெனப்படுமே.

தளிரின்பெயர் : அ

வல்லரி,குழை,முறி, மஞ்சரி,கிசலயம்,
பல்லவம்,அலங்கல், கிளை,தளிராகும்.

தளிர்த்தலின்பெயர் : ௩

இலிர்த்தலும்,சிலிர்த்தலும், குழைத்தலும்,தளிர்த்தல்.

அடிவெண்குருத்தின்பெயர் : க

முருந்தே,முதலில் செறிவெண்குருத்தே.

கொத்தின்பெயர் : ௪

தொத்தும்,இணரும், துணரும்,மஞ்சரியும்,
கொத்தின்றொடர்ச்சியைக் கூறுங்கிளவி.

பசுங்காயின்பெயர் : க

பசுங்காய்:தீவிளி.

**பழத்தின்பெயர் : உ**

பலம்,கனி,பழமே.

**பரலினுட்படுதோருத்தின்பெயர் : க**

பயினே,பரலின் உட்படுகுருத்தே.

**வெட்டுக்குருத்தின்பெயர் : உ**

பிசினே,ஆணி, வெட்டுக்குருத்தே.

**நந்தியாவர்த்தத்தின்பெயர் : க**

வலம்புரி,நந்தியா வர்த்தமாகும்.

**கஞ்சாவின்பெயர் : உ**

கஞ்சம்,குல்லை, கஞ்சாவாகும்.

**நொச்சியின்பெயர் : உ**

சிந்துவாரம், நிர்க்குண்டி,நொச்சி.

**காந்தளின்பெயர் : ச**

காந்துகம்,தோன்றி, பற்றை,கோடல்,என்
றாய்ந்தநான்கும் காந்தளாகும்.

**செங்காந்தளின்பெயர் : ங**

காந்தள்,தோன்றி, பற்றை,செங்காந்தள்.

**கோடையென்னும்பெயர் : உ**

வெண்காந்தள்,செங்காந்தள், என்றிருவிகற்பமும்
கொண்டேவழங்கும் கோடைப்பெயரே.

**ஊமத்தையின்பெயர் : உ**

உன்மத்தம்,மத்தம், ஊமத்தைப்பெயரே.

**ஆமணக்கின்பெயர் : க**

ஏரண்டம்,ஆமணக்கு.

**குறிஞ்சியின்பெயர் : க**

கோரண்டம்,குறிஞ்சி.

**அலரியின்பெயர் : உ**

கரவீரம்,அலரி, கணவீரமும்,ஆம்.

**வெட்சியின்பெயர் : உ**

செச்சை,சிந்தூரம், வெட்சியாகும்.

**சிறுபூளையின்பெயர் : க**

உழிஞை,சிறுபூளை எனவுரைத்தனரே.

**பருத்தியின்பெயர் : ங**

பரியே,பன்னல், கார்பாசம்,பருத்தி.

**திப்பிலியின்பெயர் : உ**

திப்பிலி:காமன், சிறுமூலம்மே.

**துளசியின்பெயர் : ச**

துளசி:குல்லை, துளபம்,வனம்,துழாய்.

**மிளகின்பெயர் : உ**

மரீசி,கறி,யிவை மிளகெனவைப்பர்.

**மஞ்சளின்பெயர் : க**

மஞ்சள்:அரிசனம்.

**கருணையின்பெயர் : க**

கந்தம்,கருணை.

**சிறுகிழங்கின்பெயர் : க**

சுரசம்,சிறுகிழங் காகுமென்ப.

**வாசந்தருபலபண்டத்தின்பெயர் : அ**

தகரம்,தக்கோலம், கோட்டம்,சாதிக்காய்,
இலவங்கம்,ஆஞ்சி, கச்சோலம்,ஏலம்,எனப்
பகரும்வாசந்தரு பண்டப்பெயரே.

**வெட்டிவேரின்பெயர் : ௬**

மூலகந்தம், பீதகத்தோடு,
வேரி,இருவேலி, வெட்டிவேரென்ப.

**இலாமிச்சையின்பெயர் : ௧**

வேர்,வாசமிலா மிச்சைமேலாகும்.

**கடுகின்பெயர் : ௨**

கடிப்பகை,ஐயவி, கடுகின்பெயரே.

**கொத்துமல்லியின்பெயர் : ௧**

உருளரிசி,கொத்து மலியெனவுரைப்பர்.

**கழுந்து-அல்லது-கழற்காயின்பெயர் : ௧**

கழங்கே:மூழல்.

**கழங்கின்கொடியின்பெயர் : ௧**

கொடி,கழலாகும்.

**கிலுகிலுப்பையின்பெயர் : ௧**

பகன்றை,கிலுகிலுப்பை.

**சேம்பின்பெயர் : ௧**

சகுடம்,சேம்பே.

**சிறுகீரையின்பெயர் : ௨**

சில்லி,சாகினி, சிறுகீரைப்பெயரே.

**கொத்தான்பெயர் : ௨**

நந்தை,கொத்தான், நரந்தையும்,ஆகும்.

**பாற்சோற்றியின்பெயர் : ௨**

பாயசம்,பாற்சொற்றி, பனசமும்,ஆகும்.

**குன்றியின்பெயர் : ௨**

குருவிந்தம்,குஞ்சம், குன்றிப்பெயரே.

**கோளிஞ்சியின்பெயர் : க**

*கோளி,கொளிஞ்சி.*

**நாயுரீஇயின்பெயர் : க**

*கரமஞ்சரி, நாயுரீஇயென்ப.*

**இஞ்சியின்பெயர் :**

*இஞ்சி:நறுமருப்பு, அல்லம்,என்ப.*

**கற்றாழையின்பெயர் : க**

*குமரி,கற்றாழை ஆகக்கூறுவர்.*

**வழுதலையின்பெயர் : ங**

*வங்கம்,பிருகதி, வழுதுணை,வழுதலை.*

**மலைச்சாரல்விளை நெல்லின்பெயர் : க**

*ஐவனம்,மலைச்சாரல் விளைநெல்லாகும்.*

**குளநெல்லின்பெயர் : க**

*நீவாரம்,குளநெல்.*

**செய்ந்நெல்லின்பெயர் : க**

*சாலி,செய்ந்நெல்லே.*

**செந்நெல்லின்பெயர் : உ**

*செந்நெல்:விரீகி, செஞ்சாலி,யாகும்.*

**போரின்பெயர் : உ**

*சும்மை,குவால்,போர்.*

**அரிசியின்பெயர் : உ**

*அரியே,தண்டுலம், அரிசியாகும்.*

**வேயரிசியின்பெயர் : உ**

*இயவை,தோரை, எனும்வேயரிசி.*

**சோளத்தின்பெயர் : உ**

சொன்னலும், இறுங்கும், சோளமாகும்.

**கருந்தினையின்பெயர் : க**

இறடி, கருந்தினை.

**செந்தினையின்பெயர் : க**

ஏனல், செந்தினை.

**உழுந்தின்பெயர் : க**

மாடம், உழுந்தே.

**துவரையின்பெயர் : க**

ஆடகம், துவரை.

**காராமணியின்பெயர் : உ**

கூலம், இதை, காராமணிக்கூற்றும்.

**கடலையின்பெயர் : உ**

மஞ்சூரம், கடலை.

**பயற்றின்பெயர் : க**

முற்கம், பயறே.

**கம்பின்பெயர் : ந**

கவலை, புல், செந்தினை, கம்பாகும்மே.

**கோதுமையின்பெயர் : க**

கோதி, கோதுமை.

**கொள்ளின்பெயர் : உ**

குலுத்தம், காணம், கொள்ளாகும்மே.

**வரகின்பெயர் : க**

வரகு: கோத்திரவம்.

**அவரைதுவரைமுதலாயினவற்றின்பெயர் : க**

முதிரை,அவரை துவரைமுதலாயின.

**விதையின்பெயர் : ச**

பரல்,காழ்,பீசம், வித்து,விதையாம்.

**எள்ளின்பெயர் : உ**

எண்ணும்,திலமும், எள்ளெனவிசைப்பர்.

**எள்ளிளங்காயின்பெயர் : க**

கவ்வை,எள்ளிளங் காயாகும்மே.

**கதிரின்பெயர் : க**

குரல்,கதிராகும்.

**பதரின்பெயர் : க**

பதடி,பதரே.

**தினைத்தாளின்பெயர் : உ**

இருவியும்,அருவியும், தினைத்தாளாகும்.

**வைக்கோலின்பெயர் : ௩**

வையே,பலாலம், வைக்கோலாகும்
வழுதுமொரோவழி வையும்,பெறுமே.

**தூற்றுநெற்கூட்டின்பெயர் : க**

பொங்கழி,தூற்று நெற்கூடாகும்.

**பயிரின்பெயர் : உ**

பயிரே:பசும்புல், பைங்கூழாகும்.

**புற்பிறப்பின்பெயர் : உ**

புதல்,புல்,லென்பன புற்பிறப்பாகும்.

**பச்சறுகின்பெயர் : உ**

பதமும்,தூர்வையும், பச்சறுகாகும்.

**இளம்புல்லின்பெயர் : க**

சட்டம்,இளம்புல்.

**தெங்கிளர்ப்பாளையின்பெயர் : உ**

நாரி,நெய்யரி, தெங்கிளர்ப்பாளை.

**கிழங்கின்பெயர் : உ**

மூலம்,கந்தம், கிழங்கெனமொழிப.

**கோற்கோடியின்பெயர் : க**

இலதை,யெனும்பெயர் கோற்கொடிக்கெய்தும்.

**கொடிப்பிறப்பின்பெயர் : க**

கோற்கொடியென்ப கொடியின்பிறப்பே.

**கற்பகஞ்சேர்கொடியின்பெயர் : க**

கற்பகஞ்சேர்கொடி: காமவல்லி.

**கொடியின்பெயர் : ௩**

வல்லியும்,நூழிலும், வள்ளியும்,கொடியே

**மல்லிகையின்பெயர் : க**

மல்லிகை:மௌவல்.

**இருவாட்சியின்பெயர் : க**

மயிலை,இருவாட்சி.

**முல்லையின்பெயர் : ௩**

மௌவலும்,தளவமும், கற்பு,முல்லை.

**சிறுசண்பகத்தின்பெயர் : ச**

பித்திகை,சாதி, கருமுகை,மாலதி,
ஒத்தசிறுசண் பகமாகும்மே.

**மௌவலின்பெயர் : க**

மாலதி,மௌவல் ஆகுமென்ப.

**மருக்கொழுந்தின்பெயர் : க**

தமனகம்,மருக்கொழுந்து.

**கூதாளியின்பெயர் : உ**

துடி,கூதாளம், கூதாளியென்ப.

**கோவ்வையின்பெயர் : உ**

விம்பமும்,தொண்டையும், கொவ்வைப்பெயரே.

**வள்ளையின்பெயர் : க**

வள்ளை:நாளிகம்.

**காக்கணத்தின்பெயர் : ௩**

கன்னி,கிகினி, கருவிளை,காக்கணம்.

**முந்திரிகையின்பெயர் : உ**

மதுரசம்,கோத்தரிகை, முந்திரிகையாகும்.

**மலைப்பச்சையின்பெயர் : க**

குளவி,மலைப்பச்சை.

**இசங்கின்பெயர் : உ**

குண்டலி,முத்தாபலம், இசங்கெனக்கூறுவர்.

**வேரின்பெயர் : ௩**

சடை,தூர், சிவை,வேர்.

**அடம்பின்பெயர் : க**

அடம்பு:சோபாலிகை.

**விரிதூற்றின்பெயர் : க**

அதிரல்,விரிதூறு.

பீர்க்கின்பெயர் : க

பீரம்,பீர்க்கு.

பெரும்பீர்க்கின்பெயர் : க

பெரும்பீர்க்குப்:படலிகை.

பாகலின்பெயர் : க

கூலம்,பாகல்.

சிவேதையின்பெயர் : க

சிவேதை:பகன்றை.

சீந்திலின்பெயர் : க

அமுதவல்லி,சீந்தில்.

காஞ்சொறியின்பெயர் : க

கண்டூரம்,காஞ்சொறி.

தாளியின்பெயர் : க

பஞ்சிகம்,தாளி.

நறையாலின்பெயர் : க

பகன்றை,நறையால் என்னப்பகர்வர்.

வெற்றிலையின்பெயர் : உ

நாகவல்லி, தாம்பூலம்,வெற்றிலை.

பிரண்டையின்பெயர் : க

வச்சிரவல்லி,பிரண்டையாகும்.

அவுரியின்பெயர் : க

நீலி,அவுரி.

குறிஞ்சியின்பெயர் : க

குறிஞ்சி:சகசரி.

**தும்பையின்பெயர் : க**

துரோணம்,தும்பை ஆகச்சொல்லுவர்.

**தருப்பையின்பெயர் : க**

குசையே,தருப்பை என்னக்கூறுவர்.

**பஞ்சாய்க்கோரையின்பெயர் : க**

எருவை,பஞ்சாய்க் கோரையென்ப.

**வாட்கோரையின்பெயர் : க**

செருஞ்சி,வாட்கோரை.

**நாணலின்பெயர் : க**

காசை,நாணல்.

**விழற்புல்லின்பெயர் : க**

விரணம்,விழற்புல்.

**சுரையின்பெயர் : உ**

அலாபு,தும்பி, சுரையெனப்புகல்வர்.

**நீர்முள்ளியின்பெயர் : க**

நீர்முள்ளி:முண்டகம், ஆகுமென்ப.

**பாசியின்பெயர் : ச**

நாரம்,செவிரம், பதியம்,சைவலம்,
பாசியென்று பகரப்படுமே.

**நீர்க்குளிரியின்பெயர் : க**

கல்லாரம், நீர்க்குளிரியென்ப.

**தாமரையின்பெயர் : உக**

புண்டரீகம்,பதுமம், நளினம்,சரோருகம்,
முண்டகம்,அம்போ ருகம்,அரவிந்தம்,
பங்கயம்,அம்புயம், வாரிசம்,சலசம்,

கஞ்சம்,வனசம், கோகனகம்,கமலம்,
முளரி,நீரோருகம், திருமால்கொப்பூழ்,
திருமலர்,இண்டை, சதபத்திரி,யென
வருபவைதாமரை வண்பெயராகும்.

**தாமரைக்காயின்பெயர் : க**

வராடகம்,தாமரைக் காயெனவகுப்பர்.

**தாமரைச்சுருளின்பெயர் : உ**

சுருள்:பீசம்,வளையம்.

**துவளைப்போதுப்பெயர் : ச**

உற்பலம்,குவலயம், கழுநீர்,குவளை.

**[1]கருங்குவளையின்பெயர் : எ**

நீலோற்பலம்,இந் தீவரம்,குவலயம்,
நீலம்,பானல், காவி,கருங்குவளை,
கல்லாரமும்,எனக் கழறலாகும்.

**செங்குவளையின்பெயர் : ச**

செங்குவளை:அரத்தம், உற்பலம்,செங்கழுநீர்.

**குவலயமெனும்பெயர் : க**

குவலயம்:நெய்தல், ஆகவுங்கூறுவர்.

**செவ்வாம்பலின்பெயர் : உ**

கைரவம்,செவ்வல்லி, செவ்வாம்பலாகும்.

**குமுதமென்னும்பெயர் : உ**

வெள்ளாம்பல்,சேதாம்பல், என்றிருவிகற்பமும்
கொள்பமன்னே குமுதப்பெயர்க்கொடை.

---

1. பிங்கலந்தை முதலியவற்றிற் கருங்குவளையைக் கருநெய்தலெனவும், குமுதத்தை வெண்ணெய்தலெனவுங் கூறுவர்.

குமுதத்தின்பெயர் : ங

ஆம்பலும்,நெய்தலும், அல்லியும்,குமுதம்.

அகவிதழின்பெயர் : க

அல்லி,அகவிதழ்.

புறவிதழின்பெயர் : க

புல்லி,புறவிதழ்.

பூவினுட்கோட்டையின்பெயர் : உ

பொகுட்டே,கன்னிகை, பூவினுட்கொட்டை.

பூவின்வகையாவன : ச

கோட்டுப்பூ,கொடிப்பூ, நீர்ப்பூ,நிலப்பூ,
தோற்றமுடைய பூவின்றொடர்பே.

மொட்டின்பெயர் : கூ

முகை,நனை,கலிகை, முகிழ்,சினை,கோரகம்,
[1]நகை,யொடுகன்னிகை, போகில்,மொட்டே.

பூவின்பெயர் : கூ

அலர்,தார்,அலரி, போது,சுமனசம்,குசுமம்,
மலரோ(டு),இணர்,வீ, மலர்ந்தபூவே.

பூங்கொத்தின்பெயர் : சு

துணரே,மஞ்சரி, வல்லரி,தொத்தோ(டு),
இணரே,குலை,யிவை பூங்கொத்தென்ப.

பழம்பூவின்பெயர் : க

செம்மல்,பழம்பூ, ஆகச்செப்புவர்.

மலர்த்தாதின்பெயர் : ங

மகரந்தம்,கேசரம், கொங்கு,மலர்த்தாதே.

---

1. நகையென்பது-அடைமொழியெனக் கொளினு மமையும்.

**பூவிதழின்பெயர் : உ**

ஏடும்,தோடும், பூவினிதழே.

**மாலையின்பெயர் : உ௦**

தொடையல்,வாசிகை, சிகழிகை,கோதை,
படலை,அலங்கல், கத்திகை,பிணையல்,
அணியல்,சுருக்கை, தொடலை,தாமம்,
தொங்கல்,தெரியல், கண்ணி,தார்,சூட்டு,
மஞ்சரி,ஒலியல், இலம்பகம்,மாலை.

**பின்னியமாலையின்பெயர் : க**

பிணையல்,பின்னிய மாலைப்பெயரே.

**நுதலணிமாலையின்பெயர் : உ**

சூட்டுடன்,இலம்பகம், நுதலணிமாலை.

**வாசிகையின்பெயர் : ௩**

மாலை,சிகழிகை, வாசிகை:தொடையல்,
ஆகுமென்ப அறிந்திசினோரே.

நாடே பிறர் நாட்டிற் குவமையாறே
காலம் அறிந்துதவுங் காவிரிதானே
ஆடவர் திலகன் அம்பன் மன்னன்
ஈடிசைத் தலைவன் அருவந்தைச் சேந்தன்
ஆய்ந்த திவாகரத் தரும்பொருள் விளங்கும்

நான்காவது

மரப்பெயர்த்தொகுதி

முற்றிற்று.

## ரு. இடப்பெயர்த்தொகுதி

**மோக்கத்தின்பெயர்: கஉ**

அமுதம்,கேவலம், அபவருக்கம்,வீடு,
சிவம்,கைவல்லியம், சித்தி,மீளாக்கதி,
பரகதி,யோடு முத்தி,பஞ்சமகதி,
நிர்வாணம்,மோக்கம் எனநிகழ்த்தினரே.

**தெய்வலோகத்தின்பெயர்: கச**

தானம்,துறக்கம், பொன்னுலகு,உம்பர்,
வானகம்,அமருலகு, உயர்நிலை,புத்தேள்,
வியனுலகு,விசும்பு, விண்ணுலகு,நாகம்,
பவனம்,மாசுவர்க்கம், தெய்வலோகப்பெயரே.

**நாகலோகத்தின்பெயர்: உ**

பவனம்,நாக லோகம்:பாதலம்.

**விஞ்சையருலகத்தின்பெயர்: உ**

சேணியும்,சேடியும், விஞ்சையர்சேரிடம்.

**திசையின்பெயர்: கூ**

மாதிரம்,ஆசை, அம்பர்,திசைப்பெயர்.
மற்றுந்திசையின் பெயர்:ககுபம்,திகை,
விசும்பு,உலகம்,கோ, காட்டையும்,ஆகும்.

**கீழ்த்திசையின்பெயர்: ரு**

குணக்கே,பூருவம், இந்திரி,பிராசி,
கிழக்கு,கீழ்த்திசை கிளக்குங்காலே.

**தெற்கின்பெயர்: ரு**

அவாசி,தக்கணம், யாமியம்,தெக்கு,
சிவேதை,மற்றிவை தெற்கெனலாகும்.

**மேற்கின்பெயர் :** ரு

மேக்குப்,பச்சிமம், குடக்கு,இவைமேற்கே
வாருணம்,பிரத்தி யக்கும்,அதுவே.

**வடக்கின்பெயர் :** ௬

உதக்கே,உதீசி, உத்தரம்,இன்ன
வடக்கின்பெயரிவை வைக்குங்காலே.

**பூமியின்பெயர் :** ௬அ

அவனி,காசினி, மேதினி,அளக்கர்,
தரணி,தாரணி, தராதலம்,குவலயம்,
புடவி,பூதலம், தரை,படி,ஞாலம்,
வையம்,அகிலம்,கு, மண்,புவி,பார்,[1]நா(டு),
உலகு,புவனி, பாரி,யுகம்,நேமி,
அகலிடம்,பொறை,மகி, மண்டிலம்,பூத்,திணை,
தலம்,பொழில்,பிருதிவி, வேலாவலயம்,
நிலம்,சகம்,தாலம், பூமியெனநிகழ்த்தினர்.

**நரகத்தின்பெயர் :** கக

நிரயம்,துவாந்தம், பாதாளம்,கும்பி,
அள்ளல்,அளறே, அருஞ்சிறை,இருணிலம்,
எரியும்,திமிரமும், இரௌரவம்,என்றிவை
நரகின்பெயரென நவிலப்படுமே.

**உலகின்பொதுப்பெயர் :** கா

புவனம்,நாடு, பொழில்,தலம்,புடவி,
அவனி,உலகின் பொதுப்பெயர்ப்பால.

**நாட்டின்பெயர் :** கக

பைதிரம்,மண்டிலம், பாண்டில்,தேயம்,
தண்ணடை,சனபதம், அகலுள்,சும்மை,
தண்டம்,ஏணி,உலகு, என்றிவைநாடே.

---

1. நாடு-நடுவெனவும் பாடம்.

**மலையின்பெயர் : ௩௮**

விலங்கல்,அடுக்கல், வெற்புப்,பருப்பதம்,
சிலம்பு,நாகம், குறும்பொறை,சிகரம்,
வேதண்டம்,வீரம், கிரி,திகிரி,சையம்,
தரணி,பூதரம், ஓங்கல்,பிறங்கல்,
குவடு,குன்று,ஓதி, பறம்பு,வரை,விண்டு,
போதி,கோச்,சிலை, இறும்பு,தடம்,மாதிரம்,
பொச்சை,கல்,கல்லகம், பொருப்பு,நகம்,அசலம்,
சாரல்,சிலோச்சயம், சைலம்,மலையென்ப.

**மேருவின்பெயர் : ௬**

ஏமம்,கூடம், பரிசன்னியம்,பூதரம்,
மணிமலை,பொன்மலை, மகமேருவென்ப.

**வெள்ளிமலையின்பெயர் : ௪**

வெண்மலை,வேதண் டம்,விசயார்த்தம்,
கயிலையும்,வெள்ளி மலையெனப்படுமே.

**பொதியமலையின்பெயர் : ௨**

தென்மலை,மலையம், பொதியமலையென்ப.

**கொல்லிமலையின்பெயர் : ௨**

வல்லியம்,பொருப்பே, கொல்லிமலையாகும்.

**குன்றின்பெயர் : ௭**

இறும்பு,பொச்சை, குவடு,பதலை,
பிறங்கல்,பொற்றை, குறும்பொறை,குன்றே.

**மலையுச்சியின்பெயர் : ௫**

கோடு,கொடுமுடி, குவடு,சிகரம்,
சிமையம்,ஐந்தும் மலையினுச்சி.

**மலைப்பக்கத்தின்பெயர் : ௩**

*வாரமும்,தடமும், சாரலும்,மலைப்பக்கம்.*

**பாறையின்பெயர் : ௧**

*அறையே,பாறை.*

**துறுகல்லின்பெயர் : ௧**

*பொறையே,துறுகல்.*

**மலைமுழையின்பெயர் : ௨**

*முடுக்கர்,கந்தரம் மலைமுழையென்ப.*

**கீழறையின்பெயர் : ௧**

*பிலமே,கீழறை.*

**குகையின்பெயர் : ௧**

*நிகுஞ்சம்,குகையாம்.*

**கற்புழையின்பெயர் : ௩**

*கண்டறை,கற்புழை என்னப்படுமே.*
*கற்பாழி,காண்டையும், கருதுவரதற்கே.*

**கல்லின்பெயர் : ௧**

*சிலையே,கல்லே.*

**திரள்கல்லின்பெயர் : ௧**

*உலமே,திரள்கல்.*

**நுழைவாயிலின்பெயர் : ௨**

*நூழையும்,சுருங்கையும், நுழைவாயிலாகும்.*

**மலைப்பிளப்பின்பெயர் : ௧**

*விடர்,மலைப்பிளப்பென விளம்பினர்புலவர்.*

**வெடிப்பின்பெயர் : ௨**

*விடரும்,கமரும், வெடிப்பின்பெயரே.*

**திடரின்பெயர் : ௧**

திட்டை,திடரே.

**சிறுதிட்டையின்பெயர் : ௧**

பதுக்கை,சிறுதிட்டை.

**பரலடுத்துயர்நிலத்தின்பெயர் : ௧**

பரலடுத்துயர்நிலம்: முரம்பு,எனப்படுமே.

**மேட்டின்பெயர் : ௧௧**

திட்டை,திடறு, சுவல்,வல்லை,வன்பால்,
மெட்டு,திடர்,படர், குப்பல்,குவால்,குவை,
ஒட்டியபதினொன்றும் மேடெனவுரைப்பர்.

**பாதாளத்தின்பெயர் : ௩**

அரம்,பிலம்,பாதலம், பாதாளப்பெயரே.

**கடலின்பெயர் : ௩௯**

அத்தி,பௌவம், அளக்கர்,ஆர்கலி,
ஆழி,பெருநீர், அம்பரம்,முந்நீர்,
உப்பு,வீரை, சக்கரம்,சாகரம்,
வேலை,வெள்ளம், மகராலயம்,நேமி,
சலநிதி,வாரி, சலதி,அலையே,
பாராவாரம், உததி,சமுத்திரம்,
பரவை,உவர்,நரலை, புணரி,வாரிதி,
வேலாவலயம், கார்கோள்,ஓதம்,
வாருணம்,சிந்து, வாரம்,அம்புராசி,
கார்மலிஉவரி, கடலெனக்கருதுவர்.

**கடற்றிரையின்பெயர் : ௨**

ஓதமும்,புணரியும், கடற்றிரையாகும்.

புனற்றிரைப்பொதுப்பெயர் : ரு

சீகரம்,தரங்கம், அறல்,கல்லோலம்,
அலை,புனற்றிரைக்கு வரும்பொதுப்பெயரே.

கடற்கரையின்பெயர் : உ

வேலையும்,பாரா வாரமுங்,கடற்கரை.

புனற்கரைப்பொதுப்பெயர் : எ

தீரம்,பாரம், வரை,அணை,கோடு,
கூலம்,வாரம், புனற்கரைப்பொதுப்பெயர்.

செய்கரையின்பெயர் : ௩

குலையும்,சேதுவும், குரம்பும்,செய்கரை.

மலைச்சாரல்வரும் யாற்றின்பெயர் : க

அருவி,மலைச்சா ரல்வரும்யாறும்.

முல்லைக்கான்யாற்றின்பெயர் : உ

கலுழியும்,உயவையும், முல்லைக்கான்யாறு.

ஆற்றின்பொதுப்பெயர் : எ

உந்தி,நதி,துறை, வருபுனல்,குடிஞை,
சிந்து,வோடுஒலியல், ஆறெனச்செப்புவர்.

கழியின்பெயர் : உ

கானல்,முரம்பு, கழியின்பெயரே.

கழிமுகத்தின்பெயர் : ௩

அதோமுகம்,புகாரோ(டு), அருவிகூடல்,
கழிமுகமென்று கருதல்வேண்டும்.

உப்பளத்தின்பெயர் : ௩

உப்பளம்:காயல், உவளகம்,அளக்கர்.

**காவிரியின்பெயர் : க**

பொன்னி,காவிரி.

**பொருநையின்பெயர் : க**

பொருநை;தண்பொருந்தம்.

**கன்னியின்பெயர் : க**

குமரி,கன்னி ஆகக்கூறுவர்.

**வையையின்பெயர் : க**

வேகவதியே, வையையாகும்.

**ஆன்பொருந்தநதியின்பெயர் : க**

ஆனிவானி,ஆன்பொருந்தமாகும்.

**கௌதமைநதியின்பெயர் : க**

கோதை,கௌதமை ஆகக்கொள்ளுவர்.

**கோதாவிரியின்பெயர் : உ**

விருத்தகங்கை, விமலை,கோதாவிரி.

**பால்யாற்றின்பெயர் : உ**

பாலி,கீரநதி, பால்யாறாகும்.

**வாவியின்பெயர் : உஎ**

அலந்தை,பண்ணை, கோட்டம்,கிடங்கே,
இலஞ்சி,தாங்கல், சுனை,ஏல்வை,ஓடை,
வட்டம்,தடாகம், மடு,குளம்,வலயம்,
குட்டம்,குண்டம், பட்டம்,சூழி,
பொய்கை,கேணி, ஆவி,தடம்,படுகர்,
ஏரி,கயம்,பயம், உவளகம்,வாவி.

**எந்திரவாவியின்பெயர் : க**

இலவந்திகை,யே எந்திரவாவி.

**ஆற்றிடைக்குறையின்பெயர் : ௩**

இலங்கையும்,துருத்தியும், எனவரும்பெயரோ(டு)
அரங்கமும்,ஆற்றிடைக் குறையெனவறைவர்.

**ஊருணுநீர்ப்பெயர் : க**

ஊருணும்பொதுநீர் ஊருணி,யாகும்.

**கிணற்றின்பெயர் : எ**

கூவலும்,அசும்பும், கூபமும்,குழியும்,
பூவலும்,கேணியும், துரவும்,கிணறே.

**ஊறலின்பெயர் : ௩**

அஃகும்,உறவியும், அசும்பும்,ஊறல்.

**நீர்க்குமிழியின்பெயர் : ௩**

புற்புதம்,மொக்குள், பௌவம்,நீர்க்குமிழி.

**நுரையின்பெயர் : க**

நுரையேபேனம், ஆகுமென்ப.

**ஆழத்தின்பெயர் : ௩**

அழுந்தும்,குண்டும், கயமும்,ஆழம்.

**நிறைபுனலின்பெயர் : உ**

வழாறும்,பிராறும், வாயும்நிறைபுனல்.

**நீந்துபுனலின்பெயர் : க**

அகாதம்,என்பது நீந்துபுனலாகும்.

**கொழுந்துநீரோட்டத்தின்பெயர் : க**

கோலம்,என்பது கொழுந்துநீரோட்டம்.

**தெளிநீரின்பெயர் : க**

சற்சலம்,என்பது தெளிநீராகும்.

**கலங்கற்புனலின்பெயர்: உ**

விலங்கல்,கலுழி, கலங்கற்புனலே.

**சேற்றின்பெயர்: கஎ**

அள்ளல்,சகதி, அளக்கர்,அசறு,
கொள்ளம்,அளறு, குழம்பு,காலாழ்,
தொள்ளி,பங்கம், பூழி,குழை,சேறே;
தொய்யல்,தொளியே, செதும்பு,சேதகம்,
செய்யல்,என்றிவையும் சேறெனத்தகுமே.

**வழுக்குநிலத்தின்பெயர்: உ**

அருப்பமும்,அழுவமும், வழுக்குநிலமென்ப.

**பொல்லாநிலத்தின்பெயர்: ரு**

அசும்பும்,செதும்பும், அயசும்,என்றிவற்றோடு
அங்கணமும்,சகதியும், பொல்லாநிலமே.

**வெண்மணலின்பெயர்: க**

வாலுகம்,வெண்மணல்.

**மணற்குன்றின்பெயர்: க**

புளினம்,மணற்குன்றே.

**நுண்மணலின்பெயர்: உ**

அதர்,அயிர்,நுண்மணல்.

**புழுதியின்பெயர்: உ**

பொடி,பூழ்தி,புழுதி ஆகுமென்ப.

**அலைகொழித்தகருநுண்மணலின்பெயர்: க**

அறலே,அலைநுண் கருமணலாகும்.

ஐந்திணையாவன :

மலைச்சார்புகுறிஞ்சிநிலம், கடற்சார்புநெய்தல்நிலம்,
காடுசார்நிலம்முல்லை, நாடுசார்நிலம்மருதம்,
நீரின்றிவேனிற் றேர்நிலம்பாலை.

மருதநிலத்தின்பெயர் : கூ

அகணி,பணை,பண்ணை, பழனம்,கழனி,
பானல்,கம்பலை, படுகர்,வயல்,மருதம்.

முல்லைநிலத்தின்பெயர் : உ

புறவம்,புறம்பணை, முல்லைநிலப்பெயர்.

குறிஞ்சிநிலத்தின்பெயர் : உ

அறைவர்குறிஞ்சிக்கும் அப்பெயர்
(புறவம், புறம் பணை)தானே.

வன்பாலெனும்பெயர் :

வன்பால்குறிஞ்சியும் பாலையுமாகும்.

மென்பாலெனும்பெயர் :

மென்பால்என்பது மருதமேற்றே.

சமப்பாலெனும்பெயர் :

முல்லையும்,நெய்தலும் மொழிசமப்பாலே.
கருநிலமெனும்பெயர், மலையினீரில் வனத்தில்வந்தமற்
றினையபயன்படா மிகுதிகருநிலம்.

துருக்கத்தின்பெயர் : க

அழுவம்,துருக்கம் ஆகுமென்ப.

ஊரின்பெயர் : உஎ

பாக்கம்,பட்டினம், பதி,நகர்,சும்மை,
பூக்கம்,சேரி, புரம்,முட்டம்,பூண்டி,
அகரம்,குடியே, குறிச்சி,கோசரம்,

அகலுள்,நொச்சி, இருக்கை,வேலி,
குப்பம்,பாடி, குறும்பு,பாழி,
சிறுகுடி,தண்ணடை, உறையுள்,எயிலொடு,
வாழ்க்கை,யுட்படுத் திருபத்தேழும்,
நாடிலூரென நவின்றிசினோரே.

நீரும்வயலுஞ்சூழ்ந்தவூரின்பெயர் : க
சுரந்தநீரும் வயலுஞ்சூழ்ந்தவூர்:
கிராமமாகக், கிளக்கப்படுமே.

ஐந்நூறுகுடிநிறைந்தவூரின்பெயர் : க
குடியைஞ்ஞூறுக்குக் குறைவறநிறைந்தது:
பெருங்கிராமம்,எனப் பேசப்படுமே.

மலைசூழ்ந்தவூரின்பெயர் : க
கிரிபலசூழ அடுத்தவூர்:கேடகம்.

மலையுமாறுஞ்சூழ்ந்தவூரின்பெயர் : க
மலையுமாறும் அடுத்தவூர்:கர்வடம்.

பலபண்டம்பகருங் கடற்கரையூரின்பெயர் : க
பண்டம்பலகொடு பகருங்கடற்கரை:
மன்னும்பதியே; பட்டினம்,ஆகும்.

சீறூரின்பெயர் : ௩
பட்டும்,நொச்சியும், பள்ளியும்,சிற்றூர்.

குறிஞ்சிநிலத்தூரின்பெயர் : உ
குறிச்சி,சீறூர், குறிஞ்சிநிலத்தூர்.

முல்லைநிலத்தூரின்பெயர் : க
பாடி,முல்லைப்பதி.

**நெய்தனிலத்தூரின்பெயர்: க**

பட்டினம்,நெய்தற் பதியெனப்படுமே.

**பாலைநிலத்தூரின்பெயர்: உ**

முனையிடம்,குறும்பு, முதுபாலைநிலத்தூர்.

**மருதநிலத்தூரின்பெயர்: கச**

பூக்கம்,கொடிக்காடு, பூரியம்,உறையுள்,
பாக்கம்,அருப்பம், அகலுள்,பதியே,
கோட்டம்,வசதி, தாவளம்,நியமம்,
வாழ்க்கை,தண்ணடை, மருதநிலத்தூர்ப்பெயர்.

**நகரப்பதியின்பெயர்: உ**

பாடியும்,புரமும், நகரப்பதியே.

**சூழ்கழியிருக்கையின்பெயர்: க**

சூழ்கழியிருக்கை: கோணுமுகமே.

**மருங்கிலூர்சூழ்பெரும்பதியின்பெயர்: க**

மருங்கிலூர்சூழ் பெரும்பதி:மடப்பம்.

**கொடுங்குறும்பரணிருக்கையின்பெயர்: க**

கொடுங்குறும்பரணிருக்கை: குறும்பென்றாகும்.

**முனைமேற்சென்றேருறைபதியின்பெயர்: க**

பாசறை,முனைமேற் சென்றேருறைபதி.

**உறையூரின்பெயர்: க**

கோழி,உறையூர்.

**மதுரையின்பெயர்: க**

கூடல்,மதுரை.

**சிதம்பரத்தின்பெயர்: க**

மன்றம்,சிதம்பரம்.

திருவாரூரின்பெயர் : க

*கமலை, திருவாரூர்.*

கருவூரின்பெயர் : க

*கருவூர்:வஞ்சி.*

காவிரிப்பூம்பட்டினத்தின்பெயர் : உ

*காகந்தி, புகார், காவிரிப்பூம்பட்டினம்.*

அவந்தியின்பெயர் : க

*உஞ்சை, அவந்தி.*

காசியின்பெயர் : க

*காசி:வாரணாசி.*

காஞ்சியின்பெயர் : க

*கச்சி, காஞ்சி.*

மிதிலையின்பெயர் : க

*விதேகை, யென்ப மிதிலையாகும்.*

அயோத்தியின்பெயர் : ங

*வினிதை, சாகேதம், கோசலை, அயோத்தி.*

புரியெனும்பெயர் : க

*புரியென்கிளவி: புரமென்றாகும்.*

பாடியெனும்பெயர் : க

*பாடியென்பது: சேரியாகும்.*

கடாரத்தின்பெயர் : க

*காழகம், கடாரம் ஆகக்கருதுவர்.*

சிங்களத்தின்பெயர் : க

*சிங்களம்; ஈழம் ஆகச்செப்புவர்.*

**நெல்லும்புல்லும்நிறைந்தமலையூரின்பெயர் : க**

நெல்லும்புல்லும் நிறைந்தமத்தகம்,
புல்லுமலையூர்; சம்வாகம்,ஆகும்.

**அரித்துவாரத்தின்பெயர் : க**

அரித்துவாரம்: மாயாபுரியாம்.

**கடையின்பெயர் : ச**

கூலம்,அங்காடி, கடையாகக்கூறுவர்.
ஆவணம்,நியமம், ஆகலுமுரித்தே.

**தெருவின்பெயர் : அ**

ஆவணம்,வீதி, ஒளளல்,மறுகு,
கோசம்நியமம், மார்க்கம்,தெருவே;
சிறகுஎனவொருவழிச் செப்பவும்படுமே.

**நெடுந்தெருவின்பெயர் : ங**

மன்றம்,மார்க்கம், நியமம்,நெடுந்தெருவே.

**குறுந்தெருவின்பெயர் : க**

குறுந்தெரு:மறுகே.

**குதிரைவையாளிவீதியின்பெயர் : ங**

செண்டுவெளி,வை யாளிவீதி;
புரவிவட்டம்,திரு முற்றமும்,ஆகும்.

**வேந்தர்வீதியின்பெயர் : க**

பூரியம்,வேந்தர் வீதியாகும்.

**முடுக்குத்தெருவின்பெயர் : க**

கோணம்,முடுக்குத் தெருவாகும்மே.

**முச்சந்தியின்பெயர் : க**

அந்தி,முச்சந்தி.

சந்தியின்பெயர் : ௩

அந்தி,கவலை, வரியே,சந்தி.

நாற்சந்தியின்பெயர் : க

முந்தையோர் சதுக்கம், நாற்சந்தியென்ப.

சிரேணியின்பெயர் : ௩

சேடியும்,வாடையும், சிரேணியாகும்.
ஆலிடம்,எனவும் அறையப்படுமே.

அக்கசாலையர்வீதியின்பெயர் : க

ஆவேசனம்,அக்கசாலையர் வீதி.

வேடர்வீதியின்பெயர் : க

பக்கணம்,வேடர் வீதியாகும்.

கோயிலின்பெயர் : கச

சினகரம்,சேதிமம், தேவராலயம்,
நிலயம்,பாழி, பள்ளி,நிகேதனம்,
மந்திரம்,ஆலயம், தேவகுலம்,கோட்டம்,
நகர்,தளி,வானவ ருறையுள்,கோயில்.

அறச்சாலையின்பெயர் : உ

சத்திரம்,சாலை, அறச்சாலையாகும்.

ஓதும்பள்ளியின்பெயர் : க

அறப்புறம்,ஓதும் பள்ளியாகும்.

ஓமமண்டபத்தின்பெயர் : க

சமித்தம்,ஓம மண்டபம்சாரும்.

மன்னரில்லின்பெயர் : ரு

சாலை,மாளிகை, பவனம்,கோயில்,
குலமும்,மன்னர் இல்லாகக்கூறுவர்.

**மன்னன்றேவியிருக்கையின்பெயர் : ௩**

கந்தவாரமும், உவளகமும், அந்தப்
புரமும், தேவியர் மனையாகுமென்ப.

**வீட்டின்பெயர் : க௩**

மாடம், மனை, உறையுள், புக்கில், பதி, வசதி,
இடமே, பாத்தி, அகம், வயின், இல்லம்,
இடவகை, சேர்வு, வீடென்றிசைப்பர்.

**சிற்றிலின்பெயர் : ௩**

கூரை, குரம்பை, குடில், சிற்றிலாகும்.

**பண்டசாலையின்பெயர் : க**

புனைகலனிருக்கை, பண்டசாலை.

**வீட்டிறப்பின்பெயர் : உ**

வளவி, இறையே, வீட்டிறப்பாகும்.

**தாழ்வாரத்தின்பெயர் : க**

சோபானம், தாழ்வாரம் ஆகுமென்ப.

**மூகட்டின்பெயர் : க**

விடங்கம், மூகடே.

**வேயுளின்பெயர் : க**

வேயுள்: வேய்தல்.

**பலகணியின்பெயர் : ரு**

சாலகம், சாளரம், நூழை, சாலேகம்,
வாதாயனம், பலகணியெனப்படுமே.

**மடைப்பள்ளியின்பெயர் : உ**

அட்டில், அடுக்களை, மடைப்பள்ளியாகும்.

**கல்லூரியின்பெயர் : க**

கல்வியூரி கல்லூரியாகும்.

**சுவர்த்தலத்தின்பெயர் : க**

பித்திகை,சுவர்த்தலம்.

**பீடத்தின்பெயர் : க**

பீடிகை,பீடம்.

**சலதாரையின்பெயர் : உ**

அங்கணம்,தூம்புவாய், சலதாரையாகும்.

**முற்றத்தின்பெயர் : உ**

முன்றில்,அங்கணம், முற்றமாகும்.

**நிலாமுற்றத்தின்பெயர் : க**

அரமியம்,நிலாமுற்றம் ஆகுமென்ப.

**திண்ணையின்பெயர் : ச**

திட்டை,மண்ணீடு, தெற்றி,வேதிகை,
திண்ணையாகும் என்மனார்புலவர்.

**கற்படுத்தபூமியின்பெயர் : க**

கற்படுத்தபூமி: குட்டிமம்,ஆகும்.

**சித்திரகூடத்தின்பெயர் : உ**

தெற்றி,அம்பலம், சித்திரகூடம்.

**அம்பலத்தின்பெயர் : ௩**

பொதியிலும்,மன்றமும், பொதுவும்,அம்பலம்.

**கழகமெனும்பெயர் :**

செல்லல்தீய்க்கும் பல்புகழ்ச்சேந்தனில்
வல்லுநர்நாவலர் வாய்ந்தவிடமும்

மல்லும்சூதும் படையுமற்றும்
கல்விபயில்களமும் கழகமாகும்.

**அரசிருக்கையின்பெயர் : உ**

அரசிருக்கைப்பெயர்: அத்தாணி,வேத்தவை.

**அரங்கமெனும்பெயர் : ௩**

போரினிடமும், வட்டாடிடமும்,
ஆடலிடமும், அவையும்அரங்கம்.

**ஒருசிறை-அல்லது-ஒதுக்கிடத்தின்பெயர் : க**

ஒருசிறை:தச்சில்.

**ஏகாந்தத்தின்பெயர் : ௩**

ஒருவந்தம்,ஏகாந்தம் கொட்டில்,வேறிடம்.

**கற்படையின்பெயர் : க**

சுருங்கை,கற்படை ஆகுமென்ப.

**உறைவிடத்தின்பெயர் : உ**

ஆகரம்,பிறப்பிடம், உறைவிடமாகும்.

**அடுப்பின்பெயர் : ச**

குமுதம்,சுல்லி, காமரம்,அடுப்பு.
உததானம்,எனவும் ஓதப்படுமே.

**கூட்டின்பெயர் : ௩**

குடம்பை,பஞ்சரம், கட்சி,கூடாகும்.

**பண்ணுங்கூட்டின்பெயர் : உ**

குலாயனம்,பஞ்சரம், பண்ணுங்கூடே.

**குதிரைப்பந்தியின்பெயர் : உ**

மந்திரம்,சாலை, குதிரைப்பந்தி.

யானைசேர்விடத்தின்பெயர் : ௬
ஆலயமும்,வாரியும், சேவகமும்,தண்டமும்,
கூடமும்,ஒளியும், யானைசேர்விடம்.

யானைசெல்வழியின்பெயர் : க
தண்டம்,யானை செல்வழியென்ப.

யானைதுயிலிடத்தின்பெயர் : க
சேவகம்,யானைத் துயிலிடமாகும்.

மக்கட்கிடப்பிடத்தின்பெயர் : கங
கட்சி,அமளி, சேக்கை,உறையுள்,
சட்டகம்,சேர்விடம், பள்ளி,சயனம்,
பட்டம்,பாழி, பாயல்,அரி,துயிலிடம்,
ஒட்டியவுயர்திணைக் கிடப்பிடமாகும்.

விலங்குதுயிலிடத்தின்பெயர் : ச
பட்டம்,போத்து, பண்ணை,சேக்கை,
விலங்குதுயிலும் இடமாகும்மே.

வேள்விக்குண்டத்தின்பெயர் : உ
வேதியம்,நிமித்தம், வேள்விக்குண்டம்.

முனிவர்வாசத்தின்பெயர் : ச
தாபதம்,பாழி, கரண்டை,பள்ளி,
முனிவர்வாசமென மொழியப்படுமே.

மட்கலஞ்சுடுமிடத்தின்பெயர் : உ
சுள்ளையும்,சூளையும், மட்கலஞ்சுடுமிடம்.

சுடுகாட்டின்பெயர் : கக
சுடுகா(டு):சுமம், மயானம்,சுடலை,
சுடுநிலம்,புறங்கா(டு), இடுகாடு,முதுகாடு,
வனம்,எரிவனம்,பிதிர்வனம்,பிணக்காடே.

**போருகளத்தின்பெயர் : ரு**

களரி,பறந்தலை, செம்புலம்,படுகளம்,
பொருகளம்,என்னப் புகன்றனர்புலவர்.

**வழுக்குநிலத்தின்பெயர் : ரு**

அருப்பம்,ஆரிடம், அளுர்,இழுக்கு,வழுக்குநிலம்.

**தொழுவத்தின்பெயர் : ௩**

தொழுவம்:ஆவேலி, தோழம்,ஆனிலையே.

**மதிலின்பெயர் : கக**

இஞ்சி,நொச்சி, எயில்,சுற்று,புரிசை,
பந்தம்,வரைப்பு, காப்பு,அரண்,காவல்,
ஆரல்,ஓதை, பிராகாரம்,வேலி,
சிர்சாலம்,வேணகை, மதிலெனச்செப்புவர்.
வன்சிறை,உவளகம், ஆரையும்,வரையார்.

**மதிலுளுயர்மேடையின்பெயர் : ௩**

பரிகம்,அகப்பா, பதணம்,மூன்றும்
உரியமதிலுள் உயர்மேடைக்கே.

**மதிற்கூற்றின்பெயர் : ௩**

தொடையும்,தகைப்பும், வாரியுஞ்,சுற்றே.

**மதிலுறுப்பின்பெயர் : எ**

பதப்பாடு,எந்திரம், கோசம்,தோணி,
விதப்பு,ஞாயில், நாஞ்சின்,மதிலுறுப்பே.

**அகழியின்பெயர் : ரு**

அகழி:கிடங்கு,ஓடை, பரிகை,அகழ்,கேணி.

**துதிரின்பெயர் : ௧**

புகல்,குதிராகும்.

வாயிலின்பெயர் : ௬

தோட்டி,துவாரம், வாரி,கடை,வாயில்.

கோபுரம் அல்லது கோபுரநிலையின்பெயர் : க

சிகரி,கோபுரம்.

பெருவாயிலின்பெயர் : க

கோபுரம்,என்பது பெருவாயிலாகும்.

கோபுரவாயிலிற்புத புழையின்பெயர் : க

புதவு,வாயில் புகுபெரும்புழையே.

கோபுரவாயிற்றிண்ணையின்பெயர் : க

அளிந்தம்,அவ்வழி சார் திண்ணையாகும்.

கோபுரவாயிற்படிச்சுருளின்பெயர் : க

அத்தினகம்,வாயிற் படிச்சுருளாகும்.

வயலின்பெயர் : எ

விளையுளும்,பண்ணையும், செய்யும்,கழனியும்,
தடியும்,பாத்தியும், செறுவும்,வயலே.

சிறுவயலின்பெயர் : உ

குண்டில்,பாத்தி, சிறுவயலாகும்.

புனத்தின்பெயர் : உ

குறிஞ்சிநிலச்சார்பும், கொல்லையும்,புனமே.

தினைப்புனத்தின்பெயர் : உ

ஏனலும்,வளாகமும், தினைப்புனமென்ப.

பழங்கொல்லையின்பெயர் : க

முதைப்புனம்,பழங்கொல்லை.

புதுக்கொல்லையின்பெயர் : க

இதைப்புனம்,புதுக்கொல்லை.

**தோட்டத்தின்பெயர்: ங**

*தோட்டம்,துடவை, படப்பை,இம்மூன் றும்*
*தோட்டப்பெயரெனச் சொல்லினர்புலவர்.*

**உழவின்பெயர்: உ**

*துடவை,தொய்யில், உழவின்பெயரே.*

**உழுதொழில் வளைப்பின்பெயர்: க**

*தொடுப்பே,உழுவோர் தொழில்வளைப்பாகும்.*

**புதுவரம்பின்பெயர்: க**

*மரிசி,புதுவரம்பு.*

**புற்றின்பெயர்: க**

*வன்மீகம்,புற்று.*

**வரம்பருகின்பெயர்: க**

*கங்கு,வரம்பருகே.*

**பள்ளத்தின்பெயர்: அ**

*உவளகம்,பயம்பே, அவல்,குழி,தாழ்வே,*
*இழிவு,கிழக்கு, படுகர்,பள்ளம்.*

**புற்றாஞ்சோற்றின்பெயர்: க**

*குரும்பி,புற்றாஞ்சோறே.*

**முதுநிலத்தின்பெயர்: ங**

*களரி,கரம்பே, பெரும்பாழ்,முதுநிலம்.*

**வழியின்பெயர்: உக**

*சரி,நெறி,ஒழுக்கம், தாரை,யாறு,*
*வதி,அதர்,மார்க்கம், இயவை,நடவை,*
*பதவை,செப்பம், அயனம்,இடவை,*
*வாரி,வட்டை, வரி,வயவை,வகுந்து,*
*செலவு,சிறுபதம், வழிக்கிளவியாகும்.*

அருநெறியின்பெயர் : ரு

அத்தம்,கடம்,கடறு, தூம்பு,சுரம்,அருநெறி.

கவர்நெறியின்பெயர் : க

கவலை,கவர்நெறி ஆகக்கருதுவர்.

சிறுவழியின்பெயர் : க

விடங்கர்,சிறுவழி ஆகுமென்ப.

பெருவழியின்பெயர் : க

பாதை,பெருவழி.

இழிந்தேறப்படுவழியின்பெயர் : உ

படுகர்,மடு,இழிந் தேறப்படுநெறி.

கற்படியின்பெயர் : உ

ஆரோகணம், சோபானம்,கற்படி.

நீள்வழியின்பெயர் : க

அளக்கர்,நீள்வழியே.

இடத்தின்பெயர் : கஅ

வாய்,புலம்,பாங்கர், வயின்,களம்,வைப்பு,
தேயம்,வழி,உழி, திணையே,மருங்கு,
பால்,நிலம்,தலமே, வளாகம்,பட்டி,
சூழல்,தானம், இடப்பெயர்த்தொடர்பே.

இடப்பொதுப்பெயர் : கசு

கண்,கால்,புறம்,அகம், உள்,உழை,கீழ்,மேல்,
பின்,சார்,அயல்,புடை, [1]தேவகை,யெனுஅ
முன்,இடை,கடை,தலை, வலம்,இடம்,எனுஅ
அன்னபிறவும் அதன்பாலவென்மனார்.

---

1. தேவகை-என்பது திசைக்கூறு. ஊக்கம் என்பதூஉம் பாடம்.

பக்கத்தின்பெயர் : கூ

மாடு,சிறை,உழி, மருங்கு,ஞாங்கர்,மூன்,
பால்,புடை,பாங்கர், பக்கமாகும்.

நடுவின்பெயர் : கூ

நனந்தலை,நாப்பண், மத்திமம்,நள்ளு,
வயங்கிடை,ஒத்தல், நாவோடு, அணவு,
நலந்திகழ்கூழையும், நடுவென்றாகும்.

உயர்ச்சியின்பெயர் : கசு

உம்பர்,மீ,மிசை, உகப்பு,உச்சம்,ஓங்கல்,
துங்கம்,உவணம், மேடு,மோடு,
தூக்கு,மேக்கு,உறை, உன்னதம்,எழுமை,
நிவப்பு,இவையுயர்ச்சி ஆகநிகழ்த்துவர்.
ஞாங்கர்,மூன்னும், மேலும்,ஆகும்.

முன்னரின்பெயர் : உ

முதலும்,தலைத்தாளும், முன்னராகும்.

இம்பரெனும்பெயர் :

இம்பர்:இவணே.

உம்பரெனும்பெயர் :

உம்பர்:உவணே.

ஆண்டெனும்பெயர் :

ஆண்டு: அவ்விடம்.

ஈண்டெனும்பெயர் :

ஈண்டு:இவ்விடம்.

கூப்பிடுதூரத்தின்பெயர் :

எல்லை,குரோசம், கூப்பிடுதூரம்.

**கோழிபறக்கும் அளவின்பெயர் : க**

கிரவுஞ்சம்,கோழி பறவையளவாகும்.

**யோசனைதூரத்தின்பெயர் : க**

புகை,யோசனையாம்.

**காதத்தின்பெயர் : க**

காவதம்,காதம் ஆகக்கருதுவர்.

ஒருவற் கொருவன் ஆகி யுதவியும்
பரிசின் மாக்கள் பற்பல ராயினும்
தானொரு வன்னே தரணி மானவன்
செந்தமிழ்ச் சேந்தன் தெரிந்த திவாகரத்

தைந்தாவது

இடப்பெயர்த்தொகுதி

முற்றிற்று.

# கூ. பல்பொருட்பெயர்த்தொகுதி

**பொன்னின்பெயர் : ௩௮**

ஆடகம்,மாசை, ஈழம்,ஏமம்,
மாடு,காணம், கனகம்,தமனியம்,
வெறுக்கை,சொன்னம், பொருளோடு,அரியே,
ஈகை,நிதியே, கருந்தனம்,காஞ்சனம்,
பீதகம்,ஆடை, தொடுக்கம்,அருத்தம்,
சாமி,காரம்,பூரி, சந்திரம்,மாழை,
நிதானம்,தேசிகம், செந்தாது,வித்தம்,
திரவியம்,வேங்கை, சாம்பூனதம்,உரை,
சாதரூபம், உடல்,பண்டம்,இரணியம்,
பொலம்,என்றின்னவை பொன்னெனப்படுமே.

**ஐவகையுலோகமாவன :**

பொன்னும்,வெள்ளியும், செம்பும்,இரும்பும்,
அன்னஈயமும், ஐவகையுலோகம்.

**எழுவகையுலோகமாவன :**

தராவொடு,கஞ்சம், தானுங்கூட்டி
எழுவகையுலோகம் என்னவும்படுமே.

**நவமணி கடவுண்மணியின்பெயர் :**

நவமணிகடவுள் மணியென்றிவற்றின்
நிகழ்பெயர்நிதியும், நிதானமும்,என்ப.

**பொற்காசின்பெயர் : ௧**

காணம்,பொற்காசே.

**மணிப்பொதுப்பெயர் : ௨**

மனவும்,காசும், மணியின்பொதுப்பெயர்.

**அகன்மணிப்பொதுப்பெயர்: உ**

அரதனம்,சலாகை, அகன்மணிக்காகும்.

**மாணிக்கத்தின்பெயர்: உ**

மாமணி,பதுமராகம், மாணிக்கம்.

**முத்தின்பெயர்: ரு**

நித்திலம்,தரளம், ஆரம்,முத்தே.
தரளம்,திரட்சி யாகவுஞ்சாற்றுவர்.

**பவளத்தின்பெயர்: சா**

வித்துருமம்,துகிர், துப்போடு,அரத்தம்,
ஒத்தபிரவாளம், துவர்,இவைபவளம்.

**மரகதத்தின்பெயர்: உ**

அரியொடு,பச்சை, மரகதமாகும்.

**வச்சீரமணியின்பெயர்: க**

வச்சிரம்:வயிரம்.

**வைடூரியத்தின்பெயர்: க**

வாலவாயம்,வைடூரியமே.

**நீலமணியின்பெயர்: க**

மணி,நீலமணியே.

**சங்கநிதியெனும்பெயர்:**

செங்கைநிதியம்பற் சேர்ந்தன்செங்கையில்
சங்கின்வடிவினது சங்கநிதியே.

**பதுமநிதியெனும்பெயர்:**

தேமலரலங்கல் சேர்ந்தன்செங்கையில்
தாமரைவடிவினது பதுமநிதியே.

நிதியாவன :

பதினான்குவகையும் நிதியமென்ப.[1]

பண்டாரத்தின்பெயர் : உ

கோசம்,தண்டம், பண்டாரமாகும்.

வெள்ளியின்பெயர் : ங

இரசதம்,தாரம், களதௌதம்,வெள்ளி.

வெண்கலத்தின்பெயர் : க

கஞ்சம்,வெண்கலம் ஆகக்கருதுவர்.

பித்தளையின்பெயர் : உ

மாயாபுரி,ஆரகூடம்,பித்தளை.

செம்பின்பெயர் : ங

சீருணம்,தாம்பிரம், சுற்பம்,செம்பே.

இரும்பின்பெயர் : உ

கருந்தாது,மயமும், இரும்பெனக்கருதுவர்.

எஃகின்பெயர் : க

சத்தி,எஃகே.

ஈயத்தின்பெயர் : உ

வங்கமும்,சீருணம், ஈயமாகும்.

காரீயத்தின்பெயர் : க

நாகம்,காரீயம் ஆகக்கருதுவர்.

தராவின்பெயர் : க

மதுகம்,தராவெனவைக்கப்படுமே.

---

1. பதினான்குவகையாவன-உலோகமைந்து மணியொன்பதுமாம்.

**இரும்புள்வாங்கு காந்தமணியின்பெயர் :**

வலித்திரும்புள்ளே வாங்குங்காந்தம்
சொல்லத்தகும்;சலாகை, சும்பகம்,என்ப.

**சந்திரனொளியிற் றண்ணீர் காலுமணியின்பெயர் : க**

சந்திரனொளியில் தண்ணீர்கான்மணி
சந்திரகாந்தம், எனப்பெயர்சாரும்.

**சூரியனொளியிற் றீக்காலு மணியின்பெயர் : க**

சூரியனொளியில் தீக்கால்சலாகை
சூரியகாந்தம், எனப்பெயர்சொல்லும்.

**பளிங்கின்பெயர் : உ**

படிகம்,பளிங்கு: பருக்கையாகும்.

**சங்குமணியின்பெயர் : க**

அக்கு,சங்கு மணியாகுமென்ப.

**பலகறையின்பெயர் : ச**

வராடி,சோகி, பலகறையென்ப:
வெள்வரி,அலகெனு, விளம்பவும்படுமே.

**பலபண்டத்தின்பெயர் : ரு**

பண்ணியம்,கூலம், வளமே,பண்டாரம்,
பண்ணிகாரம், பலபண்டப்பெயரே.

**அரும்பண்டத்தின்பெயர் : க**

அரும்பண்டப்பெயர், தாரமென்றாகும்.

**கருப்பூரத்தின்பெயர் : க**

கருப்பூரம்:பாளிதம்.

**கத்தூரியின்பெயர் : க**

கத்தூரி:மான்மதம்.

**நால்வகைச்சாந்தாவன : ச**

*பீதம்,கலவை, வட்டிகை,புலி,யென*
*நால்வகைச்சாந்தின் நாமமாகும்.*

**சாந்தின் பொதுப்பெயர் : ச**

*கலவைச்சேறும், காலேகவண்ணமும்,*
*விரையும்,களபமும், சாந்தின்பொதுப்பெயர்.*

**செஞ்சாந்தின்பெயர் : க**

*குங்குமம்,செஞ்சாந்து.*

**பூசுவனவற்றின் பெயர் : க**

*அங்கராகம்,பூசுவன.*

**மயிர்ச்சாந்தின்பெயர் : ங**

*தகரம்,ஏலம், காசறை,மயிர்ச்சாந்தே.*

**செறிகுழம்பு அல்லது சந்தனக்குழம்பின்பெயர் : உ**

*தேய்வையும்,செச்சையும், செறிகுழம்பாகும்.*

**அப்புதலின்பெயர் . உ**

*கொட்டலும்,சாத்தலும், அப்புதலாகும்.*

**பூசுதலின்பெயர் : உ**

*புலர்த்தலும்,வரித்தலும், பூசலாகும்.*

**மகளிராகத்தெழுதுகோலத்தின்பெயர் : க**

*எழுதுகோலால் மகளிராகத்து*
*தொழில்பெறவரிப்பது: தொய்யில்,ஆகும்.*

**திலகத்தின்பெயர் : ங**

*சுடிகையும்,திலதமும், சுட்டியும்,திலகம்.*

**நுதற்புனைதறியின்பெயர் : உ**

*புண்டரம்,திலகம், நுதற்புனைகுறியே.*

**சிந்தூரத்தின்பெயர் : க**

*சேலேகம்,சிந்தூரம்.*

**சாதிலிங்கத்தின்பெயர் : க**

*இங்குலிகம்,சாதிலிங்கம்.*

**துங்குலியத்தின்பெயர் : உ**

*குங்குலுவும்,குக்குலுவும், குங்குலியமாகும்.*

**பெருங்காயத்தின்பெயர் : க**

*இங்கு,பெருங்காயம் என்றிசைத்தனரே.*

**அரக்கின்பெயர் : உ**

*அரத்தமும்,துப்பும், அரக்கின்பெயரே.*

**சுக்கின்பெயர் : க**

*சுண்டி,சுக்கு.*

**ஏலத்தின்பெயர் : க**

*துடியே,ஏலம்.*

**அதிமதுரத்தின்பெயர் : உ**

*அதிங்கம்,அட்டி, அதிமதுரமாகும்.*

**சாமரையின்பெயர் : ங**

*சாமரை:கவரி, சவரி,சீகரம்.*

**அச்சுதமென்னும்பெயர் :**

*அறுகுவெள்ளரிசி கூட்டியதச்சுதம்.*

**பிரப்பென்னும்பெயர் :**

*கொள்கலமொன்றில் குறுணியாகப்*
*பல்லுணவுபெய்து பாரிப்பதுபிரப்பே.*

**விறகின்பெயர் : ங**

*இந்தனம்,காட்டம், முருடு,இவைவிறகே.*

**ஓமவிறகின்பெயர் : க**

சமிதை,ஓம விறகெனச்சாற்றுவர்.

**நெருப்புறுவிறகின்பெயர் : உ**

ஞெகிழி,கொள்ளி, நெருப்புறுவிறகாம்.

**கடைக்கொள்ளியின்பெயர் : ௩**

முளரி,அலாதம், உற்கம்,கடைக்கொள்ளி.

**கரியின்பெயர் : உ**

கந்துளும்,இருந்தையும், கரியெனக்கூறுவர்.

**சாம்பரின்பெயர் : உ**

அடலை,வெண்பலி, சாம்பராகும்.

**திருநீற்றின்பெயர் : ௬**

காப்பும்,பொடியும், பற்பமும்,விபூதியும்,
திருநீறதனைச் செப்புங்கிளவி.

**சாணியின்பெயர் : க**

சாணி:புண்ணிய சாந்தம்,எனப்படும்.

**சுடுசுண்ணச்சாந்தின்பெயர் : உ**

சுதையும்,களபமும், சுடுசுண்ணச்சாந்தே.

**புகையின்பெயர் : ௩**

தூமமும்,அரியும், தூபமும்,புகையே

**மணப்புகையின்பெயர் : க**

குருஉப்புகை,நறைபடு கொழும்புகையாகும்.

**பனிநீரின்பெயர் : உ**

இமசலம்,சீதநீர், பனிநீர்க்கெய்தும்.

**பொடியின்பெயர் : க0**

பிதிர்,சிதர்,பராகம், தகர்,சின்னபின்னம்,

துகளும்,நீறும், சுண்ணமும்,தாதும்,
பொடியின்பெயரே புழுதியும்,ஆகும்.

காவிக்கல்லின்பெயர் : ௩

காவிக்கல்:செங்கல், காரிகம்,தாது.

கழிப்புறுதுறுமலத்தின்பெயர் : ௧

கழிப்புறுகுறுமலம்: காட்டம்,எனப்படும்.

இலவின்பஞ்சின்பெயர் : ௧

இலவின்பஞ்சின்பெயர்: பூளை,யாகும்.

பருத்திப்பஞ்சின்பெயர் : ௩

கார்ப்பாசம்,பரி, பன்னல்,பருத்தி.

பஞ்சினுனியின்பெயர் : ௧

துய்யே,பஞ்சில் தொடர் நுனியாகும்.

சோற்றின்பெயர் : ௨௪

புன்கம்,மிதவை, பொம்மல்,போனகம்,
அன்னம்,ஓதனம், அயினி,அடிசில்,
பாளிதம்,பொருகு, மிசை,பதம்,பாத்து,
அமலை,உணவு, துப்பு,அசனம்,கவளம்,
சொன்றி,நிமிரம், மடை,கூழ்,புழுக்கல்,
ஒன்றியமூரல், சோறெனவுரைப்பர்.

போதிசோற்றின்பெயர் : ௨

பொதிசோறு:ஆற்றுணா, தோட்கோப்பு,ஆகும்.

உண்டியின்பெயர் : ௩

உண்டி:பதம்,வல்சி, உணா.

உண்டொழிலின்பெயர் : ௧௩

மிசைதல், பக்கித்தல்,
அயிலல்,அனுங்கல், விழுங்கல்,துய்த்தல்,

மேய்தல்,அயிறல், நுகர்தல்,அருந்தல்,
உண்டல்,தின்றல் பருகுதல்,என்றிவை
பண்பின்றொழிலைப் பகருங்கிளவி.

கூழெனும்பெயர் :

கூழெனும்பெயரெப் பொருளிற்குமாகும்.

அடிசிலெனும்பெயர் :

அடப்படுவ தடிசில்.

புழுங்கலெனும்பெயர் :

புழுக்குவது புழுங்கல்.

தெய்வவுணவின்பெயர் : ௪

அமிழ்தும்,அவியும், தெய்வவுணவே.
பலியும்,சருவும் அப்பெயர்ப்பால.

பொரிக்கறியின்பெயர் :

கருனை,யென்ப பொரிக்குஞ்சிற்றுணவு.

பிட்டின்பெயர் : ௨

ஆவி,வெந்தை,பிட்டு.

உக்காரியின்பெயர் : க

அஃகுல்லி,உக்காரி.

மோதகத்தின்பெயர் : க

மோதகம்:இலட்டுகம்.

பில்லடையின்பெயர் : க

பில்லடை:சஃகுல்லி.

அப்பவர்க்கத்தின்பெயர் : ௪

பூரிகம்,நொலையல், கஞ்சப்,தோசை,
பேதவகைப்பெயர் அப்பமாகும்.

தினைமாவின் பெயர் : ங

நவணையும்,இடியும், பிண்டியும், தினைமா.

சிற்றுண்டி யெனும் பெயர் :

அப்பம்,பிட்டோடு, அஃகுல்லி,இடியென,
செப்பியவெல்லாம் சிற்றுண்டியாகும்.

வறையலின் பெயர் : க

வறையல்:ஒச்சை.

பிண்ணாக்கின் பெயர் : க

மலாவகம்,பிண்ணாக்கே.

புளிங்கறியின் பெயர் : க

துவையே,புளிங்கறி.

கறியின் பெயர் : க

கறி:நீடாணம்.

குழம்பின் பெயர் : க

பாகே,குழம்பு.

கஞ்சியின் பெயர் : உ

கஞ்சி:காடி,மோழை.

தயிரின் பெயர் : உ

ததியும்,அளையும், தயிரெனமொழிப.

பாலின் பெயர் : ங

பயமும்,சீரமும் அமுதமும்பாலே.

நெய்யின் பெயர் : ச

இழுதும்,கிருதமும், துப்பு,நெய்யே :
ஆச்சியம்,என்றும் அதன்பெயராகும்.

**மோரின் பெயர் : ௨**

முசரே, தக்கிரம், மோரென்றாகும்.

**வெண்ணெயின் பெயர் : ௨**

ஐயங்கவீநம், நவநீதம், வெண்ணெய்.

**தேனின் பெயர் : ௨**

பிரசமும், மதுவும், தேனெனப்பேசுவர்.

**சருக்கரையின் பெயர் : ௬**

கட்டியும், விசயமும், குளமும், கன்னலும்,
ஒட்டியபாகும், அக்காரமும், சருக்கரை.

**கண்டசருக்கரையின் பெயர் : ௫**

கண்டம், பாளிதம், கண்டசருக்கரை.
உண்டை, அயிர், புல்ல கண்டம், ஒருவிகற்பம்.

**கள்ளின் பெயர் : ௪௮**

இக்கு, நனை, தேன், முருகு, தொப்பி,
நறவு, பிரசம், தணியல், சுரை, படு,
வேரி, மட்டு, தேறல், சாறு,
பானம், வடி, பிழி, மது, வழி, தொண்டி,
ஆன் அரிட்டமும் சாதியுங், கள்ளாம்.
அருகிக்கௌவையும், விளம்பியும்ஆகும்.
பாலி, சுமாலி, ஆலி, மருட்டம்,
மாலி, முண்டகம், சாலி, மாரி,
பாடலி, மௌலி, சிக்கர், ஞாளி,
பாணி, குந்தி, மதுகரஞ், சுவிகை,
ஆசவம், ஆம்பல், அம்பியம், பதை,
மேதை, கஞ்சா, விகுணி, சுலோகி,
எனும்வகையுங் கட் பெயரெனவறைவர்.

**பானமென்னும்பெயர் :**

பானம்பருகுவன எவற்றிற்கும்பெயரே.

**அமிழ்தின்பெயர் : க**

அமிழ்தின்பெயரே: மருந்து, எனலாகும்.

**நஞ்சின்பெயர் : ச**

ஆலம்,காரி, கடு,விடம்,நஞ்சே.

**உண்பனவற்றின்பெயர் : க**

துற்றி,யுண்பன.

**தின்பனவற்றின்பெயர் : க**

திற்றி,தின்பன.

**இலைநுகர்விலங்கினுணவின்பெயர் : க**

இலை நுகர்விலங்கின் உணவு: குளகு,என்ப.

**பறவையுணவிற்குமோருசார்விலங்கினுணவிற்கும்பெயர் : ௩**

பறவைக்குமொருசார் விலங்கிற்குமுணவு:
இரை,உறை,ஊட்டி, எனப்பெயர்பெறுமே.

**ஒழிபொருளின்பெயர் : ௩**

மிச்சில்,எச்சில் உச்சிட்டம்,ஒழிபொருள்.

**துணைக்காரணத்தின்பெயர் : ௩**

துப்பே,சாதனம், துணைக்காரணமாம்,
ஒக்குமதற்கே உபகரணப்,பெயரே.

**இரண்டின்பெயர் : உ**

உபயமும்,உகளமும் ஓரிரண்டாகும்.

**பேய்த்தேரின்பெயர் : உ**

வெண்டேர்,கானல், பேய்த்தேராகும்.

சல்லியின்பெயர் : ௩

துணை, அறை, தூக்கம், சல்லியாகும்.

அலகெனும்பெயர் : ௨

மகிழின் பரலும், நெல்லின் மணியும்,
அனையவை அலகெனும் பெயரவாகும்.

நிரையின்பெயர் : ௩

ஒளியும், பந்தியும், ஒழுங்கு, நிரையாகும்.

வருநற் கங்கை வடதிசைப் பெருமையும்
தென்றிசைச் சிறுமையும் நீக்கிய குறுமுனி
குண்டிகைப் பழம்புனற் காவிரிப் பெரும்பதி
அம்பற் கதிபதி சேந்தன் றிவாகரத்

தாறுவது

பல்பொருட்பெயர்த்தொகுதி

முற்றிற்று.

---

## ௭. செயற்கைவடிவப் பெயர்த்தொகுதி

**செயற்கைவடிவாவன :**

எண்ணியவெழுவகை உலோகத்தின்மரத்தின்
மண்ணின்தோலின் நூலின்மற்றும்
திண்மைசெய்வடிவே செயற்கைவடிவாகும்.

**சூலப்படையின்பெயர் : ௫**

கழுமுள்,மூவிலைவேல், முத்தலை,கழு,சத்தி,
வருபவைசூலப் படையென வழங்கும்

**மழுவின்பெயர் : ௫**

பரசு,கணிச்சி, நவியம்,தண்ணம்,
பாலம்,என்றைந்தும் மழுவின்பெயரே.

**சக்கரத்தின்பெயர் : ௭**

திகிரி,நேமி, ஆழி,வளை,எஃகம்,
சுதரிசனம்,பரிதி, சக்கரத்துறுபெயர்.

**வில்லின்பெயர் : ௧௩**

சிலை,தனு,வேணு, கார்முகம்,சாபம்,
முனியே,சார்ங்கம், சராசனம்,பிநாகம்,
கோதண்டம்,தவர், கொடுமரம்,துரோணம்,
வார்வில்லென்ப மதிநூற்புலவர்.

**சிவன்வில்லின்பெயர் : ௧**

பிநாகம்,பிஞ்ஞகன் பெருஞ்சிலைப்பெயரே.

**மாயோன் வில்லின்பெயர் : ௧**

சார்ங்கம்,மாயோன் தனுவின்பெயரே.

**அம்பின் பெயர் : கக**

பகழி, வாளி, வண்டு, பாணம்,
நிகழ்சரம், பத்திரி, சிலீமுகம், பல்லம்,
புங்கம், கணை, குதை, கங்கபத்திரம்,
அத்திரம், தோணி, கோல், விசிகம், அம்பே.

**அம்புத்தலையின் பெயர் : க**

உடு, அம்புத்தலை.

**மொட்டம்பின் பெயர் : க**

உதள், மொட்டம்பே.

**அம்பின் குதையின் பெயர் : க**

புங்கம், அம்பின் குதை.

**அம்பின் கட்டின் பெயர் : க**

புதை, அம்பின் கட்டே.

**வேலின் பெயர் : அ**

சத்தி, எஃகம், உடம்பிடி, குந்தம்,
விட்டேறு, அரணம், ஞாங்கர், அயில், வேல்.

**கைவேலின் பெயர் : ந**

கப்பணம், தோமரம், குந்தம், கைவேல்.

**வச்சிரப்படையின் பெயர் : ந**

சம்பம், வயிரப் படை, குலிசம், வச்சிரம்.

**வாளின் பெயர் : கந**

நாந்தகம், கட்கம், நவிர், ஏதி, கண்டகம்,
ஏய்ந்தவேணு, வஞ்சம், நாட்டம்,
கடுத்தலைஉவணி, கரவாளம், கோணமோ(டு)
அடுத்தனவசியே, வாளெனவறைவர்.

ஈர்வாளின்பெயர்: ௨

வேதினம்,கரபத் திரம்,இவையீர்வாள்.

உடைவாளின்பெயர்: க

சுரிகை,உடைவாள்.

கழுக்கடையின்பெயர்: க

கழுமுள்,கழுக்கடை.

அரிவாளின்பெயர்: ௩

குயமும்,புள்ளமும், கொடுவாளும்,அரிவாள்.

பிண்டிவாலத்தின்பெயர். ௨

பீலித்தண்டு,எஃகம், பிண்டிவாலம்.

கணையப்படைக்கலத்தின்பெயர்: ௨

பரிகமும்,எழுவும், கணையப்படைக்கலம்.

தண்டாயுதத்தின்பெயர்: ௨

கதை,தடி,தண்டாம்.

இருப்புலக்கையின்பெயர்: க

முசலம்,இருப்புலக்கை.

[1]மட்டிப்படைக்கலத்தின்பெயர்: ௬

முற்காம்,காத்திரம், கூர்த்திகை,முசுண்டி,
பட்டம்,சங்கு, மட்டிப்படைக்கலம்.

உளிக்குந் தறிகைக்கும்பெயர்: க

உளிக்கருவி தறிகைக் கருவியென் றிசைப்பன
கணிச்சிப்பெயரின் வழங்குங்கருவி.

---

1. சம்மட்டி வடிவுளதோராயுதம்.

[1] **இலைமூக்கரிகத்தியின்பெயர் : ௧**

குளிர், இலைமூக்கரி கத்தியாகும்.

**நாராசத்தின்பெயர் : ௧**

சலாகை, நாராசம்.

**இருப்புமுள்ளின்பெயர் : ௧**

தாறு, இருப்பு முள்ளே.

**கவணின்பெயர் : ௩**

தழல், தட்டை, கவணை, கல்லெறிகவணே.

**ஆயுதப்பொதுவின்பெயர் : ௧0**

படைக்கலம், தானை, கடுமுள், சுதனம்,
படையே, துப்பு, கழுமுள், ஏதி,
கார்த்திகை, கூர்த்திகை, ஆயுதப்பொதுப்பெயர்.

**ஆயுதக்கூர்மையின்பெயர் ௧0**

வள், அயில், நுதி, நுனை, வை, ஆர், நிசிதம்,
வசி, வயிரம், பூ, அவற்றின் கூர்மை.

**நுனியின்பெயர் : ௨**

நுதியும், நுனையும், நுனியாகும்மே.

**படையுறையின்பெயர் : ௨**

தடறும், கருவிப் புட்டிலும், படையுறை.

**அம்புக்கூட்டின்பெயர் : ௩**

ஆவமும், தூணியும், ஆவநாழியும்,
அம்புபெய்கூடென் றறையல்வேண்டும்.

---

1. நிகண்டாசிரியருள் ஒருசாரார் கோட்பாடுபற்றி இச்சூத்திரமிவ்வாறு பிரிக்கப்படினும், மற்றொருசாரார் கோட்பாடு பற்றிப் பிரிக்கப்படுமாறு. மூக்கரிகத்தியின்பெயர். குளிர்-இலை-௨.

கவசத்தின்பெயர் : கஉ

அரணம்,சாலிகை, ஆசு,பாரணம்,
கவசம்:கண்டம், மெய்யுறை,தம்பம்,
கஞ்சுகம்,சுரிகை, மெய்புகுகருவி,
பாரமும்,பரமும், அப்பெயர்ப்பால.

தலைக்கருவியின்பெயர் : உ

சீசகம்,சிரகம், தலைக்கருவியாகும்.

பலகையின்பெயர் : ரு

சேடகம்,வட்டம், தோலே,வேதிகை,
கேடகம்,பலகை ஆமெனக்கிளப்பர்.

மாவட்டணத்தின்பெயர் : ங

தட்டியம்,பலகை, தட்டு,மாவட்டணம்.

தோற்பலகையின்பெயர் : உ

தோற்பரம்,தோற்பலகை: தோலும்,ஆகும்.

கைக்கட்டின்பெயர் : உ

கைப்புடை,கோதை, கைக்கட்டியாகும்.

பக்கரையின்பெயர் : க

சுவடு,பக்கரை என்னச்சொல்லுவர்.

குதிரைக்கலனையின்பெயர் : சு

பல்லணம்,பருமம், படை,பரம்,கருவி,
சொல்லற்குரியபண், கலனைத்தொடர்பே.

குதிரைவாய்க் கருவியின்பெயர் : உ

கலினமும்,கறுழும், குதிரைவாய்க்கருவி.

குசைக்கயிற்றின்பெயர் : க

வற்கம்,குசைக்கயிறு.

குதிரைச்சம்மட்டியின்பெயர்: க
மத்திகை,சம்மட்டி.

கழுத்திடுகயிற்றின்பெயர்: உ
கவடும்,புரோசையும், கழுத்திடுகயிறே.

தளையின்பெயர்: ங
நிகளமும்,விலங்கும், தொடரும்,தளையே.

வலிபற்றிரும்பின்பெயர்: ச
பறளை,கற்பொறி,அள்ளு,வலி,பற்றிரும்பே.

பாதகிண்கிணியின்பெயர்: ங
பரிபுரம்,நூபுரம், பரியகம்,என்ன
வருபவைபாத கிண்கிணிமணியே.

சிலம்பின்பெயர்: ங
பரிபுரம்,அரவம், பைம்பொன்ஞெகிழி,
அரிபெய்சிலம்பென் றறையல்வேண்டும்.

அரக்குடைச் சிலம்பின்பெயர்: உ
அரதனம்,ஞெகிழி, அரக்குடைச்சிலம்பணி.

காலணிமணிவடத்தின்பெயர்: க
பாதசாலம், காலணிமணிவடம்.

பாடகத்தின்பெயர்: க
பாதகடகம், பாடகமாகும்.

ஆடவர்காலணிவடத்தின்பெயர்: க
கெழுதகையம்பல் கிழவோன்சேந்தனில்,
விழைவுறுதியாகத்து வீரத்துவீக்கிய
கழலே,யாடவர் கால்மிசையணிவடம்.

மேகலை முதலியவையாவன :

மேகலை,காஞ்சி, கலாபம்,பருமம்,
விரிசிகை,யெழுமோ ரெட்டுமீரெட்டும்
மூவாறுநாலெட்டும் முறைக்கோவைமணியே.

அரைப்பட்டிகையின்பெயர் : உ

மருவோடு,அத்து,அரைப் பட்டிகையாகும்.

அரைநாணின்பெயர் : க

இரதனம்,அரைநாண்.

சதங்கையின்பெயர் : க

சதங்கை:கிண்கிணியே

பதக்கத்தின்பெயர் : உ

பதக்கம்:கண்டிகை, ஆரம்,எனப்பகர்வர்.

முலையணிவடத்தின்பெயர் : அ

ஆரம்,பதக்கம், கண்டிகை,மாலை,
கோவை,காசு, காழ்,தாமம்,என்றிவை
மாதர்முலைமேல் அணிவடமாகும்.

பூண்கடைப்புணர்வின்பெயர் : ௩

கடையும்,கயிலும், பூண்கடைப்புணர்வே.
மடையும்,அதற்கு வகுக்கப்படுமே.

ஆபரணத்தொங்கலின்பெயர் :

தொங்கலும்,உத்தியும் அவற்றின்றாக்கம்.

துடக்குவடிவின்பெயர் : உ

மதலிகை,தூக்கம், துடக்குவடிவே.

தோளணியின்பெயர் : உ

அங்கதம்,கேயூரம், தோளணியாகும்.

**கங்கணத்தின்பெயர் : உ**

கடகமும்,தொடியும், கங்கணமாகும்.

**கைவளையின்பெயர் : எ**

சங்கும்,தொடியும், சூடகமும்,சரியும்,
கன்றும்,குருகும், வண்டும்,கைவளை.

**குண்டலத்தின்பெயர் : ந**

குழையே,மிஞ்சிகை, காதணி,குண்டலம்.

**காதணியின்பெயர் : ரு**

கடிப்பிணை,வல்லிகை, வேடகம்,காதிற்
கணிப்பெயர்தோடும், ஆகுமென்ப.
கொட்டையும்,அதனைக் கூறுங்கிளவி.

**நுதற்சுடிகையின்பெயர் : க**

சுட்டி,நுதற்சுடிகை.

**பட்டத்தின்பெயர் : க**

பட்டம்:ஓடை.

**நுதலணியின்பெயர் : உ**

புல்லகம்,இலம்பகம், நுதன்மிசையணிபூண்.

**சிரமாலையின்பெயர் : க**

கரோடிகை,சிரமாலைப் பெயரெனக்கருதுவர்.

**மணிமுடியின்பெயர் : சு**

சுடிகை,மௌலி, முடியே,சேகரம்,
மகுடம்,கிரீடம், மணிமுடியென்ப.

**பேரணிகலத்தின்பெயர் : உ**

பெரும்பூண்,மதாணி, பேரணிகலமே.

**ஆபரணப்பொதுப்பெயர் : எ**

*பொலம்,கலன்,நாண்,இழை, பூண்,அணி,மதாணி,*
*பொன்னினுமணியினும் செய்யாபரணம்.*

**உண்கலத்தின்பெயர் : ச**

*தாலம்,தட்டம், தளிகை,உண்கலம்.*

**கிண்ணம் அல்லது சிறுவட்டிலின்பெயர் : க**

*வள்ளம்,கிண்ணம்.*

**முடியுறுப்பின்பெயர் : ரு**

*தாமம்,முகுடம், பதுமம்,கோடகம்,*
*கிம்புரி,முடியுறுப் பைந்தெனக்கிளப்பர்.*

**தோட்டின்பெயர் : க**

*தோடு:தாடங்கம்.*

**பிள்ளைக்கைவளையின்பெயர் : க**

*பிடிகம்,என்பது பிள்ளைக்கைவளை.*

**ஓசைசெய்தளையின்பெயர் : உ**

*குடச்சூல்,ஞெகிழம், ஓசைசெய்தளை.*

**செவிமலர்ப்பூவின்பெயர் : க**

*கன்னுவதஞ்சம், செவிமலர்ப்பூவே.*

**சரிமணியின்பெயர் : உ**

*கலாபம்,தோரை, சரிமணிப்பெயரே.*

**மோதிரத்தின்பெயர் : சு**

*விரலணி,யாழி, வீகம்,இலச்சினை,*
*மோதிரமென்ன மொழியற்பால.*

**வயிரச்சங்கிலியின்பெயர் : க**

*சங்கிலி,வயிரச் சங்கிலிசாரும்.*

**பூணுநூலின்பெயர் : க**

உபவீதம்,பூணுநூல்.

**தெய்வவுத்தியின்பெயர் : க**

திருத்,தெய்வவுத்தி.

**தலைக்கோலத்தின்பெயர் : க**

பிஞ்ஞகம்,தலைக்கோலம்.

**தலைப்பாளையின்பெயர் : க**

தலைப்பாளை:தொய்யகம்.

**கல்லழுத்துங் குழிவட்டத்தின்பெயர் : க**

கல்லழுத்துங் குழிவட்டம்:கேவணம்.

**பூணின்பெயர் : ச**

கோளகை,தாங்கி, வயிரம்,கிம்புரி,
பூணின்பெயரெனப் போற்றல்வேண்டும்.

**வட்டிலின்பெயர் : க**

கோரம்,வட்டில்.

**நாழிகைவட்டிலின்பெயர் : க**

கன்னல்,நாழிகை வட்டிலாகும்.

**சட்டுவத்தின்பெயர் : ங**

தவ்வி,சிலகம், தருவி,சட்டுவம்.

**கண்ணாடியின்பெயர் : சு**

ஆடி,படிமக்கலம், தருப்பணம்,கஞ்சனம்,
ஆதரிசனம்,முகுரம், கண்ணாடியாகும்.

**பெருமணியின்பெயர் : உ**

கண்டை,யானைமணி, பெருமணித்தொடர்பே.

கைம்மணியின்பெயர் : உ

பரந்தவட்டம், படலிகை,கைம்மணி.

சேகண்டியின்பெயர் : க

எறிமணி,சேகண்டி ஆமெனவுரைப்பர்.

கலசப்பானையின்பெயர் : க

கஞ்சனை,கலசப் பானையென்ப.

படிக்கத்தின்பெயர் : க

படியகம்,படிக்கம்.

நெய்த்துடுப்பின்பெயர் : உ

சுருக்கு,சுருவம், நெய்த்துடுப்பாகும்.

தூபமுட்டியின்பெயர் : உ

தூபமுட்டி:இந்தளம், தடவு,எனச்சொல்ப.

தாளத்தின்பெயர் : ௩

கிட்டி,பாண்டில், கஞ்சம்,தாளம்.

தூபமணியின்பெயர் : க

கைம்மணி,தூபமணி.

பூண்கொள்கலத்தின்பெயர் : ௬

பீடிகை,துமானம், காண்டம்,கண்டிகை,
கோடிகம்,கடிப்பம், பூண்கொள்கலமே.

பரணியின்பெயர் : க

கோயம்,பரணி.

காளத்தின்பெயர் : க

காகளம்,காளம்.

**சிறுசின்னத்தின் பெயர் : க**

பீலி,சிறுசின்னம்.

**குறிஞ்சிப்பறையின் பெயர் : ௩**

தொண்டகம்,முருகியம், துடி,இவைமூன்றும்
வென்றிகொள்குறிஞ்சிப் பறையெனவிளம்புவர்.

**பாலைநிலப்பறையின் பெயர் : க**

துடியே,பாலை வேடர்தொல்பறை.

**ஏறங்கோட் பறையின் பெயர் : க**

முல்லையாளர் ஏறங்கோட்பறை:
சொல்லியபம்பை, ஆகலுமுரித்தே.

**மருதநிலப்பறையின் பெயர் : க**

கிணையே,மருதக் கிளர்பறையாகும்.

**நெய்தற்பறையின் பெயர் : க**

சாபறை,நெய்தல் பறையெனச்சாற்றுவர்.

**உவகைப்பறையின் பெயர் : க**

தூரியம்,உவகைப் பறையெனச்சொல்ப.

**சிறுபறையின் பெயர் : க**

ஆகுளி,சிறுபறை.

**ஒருகட்பறையின் பெயர் : க**

ஒருகட்பறை:மொந்தை.

**உடுக்கையின் பெயர் : க**

தண்ணுமை,உடுக்கை.

**இடைசுருங்கு சிறுபறையின் பெயர் : க**

துடி,இடைசுருங்கு வடிவிற்சிறுபறை.

மார்ச்சனையின்பெயர் : க

மண்ணே,மார்ச்சனை.

பரந்தவாய்ப்பறையின்பெயர் : க

பதலே,பரந்தவாய்ப் பறையெனப்பகர்வர்.

முழவத்தின்பெயர் : க

முழவம்:குளிர்,என மொழியவும்படுமே.

குடமுழவின்பெயர் : உ

மண்கணை,முழவம், குடமுழவின்பெயர்.

கடிப்பின்பெயர் : க

குணில்,கடிப்பாகும்.

திமிலையின்பெயர் : க

சல்லரி,திமிலே.

பேரிகையின்பெயர் : ரு

சகண்டை,முழவம், பணையே,சகடம்,
துந்துபி,பேரிகைத் தொகுபெயராகும்.

நிசாளத்தின்பெயர் : க

தண்ணுமை,நிசாளம்.

பன்றிப்பறையின்பெயர் : க

குடப்பறை,பன்றிப் பறையெனக்கூறுப.

காடிப்பறையின்பெயர் : க

தட்டை,கரடிப் பறையெனக்கூறுப.

இடக்கையின்பெயர் : க

இடக்கை:ஆமந் திரிகை,யெய்தும்.

**படகத்தின்பெயர் : ௩**

பணவம்,திண்டிமம், ஆனகம்,படகம்.

**பல்வகைப்பறையின்பெயர் : ௪**

சல்லரி,பம்பை, தடாரி,தக்கை,
பல்வகைப்பறையின் பெயர்ப்பாலவாகும்.

**வாச்சியப்பொதுவின்பெயர் : அ**

முரசு,தாளம், பீலி,முருடு,
பொருகோட்டணையொடு, முழவு,தூரியம்,
பணை,இவ்வெட்டும் வாச்சியப்பொதுப்பெயர்.

**கொம்பின்பெயர் : ௪**

வயிரே,இரலை, ஆம்பல்,கோடு,என்
றினையநான்கும் கொம்பெனவிசைப்பர்.

**யாழின்பெயர் : அ**

தந்திரி,வீணை, கின்னரம்,விபஞ்சி,
கருவி,கோடவதி, அறுசரம்,வல்லகி,யென்
றனைபலவையோசை யாழின்பெயரே.

**யாழ்முறுக்காணியின்பெயர் : க**

மாடகம்,முறுக்காணி.

**யாழ்வலிக்கட்டின்பெயர் : க**

திவவு,யாழ்வலிக்கட்டு.

**யாழ்நரம்பின்பெயர் : ௩**

கோலே,தந்திரி, குரல்,யாழ்நரம்பே.

**ஆதியாழாவது :**

ஆயிரநரம்பிற் றாதியாழாகும்.

**தேரின்பெயர் : அ**

கவரி,இயந்திரம், திகிரி,சயந்தனம்,
இரதம்,வையம், கொடிஞ்சி,கூவிரி,தேர்.

**தேர்க்காலின்பெயர் : எ**

உருளி,நேமி, பரிதி,உந்தி,
திகிரி,யாழி, சில்லி,தேர்க்கால்.

**தேரினகத்திற்செறிகதிரின்பெயர் : க**

ஆரே,உருளின் அகத்திற்செறிகதிர்.

**தேர்நடுவின்பெயர் : உ**

நாப்பணும்,தட்டும், தேர்நடுவாகும்.

**தேர்க்கொடிஞ்சியின்பெயர் : க**

கூவிரம்,கொடிஞ்சி.

**தேர்மொட்டின்பெயர் : க**

கூம்பு,தேர்மொட்டே.

**பாண்டில்பூண்டவூர்தியின்பெயர் : ரு**

சிவிகை,பாண்டில் பூண்டவூர்தி:
சகடம்,வையம், எனப்பெயர்சாரும்.

**பரிபூண்டூர்க்குமூர்தியின்பெயர் : ரு**

பாண்டில்,கஞ்சிகை, வையம்,என்பன
பரிபூண்டூர்க்கும் ஊர்திப்பால.

**பண்டியின்பெயர் : சா**

வைய்யம்,உருள்,ஒழுகை, சாகாடு,சகடம்,
எய்தியசாடு, பண்டியென்றிசைப்பர்.

**பண்டியுளிரும்பின்பெயர் : உ**

இருசும்,கந்தும், பண்டியுளிரும்பாம்.

**தேர்மேலிடுபரப்பின்பெயர் : உ**

பலகைப்பாவே, தட்டுப்பா,வென
இலகுதேரின் மேலிடுபரப்பே.

**தேர்மேன் மரச்சுற்றின்பெயர் : க**

கிடுகு,தேர்மேல் புடைசூழ்மரச்சுற்று.

**கலப்பையின்பெயர் : ரு**

நாஞ்சில்,அலம்,படை, கலனை,யென்ன
வாய்ந்தநான்கொடு மேழியும்,கலப்பை.

**கலப்பைப்பல்வகையுறுப்பின்பெயர் : உ**

கலப்பையும்,கலனையும், என்னவரும்பெயர்
உரைக்கிலொன்றிற் கமைந்தபல்லுறுப்பே.

**கொழுவின்பெயர் : க**

கோளே,கொழுவாம்.

**தூணின்பெயர் : கூ**

கந்து,எழு,வெளிலே, ஆளானம்,தறி,
கம்பம்,தம்பம், மதலை,பற்று,தூண்.

**யானைத்தூணின்பெயர் : உ**

ஆளானம்,வெளில், யானையணை தறி.

**குறுந்தறியின்பெயர் : க**

போதிகை,குறுந்தறி.

**வேள்வித்தூணின்பெயர் : க**

யூபம்,வேள்வித்தூண்.

**கணையமரத்தின்பெயர் : க**

எழுவே,கணையமரம்.

**தொழுமரத்தின்பெயர் : ௧**

தொழுவே,தொழுமரம்.

**கதவின்பெயர் : ௩**

கவாடமும்,புதவும், வாரியும்,கதவே.

**கதவிற்செறிதாழின்பெயர் : ௨**

சிப்புக்,காழ்,கதவிற் செறிதாழாகும்.

**யானைத்தோட்டியின்பெயர் : ௨**

அங்குசம்,கோணம், யானைத்தோட்டி.

**சுட்டுக்கோலின்பெயர் : ௧**

சுட்டுக்கோல்:உலை யாணிக்கோலே.

**சம்மட்டியின்பெயர் : ௧**

கூடம்,சம்மட்டி.

**உரலின்பெயர் : ௨**

உலூகலம்,கறை,யிவை இரண்டும்உரலே.

**உலக்கையின்பெயர் : ௨**

முசலமும்,தடியும், உலக்கையாகும்.

**அஞ்சனக்கோலின்பெயர் : ௧**

கோல்,அஞ்சனக்கோல்.

**எழுதுகோலின்பெயர் : ௧**

துகிலிகை,எழுதுகோல்.

**ஊசியின்பெயர் : ௧**

ஊசி சூசி.

**ஊசித்துளையின்பெயர் : ௧**

பாசம்,ஊசித்துளை.

**ஓலைதீட்டும்படையின்பெயர் : ௩**

ஊசி,கண்டம்,ஆணி, ஓலைதீட்டும்படை.

**சங்கிலியின்பெயர் : ௩**

சங்கிலி:தொடர்,துவக்(கு), இடங்கணி,சாலும்.

**உறியின்பெயர் : ௪**

சிமிலி,சிக்கம், சிதர்,தூக்கு,உறியே.

**ஊஞ்சலின்பெயர் : ௨**

ஊசல்,விண்டாண்(டு), ஊஞ்சலாகும்.

**கட்டிலின்பெயர் : ௪**

மஞ்சம்,பாரி, அரி,பரியங்கம்,
இங்கிவை கட்டில் எனமொழிந்தனரே.

**விசியின்பெயர் : ௧**

விசி:அரி,யாகும்.

**தவத்தோர்பீடத்தின்பெயர் : ௨**

விட்டரம்,பீடிகை, தவத்தோர்பீடம்.

**சிங்காதனத்தின்பெயர் : ௧**

பத்திராசனம்,சிங் காதனம்பகரும்.

**அளவைக்காலின்பெயர் : ௪**

குளகம்,அம்பணம், தூம்பு,கச்சம்,
அளவைக்காலென் றறையல்வேண்டும்.

**நாழியின்பெயர் : ௧**

குஞ்சம்,நாழி.

**கொத்தளிப்பாயின்பெயர் : ௧**

ஆரை,கொத்தளிப்பாய்.

புற்பாயின்பெயர் : க
சாப்பை,புற்பாய்.

பிரப்பம்பாயின்பெயர் : க
சாதிப்பாய்,பிரப்பம் பாயெனச்சாற்றுவர்.

தோற்பாயின்பெயர் : க
சருமம்,தோற்பாய்.

தடுக்கின்பெயர் : க
தவிசு,தடுக்கே.

குழாயின்பெயர் : க
தண்டு,குழாயாம்.

பூந்தட்டின்பெயர் : க
பூந்தட்டு:கோடிகம்.

பூப்பெட்டியின்பெயர் : க
பூப்பெட்டி:மூழிவாய்.

கிடுகின்பெயர் : க
சட்டம்,கிடுகே.

விளக்குத்தண்டின்பெயர் : ங
தம்பம்,கௌசிகம், மத்திகை,விளக்குத்
தண்டின்பெயரெனச் சாற்றப்பெறுமே.

முறத்தின்பெயர் : ச
சின்னம்,தட்டு, சேட்டை,முற்றில்,
முன்னியமுறமென மொழியற்பால.

புட்டிலின்பெயர் : க
புட்டில்:இறைவை.

**கூடையின்பெயர் : க**

கூடை:வட்டிகை.

**சுளகின்பெயர் : க**

சுளகே:சூர்ப்பம்.

**துடைப்பத்தின்பெயர் : உ**

சோதினி,மாறு, துடைப்பமாகும்.

**மூழையின்பெயர் : க**

மூழை:மூழி.

**மத்தின்பெயர் : க**

மத்து:மத்தம்.

**தயிர்கடைதறியின்பெயர் : க**

வெளில்,தயிர்கடைதறி.

**பாவாற்றியின்பெயர் : க**

பாவாற்றி:குச்சு.

**நூனூழியின்பெயர் : க**

நூனூழி:நாடா.

**காராம்பியின்பெயர் : ச**

காராம்பி:பூட்டை, கிழார்,அம்பி,காம்பி.

**இறைகூடையின்பெயர் : உ**

இறைகூடை:பிழார், இடா,ஆகும்மே.

**நீர்ப்பத்தரின்பெயர் : உ**

நீர்ப்பத்தர்க்கு:அம்பணம், தூம்பு,நேர்ப.

**பரணின்பெயர் : ங**

பணவை,இதணம், கழுது,பரணே.

ஏணியின்பெயர் : ௩
ஏணி:கடவை, இறைவை,சேணி.

கண்ணேணியின்பெயர் : க
மால்பு,கண்ணேணி என வகுத்தனரே.

கிளிகடிகருவியின்பெயர் : ௩
குளிரும்,தழலும், தட்டையும்,மூன்றும்
கிளிகடிகருவி எனக் கிளத்தினரே.

குறுந்தடியின்பெயர் : க
குணிலே,குறுந்தடி.

நெய்த்துடுப்பின்பெயர் : க
துடுவை,நெய்த்துடுப்பே.

அடைகுறட்டின்பெயர் : க
பட்டடை,அடைகுறடு.

பருங்குறட்டின்பெயர் : க
முருடு,பருங்குறடே.

மரக்கலத்தின்பெயர் : கரு
வங்கம்,பாதை, தோணி,யானம்,
தங்கும்மதலை, திமில்,பாறு,அம்பி,
பஃறி,சதாவே, பாரதி,நவ்வே,
போதம்,தொள்ளை, நாவாய்,என்றிவை
மேதகுநீர்மேல் ஓடுமரக்கலம்.

மரக்கலப்பாயின்பெயர் : க
இதையே,மரக்கலப் பாயெனவிசைப்பர்.

தோணியின்பெயர் : ரு
பகடு,பஃறி, அம்பி,ஓடம்,
திமிலே,தோணி எனச்செப்பினரே.

**தெப்பத்தின்பெயர் : அ**

பகடு,பட்டிகை, யானம்,அம்பி,
படுவை,தொள்ளம், புணை,மிதவை,தெப்பம்.

**பேழையின்பெயர் : உ**

மஞ்சிகம்,மஞ்சிகை, பேழையென்றிசைப்பர்.

**கெண்டிகையின்பெயர் : ரு**

காண்டம்,கரகம், கமண்டலம்,குண்டிகை,
கடிப்பம்,கெண்டிகை ஆமெனக்கருதுவர்.

**பீடிகை அல்லது பூண்கோள்கலத்தின்பெயர் : க**

பீடிகை:துமானம், எனப்பெயர்பெறுமே.

**கோள்கலமென்பது :**

மாலையும்,சாந்தும், மடியும்,பெய்த
கோலவிகற்பம், கொள்கலமாகும்.

**பதுவாய்க்கோள்கலத்தின்பெயர் : க**

பகுவாய்க்கொள்கலம்: பிழாவெனப்படுமே.

**ஓலைக்குடையின்பெயர் : ங**

குடையோலை:ஏனம், பொதி,முடை,என்ப.

**போற்கோல்லன்சின்னத்தட்டின்பெயர் : க**

கன்னம்,பொற்கொல்லன் சின்னத்தட்டே.

**மயிற்பீலிக்குடையின்பெயர் : ங**

கலாபம்,தழையே, தொங்கல்,என்றிவை
கலாபப்பீலியில் கட்டியகவிகை.

**வெண்குடையின்பெயர் : சு**

தொங்கல்,கவிகை, சத்திரம்,பிச்சம்,
இங்கிவைவெண்குடைப் பெயரவாகும்.

**சிற்றாலவட்டத்தின்பெயர் : உ**

*பீலி,சாந்தாற்றி, சிற்றாலவட்டம்.*

**கால்செய்வட்டம் அல்லது பேராலவட்டத்தின்பெயர் : ங**

*விசிறி,வீசனம், சாந்தாற்றி,என்றிவை*
*வகுத்தகால்செய் வட்டமாகும்.*

**சீப்பின்பெயர் : உ**

*சிக்கம்,மயிர்வாரி, சீப்பென்றாகும்.*

**மகளிராடுங்களத்தின்பெயர் : க**

*ஔரை,மகளிர் ஆடுங்களமாம்.*

**சூதாடுகருவியின்பெயர் : உ**

*காசும்,வல்லும், சூதாடுகருவி.*

**கவற்றிற்றாயத்தின்பெயர் : க**

*ஆயம்,கவற்றிற் றாயமாகும்.*

**சாரியின்பெயர் : க**

*சாரி:நாயாம்.*

**பந்தின்பெயர் : க**

*கந்துகக்,கிளவி பந்தெனப்படுமே.*

**சும்மாட்டின்பெயர் : உ**

*சுமடு,சுமையடை, சும்மாடாகும்.*

**கண்டத்தின்பெயர் : உ**

*கடிகை,துண்டம், கண்டமாகும்.*

**நூலின்பெயர் : உ**

*பனுவலும்,தந்தும், நூலெனப்படுமே.*

**தைத்தலின்பெயர் : உ**

*பொல்லம்,தைத்தல்: புரையறுதுன்னம்.*

**வாரின்பெயர் : உ**

வள்ளும்,வகிரும், வாரதாகும்.

**கயிற்றின்பெயர் : ௩**

பாசமும்,நாணும், குணமும்,கயிறே.

**தாமணியின்பெயர் : க**

தாமணி:தாம்பே.

**காற்றுடியின்பெயர் : ௩**

கழல்,கழங்கு,கதலி, காற்றுடிக்காம்.

**கயிற்று வலையின்பெயர் : க**

சாலம்,என்பது கயிற்றுவலையே.

**செருப்பின்பெயர் : உ**

தொடுதோல்,கழல்,இவை தோற்செருப்பாகும்.

**அடியிற்றொடுவனவற்றின்பெயர் : உ**

அடியிற்றொடுவன: பாதுகை,மிதியடி.

**மிதியடிக்கோட்டையின்பெயர் : க**

குடை,மிதியடிமேல் இட்டகொட்டை.

**பற்சீவுங்கோலின்பெயர் : க**

மெல்கோல்,பற்சீவும் கோலின்மேற்றே.

**தூண்டிலின்பெயர் : க**

தூண்டில்:வளிசம்.

**அம்மானையின்பெயர் : க**

அம்மானை:அம்மனை.

**தவிட்டின்பெயர் : உ**

முட்டை,தவிடு: முடையும்,ஆகும்.

**நோய்யின்பெயர் : க**

நொய்:நொறுங்கு,நுவலும்.

**உலத்துருத்தியின்பெயர் : க**

அத்திரி,உலைத்துருத்திக் கடைத்தபெயரே.

**கொல்லுலேழக்கின்பெயர் : உ**

குருகும்,சிவையும், கொல்லுலைமூக்கே.

**சேத்தையின்பெயர் : ச**

துரால்,நரல்,காடு, மயல்,செத்தைசொல்லும்.

**பாடையின்பெயர் : க**

பாடை:வெள்ளில்.

**சாணேக்கல்லின்பெயர் : க**

சிலாவட்டம்,சாணைக்கல்.

**நீர்தூஉந்துருத்தியின்பெயர் : உ**

சிவிறி,சிறுதாரை, நீர்தூஉந்துருத்தி.

**குடத்தின்பெயர் : ரு**

இடங்கர்,தசும்பு, கடம்,கும்பம்,குடம்,
கன்னல்,என்றும் கருதுவர்புலவர்.

**கரகத்தின்பெயர் : உ**

கன்னல்,சிரகம், கரகமாகும்.

**பானையின்பெயர் : ௩**

தடாவும்,குழிசியும், மிடாவும்,பானை.

**மிடாவின்பெயர் : ௩**

அகளமும்,தசும்பும், தடாவும்,மிடாவே.

**தாழியின்பெயர் : ௩**

சாடி,அகளம், பதலை,தாழி.

**நீர்ச்சாலின்பெயர் : ங**

இடங்கர்,வட்டம், நிறை,நீர்ச்சாலே.

**கொப்பரியின்பெயர் : உ**

கொப்பரி:கடாரம், தசும்பும்,கூறுப.

**தயிர்கடை தாழியின்பெயர் : உ**

குடாரம்,மந்திநி,யொடு தயிர்கடைதாழி.

**அகலின்பெயர் : உ**

சராவம்,சுத்திகை, அகலெனச் சாற்றுவர்.

**தகழியின்பெயர் : உ**

இடிஞ்சில்,பாண்டில், தகழிக்கியம்புவ.

**குடுவையின்பெயர் : க**

குண்டம்,குடுவை.

**சட்டியின்பெயர் : க**

சட்டி:விசளை.

**இரப்போர்கலத்தின்பெயர் : உ**

கடிஞை,ஐயம், இரப்போர்கலமே.

**கொள்கலமேவற்றின்பெயர் : உ**

இடுங்கலம்,பாண்டம், என்பவிரண்டும்
கொள்கலமெவற்றிற்கும் கூறுங்கூற்றே.

**மண்ணரிநாரின்பெயர் : க**

மட்பகை,குயவர் மண்ணரிநாரே.

**கூறையின்பெயர் : உசு**

மடியே,புட்டம், மாறுகம்,கலை,உடை,
இலக்கர்,கலிங்கம், சேலை,காடகம்,
காழகம்,அறுவை, வட்டம்,சாடி,

தானை,வாதநம், கோடிகம்,அம்பரம்,
ஆசாரம்,ஆடை, தூசு,துகில்,நீவி,
சம்படம்,பட்டம், படாம்,புடைவை,கூறை.

நல்லாடையின்பெயர்: க௨
எடகம்,புங்கம், பங்கம்,இடையல்,
வேதகம்,சில்லிகை, சித்திலிகை,கத்தியம்,
நாகம்,தூரியம், கருள்,பாரி,நல்லாடை.

பட்டாடையின்பெயர்: ௫
பாளிதம்,கோசிகம், நேத்திரம்,பட்டாடை.

பட்டுவிகற்பத்தின்பெயர்: க
காம்பு,பட்டு விகற்பங்கழறும்.

நற்பணிதூசின்பெயர்: க
தேவாங்கம்,நற்பணி தூசிற்குச்செப்புப.

மயிர்ப்படாத்தின்பெயர்: ௨
மயிரகம்,முரிகம், மயிர்ப்படாமாகும்.

மரவுரியின்பெயர்: ௫
வற்கலை,சீரை, இறைஞ்சி,மரவுரி.

செம்படாத்தின்பெயர்: ௨
கம்பளம்,சிம்புளி, செம்படாமாகும்.

முகபடாத்தின்பெயர்: க
சூழி,முகபடாம்.

மேற்போர்வையின்பெயர்: க
மீக்கோள்,மேற்போர்வை.

முன்றானையின்பெயர்: க
முன்றானை:தோகை.

**கொய்சகத்தின் பெயர் : க**

நீவி, என் கிளவி மாதர்கொய்சகம்.

**கம்பளிப்படாத்தின்பெயர் : உ**

கம்பலம், கம்பளம், என்பவிரண்டும்
கம்பளிப்படாத்தின் கண்ணவாகும்.

**கச்சின்பெயர் : ரு**

வம்பு, பிணிகை, பட்டிகை, வார், வடம்,
என்றிவையைந்தும் கச்செனவிசைப்பர்.

**கச்சின்கடைக்கயிற்றின்பெயர் : க**

சார்வாரம், கச் சின்கடைக்கயிறே.

**உடுத்தலின்பெயர் : க**

சுற்றல், உடுத்தல்.

**உத்தரீயத்தின்பெயர் : க**

உத்தரீயம்: ஏகாசம்.

**அத்தவாளத்தின்பெயர் : க**

வடகம், அத்தவாளம்.

**மேற்கட்டியின்பெயர் : சு**

கம்பலம், விதாநம், மேற்கட்டியாகும்;
வாணி, படங்கு, எனவும் வகுத்தனர் புலவர்.

**சட்டையின்பெயர் : கூ**

மெய்ப்பை, கஞ்சுளி, கஞ்சுகம், வாரணம்,
குப்பாயம், அங்கி, சட்டையாகும்.

**இடுதிரையின்பெயர் : எ**

கண்டம், ஏமம், படாம், கஞ்சிகை, கழனி, யென்
றிங்கிவையெழினி, ஓடுபடம், இடுதிரை.

கோடியின்பெயர்: ௧௦

பதாகை,கேதனம், விலோதனம்,கதலிகை,
படாகை,துவசம், துகிலிகை,வானி,
படங்கும்,சத்தியும், பாற்படுத்தின்னவை
நுடங்கிய கொடியென நுவன்றிசினோரே.

சிறுகொடியின்பெயர்: ௧

கத்திகை,சிறுகொடி ஆகக்கருதுவர்.

சீலையின்பெயர்: ௩

சிதவல்,சிதர்,துணி, சீரையாகும்.

மெத்தையின்பெயர்: ௩

அணையும்,தவிசும், தளிமம்,இம்மூன்றும்
புணையுமெத்தை எனப்புகன்றனரே.

தலையணையின்பெயர்: ௧

உபதானம்,தலையணை உள்ளுங்கிளவி.

வீதியிற்கட்டியகோடியின்பெயர்: ௧

வீதியிற்கட்டிய கொடிப்பெயர்:விடங்கம்.

தேர்க்கோடியின்பெயர்: ௧

கூவிரம்,தேரில் திகழ்கொடிக்கூற்றும்.

சித்திரப்படாத்தின்பெயர்: ௧

சித்திரப்படாமே: பொத்தகம்ஆகும்.

சித்திரத்தின்பெயர்: ௩

ஓவியம்,வட்டிகை, துகிலிகை,என்றிவை
மேவிடுசித்திரம் என்மனார்புலவர்.

**எழுதலின்பெயர் : ௬**

வரைதல்,தீட்டல், பொறித்தல்,இரேகை,
எழுதற்பெயரென இயம்பினர்புலவர்.

**இறுக்கலின்பெயர் : க**

தற்றல்,இறுக்கல்.

முற்றவப் பயனோ கற்றவப் பயனோ
சாபத் திழுக்கிய தேவசா தரில்
தோற்ற முடையனென அம்பற் றேன்றிய
இயற்கைச் சேந்தன் றிவாகரத்

தேழாவது

செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி

முற்றிற்று.

# அ. பண்புபற்றிய பெயர்த்தொகுதி

**பண்பென்பன :**

வடிவின் அளவின் வண்ணத்தின் வருஉம்
கடனியன் மரபில் காட்சிப்பொருளினும்
உணர்விற் புலப்படும் உண்மைப்பொருளினும்
பகர்குணத்தொடர்பு பண்பெனப்படுமே.

**வட்டவடிவின்பெயர் : கசு**

வலயம்,நேமி, திகிரி,மண்டிலம்,
பரிதி,ஆழி, பாண்டில்,விருத்தம்,
கோளகை,கடகம், பாலிகை,கொம்மை,
தட்டு,வலயம், சக்கரம்,சில்லி,
வட்டவடிவிற் கொட்டியபெயரே.

**வளைதலின்பெயர் : எ**

குடிலம்,தட்டு, வாங்கல்,குலாவல்,
கோட்டம்,வணரே, வளாவல்,வளைதல்.

**திரள்வடிவின்பெயர் : கசு**

பந்தம்,சேடு, கொம்மை,குவவு,
புஞ்சம்,தொகுதி, சோகம்,துறுமல்,
உண்டை,மாழை, குவிதல்,கணை,குழியம்,
பிண்டம்,ஏழிரண்டும் திரள்வடிவென்ப.

**குவிந்தவடிவின்பெயர் : ரு**

குவையும்,குவாலும், குப்பையும்,இராசியும்,
குவவும்,குவிதற் பொருளவாகும்.

**தொகுதியின்பெயர் : ரு**

தொகுதியும்,மொய்யும், தோடும்,குழுமலும்,
கருவியும்,தொகுதிப் பெயர்கட்டுரைக்கும்.

**துறுவலின்பெயர் : உ**

துறுவும்,துற்றுவும், துறுவலாகும்.

**ஐம்மைவடிவின்பெயர் : உ**

அடரே,தகடு,முதல் ஐம்மைவடிவின.

**பரந்தவடிவின்பெயர் : உ**

படலை,படர்ச்சி, பரந்தவடிவின.

**குமிழ்ப்புவடிவின்பெயர் : க**

குமிழ்ப்புறவடிவே: புளகம்,பெயர்க்கொடை.

**மொக்குள்வடிவின்பெயர் : க**

மொக்குள்வடிவே: கொப்புளம்,ஆகும்.

**உண்டையின்பெயர் : உ**

சூழியம்,திரள்,உண்டைக் குரியவாகும்.

**உட்டுளைவடிவின்பெயர் : ச**

தூம்பு,நாழி,புழை, உட்டுளை வடிவின.
சுரையும்,உட்டுளை வடிவெனலாகும்.

**துளையுடைப்பொருளின்பெயர் : உ**

புழையும்,குழலும், துளையுடைப்பொருளே.

**துவாரத்தின்பெயர் : உ**

சுரியும்,மடையும், துவாரமாகும்.

**சர்ச்சரைவடிவின்பெயர் : க**

பிணரே,சர்ச்சரை வடிவினதாகும்.

**கதிர்த்தொகுதிபோல்வன மயிர்த்தொகுதி போல்வனவற்றின் பெயர் : க**

கதிர்த்தொகுதி மயிர்த்தொகுதி போல்வன:கற்றை.

**இடனுடைமையின் பெயர் : க**

நாடு,என்கிளவி இடனுடைமையாகும்.

**பெருமையின் பெயர் : ௩௯**

தடம்,தடவு,விபுலம், வியலிகை,வியன்,விறல்,
முடலை,அகலுள், மோடு,செம்மை,
பீடு,கண்,பாழி, பின்,முன்பு,மால்,மா,
வந்தை,கலந்தை, பரி,பணை,அழுவம்,
பிறங்கல்,படு,நனி, இயக்கம்,வியம்,தகை,
செம்மல்,அணி,நன்று, அருமை,இருமை,
கருமை,கதழ்வு, கயவு,மூரி,
பெருமை,பாடும், அண்ணலும்,அதற்கே.

**பருமையின் பெயர் : உ**

பரூஉம்,பீனமும், பருமையாகும்.

**சிறுமையின் பெயர் : கச**

இறை,அணு,வஞ்சம், சிறிது,சின்னம்,
வறிது,ஆசென்ப, சிறுமை,பின்னம்,
கன்று,கணம்,நுதி, இட்டிமை,அற்பம்,
தன்னமும்,அதற்கே சாற்றப்பெறுமே.

**சீறிதின் பெயர் : க**

கிலமே,சிறிதாம்.

**முழுவதின் பெயர் : கல**

அகிலம்,முழுவதும், ஆமெனவறைவர்;
அகண்டம்,சமத்தம், அடங்கல்,யாவும்,
முடிய,அனைத்து,எல்லாம், முற்றும்,முழுவதாம்;
அடைய,என்பதும் அதன்பாற்றாகும்.

**மிகுதியின்பெயர் : உ௬**

அமலை,உறு,தவ, நனி,உருப்பு,ஆற்றல்,
கழிவு,விதப்பு,இறப்பு, கதழ்வு,கடுமை,
பெருமை,சிறப்பு,ஆன்றல், மதர்வு,பிறங்கல்,
அதிகம்,புதுமை, கயவு,பரம்,பொற்பு,
பொக்கம்,பொம்மலொ, டெழுமூன்றிரண்டும்
மிக்கோர்மிகுதி எனவிளம்பினரே.

**உயர்ச்சியின்பெயர் : கஉ**

உகப்பே,துங்கம், உன்னதம்,மோடே,
நிவப்பே,சேணே, பிறங்கல்,ஏந்தல்,
ஓங்கல்,நிமிர்தல், புரை,பரி,ஈராறும்
பாங்கினல்லோர் உயர்ச்சியெனப் பகர்வர்.

**தூரத்தின்பெயர் : ௬**

சேணும்,நீளிடையும், சேய்த்தும்,தூரம்.

**விசாலத்தின்பெயர் : ௬**

விசாலம்:விபுலம், விரிவிடம்,பாடே.

**பரப்பின்பெயர் : எ**

பாய்தலும்,ஞெமிர்தலும், பப்பும்,பரவையும்,
பரவலும்,தாவலும், அழுவமும்,பரப்பே.

**கூடலின்பெயர் : ௬**

கூடல்:குவிதல், பயினி,சங்கம்.

**நீளத்தின்பெயர் : கஉ**

வார்தல்,போகல், சேண்,வரி,உறையே,
நீக்கம்,நீர்தல், நேர்பாடு,ஒழுகல்,
நெடுமை,வடிதல், நெடில்,இவைநீளம்.

சேவ்வையின்பெயர் : ரு

செவ்வனும்,இருசும், செப்பமும்,செம்மையும்,
செவ்வைமற் றதற்கு நேரும்,செப்புப.

நுண்மையின்பெயர் : கசு

நுவணை,நொய்வு, நுழை,அயிர்,நுணங்கு,
சாயல்,முளரி, நுணுகு,நுணுக்கம்,
ஆய்தல்,நிழற்றல், நொசிவு,நுனி,கூர்மை,
ஆயவீரேழும் நுண்மையாகும்.

அகலத்தின்பெயர் : கசு

அகறல்,பாழி, ஆய்வு,பரப்பு,அகலுள்,
கண்ணறை,படர்தல், வியலிடம்,ஆன்றல்,
பயன்,நனவு,விரிவு, மேல்,நளி,என்றிவை
அகலமென்பர் அறிந்திசிஞேரே.

சிறுகலின்பெயர் : சு

அஃகலும்,அருகலும், அவிதலும்,குறைதலும்,
சுருங்கலும்,குன்றலும், சிறுகலாகும்.

உள்ளதுசிறத்தலின்பெயர் : உ

கூர்ப்பும்,கழிவும், உள்ளதுசிறத்தல்.

மேன்மையின்பெயர் : சு

கயவு,சாயல், சால்பு,மேம்பாடு,என்
றுயர்விஞன்கும் மேன்மையாகும்.

சேறிவின்பெயர் : க0

விறப்பும்,முறப்பும், வெறுப்பும்,நளியும்,
செற்றலும்,பொதுளலும், ஞெமுங்கலும்,இவர்தலும்,
திற்றும்,சடிலமும், செறிவெனச்சொல்வர்.

**மிடைதலின் பெயர் : உ**

துதைதலும், ததைதலும், மிடைதலாகும்.

**நிறைவின் பெயர் : அ**

மலிதல், பெருகல், மல்கல், ஆர்தல்,
தெகிழ்தல், துவன்றல், கெழுமல், தெவுளல்,
பழுதினிறைவின் பாலவாகும்.

**பாதியின் பெயர் : ரு**

பாலும், பயலும், அருத்தமும், கூறும்,
பாகமும், பாதிப் பெயரெனப்பகர்வர்.

**பாரத்தின் பெயர் : ரு**

சீரும், குருவும், கனமும், ஞாட்பும்,
பாரப்பால பொறையும், அதற்கே.

**மென்மையின் பெயர் : உ**

மிருது, சுகுமாரம், மென்மைமேன.

**நொய்ம்மையின் பெயர் : ௩**

இலகும், நொவ்வும், இலேசு, நொய்ம்மை.

**சலியாநிலையின் பெயர் : உ**

துவம், சலியா நிலை: துருவமும், சொல்ப.

**அளவின்மையின் பெயர் : ௩**

அபாரம், அனந்தம், அபரிமிதம், அளவின்மை.

**ஐவகைவண்ணமாவன : ரு**

செம்மையும், கருமையும், பொன்மையும், பசுமையும்,
வெண்மையும், ஐவகை வண்ணத்தின்மேன.

**சிவப்பின் பெயர் : கஎ**

அரக்கு, செம்மை, துப்பு, துவர், சோணம்,
அரத்தம், சேத்து, பூவல், பாடலம்,

சிந்துரம்,அத்து, படாரம்,அருணம்,
சேந்து,செக்கர், குலிகம்,சேப்பு,என
வந்தபதினேழும் சிவப்பெனவறைவர்.

பொன்னிறத்தின்பெயர்: ௩
பீதம்,பிங்கலம், புற்கு,எனல்பொன்னிறம்.

புகர்நிறத்தின்பெயர்: ௩
கபிலம்,குரானிறம், புகர்:புற்கும்,ஆமே.

வெண்மையின்பெயர்: ௯
வால்,பால்,சுவேதம், தவளம்,பாண்டு,
நரை,விளர்,சுக்கிலம், குருகு,வெண்மை.

பச்சைநிறத்தின்பெயர்: ௯
பாசும்,பைம்மையும், சாமமும்,பைத்தும்,
பேசிற்பசுமையும், சாமளமும்,பச்சை.

கருமையின்பெயர்: கக
காளிமம்,களங்கம், கார்,களம்,நீலம்,
காளம்,அஞ்சநம், கருள்,கறை,மாசொடு,
காளகம்,எனப்பதி னொன்றுங்கருமை.

மாசின்பெயர்: ரு
களங்கம்,மலினம், கசடு,கறை,மாசே.

நிறத்தின்பொதுப்பெயர்: க0
புகரே,மேனி, மாமை,கேழ்,வண்ணம்,
குருவே,கொழுமை, கெழுவே,சந்தம்,
உரு,எனப்பத்தும் நிறத்தின்பொதுப்பெயர்.

ஒளியின்பெயர்: கக
வில்லே,வாள்,வெயில், நிலவு,கதிர்,கிரணம்,
எல்லே,சேடி, சுடர்,கனல்,கேழ்,நகை,

தாமம்,விரியல், விளக்கம்,நிழல்,துளக்கம்,
வாமம்,நீமம், வளரொளியாகும்.

**ஒளிவிடுதலின் பெயர் : கூ**

அலங்கல்,சுடர்தல், அவிர்தல்,இமைத்தல்,
வயங்கல்,தயங்கல், ஒளிர்தல்,நகுதல்,
இலங்கல்,ஒன்பதும் ஒளிவிடுதலிசைக்கும்.

**மிகச்சிவத்தலின் பெயர் : உ**

சேத்தலும்,சேப்பும், மிகச்சிவத்தலாகும்.

**கட்டழகின் பெயர் : கஅ**

ஏர்,வனப்பு,எழில்,யாணர், மாமை,கேழ்,தையல்,
காரிகை,தோட்டி, கவினே,விடங்கம்,
வாமம்,வகுப்பு,ஒப்பு, மஞ்சு,பொற்பு,
காமர்,அணி,இவை கட்டழகாகும்.

**அழகின் பெயர் : கக**

நவ்வி,அந்தம்,பை, பூ,பொலம்,அற்புதம்,
செவ்வி,ஒண்மை,மாண்பு,ஐ, சித்திரம்,அழகே.

**பேரழகின் பெயர் : க**

விசித்திரம்,பேரழகு.

**வடிவின் பெயர் : க**

செண்ணம்,வடிவே.

**வண்ணத்தின் பெயர் : க**

வண்ணம்:சந்தம்.

**வலியின் பெயர் : கஉ**

மிடலே,உம்பல், ஆற்றல்,வீரம்,
முடலை,பீடு, மள்ளல்,மதுகை,

வாய்மை,மல்லல், தோற்றம்,மதம்,எறுழ்,
சூரி,முடுகல், முரண்,வயம்,பாழி,
மைந்து,திண்மை, மீளி,துப்பு,ஊக்கம்,
ஏணை,நோன்மை, முன்பு,மொய்ம்பு,வலம்,
தாவு,தானம், மானம்,உரம்,வலி.

**மதர்த்தலின்பெயர் : க**

மதர்வு,மதர்த்தல்.

**நொய்தின்பெயர் : க**

நொய்வு,நொய்தாதல்.

**குறைப்பாட்டின்பெயர் : ங**

குறையே,கிரப்பே, ஈனம்,குறைபாடு.

**எளிமையின்பெயர் : ங**

எண்மையும்,தஞ்சமும், தண்மையும்,எளிமை.

**புல்லறிவின்பெயர் : ச**

வெண்மையும்,வெளிறும், தண்மையும்,புல்லறிவு.
புல்லறிவிற்கு புகல்ப;சிற்றறிவும்.

**இழிதகவின்பெயர் : உ**

இளிவே,பரிபவம், இழிதகவாகும்.

**மானத்தின்பெயர் : உ**

மானம்:பெருந்தன்மை, குற்றப்பாடும்,வரையார்.

**வெப்பத்தின்பெயர் : உ**

அழலே,உருப்பம், வெப்பமாகும்.

**குளிர்ச்சியின்பெயர் : ச**

சீதளம்,நளியே, சீதம்,தண்,குளிர்ச்சி.

**வீரத்தின்பெயர் : உ**

விறலே,கொற்றம், வீரமாகும்.

**வெற்றியின்பெயர் : சு**

வலனே,கொற்றம், ஆடு,வாகை,
விசயம்,புகல்,என ஆறும்வெற்றி.

**தோல்வியின்பெயர் : ௩**

தொலைவு,நிலையழிவு, தோற்றல்,தோல்வி.

**அளவின்பெயர் : கூ**

தாறு,கால்,மாத்திரை, வரை,துணை,நேரம்,
காறு,பரிமாணம், அவதி,அளவாகும்.

**எல்லையின்பெயர் : ௩**

ஏணியும்,வரைப்பும், வரம்பும்,எல்லை.

**வரையறையின்பெயர் : ௩**

அளவு,நிறை,எண், வரையறையாகும்.

**அளவையின்பெயர் : உ**

கச்சம்,அளவை; கடனும்,ஆகும்.

**கூறுபாட்டின்பெயர் : உ**

வகையும்,திறனும், கூறுபாடாகும்.

**முதுக்குறைவின்பெயர் : ௩**

தெட்பம்,முதிர்ச்சி, ஒட்பம்,முதுக்குறைவே.

**அறிவின்பெயர் : சு**

உரனே,காட்சி, உணர்வே,ஒண்மை,
புலனே,ஞானம், அறிவெனப்புகல்வர்.

கருத்தின்பெயர் : கசு

எண்ணல்,பேணல், ஏடல்,சேத்து,
கண்ணுதல்,குறிப்பு, விரும்பல்,வினையே,
உன்னம்,மதமே, இங்கிதம்,சிந்தை,
வன்மை,மெய்ம்மை, ஏமாப்பு,உள்ளல்,
கவிஞரெண்ணிரண்டும் கருத்தெனக்கருதுவர்.

கருதலின்பெயர் : ங

கண்ணல்,நுதலல், புகறல்,கருதல்.

நல்லுணர்வின்பெயர் : உ

ஞானமும்,சீலமும், நல்லுணர்வாகும்.

விருப்பின்பெயர் : உரு

மாதர்,காதல், ஆதரவு,ஆர்வம்,
காமர்,வெப்பம், பற்றே,காமம்,
வீழ்தல்,வேட்கை, தாழ்தல்,வெஃகல்,
நசையே,நம்பு, மேவு,நயப்பு,
பிணையே,பேணல், பெட்பே,பெட்டல்,
இவறல்,அவாவே, இவர்தல்,கவர்தல்,
விழைவே,விருப்பின் பொருட்கட்டுரையே.

அவாவின்மையின்பெயர் : எ

வெறுப்பு,ஒல்லாமை, வேண்டாமை,முனைவொடு,
உவர்ப்பு,அறுத்திடல்,மா, உரைப்பஅவாவின்மை.

அமையுமென்றலின்பெயர் : க

அலம்,என்கிளவி அமையுமென்றல்.

அன்பின்பெயர் : எ

பரிவும்,ஆர்வமும், ஈரமும்,பற்றும்,
அளியும்,நாரும், புரிவும்,அன்பே.

**எழுமையுந்தொடர்ந்த அன்பின்பெயர் : க**

உழுவல்,எழுமையும் தொடர்ந்த அன்புரைக்கும்.

**இரக்கத்தின்பெயர் : உ**

அருளும்,கருணையும், இரக்கமாகும்.

**மனத்தின்பெயர் : எ**

உன்னம்,அகம்,சித்தம், உள்ளம்,இதயம்,
முன்னம்,நெஞ்சு, மொழிபமனக்கே.

**ஒருதலைக்காமத்தின்பெயர் : க**

கைக்கிளை,ஒருதலைக் காமமாகும்.

**வழுவுடைக்காமத்தின்பெயர் : க**

பெருந்திணை,வழுவுடைக் காமப்பெயரே.

**அன்புடைக்காமமென்பது : க**

ஐந்திணை உடையது, அன்புடைக்காமம்.

**காமக்கவலையின்பெயர் : ௩**

மதனம்,காமம், விரகம்,காமக்கவலை.

**வேட்கைப்பெருக்கத்தின்பெயர் : க**

வேணவா,என்பது வேட்கைப்பெருக்கம்.

**தக்கதின்பெயர் : உ**

தகவும்,தகுதியும், தக்கதாகும்.

**மாட்சியின்பெயர் : கூ**

மாணே,மாண்டல், மாட்சியாகும்.
ஆன்றலும்,சால்பும், நிறைவும்,அமைதியும்,
வாய்த்தலும்,செழுமையும், வளமும்,வரையார்.

**சினத்தின்பெயர்: ௧௦**

சினம்:மறம்,முனிவு, செயிர்,கறுவு,சீற்றம்,
வெகுளி,கதம்,வைரம், வேரம்,செற்றம்.

**சினக்குறிப்பின்பெயர்: ௮**

கறுப்பு,சிவப்பு, கனறல்,கன்றல்,
வியர்ப்பு,புழுங்கல், புகைதல்,வெய்துறல்,
சினத்தின்குறிப்பைத் தெரிக்குங்கிளவி.

**முன்கோபத்தின்பெயர்: ௬**

கோம்பல்,வெம்பல், கொந்தல்,முன்கோபம்;
கனிதலும்,அதற்கே கழறலாகும்.

**பெருங்கோபத்தின்பெயர்: ௮**

உருத்தல்,சீறல், உலறல்,முனைதல்,
உடற்றல்,காய்தல், விடைத்தல்,தீவிரத்தொடு,
தொடுத்தஎட்டும் பெருத்தகோபம்.

**வைரத்தின்பெயர்: ௫**

செற்றம்,சலம்,பவம், தொந்தம்,வேரம்,
உற்றவைரம் மொழியுங்கிளவி.

**அதிசயத்தின்பெயர்: ௫**

வியப்பு,இறும்பூது, விம்மிதம்,விபரீதம்,
அச்சோ,ஐந்தும் அதிசயமாகும்.

**அதிசயமுறஇரங்குதலின்பெயர்: ௫**

ஐயோ,அந்தோ, அன்னே,ஆ,ஓ,
என்பஅதிசயமுற இரங்கற்குரிய.

**கண்ணோட்டத்தின்பெயர்: ௩**

நயப்புணர்வு,நாகரிகம், கேண்மை,கண்ணோட்டம்.

**உள்ளக்களிப்பின்பெயர் : சு**

மதர்ப்பு,பெருமிதம், பாடவம்,அத்தம்,
செருக்கு,மதம்,உள்ளக் களிப்பின்றிறத்த.

**கருதலின்பெயர் : உ**

சுட்டலும்,குறித்தலும், கருதலாகும்.

**அழுக்காற்றின்பெயர் : ச**

அழுக்காறு:மனச்சழுக்கம்.
கூரம்,பொறாமை, நோனமையும்,அழுக்காறு.

**மனக்கோட்டத்தின்பெயர் : க**

ஔவியம்,மனக்கோட்டம்.

**மறத்தலின்பெயர் : எ**

இழுக்கு,சோர்வு, பொச்சாப்பு,இகழ்ச்சி,
வழுக்கு,மறல்,மறவி, மறத்தலாகும்.

**கொடுமையின்பெயர் : ரு**

கோரம்,சண்டம், கடினம்,கடுமை,
கூரம்,கொடுமை ஆகக்கூறுவர்.

**உள்ளமிகுதியின்பெயர் : உ**

ஊக்கமும்,உரனும், உள்ளமிகுதி.

**இறுமாப்பின்பெயர் : க**

இறுமாப்பு:ஏக்கழுத்தம்.

**அகமலர்ச்சியின்பெயர் : க**

செம்மாப்பு,அகமலர்ச்சி.

**பேரறிவின்முதிர்ச்சியின்பெயர் : க**

முதாக்குறைவு,பேரறிவின் முதிர்ச்சியாகும்.

கொடுங்கோன்மையின்பெயர் : க

கோணே,கொடுங்கோன்மை.

நிலையுடைமையின்பெயர் : க

ஏணே,நிலையுடைமை.

நாணத்தின்பெயர் : ௬

மானமும்,வெள்கலும், வட்கலும்,சமழ்ப்பும்,
நாணமுணர்த்தும், நடையவாகும்.

மதித்தலின்பெயர் : உ

பேணலும்,கருதலும், மதித்தலாகும்.

தீதின்பெயர் : கூ

ஊறும்,கோளும், தீதாகும்மே.
அந்தராயம்,தீங்கு, அலாபம்,முட்டுப்பாடு,
அந்தரம்,விக்கினம், தட்டும்,தீதாம்.

இன்பத்தின்பெயர் : ௬

நயனும்,மகிழ்வும், நகையும்,இன்பம்,
ஏமமும்,அதற்கே இயம்புங்கிளவி.

தளர்வின்பெயர் : உ

எட்டை,தளர்வே;
அசா,என்கிளவியும், தளர்ச்சிக்குறைப.

குறிப்பின்பெயர் : க

நாட்டியம்,குறிப்பே.

சுழற்சியின்பெயர் : ரு

அலமரல்,கொட்பு, கறங்கு,சுழல்வு,
தெருமரல்,சுழற்சி ஆமெனச்செப்புவர்.

**இரங்கலின்பெயர் : உ**

இனைதல்,எற்றித்தல், இரங்கலாகும்.

**ஐயத்தின்பெயர் : ச**

கொல்லே,மாறுதல், அநுமானம்,ஆசங்கை,
ஐயமென்பர் அறிந்திசிஞேரே.

**இகழ்ச்சியின்பெயர் : ரு**

எள்ளல்,நகை,இகழ்வு,
உவர்ப்பு,ஒல்லாமை,இகழ்ச்சி.

**நன்மையின்பெயர் : கூ**

மண்ணல்,மணி,சீர், யாணர்,மாசறல்,
நன்னர்,நறுமை, உறுதி,நயம்,என்
றின்னவைநன்மைக் கெய்தும்பெயரே.

**அகமகிழ்ச்சியின்பெயர் : ச**

ஆனந்தம்,இன்பம், அகமகிழ்ச்சியாகும்.
தொய்யலும்,கட்டியும், அப்பெயர்சிவணும்.

**உவகையின்பெயர் : உ**

ஓகை,மாராயம், உவகையாகும்.

**நிச்சயத்தின்பெயர் : ச**

தீர்க்கமும்,தரிப்பும், தேறும்,நிச்சயம்;
மன்ற,என்கிளவியும் வகுப்பவதற்கே.

**ஆக்கத்தின்பெயர் : க**

நந்தல்,ஆக்கம்.

**பெயரின்பெயர் : உ**

நாமம்,அபிதானம், நாட்டும்பெயரே.

**அறியாமையின்பெயர் : ச**

எய்யாமை,அறியாமை ஆகுமென்ப.
மருட்சி,மடம்,பேதைமை, மற்றுமறியாமை.

**அறிவின்றிரிவின்பெயர் : க**

துயவு;என்கிளவி அறிவின்றிரிவே.

**அறிமடத்தின்பெயர் : க**

பெருஞ்சேந்தனம்பல் பெருமான்போலத்
தெரிந்துபிறரறிவின் சோர்வுபுறமறைத்
தறிந்துமறியார் போறல்அறிமடம்.

**மறவாக்கடனின்பெயர் : க**

கடைப்பிடி,கொண்டது மறவாக்கடனே.

**நோயின்பெயர் : க0**

மடங்கல்,நீழல், மடி,அஞர்,அழுங்கல்,
முடங்கு,குத்து, பிணி,பையுள்,சூர்,நோய்.

**நரகநோயின்பெயர் : க**

நரகநோய்:ஆதனை.

**வேதனைபண்ணுநோயின்பெயர் : உ**

வாதை,பீதி, வேதனைபண்ணுநோய்.

**உன்மத்தத்தின்பெயர் : ககூ**

மான்றல்,மாழ்கல், கழுமல்,களி,மறல்,
மால்,மாழாத்தல், மையல்,மைந்து,உணராமை,
மருள்,மயல்,மயக்கம், அனந்தர்,இனைமை,
இருள்,மயர்வு,ஏமம்,பித்து, உன்மத்தமாகும்.

**தெளிவின்பெயர் : ச**

நனவு,உணர்வு,தேற்றம், துணிவு,தெளிவாகும்.

பொறாமையின்பெயர் : க

நோனுமை,பொறுமை ஆமென நுவல்வர்.

நீங்காமையின்பெயர் : உ

ஆனுமை,தண்டாமை, ஆயிரண்டுநீங்காமை.

பொறையின்பெயர் : கா

நோன்மை,நோன்றல், பொறையென நுவல்வர்.
கமித்தலும்,ஆற்றலும், சகித்தலும்,ஓர்ப்பும்,
மற்றப்பொறையை வகுக்குங்கிளவி.

வறுமையின்பெயர் : கஉ

அல்கல்,ஒற்கம், இலம்பாடு,இன்மை,
நல்குரவு,வறுமை ஆமெனநவில்வர்.
குறைவு,மிச்சை, குறுவாழ்க்கை,அஃகல்,
சிறுமை,மிடி,வறுமை; நிரப்பும்,செப்புப.

தனிமையின்பெயர் : ௩

புலம்பே,தனிமை.
கேவலத்தோடு,ஏகம், கிளத்துப தனிமை.

பொலிவின்பெயர் : கக

துப்பு,கலித்தல், பம்பல்,துவன்றல்,
பொற்பு,களுறல், உவப்பே,அமரல்,
அதிகம்,மங்கலம், மலர்ச்சி,என்றிவை
பொலிவின்பெயரெனப் புகன்றனர்புலவர்.

பொலிவழிதலின்பெயர் : உ

புல்லெனல்,மழுங்கல், பொலிவழிதலாகும்.

வருத்தத்தின்பெயர் : கூ

உயவே,அனுக்கம், கவறல்,உயங்கல்,
அயர்வே,ஆகுலம், அணங்கு,கசிவே,
வயாவு,என்றின்னவை வருத்தமாகும்.

**சோம்பலின்பெயர் : கசு**

ஆஞ்சி,அழுங்கல், அலசல்,மாழ்கல்,
அஞர்தல்,ஞொள்கல், அஞ்சல்,ஆழ்தல்,
தூங்கல்,அசைதல், மடி,சோம்பலாகும்.
மூரி,மந்தமும், மொழிபசோம்பல்.

**ஒண்மையென்னும்பெயர் : ச**

நன்மையும்,மிகுதியும், அறிவும்,ஒழுங்கும்,
ஒண்மையென்னும் சொல்லிற்குரிய.

**நயனென்னும்பெயர் : ச**

பயனும்,மகிழ்வும், இன்பமும்,நன்கும்,
நயனென்கிளவி நடைபெற்றியலும்.

**அச்சத்தின்பெயர் : ௩௦**

அதிர்ப்பு,கம்பலை, வெருவு,அஞர்,அழுங்கல்,
பொதிர்ப்பு,துணுக்கம், இரிதல்,கூசுதல்,
வெடிப்பு,துளக்கம், கரிப்பே,தெருமரல்,
விதிர்ப்பு,பனித்தல், அலமரல்,வெம்மை,
வெறி,புலம்பு,பீதி, கவலை,சூர்,பிறக்கம்,
நடுக்கம்,இடும்பை, மிறையே,உலைதல்,என்
றடுத்தனவெல்லாம் அச்சமாகும்.
பேளம்,நாம்,உரும்,என வருஉங்கிளவி
ஆமுறைமூன்றும் அச்சப்பொருள.

**அச்சக்குறிப்பின்பெயர் : கஉ**

திட்கல்,ஒடல், தேங்கல்,ஞெரேலெனல்,
துட்கல்,உலமரல், துடுக்கெனல்,வெய்துறல்,
அருக்கல்,ஞொள்கல், அச்சக்குறிப்பாம்
குலைதலொடு,துண்ணெனல், கூறுபவதற்கே.

**கூம்புதலின்பெயர் : உ**

சாம்புதல்,ஒடுக்கம், கூம்புதலாகும்.

**மெலிவின்பெயர் : சு**

தேம்புதல்,ஞொள்கல், சிக்கம்,முசிப்பென்,
றும்புகளுன்கும் மெலிவெனவிசைப்பர்.
பழங்கணும்,புன்கணும், மெலிவின்பால.

**துன்பத்தின்பெயர் : சஅ**

இன்னல்,அழுங்கல், வருத்தம்,பிணி,இடுக்கண்,
அல்லல்,நோய்,இன்னா, அரந்தை,இடும்பை,
படர்,துனி,துக்கம், அஞர்,புலம்பு,எவ்வம்,
நடலை,கம்பலை, செல்லல்,பாசறை,
பையுள்,சூர்,துயர், பைதல்,இரக்கம்,
சிறுமை,விழுமம், கவலை,பீழை,
வறுமை,பருவரல், புன்கண்,நோ,ஆகுலம்,
உறுவல்,கவ்வை,பனி, வெய்துறல்,மம்மர்,
உறுகண்,அலத்தல், துன்பமென்றுரைப்பர்;
இடர்,கோட்டாலை, ஏதம்,கேதம்,
அலக்கண்,பீடையோடு, அல்லகண்டமும்,
துன்பப்பொருளைச் சொல்லுங்கிளவி.

**குற்றத்தின்பெயர் : உஎ**

காசு,நவை,தவறு, கசடு,வசை,வடு,
மாசு,மா,மனம்,அரில், செயிர்,புகர்,பழுது,
ஏதம்,ஆசு, [1]போக்கு,புரை,பழி,
கோது,தோம்,இழிவு, குற்றமாகும்;
மிறை,அரிப்பு,ஏசு,இவை மூன்றும்வரையார்,
அழிப்பு,குறை,கழிப்பு, கொழிப்பும்,அதற்காம்.

---

1. பொக்கு - எனினுமமையும்.

**அருவருப்பின்பெயர் : உ**

பயிர்ப்பு,குற்சிதம், அருவருப்பாகும்.

**பகையின்பெயர் : எ**

முனை,உறழ்வு,துப்பு, மூரண்,படி,தெவ்வொ(டு),
இகல்,பகையாகும் என்றிசினோரே.

**வஞ்சனையின்பெயர் : கக**

கூடம்,புள்ளுவம், குடிலம்,குத்திரம்,
கைதவம்,மாயம், பட்டிமை,வஞ்சகம்,
படிறு,குய்யம், பகர்வ வஞ்சனை
சாட்டியப்பெயரும், சாற்றப்பெறுமே.

**நட்பின்பெயர் : ங**

கேண்மையும்,தொடர்பும், கேளும்,நட்பே.

**ஒழுக்கத்தின்பெயர் : க**

கையே,ஒழுக்கம்.

**ஒழுக்காற்றின்பெயர் : க**

கையாறு,ஒழுகலாறு.

**செயலின்மையின்பெயர் : க**

கையறல்,செயலின்மை.

**அடைக்கலத்தின்பெயர் : க**

கையடை,அடைக்கலம்.

**கையொழியாமையின்பெயர் : க**

கைதுரவாமை, கையொழியாமை.

**மேற்கோளின்பெயர் : க**

பூட்கைக்கிளவி மேற்கோளாகும்.

**பழைமையின்பெயர் : கசு**

தொன்மை,தொடர்பு, தொத்து,தொண்டு,
முறையே,முன்பு, தொன்று,பூருவம்,
தொல்லை,மூரி, விருத்தம்,மூது,
முந்து,புராதனம், புராணம்,முதுமை,என
வந்தவைபழைமை ஆமெனவைப்பர்.

**புதுமையின்பெயர் : கூ**

புத்தேள்,யாணர், புனை,புணர்,விருந்து,
நூதனம்,வம்பு, கடி,நவம்,புதுமை.

**ஈன்றணிமையின்பெயர் : க**

புனிறு,ஈன்றணிமை.

**நிலையின்மையின்பெயர் : க**

நிலையின்மை:வம்பே.

**பிறப்பின்பெயர் : க0**

சூதகம்,பிறந்தை, பயம்,சனிப்பு,சனனம்,
ஓதியதோற்றம், யோனி,பவம்,பிறப்பே;
சன்மமும்,உற்பத்தியும், சாற்றுபஅதற்கே.

**கழிபிறப்பின்பெயர் : க**

உம்மை,கழிபிறப்பே.

**இப்பிறப்பின்பெயர் : க**

இம்மை,இப்பிறப்பே.

**வருபிறப்பின்பெயர் : உ**

அம்மையும்,மறுமையும், வருபிறப்பாகும்.

**ஒருபிறப்பின்பெயர் : க**

ஒருபிறப்பு:ஒருமை.

**எப்பிறப்பின்பெயர் : க**

எப்பிறப்பு:எம்மை.

**எழுபிறப்பின்பெயர் : உ**

எழுமை,எழ்பவம், எழுபிறப்பாகும்.

**பின்னின்பெயர் : க**

வழி,பின்னாகும்.

**முறைமையின்பெயர் : உ**

மரபு,பாரம் பரியம்,முறைமை.

**இளமையின்பெயர் : கஅ**

மழவு,நவ்வி,சேய், போதகம்,மஞ்சு,
குழவு,குருளை, கயம்,இளை,புருவை,
முருகே,தருணம், பிள்ளை,பருவம்,
சேடு,கொம்மை, எனவீரெட்டும்
நாடிலிளமைப் பெயரெனநவில்வர்;
வெண்மையும்,நாகும், விளம்புவஇளமை.

**இளமைச்செவ்வியின்பெயர் : க**

கோமளம்,இளமைச் செவ்வியைக்கூறும்.

**காரணத்தின்பெயர் : கூ**

நிபமும்,பொருட்டும், ஏதுவும்,நிமித்தமும்,
திறனும்,வாயிலும், காரணந்தெரிசொல்.

**பற்றுக்கோட்டின்பெயர் : ரு**

கந்தொடு,ஆலம்பனமும் பற்றுக்கோடே.
தஞ்சம்,தா,ஊற்றமும் சாற்றுபஅதற்கே.

**உரிமையின்பெயர் : எ**

பாங்கு,பால்,கிழமை, தாயம்,ஆட்சி,
எங்கிவைஐந்தும் உரிமையாகும்.
காணி,கெழுதகைமையும், கழறுபஉரிமை.

**இலாபத்தின்பெயர் : எ**

ஊதியம்,பசை,பயன், பலித்தல்,ஆக்கம்,என்
றோதியஐந்தும் இலாபமாகும்.
பேறும்,அதிகமும், பேசுபஇலாபம்.

**மகளிர்கையுறப்பொருட்டின்பெயர் : க**

பூப்பு,மகளிர் கையுருப்பொருட்டே.

**அசுத்தத்தின்பெயர் : ௩**

தூய்தன்மை,வாலாமை, சூதகம்,அசுத்தம்.

**அழுக்கின்மையின்பெயர் : உ**

அமலமும்,விமலமும், அழுக்கின்மையாகும்.

**தூய்மையின்பெயர் : சு**

புனிதம்,பவித்திரம், தூய்மையாகும்.
துப்பு,தூ,பாவனம், வாலும்,தூய்மை.

**தருமத்தின்பெயர் : ரு**

சீலம்,அருள்,மங்கலம், சுபமே,சுகிர்தம்,என
நாலுமொன்றும் தருமமாகும்.

**அறிவின்பெயர் : க**

சேதனம்,அறிவே.

**அறிவின்மையின்பெயர் : க**

அசேதனம்,அறிவின்மை.

**மேலின் பெயர் : ௩**

ஆணை, தலைமை, தலை, மேலாகும்.

**அழிவின்மையின் பெயர் : ௩**

குமரி, கன்னி, சோணை, அழிவின்மை.

**எண்ணின் பெயர் : ௪**

கரணம், கணிதம், கணக்கு, அலகு, எண்ணும்.

**நாநாவிதத்தின் பெயர் : ௩**

பரியாயம், பன்முறை, பல்விதம், நாநாவிதம்.

**முதலின் பெயர் : ௩**

ஆதியும், மோனையும், தொடக்கமும், முதலாம்.

**நடுவின் பெயர் : ௬**

இடையே, சமன், பகல், நாப்பண், மத்திமம்,
நள்ளே, நடுவென் றோதினர்நயந்தோர்.

**ஈற்றின் பெயர் : ௪**

அந்தம், தீர்தல், முடிவே, இறுதி, என
வந்தநான்கும் ஈற்றின்பால.

**அநுபவத்தின் பெயர் : ௨**

துவ்வே, துப்புரவு, அநுபவமாகும்.

**வளமையின் பெயர் : ௬**

கொழுமை, யாணர், மல்லல், வண்மை,
செழுமை, வாய்ப்பு, வளமையாகும்.

**செழுமையின் பெயர் : ௧**

செழுமை: செழித்தல்.

**கொழுமையின் பெயர் : ௧**

கொழுமை: கொழுப்பே.

**வேறுபாட்டின்பெயர் : ௨**

விகிர்தமும்,விகடமும், வேறுபடற்பொருட்டே.

**துணையின்மையின்பெயர் : ௩**

சீரணம்,சிதம்பு, சீத்தை,துணையின்மை.

**தாமதத்தின்பெயர் : ௧**

விளம்பனம்,தாமதம் விளம்புங்கிளவி.

**கேட்டின்பெயர் : ௧௧**

இழிவு,நந்தல், இறுதல்,திரிதல்,
வழு,அழுங்கல்,முறிதல், மடி,கயம்,கேடே;
சுதமும்,கந்தலும், சொல்ப அதற்கே.

**பாவமென்னும்பெயர் : ௬**

பாவமும்:மறமும், பாவையும்,செடியும்,
அகமும்,ஒருபொருட் கிளவியாகும்.

**உறவின்பெயர் : ௧**

உறவி:உறவே.

**துறவின்பெயர் : ௧**

துறவி:துறவே.

**செல்வத்தின்பெயர் : ௧௩**

வெறுக்கை,மா,பொறி,சீர், விபவம்,செல்வம்;
விருத்தி,ஆக்கம்,திரு, மாடு,இடம்,வாழ்க்கை,
பெருக்கமும்,செல்வப் பெயரெனப்பேசுப.

**மணப்பொதுவின்பெயர் : ௩**

கமழ்தல்,கந்தித்தல், நாறுதல்,மணப்பொது.

**நறுநாற்றத்தின்பெயர் : கஎ**

மணமே,வசந்தம், முருகு,மன்றல்,
வாசம்,விரையே, கந்தம்,வதுவை,
நாணம்,தேம்,வெறி, ஆமோதம்மே,
கடியே,வம்பு, கானம்,பரிமளம்,
நறை,நறுநாற்றம் ஆகுமென்ப.

**துர்க்கந்தத்தின்பெயர் : க**

பூதி,துர்க்கந்தம் ஆகப்புகல்வர்.

**இனிமையின்பெயர் : எ**

சுவையே,சாரம், இரதம்,இனிமை.
சேறு,அமுது,தீமொடு, தேமும்,இனிமை.

**தித்திப்பின்பெயர் : சு**

தீமும்,மதுரமும், தேமும்,தேக்கும்,
ஆயநான்கும் தித்திப்பாகும்.

**காழ்த்தலின்பெயர் : ௩**

காயமும்,கரிலும், கடுகமும்,காழ்த்தல்.

**கைத்தலின்பெயர் : க**

கைத்தல்:தித்தம்.

**புளித்தலின்பெயர் : க**

புளித்தல்:ஆமிலம்.

**ஒருபலத்தின்பெயர் : க**

ஒருபலப்பெயர்:தொடி.

**காற்பலத்தின்பெயர் : க**

கஃசு,காற்பலம்.

நூறுபலத்தின்பெயர்: ௩
துாக்கும்,காவும், துலாமும்,நூற்றுநிறை.

ஒன்றின்பெயர்: ௧
ஒன்று:ஏகம்மே.

பத்தின்பெயர்: ௧
தசம்,பத்தாகும்.

நூற்றின்பெயர்: ௧
நூறு:சதமே.

ஆயிரத்தின்பெயர்: ௧
நூற்றுப்பத்து,ஆயிரம்.

பல்குணத்தின்பெயர்: ௨௧
மாலை,பெற்றி, தன்மை,மரபு,
பால்,ஊழ்,பான்மை, பண்பு,முறை,உழுவல்,
தகவு,தகை,இயல்பு, குணம்,நுனித்தல்,உரிமை,
நிலைமை,நீர்மை, பரிசு,கிழமை,
விதி,அதிகாரம், ஒருபொருளாகும்.

குணமுழுதின்பெயர்: ௧
ஊழ்,என்கிளவி குணமுழுதாகும்.

பண்பின்பெயர்: ௨
பண்பும்,திறனும், குணனுமாகும்.

கொள்கையின்பெயர்: ௨
குணனும்,அறிவும், கொள்கையாகும்.

தகையின்பெயர்: ௨
தகையே:இயல்பும், அழகும்,ஆகும்.

**உவமத்தின்பெயர் :** கங

சேத்து,பொரு,உறழ்வு, போல்,புரை,கடுப்ப,
ஒப்பு,துணை,இணை, மான,நிகர்,நேர்,
ஏய,உவமம் என்னவுரைப்பர்.

**உவமத்தியல்பாவது :** ச

வினையுவமம்,பயனுவமம், மெய்யுவமம்,உருவுவமம்,
எனநான்குவகைத்தே உவமத்தியல்பே.

**உவமமாவது :**

உவமம்,ஒன்றோ டொன்றையொப்புறுத்தல்.

மறக்குறும் போட்டி அறத்தின் வழிநின்று
கவிகைத் தண்ணளி புவிபெற வாணையின்
ஐம்புல ஞளும் அம்பற் கோமான்
திண்பெருஞ் சேந்தன் திவாகரத்

தெட்டாவது

பண்புபற்றியபெயர்த்தொகுதி

முற்றிற்று.

## ௩௰. செயல்பற்றிய பெயர்த்தொகுதி

**செயலாவது :**

*கருமமும்,செயலும், தருமமும்,தொழிலும்,*
*வினையும்,ஒருபொருள் விதியுமாகும்.*

**தொழிற்பயில்வின்பெயர் : க**

*தொறு,என்கிளவி தொழிற்பயில்வாகும்.*

**செய்தலின்பெயர் : ரு**

*அயர்தல்,குயிற்றல், ஆற்றல்,இழைத்தல்,*
*வனைதல்,செய்தல் மாற்றமாகும்.*

**மகளிர்விளையாட்டின்பெயர் : கக**

*ஓரை,பண்ணை, கெடவரல்,பொய்தல்,*
*உண்டாட்டு,கிரீடை, உப்பு,கேளி,*
*வண்டல்,தொடலை, மகளிர்விளையாட்டு;*
*விலாசனை,என்பதும் அவர்விளையாட்டே.*

**பிறப்பித்தலின்பெயர் : ௬**

*நியமித்தல்,விதித்தல், நிருமித்தல்,சிட்டித்தல்,*
*படைத்தல்,பிறப்பித்தல்; பாரித்தலுமாம்.*

**கொண்டாடலின்பெயர் : உ**

*பாராட்டல்,மெச்சல், பரிந்துகொண்டாடல்.*

**பொழுதுகழித்து விளையாடலின்பெயர் : க**

*விநோதம்,பொழுது கழித்துவிளையாடல்.*

**புதுமணத்தின்பெயர் : ௩**

*வதுவை,கடியே, மன்றல்,இம்மூன்றும்*
*புதுமணப்பெயரெனப் புகல்வர்புலவர்.*

கைப்பற்றலின்பெயர் : எ

கடியும்,தீவேள்வியும், கைப்பற்றலாகும்;
விதியுளி,வேட்டல், மணம்,கல்யாணம்,
தீவலஞ்செய்தலும், செப்பற்பால.

விழாவின்பெயர் : ரு

முருகும்,சாறும், சேறும்,விழாவே.
உயர்துணங்கறலும், உற்சவமும்,ஆகும்.

ஒப்பனையின்பெயர் : கூ

மண்ணல்,கைசெய்தல், பொற்பு,அலங்கரித்தல்,
புனைதல்,மிலைதல், வேய்தல்,அணிதல்,
வனைதல்,ஒப்பனை மாற்றமாகும்.

சூடுதலின்பெயர் : ங

மிலைதலும்,மலைதலும், வேய்தலும்,சூடுதல்.

சொருகுதலின்பெயர் : உ

அடைச்சல்,செருகுதல், ஆஞ்சொருகுதற்கே.

அடிசிலுண்டொழிலின்பெயர் : சு

அயிறலும்,மிசைதலும், அடிசிலுண்டொழில்;
பகரில்கைதொட்டலும், பாரணமும்,ஆகும்.

உண்ணும்பண்பின்றொழிலின்பெயர் : கக

துய்த்தல்,அருந்தல், ஆர்தல்,துவ்வுதல்,
துற்றல்,நுகர்தல், மாந்தல்,அயிறல்,
உண்டல்,தின்றல், பருகுதல்,இவையுணும்
பண்பிற்றொழிலைப் பகருங்கிளவி.

நுகர்தலின்பெயர் : ங

நுங்கல்,விழுங்கல், நொண்டல்,நுகர்தல்.

**துயிறலின்பெயர் : அ**

கண்படை,கண்வளர்தல், கனவோடு,அனந்தர்,
துஞ்சல்,பள்ளி, துயிறலாகும்,
உறங்கலும்,படையும், உரைப்பர் அதற்கே.

**நிரம்பாத்தூக்கத்தின்பெயர் : க**

தூங்கல்,நிரம்பாத் தூக்கமென்ப.

**களவின்பெயர் : கஉ**

கரப்பு,கட்டல், கள்ளல்,கரவு,
கரவடத்தோடு, பட்டிமை,களவே.
தேயம்,தேறு, சௌரியம்,சோரம்,
பட்டி,திருட்டு, படிறு,மற்றதுவே.

**சித்தின்பெயர் : க**

சம்பிரதம்,சித் தின்பெயர்மேற்றே.

**ஏறுதலின்பெயர் : ௩**

எஃகலும்,எக்கலும், இவர்தலும்,ஏறுதல்.

**முறித்தலின்பெயர் : எ**

ஒசித்தல்,கோடல், ஒடித்தல்,அகைத்தல்,
ஞெமிர்த்தல்,இறுத்தல், முறித்தலாகும்.
இசித்தல்,என்றும் இயம்பற்பாற்றே.

**வெறுப்பின்பெயர் : உ**

ஒறுத்தலும்,செறுத்தலும், வெறுப்பின்மேன.

**ஓய்தலின்பெயர் : உ**

ஒசிதலும்,தளர்தலும், ஓய்தலையுரைக்கும்.

**தாழ்தலின்பெயர் : உ**

இறைஞ்சல்,குராங்கல், தாழ்தலாகும்.

துவளலின்பெயர் : ௪

திவளல்,திவண்டல், துவண்டல்,துவளல்.

அழுதலின்பெயர் : அ

கலுழ்,கலக்கம், கசிதல்,அழுதல்.
விம்மல்,பொருமல், ஏங்கல்,உரோதனம்,
இரங்கல்என்றும் இசைக்கற்பாற்றே.

ஊடன்முதிர்வின்பெயர் : க

ஊடலின்முதிர்தல்: புலவியாகும்.

புலவிநீடுதலின்பெயர் : க

அதனினீடுதல் துனி,எனப்படுமே.

முடிவிடத்தின்பெயர் : உ

ஒல்லும்,சிரலும், முடிவிடனுரைக்கும்,

கடத்தலின்பெயர் : கரு

இகத்தல்,உகளுதல், தாவுதல்,வாவுதல்,
குவித்தல்,அகறல், குப்புறல்,நீடுதல்,
தத்தல்,எனவொன்பதும் தாண்டலும்,கடத்தல்.
பரிகரி,சேறல், பாறுதல்,ஒவல்,
மீளலும்,அதற்கே விளம்பலாகும்.

போகலின்பெயர் : உ0

படர்தல்,திர்தல், பிரிதல்,சேறல்,
இயங்கல்,விடுதல், வழங்கல்,நீங்கல்,
இறத்தல்,தணத்தல், இகத்தல்,ஏகல்,
கடத்தல்,பெயர்தல், செலவு,எனஇவற்றொடு,
நடத்தல்,ஈரெட்டும் போகலாகும்.
இல்லல்,ஒதுக்கம், கழிதல்,இவறல்,
சொல்லியநான்கும் தொடருமற்றதற்கே.

**விரைவின்பெயர்: கஙு**

கதழ்வும்,வல்லையும், ஒல்லையும்,கடுகலும்,
துணைவும்,நொறிலும், தவறலும்,முடுகலும்,
விரைவின்கிளவி: வேகமும்,ஆகும்,
கவனம்,தாரை, சடிதி,சீக்கிரம்,
சண்டு,விதுப்பு, விசையும்,அதுவே.

**விரைவுக்குறிப்பின்பெயர்: கக**

ஞெள்ளல்,சண்டம், குத்திரம்,வெம்மை,
பொள்ளே,கோரம், எனவிருமூன்றொடும்
ஐயெனல்,கதுமெனல், நொய்தெனல்,
பொருக்கெனல், வெய்தெனல்,
இன்னவும் விரைவுக்குறிப்பே.

**கடுப்பின்பெயர்: ௪**

கதம்,துரிதம், கவனம்,கடுப்பே.

**திருகலின்பெயர்: ௩**

திருகல்:முறுகல், கஞறல்,கன்றல்.

**நெருங்குதலின்பெயர்: உ**

நிமிர்தல்,மிடைதல், நெருங்குதலாகும்.

**திரிதலின்பெயர்: உ**

உழிதரல்,கொட்பு, திரிதரலாகும்.

**நீர்ச்சுழியின்பெயர்: உ**

உந்தியும்,சுரியலும், நீர்ச்சுழியாகும்.

**மீளுதலின்பெயர்: க**

மறிதரல்,என்பது மீளுதலாகும்.

**கொடுபோதலின்பெயர்: க**

போதரல்,கொடுபோதல்.

**உலாப்போதலின்பெயர் : க**

பவனி,உலாப்போதல்.

**ஓடலின்பெயர் : ரு**

நெரிதரல்,பாறல், இரிதல்,ஓடல்;
நிமிர்தல்,நீளுதல், நிகழ்த்துப அதற்கே.

**பிறகிடலின்பெயர் : உ**

பின்றலும்,பிறக்கிடலும், பிறகிடலாகும்.

**உராய்ப்போதலின்பெயர் : உ**

உராய்ப்போதல்:உரோஞ்சல், உரிஞ்சலாகும்.

**வழிப்படுத்தலின்பெயர் : க**

ஆற்றுப்படையே, வழிப்படுத்தலாகும்.

**வலியழித்தலின்பெயர் : க**

ஆற்றறுத்தலே, வலியழித்தலாகும்.

**பாய்தலின்பெயர் : ரு**

குப்புறல்,உகளுதல், குதித்தல்,பாய்தல்.
உறுக்கலும்,மிதித்தலும், உரைப்பர்அதற்கே.

**மண்டிலமா வோடலின்பெயர் : ச**

மாதியும்,சுற்றும், சாரிகை,தன்னொடு
வாளியும்,மண்டில மாவோடலாகும்.

**நேரோடலின்பெயர் : உ**

ஆதியும்,வீதியும், நேரோடலாகும்.

**செலுத்தலின்பெயர் : கூ**

செலுத்தல்:கடத்தல், துரத்தல்,தூண்டல்.
உகைத்தல்,ஊர்தல், உய்த்தல்,ஒருபொருள்;
நடவல்,எய்தல், ஓட்டலும்,அதுவே.

**அணுகுதலின்பெயர் : கக**

நண்ணல்,நேர்தல், நணுகல்,குறுகல்,
துன்னல்,சார்தல், அண்ணல்,அணுகுதல்;
மருவுதல்,புல்லல், அருகுறல்,சிவணல்,
அப்பெயர்க்குரியவென் றறைந்தனர்புலவர்.

**கூடுதலின்பெயர் : க**

மணத்தல்,கூடுதல்.

**பிரிதலின்பெயர் : க**

தணத்தல்,பிரிதல்.

**நீங்குதலின்பெயர் : ௩**

நீத்தலும்,துறத்தலும், ஒருவலும்,நீங்குதல்.

**தங்கலின்பெயர் : சு**

அசைதல்,தெவுட்டல், ஆர்தல்,இறுத்தல்,
வதிதல்,வைகல், தங்கலாகும்.

**நிலைபேற்றின்பெயர் : ரு**

புரத்தல்,துஞ்சல், அற்கல்,மன்னல்,
நிலைத்தல்,ஐந்தும் நிலைபேறாகும்.

**சுமத்தலின்பெயர் : உ**

பரித்தலும்,பொறுத்தலும், சுமத்தலாகும்.

**முயற்சியின்பெயர் : சு**

உஞற்று,உழப்பு,தாளாண்மை, ஆள்வினை,ஊக்கம்,
இயற்றல்,என்றிவை முயற்சியாகும்.

**மிக்கசெயலின்பெயர் : க**

ஊராண்மை,மிக்கசெயல்.

அரியசெயலின்பெயர் : க

பேராண்மை,அரியசெயல்.

எண்ணலின்பெயர் : ௬

சூழ்ச்சி,உசாவே, தேர்ச்சி,நூலெண,
யாப்புறவெண்ணற் கிளவியாகும்.

ஆராய்தலின்பெயர் : எ

தேர்தல்,தூக்கல், ஆய்தல்,தெரிதல்,
ஓர்தல்,தெளிதல், ஆய்வு,ஆராய்தல்.

தேடலின்பெயர் : ௩

நாடலும்,நேடலும், தேடலாகும்.
கூடுங்கையரிக் கொள்ளலும்,அதற்கே.

ஒற்றுமையின்பெயர் : க

ஒற்றுமை:குறிக்கோள்.

ஒற்றின்பெயர் : உ

ஒற்று:வேவு,வேய்.

வரையறுத்தலின்பெயர் : உ

கணித்தலும்,குணித்தலும், வரையறுத்தலாகும்.

விலையின்பெயர் : ௩

விற்றல்,பகர்தல், நொடை,விலையாகும்.

கலக்கத்தின்பெயர் : எ

வெறுப்பு,வெதிர்,துருமம், புலம்பு,கவனம்,
முதிர்ப்பு,கலங்கல், கலக்கமாகும்.

நடுக்கத்தின்பெயர் : ௬

விதிர்ப்பு,பனிப்பு, விதலை,கம்பம்,
அதிர்ப்பு,பொதிர்ப்பு, நடுக்கமாகும்.

தியாகத்தின்பெயர் : கசு

வேள்வி,வண்மை, வேளாண்மை,உதவி,
கொடை,உபகாரம், கவிகை,பொழிதல்,
இடுதல்,இகுத்தல், பணித்தல்,ஈதல்,
தருதல்,வழங்கல், வீசல்,நல்கல்,
அருளல்,அளித்தல், புரத்தல்,தியாகம்.

வரையாதுகொடுத்தலின்பெயர் : க

திடமொழியம்பற் சேந்தனேயய்ந்த
கொடைமடம்,வரையாது கொடுத்தலாகும்.

வேள்வியின்பெயர் : எ

ஓமம்,கிருது, எச்சம்,யாகம்,
இட்டி,யூபம், மகம்,இவைவேள்வி.

பாதுகாத்தலின்பெயர் : உ

போற்றலும்,ஓம்பலும், பாதுகாத்தல்.

தலைக்காவலின்பெயர் : க

இளை,என்கிளவி தலைக்காவலாகும்.

அகத்திடுதலின்பெயர் : க

கவவு,அகத்திடுதல்.

கொளற்பொருட்டின்பெயர் : க

தெவு,கொளற்பொருட்டே.

பிச்சையின்பெயர் : ரு

பலியும்,ஐயமும், பிண்டமும்,பாகமும்,
சரிதையும்,பிச்சையின் பெயரெனச் சாற்றுவர்.

இரத்தலின்பெயர் : க

இரவே,இரத்தல்.

**கரத்தலின்பெயர்: க**

கரவே,கரத்தல்.

**தொழுதலின்பெயர்: எ**

வணங்கல்,பணிதல், அஞ்சலி,வந்தனை,
இறைஞ்சல்,பரவுதல், தாழ்தல்,தொழுதல்.

**பூசனையின்பெயர்: ங**

ஆராதனையே, அருச்சனை,வழிபாடு,
பூசனையென்னப் புகன்றனர்புலவர்.

**பெறுதலின்பெயர்: ங**

வாய்த்தலும்,பயத்தலும், பெறுதன்மாற்றம்.
கிடைத்தலும்,அதுவென கிளத்தற்பாற்றே.

**உண்டாதலின்பெயர்: உ**

பூத்தலும்,பயத்தலும், உண்டாதற்பொருள்.

**புணர்வின்பெயர்: உ**

இணைவிழைச்சு,மைதுனம், புணர்வுப்பெயரே.

**தீவினைத்தொடர்பின்பெயர்: க**

காதரம்,தீவினைத் தொடர்பதாகும்.

**கலத்தலின்பெயர்: கூ**

கலவியும்,புணர்ச்சியும், கலத்தலாகும்.
குலாவல்,கலம்பகம், அளாவல்,சங்கீரணம்,
நிலாவும்,அதற்கே நிகழ்த்துப மேலோர்.

**பயிறலின்பெயர்: உ**

நவிறல்,கெழுமல், பயிறலாகும்.

**அறுத்தலின்பெயர் : அ**

வகிர்தல்,பிளத்தல், துமித்தல்,துணித்தல்,
அரிதல்,துண்டித்தல், அகைத்தல்,பரிதல்,
அறுத்த லாகுமென் றறைந்தனர்புலவர்.

**பறித்தலின்பெயர் : ௩**

களைதல்,குற்றல், கட்டல்,பறித்தல்.

**பித்தலின்பெயர் : உ**

புய்த்தலும்,பூய்த்தலும், பித்தலாகும்.

**நெரித்தலின்பெயர் : க**

நெரித்தல்:தெறுதல்.

**அழுந்தலின்பெயர் : க**

ஞெமுங்கல்,அழுந்தல்.

**கொல்லுதலின்பெயர் : க0**

எருக்குதல்,காதுதல், எற்றுதல்,தேய்த்தல்,
முருக்குதல்,ஒழித்தல், கோறலை [1]மொழிப.
வெட்டல்,வீட்டுதல், படுத்தல்,மாரணமும்,
அம்மொழிப் பாலவென் றறையல் வேண்டும்.

**அழித்தலின்பெயர் : ௬**

சவட்டல்,செகுத்தல், தெறுதல்,சட்டித்தல்,
செவிட்டல்,சிதைத்தல், அழித்தலாகும்.

**வீசுதலின்பெயர் : ௩**

வீசுதல்:எறிதல், ஓச்சல்,செலவிடல்.

**வெட்டலின்பெயர் : ௯**

துமித்தல்,துணித்தல், துழாவல்,வெட்டல்.
பரிதல்,கண்டித்தல், பகுத்திடல்,தடிதல்,
எற்றல்,தறித்தலும், ஏற்குமென்ப.

---

1. கோறலை - கொல்லுதலை.

**கிளறுதலின்பெயர் : உ**

கிண்டல்,கிளைத்தல், கிளறுதலாகும்.

**போழ்தலின்பெயர் : க**

கீழ்தல்,என்பது போழ்தலாகும்.

**கிழித்தலின்பெயர் : ௩**

கீழ்தல்,கீண்டல், கீறல்,கிழித்தல்.

**குலைதலின்பெயர் : க**

குலைதல்:குன்றல்.

**தோண்டலின்பெயர் : ரு**

குறல்,சூன்றல், தோண்டலாகும்.
தொட்டலும்,தொடுதலும், அகழ்தலும்,அதற்கே.

**துளைத்தலின்பெயர் : உ**

தொள்ளல்,குயிற்றல், துளைத்தலாகும்.

**கொழித்தலின்பெயர் : சு**

வரன்றல்,வாருதல், வார்தல்,கொழித்தல்,
தெள்ளுதல்,எனவும் செப்பபற்பாற்றே.

**தெரிதலின்பெயர் : க**

வரன்றல்,என்பது தெரிதலாகும்.

**தூய்மைசெயலின்பெயர் : உ**

உவளித்தல்,தூய்மை செயலையுணர்த்தும்;
உபலாளனம்,என் றுணர்த்தவும் படுமே.

**கடைதலின்பெயர் : ௩**

கவர்தல்,குடைதல், ஞெலிதல்,கடைதல்.

**சிந்துதலின்பெயர் : ரு**

*சிதர்தலும்,தூவலும், சிந்துதலாகும்,*
*உகுத்தலும்,உளர்த்தலும், உரியமற் றதற்கே.*

**வடுப்படுதலின்பெயர் : க**

*கதுவாய்,வடுப்படுதல்.*

**தினவின்பெயர் : உ**

*கண்டுதி,தினவே;*
*சொறி,என்கிளவியும் சொல்லுப வதற்கே.*

**அடுத்தலின்பெயர் : க**

*அடுத்தல்:கூடுதல்.*

**வழிப்பறித்தலின்பெயர் : உ**

*ஆறலை,வழிப்பறி.*
*அதர்கோளும்,மற்றதற் காகுமென்ப.*

**மீதூரலின்பெயர் : உ**

*இடங்கழிமை,நெருங்கல், மீதூரலாகும்.*

**உலைப்பின்பெயர் : கூ**

*உலைத்தல்,ஒறுத்தல், உயங்கல்,மிறைசெயல்,*
*அலைத்தல்,வேதனை,உலைப் பாமென மொழிப.*

**மடங்கலின்பெயர் : உ**

*நுணங்கே,முடங்கல், மடங்கலாகும்.*

**சாதலின்பெயர் : கஉ**

*துஞ்சல்,பொன்றல், விளிதல்,வீதல்,*
*முஞ்சல்,திவன்றல், முடிவு,உலத்தல்,வீடல்,*
*மாய்தல்,இறத்தல், மாளல்,தபுதல்,*
*சாதலென்ன சாற்றினர்புலவர்.*

**கொலைசெய்தலின்பெயர் : ௫**

அடுதல்,வீட்டல், அணங்கல்,வெட்டல்,
படுத்தல்,என்றிவை கொலைசெயற்பால.

**வேறுபாட்டின்பெயர் : ௫**

வீற்றும்,பேதமும், விள்ளலும்,திரிபும்,
வேற்றுமையும்,கொள்ப வேறுபடற் பொருட்டே.

**குன்றலின்பெயர் : ௩**

சிங்கலும்,எஞ்சலும், தவறலும்,குன்றல்.

**அழிதலின்பெயர் : உ**

உலைதலும்,உருக்கலும், அழிதலாகும்.

**தளர்தலின்பெயர் : உ**

ஒல்கலும்,இழுக்கலும், தளர்தலை யுரைக்கும்.

**வளைத்தலின்பெயர் : ௭**

சுற்றுதல்,கோலல், சூழ்போதல்,வரையறுத்தல்,
முற்றுதல்,சூழ்தல், வளாவல்,வளைத்தல்.

**கட்டலின்பெயர் : ௧௮**

தொட்டல்,பிடித்தல், வளைத்தல்,பந்தித்தல்,
விசித்தல்,சிமிழ்த்தல், வீக்கல்,சுருக்கல்,
அசைத்தல்,இசைத்தல், யாப்பே,இமிழ்த்தல்,
தொடுத்தல்,ஆத்தல், யாத்தல்,தொடர்தல்,
ஆர்த்தல்,பிணித்தல், கட்டலாகும்.

**சுற்றுதலின்பெயர் : ௧**

சுலவல்,சுற்றுதல்.

**நினைத்தலின்பெயர் : ௧**

வலத்தல்,நிணத்தல்.

விடுதலின்பெயர் : உ

தீர்தலும்,தீர்த்தலும், விடற்பொருட் டாகும்.

பூசலின்பெயர் : ௩௪

உறழ்வு,வெஞ்சமம், மொய்,செரு,ஞாட்பே,
இரணம்,தாக்கே, இகல்,ஆயோதனம்,
அமர்,போர்,உடன்றல், ஆர்ப்பு,நிகர்ப்பு,
மலைதல்,நேர்தல், குறும்பே,உடலுதல்,
ஆகவம்,மண்டலம், தெவ்வு,வினை,ஆடல்,
திறல்,மறல்,மறம்,முரண், சினம்,சமர்,சமீரம்,
ஆர்த்தல்,சங்கிராமம், தும்பை,கூட்டம்,என்று
றிவ்வெண்ணான்கோ டிரண்டும்பூசல்.

தோற்றுதலின்பெயர் : க

பாரித்தல்,தோற்றுதல்.

மிகுத்தலின்பெயர் : க

பூரித்தல்,மிகுத்தல்.

தடுத்தலின்பெயர் : ரு

வாரித்தல்,வாரணம், தடுத்தல்மாற்றம்;
ஆணை,தட்டல், தகைத்தலும்,அதுவே.

கூடலர்நாடழிவின்பெயர் : க

கூடலர்நாடழிவு: கொற்றவள்ளை.

சாய்ந்தார்மேற் படாமையின்பெயர் : க

சாய்ந்தார்மேற் படாமை:தழிஞ்சி.

பாதீட்டின்பெயர் : ௩

அளித்தல்,பெய்தல், பாதீ டாகும்.
செறித்தலும்,அதுவெனச் செப்பற்பாற்றே.

கொட்டாவியின்பெயர் : க

ஆவித்தல்,கொட்டாவி.

வருத்தந் தீர்தலின்பெயர் : க

அயர்வுயிர்த்தல்,வருத்தந் தீர்தலாகும்.

உயிர்ப்பின்பெயர் : க

ஆவி,உயிர்ப்பே.

வெயர்வரும்பலின்பெயர் : க

வியர்த்தல்,வெயர்வரும்பல்.

வாய்விடலின்பெயர் : க

உயிர்த்தல்,வாய்விடல்.

காய்தலின்பெயர் : ச

முனிதல்,வறத்தல், உலறுதல்,காய்தல்;
முதிர்ந்திடல்,என்பதும் மொழியுமற் றதற்கே.

தூவுதலின்பெயர் : உ

பிலிற்றலும்,பில்கலும், தூவுதற்பொருள.

சொரிதலின்பெயர் : ச

பொழிதல்,பனித்தல், இடுதல்,எக்கர்,
சொரிதலாகச் சொல்லுவர்புலவர்.

தெவிட்டலின்பெயர் : உ

உமிழ்தலும்,இமிழ்தலும், தெவிட்டலை யுரைக்கும்.

துவலைவிடுதலின்பெயர் : க

துவறல்,துவலை விடுதலாகும்.

உடன்படலின்பெயர் : ங

ஒட்டலும்,வலித்தலும், நேரலும்,உடன்படல்.

**பொழுதுநீட்டித்தலின்பெயர் : உ**

நெடித்தல்,பாணித்தல், பொழுதுநீட்டித்தல்.

**ஒருங்கின்பெயர் : க**

உடங்கு,ஒருங்காகும்.

**உறுத்தலின்பெயர் : க**

ஒற்றுதல்,உறுத்தல்.

**எழுப்பலின்பெயர் : ங**

எற்றல்,உணர்த்தல், எடுப்பல்,எழுப்பல்.

**சோர்வின்பெயர் : க**

கயக்கு,சோர்வு.

**வழுவின்பெயர் : க**

பிறக்கு,வழுவே.

**இசைவின்பெயர் : ங**

இயைவே,புணர்ச்சி, இயைப்பு,இசைவாகும்.

**மூடுதலின்பெயர் : உ**

மூய்தலும்,கவித்தலும், மூடுதலாகும்.

**மொய்த்தலின்பெயர் : ங**

மூழ்த்தலும்,மூசலும், மூஞ்சலும்,மொய்த்தல்.

**அரசிறையின்பெயர் : ங**

அரசிறை:திறையே,
கப்பமும்,மிறையும், காட்டுமதுவே.

**சுங்கவிறையின்பெயர் : ங**

உலகு,சுங்கவிறை:
ஆயம்,சாரிகை, அஃதெனமொழிப.

**குடியிறையின்பெயர் : ரு**

கரமும்,கடனும், கறையும்,குடியிறை:
இறுப்பும்,வரியும், ஏற்குமதற்கே.

**தேய்த்தலின்பெயர் : க**

பாற்றல்,தேய்த்தல்.

**பிறக்கலின்பெயர் : க**

போற்றல்,பிறக்கல்.

**எழுச்சியின் மிகுதிப்பெயர் : ச**

கதித்தல்,பம்பல், களுறல்,கன்றல்,
எழுச்சியின்மிகுதிக் கெய்தும்பெயரே.

**எழுப்புதலின்பெயர் : சா**

ஆக்கம்,மலர்ச்சி, உறுமல்,இவர்தல்,
ஒழுக்கல்,உகைத்தல், எழுப்புதலாகும்.

**தழீஇக்கோடலின்பெயர் : ரு**

விள்ளல்,விளாவல், முயங்கல்,தழீஇக்கோடல்.

**சார்தலின்பெயர் : கரு**

அண்ணுதல்,தோய்வு, சார்ச்சி,அணவுதல்,
நண்ணுதல்,தொடல்,புல்லல், நணுகுதல்,புணர்தல்,என்
றெண்ணிய வொன்பதும் படிதலும்,சார்தல்.
மருவுதல்,அணுகல், அருகுறல்,சிவணல்,
துன்னலும்,அதுவெனச் சொல்லற்பால.

**கலத்தலின்பெயர் : ரு**

கலாவலும்,துழாவலும், வளாவலும்,கலத்தல்.

**தடவுதலின்பெயர் : ரு**

தைவரல்,வருடல், நீவுதல்,தடவுதல்.

**திமிர்தலின்பெயர் : ௧**

துவருதல்,திமிர்தல்.

**வளைதலின்பெயர் : ௧**

வக்கிரம்,வளைதல்.

**வற்புறுத்தலின்பெயர் : ௨**

வருட்டல்,தெருட்டல், வற்புறுத்தலாகும்.

**ஒழுக்கத்தின்பெயர் : ௭**

இயல்பும்,மாலையும், நிழலும்,நடையும்,
செயலும்,சரிதையும், கையாறும்,ஒழுக்கம்.

**நெல்முதலிய குற்றுதலின்பெயர் : ௧**

அவைத்தல்,குற்றுதல்.

**அடைவின்பெயர் : ௧**

ஆம்பல்,அடைவே.

**முளைத்தலின்பெயர் : ௪**

உருத்தல்,நாறுதல், பொடித்தல்,தோற்றலென
வடித்தநான்கும் முளைத்தலாகும்.

**விரிதலின்பெயர் : ௫**

எதிர்தல்,மலர்தல், அலர்தல்,விரிதல்.
விள்ளலும்,அவிழ்தலும், விளம்புமதற்கே.

**பதனழிவின்பெயர் : ௧**

ஊழ்த்தல்,செவ்வி,உறுபதனழிவே.

**அமைத்தலின்பெயர் : ௨**

சமைத்தல்,சேர்த்தல், அமைத்தலாகும்.

**மறித்தலின்பெயர் : ௩**

இகுத்தல்,வீழ்த்தல், விளித்தல்,மறித்தல்.

மேவுதலின்பெயர் : உ
வீழ்தலும்,அமர்தலும், மேவுதலாகும்.

அசைதலின்பெயர் : க
அசைதல்:துயல்வரல்.

எட்டுதலின்பெயர் : க
அணவுதல்,எட்டுதல்.

கூடுதலின்பெயர் : ங
ஒல்லல்,சிவணல், பொருந்தல்,கூடுதல்.

சரண்புகலின்பெயர் : க
மறைபுகல்,கிளவி சரண்புகலாகும்.

காவலின்பெயர் : எ
சிறையும்,அரணமும், சேமமும்,ஏமமும்,
கடியும்,கதவும், கட்டும்,காவல்.

ஏவலின்பெயர் : க
வியங்கோள்,ஏவல்.

வறுமையின்பெயர் : க
வீதல்,வறுமை.

அவித்தலின்பெயர் : ங
நதுத்தலும்,நொதுத்தலும், நுதுத்தலும்,அவித்தல்

மூட்டுதலின்பெயர் : உ
மாட்டலும்,பொருத்தலும், மூட்டுதலாகும்.

செறித்தலின்பெயர் : உ
குளித்தலும்,மூழ்கலும், செறித்தலைக் கூறும்.

**கூட்டத்தின்பெயர் : க**

யோகம்,கூட்டம்.

**விடுதலின்பெயர் : சு**

வியோகம்,விடுதல்:
மோசனம்,மோக்கம், வீதலும்,அதுவே.

**கடுமையின்பெயர் : க**

வேகம்,கடுமை எனவிளம்பினரே.

**செய்கடனின்பெயர் : உ**

நியமமும்,நியதியும், நிகழுஞ்செய்கடன்.

**குயிலுவத்தொழிலென்பது :**

குயிலுவத்தொழிலே நரப்புமுன்கருவி
பயிலும்பாடல் பண்பிற் றாகும்.

**கூத்தின்பெயர் : உ०**

நடமே,நாடகம், கண்ணுள்,நட்டம்,
படிகம்,ஆடல், தாண்டவம்,பரதம்,
ஆலுதல்,தூங்கல், வாணி,குரவை,
இலயம்,நிலயம், நிருத்தம்,கூத்தே.
நடனம்,தூக்கு, நாட்டியம்,நட்டணம்,
நடையும்,அதற்கே நவிலுமாகும்.

**மாயோனாடலின்பெயர் : சு**

அல்லியம்,குடமாடல், மல்லே,மரக்கால்,
எல்லொளிமாயோன் ஆடலாகும்.

**சிவனாடலின்பெயர் : ந**

பாண்டரங்கம், கபாலம்,கொடுகொட்டி,
என்றிவைமூன்றும் முக்கணாடல்.

**முருகனுடலின்பெயர் : உ**

கொட்டியும்,குடையும், குமரனுடல்.

**திருமகளாடலின்பெயர் : க**

பரவை,என்பது திருமகளாடல்.

**இந்திராணியாடலின்பெயர் : க**

அயிராணியாடல் பெயர்:கடையமாகும்.

**துர்க்கையாடலின்பெயர் : க**

மரக்காற்,கூத்தே, துர்க்கையாடல்.

**சத்தமாதராடலின்பெயர் : க**

எழுவர்மங்கையர் ஆடலும்:துடியே.

**காமனுடலின்பெயர் : க**

பேடாடல், காமன தாடலாகும்.

**கூத்தின்விகற்பத்தின்பெயர் : கரு**

கரணம்,பித்தம், மலைப்பு,பவுரி,
பிரமரி,வீரட் டானம்,குனிப்பே,
உள்ளாளனம்,கடகம், எனவே யொன்பதும்,
ஒள்ளியகூத்தின் விகற்பமாகும்.
உம்பிதம்,புரியம், இலயம்,பரதமும்,
அப்பெயர்க் காமென் றறைந்தனர் புலவர்.

**கைகோத்தாடலின்பெயர் : க**

குரவைக்கூத்தே, கைகோத்தாடல்.

**முடக்கியவிருகைப் பழுப்புடை யொற்றியாடலின்பெயர் : க**

முடக்கியவிருகை பழுப்புடையொற்றித்
துடக்கிய நடையது: துணங்கை,ஆகும்.

**வேலனுடலின்பெயர் : ங**

அணங்கும்,வெறியும், கழங்கும்,வேலனுடல்.

ஒற்றறுத்தலின்பெயர்: ௩
வட்டித்தல், தட்டல், வட்டணை, ஒற்றறுத்தல்.

கைகுவித்துக்கொட்டலின்பெயர்: க
கொம்மைகொட்டல், கைகுவித்துக்கொட்டல்.

ஆர்த்துவாய்புடைத்தலின்பெயர்: க
ஆவலங்கொட்டல், ஆர்த்துவாய்புடைத்தல்.

குந்திநிற்றலின்பெயர்: க
குந்தியகாணிலை: குஞ்சித்தலாகும்.

கைகூப்பி மெய்கோட்டி நிற்றலின்பெயர்: க
குடந்தம், கூப்பி மெய்கோட்டிநிற்றல்.

தாளவொற்றின்பெயர்: உ
சதியும், சீரும், தாளவொற்றின்பெயர்.

கீறலின்பெயர்: சு
கீளல், கீண்டல், கிழித்திடல், கீன்றல்,
கீழ்தல், பீறல், கீறலின்பெயரே.

கிளைத்தலின்பெயர்: ௩
பிளிறல், ஞெண்டல், கிண்டல், கிளைத்தல்.

கத்தரித்தலின்பெயர்: க
கொய்தல், கத்தரித்தல்.

குட்டுதலின்பெயர்: உ
தகர்த்தல், குட்டுதல்: உடைத்தலும், ஆகும்.

அடுக்குதலின்பெயர்: க
ஏற்றல், அடுக்குதல்.

ஒழிதலின்பெயர்: க
ஓவல், ஒழிதல்.

**மாற்றலின்பெயர் : க**

*விலக்கல்,மாற்றல்.*

**மிசையின்பெயர் : க**

*மீமிசை,மிசையே.*

**தாபித்தலின்பெயர் : க**

*நிலைபடச்செய்தல், தாபித்தலாகும்.*

**நிறுத்தலின்பெயர் : க**

*தோன்றல்,தானே நிறுத்தலென்ப.*

**சோலித்திடலின்பெயர் : க**

*இடத்தல்,சொலித்திடல் என்னற்பாற்றே.*

**வகிர்தலின்பெயர் : க**

*துவர்தல்,வகிர்தல் ஆகச்சொல்லுவர்.*

**குத்தலின்பெயர் : ௩**

*புடைத்தல்,எறிதல், எற்றல்,இம்மூன்றும்*
*குத்தலென்னக் கூறப்படுமே.*

**அடித்தலின்பெயர் : அ**

*கொட்டல்,மொத்தல், அறைதல்,அசைத்தல்,*
*எற்றல்,அதுக்கல், மோதல்,வழுக்கல்,*
*என்றிவையெட்டும் அடித்த லென்ப.*

**வசமாக்குதலின்பெயர் : க**

*வடித்தல்,வசமாக் குதலின் மாற்றே.*

**முண்டிதமாக்கலின்பெயர் : க**

*மழித்தல்,முண்டிதம் ஆக்கலென்ப.*

**வாருதலின்பெயர் : ௬**

வளைத்தல்,கவர்தல், வெளவல்,கொளல்,இவை
வாருதலென்ன வகுக்கற்பால.

**கொள்ளையின்பெயர் : ௨**

கொண்டி,சூறை, கொள்ளையாகும்.

**பரத்தலின்பெயர் : ௨**

பாரித்தல்,விரியல், பரத்தலென்ப.

**முகத்தலின்பெயர் : ௨**

தோண்டல்,மோண்டல், முகத்தலென்ப.

**காத்தலின்பெயர் : ௬**

திதி,நிலைபெறுத்தல், நோக்கல்,புரத்தல்,
காத்தலென்னக் கழறப்படுமே.

**பங்கீட்டின்பெயர் : ௬**

பகுத்தல்,பாத்தல், பாகம்,பாதி,
பங்கென்னப் பகரற்பால.

**விரித்தலின்பெயர் : க**

இகுத்தல்,விரித்தல்.

**பொதிதலின்பெயர் : க**

வீக்கம்,பொதிதல்.

**சீத்தின்பெயர் : க**

சம்பிரதம், சித்தின்மேற்றே.

**அருவலின்பெயர் : க**

பருவரல்,அருவல்.

**நீக்கலின்பெயர் : க**

வரைவு,நீக்கல்.

**மாறுபாட்டின்பெயர் : ௧**

*தெற்றல்,என்பது மாறுபாடென்ப.*

**சுடலின்பெயர் : ௨**

*தூபிதம்,சந்தாபம், சுடலெனப்படுமே.*

**மறைப்பின்பெயர் : ௨**

*மாய்தல்,ஆவரணம், மறைப்பின்பெயரே.*

**தள்ளலின்பெயர் : ௩**

*நூக்கல்,ஊன்றல், நோன்றல்,தள்ளல்.*

**அவமதிச்சிரிப்பின்பெயர் : ௧**

*அசி,அவமதிச்சிரிப் பாமென வறைவர்.*

**பிணக்கின்பெயர் : ௪**

*மறல்,அரில்,அபரம், துவக்கு,பிணக்கே.*

**கோப்புளித்தலின்பெயர் : ௩**

*பிளிற்றல்பில்கல், காலல்,கொப்புளித்தல்,*
*உமிழ்தலும்,ஆமென உரைக்கற்பாற்றே.*

**அலையலின்பெயர் : ௪**

*அலைசல்,ஞெகிழ்தல், ஞொள்கல்,ஆஞ்சி,*
*அலையலின்பெயரென அறைதற்குரிய.*

**சத்திசெயலின்பெயர் : ௩**

*உமிழ்தல்,கான்றல், உற்காரம்,சத்தி*
*செயலின்பெயரெனச் செப்பினர் புலவர்.*

**மூச்சின்பெயர் : ௨**

*தும்மல்,சுவாசம், மூச்செனச் சொல்லும்.*

**தாழ்தலின்பெயர் : ௨**

*குரங்கல்,இறைஞ்சல், கூறுப தாழ்தல்.*

**இறக்குதலின்பெயர்: உ**

இறக்குதல்:இறங்குதல், குனிவும்,ஆகும்.

**அதனினடித்தலின்பெயர்: க**

அதனினடிப்பது: நடம்,ஆகும்மே.

அண்ணல் செம்பாதிக் காணி யாட்டியைப்
பெண்ணணங்கை மூவுலகும் பெற்ற வம்மையைச்
செந்தமிழ் மாலையந் தாதி புனைந்த
நாவல னம்பற் காவலன் சேந்தன்
இயல்வுற்ற திவாகரத்

தொன்பதாவது

## செயல்பற்றிய பெயர்த்தொகுதி

முற்றிற்று.

## கo. ஒலிபற்றிய பெயர்த்தொகுதி

சொல்லுதலின்பெயர்: கஉ

விரித்தல்,கதைத்தல், உரைத்தல்,கூறல்,
தெரித்தல்,ஆடல், நொடித்தல்,நவிலல்,
சாற்றல்,பணித்தல், மொழிதல்,வலித்திடல்,
ஏற்றமுந்நான்கும் சொல்லுதற் கிசையும்.

சொல்லின்பெயர்: ௩௩

பகர்தல்,செப்பல், இயம்பல்,பரவல்,
குயிறல்,இறுத்தல், கூறல்,புகறல்,
கட்டுரை,விளம்பல், கரைதல்,ஓதல்,
சொற்றல்,வழங்கல், வசனம்,காதை,
பேசல்,பேச்சு, கிளப்பே,அறைதல்,
இசைப்பு,தேர்தல், மிழற்றல்,வாணி,
அசைப்பு,என்றின்னவை சொல்லெண வறைவர்.
குயில்,விளு,எதிர்ப்பு, கீர்,நுவல்,பாணி,
இயம்,வாக்கு,என்பவும் சொல்லின்பால.

பதத்தின்பெயர்: உ

பாழியும்,உரையும், பதமென வுரைப்பர்.

வாசகத்தின்பெயர்: ௪

வார்த்தை,வசனம், வசித்தல்,பாசுரம்,
சேர்த்தநான்கும் வாசகஞ்செப்பும்.

பல்கால்விளம்புதலின்பெயர்: க

மீதுரை,பல்கால் விளம்புதலாகும்.

சத்தியத்தின்பெயர்: எ

ஆணை,விரதம், வட்டித்தல்,சூள்,
பிரமாணம்,வஞ்சினம், சபதம்,சத்தியம்.

**மெய்யின்பெயர் : கஉ**

வாய்மை,சாதம், சரதம்,உண்மை,வாய்,
ஆணையும்,திடமும், மெய்யென வறைவர்.
சத்தியம்,மன்றம், நிலைமை,மேவளாண்மை,
நிச்சயம்,என்பவும் மெய்யெனநிகழும்.

**பொய்யின்பெயர் : கரு**

மடி,வஞ்சம்,மாயம், அநுசிதம்,படிறு,
சடம்,வக்கிரம்,விகிர்தம், நிசிதம்,பொய்யே;
மிச்சை,வலக்காரம், தள்ளல்,வழுது,
பெட்டு,சாதனை, பொய்யின்கூற்றே.

**குறளையின்பெயர் : உ**

குஞ்சம்,பிசுனம், குறளையாகும்.

**புறங்கூறலின்பெயர் : க**

கொடுவாய்,என்பது புறங்கூறலாகும்.

**வெறும்புறங்கூறலின்பெயர் : உ**

கொண்டியம்,தொடுப்பு, வெறும்புறங்கூறல்.

**ஆசீல்வாழ்த்தின்பெயர் : ரு**

ஆசிடை,என்ப தாசில்வாழ்த்தே.
பல்லாண்டு,ஆசிகை, வாரம்,சோபனம்,
சொல்லியநான்குமவ் வாழ்த்தினைச் செப்பும்.

**திசைச்சொல்லின்பெயர் : க**

தேசிகம்,திசைச்சொல்.

**துதித்தலின்பெயர் : எ**

வழுத்தல்,பரவுதல், ஏத்தல்,துதித்தல்,
போற்றல்,பரசுதல், தோத்திரம்,மெச்சல்,
சாற்றியநான்கும் அதன்பாற் சாரும்.

**வாழ்த்தின்பெயர் : உ**

பழிச்சல்,புகழ்தல், வாழ்த்தெனப்படுமே.

**பெருஞ்சொல்லின்பெயர் : க**

பலரறிசொல்லே, பெருஞ்சொல்லென்ப.

**சிறுசொல்லின்பெயர் : க**

சிறுசொல்:பழித்தல்.

**பழிச்சொல்லின்பெயர் : கூ**

அம்பல்,கௌவை, ஏச்சு,அலர்,பழிச்சொல்;
பரிவாதம்,தீச்சொல், பழிச்சொல்லாகும்.

**விடாதுபேசலின்பெயர் : க**

பிதற்றுதல்,விடாது பேசலாகும்.

**சிலரறிந்து தம்முட் புறங்கூறலின்பெயர் : க**

அம்பல்,சிலரறிந்து தம்முட்புறங்கூறல்.

**பலருமறிந்து பழிதூற்றலின்பெயர் : க**

அலரே,பலரு மறிந்தலர்தூற்றல்.

**இகழ்ச்சிச்சொல்லின்பெயர் : ரு**

ஏயே,சீச்சீ, என்னல்,இளி,எள்ளனம்,
ஆயஐந்தும் இகழ்ச்சியினாகும்.

**அதட்டலின்பெயர் : ங**

அதிர்த்திடல்,தெளித்தல், உரப்பல்,அதட்டல்.

**மறைத்துமொழியுஞ்சொல்லின்பெயர் : உ**

இடக்கர்,என்பது மறைத்துமொழிகிளவி.
மற்றுங்கூதனம், மறைத்துரைக்குஞ்சொல்.

**புகழின்பெயர் : ௬**

கீர்த்தி, மேம்பாடு, மீக்கூற்று, ஒளி, இசை,
சீர்த்தி, என்றிவை புகழெனச் செப்பினர்.

**ஏற்றமொழியின்பெயர் : ௫**

தோற்றமும், சொன்மாலையும், ஏற்றமொழியாகும்,
மெய்ப்பு, சுலோகம், சீர், ஏற்றமொழி யென்ப.

**ஏற்றத்தின்பெயர் : க**

இயாதம், என்கிளவி ஏற்றங்கிளக்கும்.

**மிகுபுகழின்பெயர் : உ**

சீர்த்தியும், கீர்த்தியும், மிகுபுகழாகும்.

**மேம்பாட்டின்பெயர் : க**

ஊற்றம், மேம்பாட்டின் பெயராகும்மே.

**தேற்றத்தின்பெயர் : ௩**

ஓர்ப்பு, கடைப்பிடி, குறிக்கோள், தேற்றமென்
றுர்த்தபுலவர் அறிந்துரைத்தனரே.

**தேற்றமொழியின்பெயர் : ௩**

மற்று, என்கிளவியும் மன்ற, என்கிளவியும்,
தெற்று, என்கிளவியும் தேற்றமாகும்.

**உறுதிக்கட்டுரையின்பெயர் : உ**

கழறலும், இடித்தலும் உறுதிக்கட்டுரை.

**நிரம்பாமென்சொல்லின்பெயர் : எ**

நிழற்றலும், மிழற்றலும், நிரம்பாமென்சொல்.
மழலை, கொஞ்சல், குதலை, உல்லாபம்,
மிழலை, எனவும் விளம்புமதற்கே.

**புனருத்தியின்பெயர் : க**

கூறியதுகூறல், புனருத்திக்கூற்றே.

சூளுறவின்பெயர் : ௩
சூளே,வஞ்சினம், சபதம்,சூளுறவே.

பேசாவென்பதின்பெயர் : க
வாளா,என்கிளவி பேசாவென்றாகும்.

நன்நிமித்தத்தின்பெயர் : உ
விரிச்சியும்,வாய்ப்புளும், நற்சொனிமித்தம்.

அழைத்தலின்பெயர் : ரு
கூவலும்,விளித்தலும், உளைத்தலும்,கரைதலும்,
வாவெனலும்,அழைத்தல் மாற்றமாகும்.

கமையிலாதழைத்தலின்பெயர் : அ
கத்தல்,கூப்பிடல், கதறல்,அலறல்,
ஒத்தநான்கும் கமையிலாதழைத்தல்.
இகுத்தல்,கேதல், ஆகருடணை,
அகவல்,நான்குமவ் வழைத்தலாகும்.

போரவழைத்தலின்பெயர் : க
அறைகூவல்,பொரவழைத்தல்.

கீழறுத்தலின்பெயர் : க
அறைபோதல்,கீழறுத்தல்.

முதுசொல்லின்பெயர் : க
மொழிமை,முதுசொல்.

காரணச்சொல்லின்பெயர் : க
கதை,காரணச்சொல்.

உபசாரச்சொல்லின்பெயர் : ௩
முகமனும்,நன்னயக் கிளவியும்,உபசாரம்.
சம்மானமும்,உப சாரச்சொல்லே.

**நயச்சொல்லின்பெயர் : உ**

அசதி,நகை,நயக் கிளவியாகும்.

**வினவலின்பெயர் : க**

வினவல்:கடாவல்.

**வினவற்கெதிர்மொழியின்பெயர் : க**

விடை,அதற்கெதிர்மொழி.

**வினவும்விடையுங்கூடியபொருளின்பெயர் : க**

சல்லாபம்,வினவிடை தழுவும்பொருளே.

**பொருளின்மையின்பெயர் : க**

அனர்த்தம்,பொருளின்மை ஆகுமென்ப.

**நெடுமொழியின்பெயர் : க**

நெடுமொழி:தன்மேம் பாடுதாணிகழ்த்தல்.

**அசைச்சொல்லின்பெயர் : ௩**

அன்று,என்கிளவியும் இன்று,என்கிளவியும்,
ஆம்,என்கிளவியும் ஆகுமசைச்சொல்.

**கேட்பிக்குமுரை யசைச்சொல்லின்பெயர் : க**

அம்ம,கேட்பிக்கும் உரையசைச்சொல்லே.

**உரையசைச்சொல்லின்பெயர் : க**

ஆங்கு,அவ்வுரையசைச் சொல்லெனலாகும்.

**முன்னிலையசைச்சொல்லின்பெயர் : கூ**

மியா,இக,மோ,மதி, இகும்,சின்,என்னும்
ஆவயினாறும் முன்னிலையசைச்சொல்.

**அசைநிலைச்சொல்லின்பெயர் : எ**

யா,கா,பிற,பிறக்கு,அரோ, போ,மாது,எனவருஉம்,
ஆயேழ்சொல்லும் அசைநிலைக்கிளவி.

**இசைநிறை யசைநிலையின்பெயர் : ௩**

ஏயும்,குரையும், இசைநிறை யசைநிலை.
ஒப்பில்போலியும், அப்பொருட் டாகும்.

**உடனிகழ்விடைச்சொல்லின்பெயர் : ௧**

ஒடு,என்கிளவி உடனிகழ்வாகும்.

**சாரியைமொழியின்பெயர் : ௯**

இன்னே,வற்றே, அற்றே,அம்மே,
ஒன்னே,ஆனே, அக்கே,இக்கே,
அன்,என்கிளவி உளப்படப்பிறவும்
அன்னவென்ப சாரியைமொழியே.

**இடைச்சொல்லின்பெயர் : ௨௩**

அம்,ஆம்,எம்,ஏம், தம்,நம்,நும்,ஏ,
உம்மே,அன்,ஆன், உறை,கெழு,ஞான்றே,
அல்,ஆல்,அன்றே, எனவே,மன்னே,
தில்லை,வான்,பாக்கு, தெய்யவும்,இடைச்சொல்.

**எழுத்தின்சாரியையின்பெயர் : ௩**

காரமும்,கரமும், கான்,ஒடுசிவணி,
நேரத்தோன்றும் எழுத்தின்சாரியை.

**வேற்றுமையின்பெயர் : ௬**

ஐ,ஒடு,கு,இன், அது,கண்,என்னும்
அவ்வாறென்ப வேற்றுமையுருபே.

**சுட்டின்பெயர் : ௩**

அ,இ,உ,இம் மூன்றுஞ்சுட்டே.

**வினாவின்பெயர் : ௩**

ஆ,ஏ,ஓ,இம் மூன்றும்வினா.

ஐயுற்றசொல்லின்பெயர்: ௪
யாதும்,எவனும், கொல்லும்,என்னையும்,
ஆகுமென்ப ஐயுற்றகிளவி.

இடத்தினையுற்ற சொல்லின்பெயர்: உ
யாண்டையும்,யாங்கும், இடத்தினையுற்றசொல்.

கல்வியின்பெயர்: ௧௦
உறுதியும்,சால்பும், ஓதியும்,அறிவும்,
கலையும்,கேள்வியும், கல்வியாகும்.
வித்தை,சாலம், விஞ்சை,ஊதியம்,
மற்றிந்நான்கும் கல்வியினமம்.

கற்றலின்பெயர்: ௩
நவிலல்,கெழுமல், பயிலலும்,கற்றல்.

படித்தலின்பெயர்: ௬
பாடல்,வாசித்தல், பயிலல்,கற்றல்,
ஓதல்,அத்தி யயனமும்,படித்தல்.

எழுதாக்கேள்வியின்பெயர்: ௩
சுருதி,மறை,சாகை, எழுதாக்கேள்வி.

வேதநூலின்பெயர்: ௪
ஆதிநூல்,என்பது வேதநூற்பெயரே.
இருக்கு,ஓத்து,ஆரணம், வேதமென்ப.

வேதநூலி னிருவகைப்பொருளின்பெயர்: உ
ஞானபாகையும், கருமபாகையும்,
ஆயிரு பாற்பொருள் வேதநூற்கே.

வேதத்தின்ஞானபாகையின்பெயர்: ௧
ஆரணம்,வேதத்தின் ஞானபாகை.

**உபநிடதத்தின்பெயர் : க**

உபநிடதம்,வேதத்தின் உட்பொருணுட்பம்.

**வைதீகத்தின்பெயர் : க**

வைதீகம்,வேத மொழிமார்க்கமாகும்.

**முதல் வேதத்தின்பெயர் : உ**

இருக்கு,முதல்வேதம்: பௌடிகம்,எனப்படும்.

**இரண்டாம் வேதத்தின்பெயர் : க**

இரண்டாம்வேதம்: தைத்திரியமென்ப.

**மூன்றும் வேதத்தின்பெயர் : உ**

மூன்றுவது:சாமம், கீத,நடைசாரும்.

**நான்காம் வேதத்தின்பெயர் : க**

நான்காம்வேதம்: அதர்வணம்,என்ப.

**பனுவலின்பெயர் : உ**

அதிகாரம்,ஆரிடம், பனுவலாகும்.

**நூலின்பெயர் : எ**

பிடகம்,தந்திரம், நூலின்பெயரே.
ஆகமம்,பனுவல், ஆரிடம்,சமயம்,
சூத்திரம்,ஐந்தும் நூலினைத் துலக்கும்.

**நூன்முடியின்பெயர் : சா**

படலம்,சருக்கம், பரிச்சேதம்,காண்டம்,
இலம்பகம்,அத்தியாயம், எய்துநூன் முடிபே.

**பாயிரத்தின்பெயர் : ரு**

பாயிரம்:நூன்முகம், புறவுரை,எனப்படும்.
பதிகம்,புனைந்துரை, தந்துரையும்,அதுவே.

**முதுரையின்பெயர் : ௬**

மூதுரை:பழமொழி, முதுமையும்,எனப்படும்.
மொழிமை,முன்சொல், முதுசொல்,பழஞ்சொல்,
மொழிந்தநான்குமம் மூதுரையென்ப

**பாடத்தின்பெயர் : ௧**

ஓதன்மையாடல், பாடமாகும்.

**நூற்பாவகவலென்னும்பெயர் :**

நூற்பாவகவல்: நுணங்கநாடில்
சூத்திரங்குறித்த யாப்பிற்றாகி
அடிவரையின்றி விழுமிதி னடக்கும்.

**ஒத்தென்னும்பெயர் :**

நேரினமணியை நிரல்படவைத்தாங்
கோரினப்பொருளை ஒருவழிவைப்ப
தோத்தெனமொழிப உயர்மொழிப்புலவர்.

**படலமென்னும்பெயர் :**

ஒருநெறியன்றி விரவியபொருளால்
பொதுமொழிதொடரினது படலமாகும்.

**வேற்றிசைப்பாவென்னும்பெயர் :**

சருக்கமுடிவினும் இலம்பகமுடிவினும்
விருத்தநடையது வேற்றிசைப்பாவே.

**உரைப்பொருளின்பெயர் : ௨**

விரித்துரை,மெய்யுரை, உரைப்பொருளாகும்.

**பொழிப்பென்னும்பெயர் :**

பொழிப்பெனப்படுவது பொருந்தியபொருளை
பிண்டமாகக் கொண்டுரைப் பதுவே.

**பதிகமென்னும்பெயர்:**

பதிகக்கிளவி பலவகைப்பொருளைத்
தொகுதியாகச் சொல்லுதலாகும்.

**இலக்கியத்தின்பெயர்: ௫**

இலக்கியம்:உதாரணம், எடுத்துக்காட்டல்,
இதிகாசமுமே, இலக்கியமாகும்.

**அரும்பொருளின்பெயர்: உ**

ஞாபகமும்,பிசியும், அரும்பொரு ளாடையே.

**பாவின்பெயர்: ௬**

தூக்கும்,யாப்பும், செய்யுளும்,கவியும்,
பாட்டும்,கவிதையும், பாவெனப்படுமே.

**வெண்பாவின்பெயர்: க**

முதற்பா,வெண்பா.

**கலிப்பாவின்பெயர்: க**

முரட்கை,கலிப்பா.

**ஆசிரியப்பாவின்பெயர்: உ**

அகவலும்,தொகையும், ஆசிரியப்பாவே.

**வண்ணகத்தின்பெயர்: உ**

அராகம்,முடுகியல், வண்ணகமாகும்.

**குளகச்செய்யுளென்னும்பெயர்:**

குற்றெழுத்துத் தொடரினது குளகச்செய்யுள்.

**சந்தப்பாட்டென்னும்பெயர்:**

இருபதின்மேலும் இருமூன்றெழுத்துநான்
கடியும்வருவது சந்தப்பாட்டே.

**தாண்டகமென்னும்பெயர் :**

*மற்றதன்மிகுதிச் சொற்பெயர்தாண்டகம்.*

**கணக்கின்பெயர் : உ**

*எழுத்தும்,எண்ணும் கணக்கெனப் படுமே.*

**எண்ணின்பெயர் : ௩**

*எண்ணே:கரணம், கணிதம்,அலகே.*

**எழுத்தாவன :**

*பெயரெழுத்து,முடிவெழுத்து, வடிவெழுத்து,*
*தன்மைஎழுத்து,எனவெழுத்தின் பெயரியம்பினரே.*

**ஒற்றெழுத்தின்பெயர் : ௩**

*விராமமும்,புள்ளியும், மெய்யும்,ஒற்றெழுத்தே.*

**ஆய்தத்தின்பெயர் : உ**

*தனிநிலை,புள்ளி, ஆய்தஎழுத்தே.*

**உயர்மொழிக்காஞ்சியென்னும்பெயர் :**

*நல்லவருறையுலகம் எய்தப்புலவர்*
*ஒழுக்கங்கொளுத்துமுறை உயர்மொழிக்காஞ்சி.*

**முதுமொழிக்காஞ்சியென்னும்பெயர் :**

*கழிந்தோரனை ஒழிந்தோர்க்குக் காட்டிய*
*முறைமையாகும் முதுமொழிக்காஞ்சி.*

**பெரியற்காஞ்சியென்னும்பெயர் :**

*கேட்டியல்புரைத்தது பெரியற்காஞ்சி.*

**பொருண்மொழிக்காஞ்சியென்னும்பெயர் :**

*அருண்மொழி மெய்ப்பொருள்*
*பொருண்மொழிக் காஞ்சி.*

**முதுபாலையென்னும்பெயர் :**

*நனிமிகுசுரத்திடைக் கணவனையிழந்து*
*தனிமகள்புலம்பல் முதுபாலையாகும்.*

**குறுங்கலியென்னும்பெயர் :**

நன்னுதற் றுறந்தவற் குற்றிசைப்புழியவண்
முன்னின் றுரைத்தல் குறுங்கலியாகும்.

**பாசறைமுல்லையென்னும்பெயர் :**

பாசறைமுல்லைத் தலைவன்பாசறைக்கண்
மாதரையுள்ளும் மரபிற்றாகும்.

**இல்லாண்முல்லையென்னும்பெயர் :**

இல்லாண்முல்லை பாசறைத்தலைவனை
நல்லாணினையும் நலத்ததாகும்

**வள்ளைப்பாட்டென்னும்பெயர் :**

ஊழ்முறையுலக்கை ஓச்சிவாழிய
தகுமனைக்கிழவர் தம்வளங்கூறி
மகளிர்பாடுவது வள்ளைப்பாட்டே.

**இசைப்பாட்டின்பெயர் : கக**

பாணி,வரி,பண்,இசை, கானம்,கொளையே,
பாணே,கீதம், கந்தருவம்,கேயம்,
காமரம்,என்றிவை இசைப்பாட்டாகும்.

**ஏனையென்னும்பெயர் :**

ஏனையென்பதோர் இசைவிகற்பமாகும்.

**வல்லிசையின்பெயர் : உ**

உச்சம்,தாரம், ஒங்கும்வல்லிசை.

**மந்தவிசையின்பெயர் : க**

காகுளி,மந்தவிசை.

**இன்னிசையின்பெயர் : க**

இராகம்,இன்னிசை.

**சமனிசையின்பெயர் : உ**

மந்தம்,மத்திமம், வழங்குஞ்சமனிசை.

**பல்லியந்தழுவுபாடலின்பெயர் : க**

சங்கீதம்,பல்லியம் தழுவுபாடல்.

**நரம்பினோசையின்பெயர் : உ**

எழாலே,தந்திரி, நரம்பினோசை.

**பண்ணென்னும்பெயர் : க**

நிறைநரம்பிற்றே, பண்ணெனலாகும்.

**திறமென்னும்பெயர் : க**

குறைநரம்பிற்றே, திறமெனப்படுமே.

**நால்வகையாழாவன : ச**

பேரியாழ்,சகோடயாழ், மருதயாழ்,செங்கோட்டியாழ்,எனுநான்கும் நால்வகையாழ்ப்பெயர்.

**நாற்பெரும்பண்ணுவன : ச**

யாமயாழ்ப்பெயர் குறிஞ்சியாழும்,
செவ்வழியாழ்ப்பெயர் முல்லையாழும்,
பாலையாழும் மருதயாழுமென,
நால்வகையாழும் நாற்பெரும்பண்ணே.

**நெய்தல்யாழின்பெயர் : க**

திறனில்யாழே நெய்தல்யாழாகும்.

**குறிஞ்சியாழ்த்திறனின்பெயர் : அ**

நைவளம்,காந்தாரம், மெய்ப்படுமலையம்,
பஞ்சுரம்,மருள்,அயிர்ப்பு, ஆற்று,செந்திறம்,
என்றிவையெட்டும் குறிஞ்சியாழ்த்திறனே.

**முல்லையாழ்த்திறனின்பெயர் : ௪**

நேர்திறம்,பெயர்திறம், யாமையாழ்,சாதாரி,
என்றிவைநான்கும் முல்லையாழ்த்திறனே.

**பாலையாழ்த்திறனின்பெயர் : ௧உ**

அராகம்,நேர்திறம், உறுப்பு,குறுங்கலி,
ஆசான்,ஐந்தும் பாலையாழ்த்திறனே.
படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை,
செம்பாலை,விளரிப் பாலை,கொடிப்பாலை,
மேற்செம்பாலை, அரும்பாலை,என்றிவை
ஏழும்பாலை யாழ்த்திறனென்ப.

**மருதயாழ்த்திறனின்பெயர் : ௪**

நவிர்,படு,குறிஞ்சி, பியந்தை,இந்நான்கும்,
மருதயாழின் திறனாகும்மே.

**நெய்தல்யாழ்த்திறனின்பெயர் : உ**

திறனில்யாழ்,விளரி, நெய்தனிலஞ் சிவணும்.

**பாடலாடற் றுறைப்பாட்டிற்கேற்பன :**

செந்துறை,வெண்டுறை, பாடற்கேற்பன.
அம்மென்பாட்டே ஆடற்கேற்பன.

**அகமார்க்கமென்னும்பெயர் :**

அருமையிற்பாடல் அகமார்க்கமாகும்.

**ஏழிசையின்பெயர் : எ**

குரலே,துத்தம், கைக்கிளை,உழையே,
இளியே,விளரி, தாரம்,என்றிவை
எழுவகையிசைக்கும் எய்தும்பெயரே.

**இவற்றினேசையின்பெயர் : கச**

சங்கு,குயில்,மயில், யானை,புரவி,
அன்னம்,காடை, அவற்றினேசை.
வண்டு,கிள்ளை, வாசி,மதயானை,
தவளை,தேனு,ஆடு, ஏழிசையோசை.

**இவற்றினெழுத்தின்பெயர் : கசு**

சவ்வும்,ரிவ்வும், கவ்வும்,மவ்வும்,
பவ்வும்,தவ்வும், நிவ்வும்,என்றிவை
ஏழுமவற்றின் எழுத்தேயாகும்.
ஆ,ஈ,ஊ,ஏ, ஐ,ஓ,ஔ,எனும்
இவ்வேழெழுத்தும் ஏழிசைக்குரிய.

**இவற்றின்பிறப்பிடத்தின்பெயர் : எ**

மிடறும்,தாலும், அண்ணமும்,சிரமும்,
நெற்றியும்,நெஞ்சும், நாசியும்,முறையே,
குரலாதி யேழிசைக்குப் பிறப்பிடமே.

**இவற்றின்மாத்திரையின்பெயர் :**

இளி,துத்தம்,குரல், ஏற்குநந்நான்கே,
கிளையும்,விளரியும், மும்மூன்று,உழையும்,
தாரமும்,இவ்விரண் டேழிசைமாத்திரை.[1]

**இவற்றின்மணத்தின்பெயர் : எ**

மௌவல்,முல்லை, கடம்பு,வஞ்சி,
நெய்தல்,வீரை, புன்னையும்,இசைமணம்.

**இவற்றிற்கீசரின்பெயர் : எ**

விசுவாமித்திரன், இயமன்,அங்கி,
சசியே,வெய்யோன், கௌதமன்,காசிபன்,
இவ்வேழ்பெயரும் ஏழிசைக்கீசர்.

---

1. அவையாவன :—குரல் - ச. துத்தம் - ச. கைக்கிளை - ௩. உழை - உ. இளி - ச. விளரி - ௩. தாரம் - உ.

**இராகத்தின்பெயர்: எ**

தக்கராகம், துக்கராகம்,
பழந்தக்கராகம், நட்டராகம்,
கின்னராகம், சங்கின்னராகம்,
நிருபதுங்கராகம், என்னவருபவை
இராகப்பெயரென இசைத்தனர்புலவர்.

**கொல்லிவகையின்பெயர்: உ**

சாயவேளர்கொல்லி, சித்திரவேளர்கொல்லி,
இத்திறங்கொல்லி பெயரெனவிசைப்பர்.

**வராடிவகையின்பெயர்: ௩**

ஆரியவராடி, கொல்லிவராடி,
தீபவராடி, என்னுந்திறமும்
ஆகும்வராடிக் கமைத்தபல்பெயரே.

**குறிஞ்சிவகையின்பெயர்: ௪**

சாவகன்குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி,
வியாழக்குறிஞ்சி, அந்தாளிக்குறிஞ்சி,
ஆகுங்குறிஞ்சிக் கடுத்தபல்பெயரே.

**பஞ்சமத்தின்பெயர்: உ**

காந்தாரபஞ்சமம், உருத்திரபஞ்சமம்.

**தக்கேசியின்பெயர்: ௩**

பஞ்சமம்,காம்போதி, பாண்டி,தக்கேசி.

**இந்தளத்தின்பெயர்: க**

இந்தளம்:மருளிந் தளமேயாகும்.

**பண்ணின்பெயர்: உ௯**

இராமக்கிரி,தே சாக்கிரி,கொண்டைக்
கிரி,மருடராமக் கிரி,அந்தாளி

பாடை,நட்ட பாடை,அருமவதி,
செந்துருதி,சீகாமரம், மசிகண்டி,
காந்தாரம்,புறநீர்மை, குறண்டி,கௌசிகம்,
நாட்டை,சாதாரி, சாயரி,குச்சரி,
நளுத்தை,பழம்பஞ்சுரம், பஞ்சுரம்,கவ்வாணம்,
கொல்லிக்கவ்வாணம், காஞ்சிக்கவுடிகம்,
மலகரி,பயிரவி, காம்போதி,என்னப்
பண்ணுந்திறமும் பிறவும்பண்ணே.

ஒலித்தலின் பெயர்: ௩௭

கலித்தல்,சும்மை, கம்பலை,அழுங்கல்,
சிலைத்தல்,துவைத்தல், சிலம்பல்,இரங்கல்,
இமிழ்த்தல்,விம்மல், இரட்டல்,ஏங்கல்,
கனைத்தல்,தழங்கல், கறங்கல்,அரற்றல்,
இசைத்தல்,என்றிவை ஒலித்தலியைக்கும்.
சிரற்றல்,தொனித்தல், தெழித்தல்,குமுறல்,
உரற்றல்,உளைத்தல், உரைத்தல்,ஏங்கல்,
இரைத்தல்,உலம்பல், இடித்தல்,முழக்கல்,
குரைத்தல்,தெவிட்டல், குளிறல்,இயம்பல்,
சிலும்பல்,அலம்பல், சிதைத்தல்,புலம்பல்,
இங்கிந்நாலைந் தொலித்தலுக்கேற்கும்.

ஒலியின் பெயர்: உஉ

ஓதை,நாதம், கம்பலை,ஓலே,
ஆகுலம்,புலம்பல், கோடணை,அரவம்,
ஓசை,கர்ச்சனை, ஒலியென்கிளவி.
சுருதி,துழனி, தொனி,ஆரவாரம்,
இரை,உரை,சும்மை, இசை,களன்,வகுணி,
பாட்டு,இடி,ஆறிரண் டொலியினைப்பகரும்.

**சிலையொலியின்பெயர் : ௧**

மருமராஞ்சம், வழங்குஞ்சிலையொலி.

**உள்ளோசையின்பெயர் : ௬**

முரல்வும்,நரல்வும், தெளிரும்,ஞெளிரும்,
உழைவும்,நுணுக்கமும், உள்ளோசையாகும்.

**எழுத்திலாவோசையின்பெயர் : ௧௦**

பிளிறலும்,குளிரலும், பிரற்றலும்,சிரற்றலும்,
மருளலும்,பயிறலும், குரைத்தலும்,கனைத்தலும்,
முழைத்தலும்,அகவலும், எழுத்திலாவோசை.

**ஆரவாரத்தின்பெயர் : உ௧**

அதிர்ச்சி,அமுங்கல், ஞெள்ளல்,உரற்றல்,
குரைத்தல்,தழங்கல், பிளிறல்,துவைத்தல்,
கலித்தல்,கரைதல், ஓதை,பாரை,
தெளித்தல்,புலம்பல், பூசல்,தமரம்,
கனைத்தல்,சிள்ளெனல், ஒலி,கோலாகலம்,
அனைத்துந் திமிலமொ(டு) ஆரவாரம்.

**ஒன்றலாப்பேரொலியின்பெயர் : ௧௨**

தமரம்,பூசல், ஆர்ப்பு,கர்ச்சனை,
குமுறல்,உலம்பல், கோட்டணை,கோலா
கலமே,தெழித்தல், கலகம்,ஆகுலமோ,
டுறுதல்,மூந்நான் கொன்றலாப்பேரொலி.

**அநுகரணவோசையின்பெயர் : ௧௪**

இம்மெனல்,கல்லெனல், இழுமெனல்,வல்லெனல்,
பொம்மெனல்,ஒல்லெனல், பொள்ளெனல்,
ஞெள்ளெனல்,அன்னவநுகரண ஓசையாகும்.
கொம்மெனல்,விட்டெலெனல், நெரேலெனல்,
மூகேரெனல், அம்மெனல்,
சரேலெனல், அநுகரணவோசை.

உபயவோசையின்பெயர் : கo

படபடெனல், களகளெனல், பதபதெனல்,
கொளகொளெனல், மொடுமொடெனல்,
திடுதிடெனல், மொகமொகெனல், கலகலெனல்,
நெடநெடெனல், கடகடெனல், நிறையுபயவோசை.

அரக்கரைப் பொருத முரட்போர் வில்லும்
பாரதம் பொருத பேரிசைச் சிலையும்
தாருகற் கடிந்த வீரத் தயிலும்
பாடிய புலவன் பதியம்பற் சேந்தன்
பயில்வுற்ற திவாகரத்துப்

பத்தாவது

ஒலிபற்றிய பெயர்த்தொகுதி

முற்றிற்று.

## ௧௧. ஒருசொற்பல்பொருட் பெயர்த்தொகுதி

### ஆதியிற்பொருள்

அங்கதமென்னும்பெயர் : ௨

அங்கதம்:தோளணி, அரவும்,ஆகும்.

அசைதலென்னும்பெயர் : ௨

அசைதல்:ஆடலும், தங்கலும்,உரித்தே.

அடுதலென்னும்பெயர் : ௨

அடுதல்:சமைத்தலும், கோறலும்,ஆகும்.

அணியென்னும்பெயர் : ௨

அணியே:பூணும், அழகும்,ஆகும்.

அண்டரென்னும்பெயர் : ௨

அண்டர்:தேவரும், ஆயரும்,ஆகும்,

அண்ணலென்னும்பெயர் : ௩

அண்ணல்:பெருமையும், தலைவனும்,அணுகலும்.

அந்தமென்னும்பெயர் : ௨

அந்தம்:ஈறும், அழகும்,ஆகும்.

அந்திலென்னும்பெயர் : ௨

அந்தில்,அவ்விடமும், அசைநிலைக்கிளவியும்.

அமர்தலென்னும்பெயர் : ௨

அமர்தல்:மிகுதியும், பொலிவும்,ஆகும்.

அம்பரமென்னும்பெயர் : ௩

அம்பரம்:கூறையும், கடலும்,ஆகாயமும்.

**அயிலேலென்னும்பெயர் : உ**

அயிலே:வேலும், கூர்மையும்,ஆகும்.

**அரணமென்னும்பெயர் : உ**

அரணம்:மதிலும், கவசமும்,ஆகும்.

**அரலையென்னும்பெயர் : உ**

அரலை:கழலையோ(டு), அருங்கனிக்காழே.

**அரிலேலென்னும்பெயர் : ௩**

அரிலே:பிணக்கும், சிறுதூறும்,குற்றமும்.

**அருகலென்னும்பெயர் : உ**

அருகல்:சுருங்கலும், காதலும்,ஆகும்.

**அருணமென்னும்பெயர் : உ**

அருணம்:சிவப்பும், ஆடும்,ஆகும்.

**அலரியென்னும்பெயர் : உ**

அலரி:பூமரனும், அருக்கனும்,ஆகும்.

**அழுங்கலென்னும்பெயர் : உ**

அழுங்கல்:இரக்கமும், கேடும்,ஆகும்.

**அள்ளேலென்னும்பெயர் : உ**

அள்ளே:கூர்மையும், செறிவும்,ஆகும்.

**அறலேலென்னும்பெயர் : ச**

அறலே:அறுதலும், நீரும்,நீர்த்திரையும்,
திரையலைத்தறுநுண் கருமணலும்,ஆகும்.

**அற்றமென்னும்பெயர் : உ**

அற்றம்:மறைபொருளும், சோர்வும்,ஆகும்.

ஆகமென்னும்பெயர் : உ
ஆகம்:மார்பும், உடலும்,ஆகும்.

ஆசென்னும்பெயர் : ச
ஆசு:சிறுமையும், குற்றமும்,விரைவும்,
பேசின்மெய்புகு கருவியும்,பெறுமே.

ஆயமென்னும்பெயர் : உ
ஆயம்:கூட்டம், சூதுக்கருவி.

ஆய்தலென்னும்பெயர் : உ
ஆய்தல்:நுணுக்கமும், தெரிதலும்,ஆகும்.

ஆரலென்னும்பெயர் : உ
ஆரல்:செவ்வாய்க்கோளும், கார்த்திகைநாளும்.

ஆரேன்னும்பெயர் : ரு
ஆரே:கூர்மையும், ஆத்தியும்,ஆகும்.
தேராழியகத்தில் செறியுறுப்பும்,ஆகும்.

ஆர்தலென்னும்பெயர் : உ
ஆர்தல்:நிறைதலும், உண்டலும்,ஆகும்.

ஆலுதலென்னும்பெயர் : உ
ஆலுதல்:ஆடலும், ஒலித்தலும்,ஆகும்.

இருத்தலென்னும்பெயர் : உ
இருத்தல்:செருத்தலும், வீழ்த்தலும்,ஆகும்.

இதையென்னும்பெயர் : உ
இதையே:மரக்கலப் பாய்,புதுப்புனமே.

இயலென்னும்பெயர் : உ
இயலே:சாயல், நடை,என்றாகும்.

**இரங்கலென்னும்பெயர் : ௨**

இரங்கல்:அரவமும், அழுங்கலும்,இசைக்கும்.

**இரலையென்னும்பெயர் : ௪**

இரலைக்கிளவி: தலைநாட்பெயரும்,
ஊதுகொம்பும், புல்வாயும்,கலையும்.

**இழுமெனலென்னும்பெயர் : ௨**

இழுமெனல்:ஓசையும், இனிமையும்,ஆகும்.

**இளமையென்னும்பெயர் : ௨**

இளமை:இளமைத் தன்மையும்,மத்தமும்.

**இறுத்தலென்னும்பெயர் : ௨**

இறுத்தல்:தங்கலும், சொல்லலும்,ஆகும்.

**இறையென்னும்பெயர் : ௫**

இறையே:கடனும், இல்லினிறப்பும்,
சிறுமையும்,தங்கலும், உயர்ந்தோரும்,சிறக்கும்.

**உடுவென்னும்பெயர் : ௨**

உடுவே:நாண்மீன், பகழியும்,ஆகும்.

**உணர்தலென்னும்பெயர் : ௨**

உணர்தல்:கருதல், தெளிவும்,ஆகும்.

**உந்தியென்னும்பெயர் : ௪**

உந்தி:கொப்பூழும், தேருருளும்,யாறும்,
வந்துழியாழ்க்கண்ணதோர் உறுப்பும்,வரையார்.

**உம்பரென்னும்பெயர் : ௨**

உம்பர்:மேலிடமும், அமரர்க்கும்,உரித்தே.

**உருத்தலென்னும்பெயர் : ௨**

உருத்தல்:தோன்றல், வெகுட்சியும்,ஆகும்.

**உழையென்னும்பெயர்: ௩**

உழையே:மானும், யாழினோர்நரம்பும்,
அருகிலிடனும், அறைதற்குமுரித்தே.

**உறழ்வென்னும்பெயர்: ௪**

உறழ்வே:இடையீடும், உணர்வும்,ஒத்தலும்,
செறிவும்,என்றிவை தெரிதற்குமுரித்தே.

**ஊறென்னும்பெயர்: ௨**

ஊறு:இடையூறும், உற்றிடுகொலையும்.

**எஃகென்னும்பெயர்: ௨**

எஃகே:வேலொடு, கூர்மையும்,இசைக்கும்.

**எதிரியென்னும்பெயர்:**

எதிரி:இருபெயர்ப் படைக்குமெய்தும்.

**எல்லென்னும்பெயர்: ௩**

எல்லே:ஒளியும், இரவியும்,பொழுதும்.

**எல்லையென்னும்பெயர்: ௨**

எல்லை:பகலவனும், அளவையும்,இசைக்கும்.

**எள்ளலென்னும்பெயர்: ௨**

எள்ளல்:நகையும், இகழ்ச்சியும்,ஆகும்.

**எற்றுதலென்னும்பெயர்: ௨**

எற்றுதல்:புடைத்தலும், எறிதலும்,ஆகும்.

**எற்றெனலென்னும்பெயர்: ௨**

எற்றெனல்:எறியெனல், என்னெனலும்,ஆகும்.

**ஏணியென்னும்பெயர்: ௨**

ஏணி:மான்கன்றும், எல்லையும்,ஆகும்.

**ஏணையென்னும்பெயர் : உ**

ஏணை:வலியும், நிலையுடைமையும்,ஆகும்.

**ஏவலென்னும்பெயர் : உ**

ஏவல்:வியங்கோளும், ஆணையும்,ஆகும்.

**ஏற்றலென்னும்பெயர் : உ**

ஏற்றல்:கோடலும், எதிர்ந்துபொருதலும்.

**ஏனையென்னும்பெயர் : உ**

ஏனை:மீன்விகற்பமும், ஒழிவும்,ஆகும்.

**கடியென்னும்பெயர் : கஉ**

கடியென்கிளவி: காப்பே,கூர்மை,
விரையே,விளக்கம், அச்சம்,சிறப்பே,
வரைவே,மிகுதி, புதுமை,தோற்றம்,
மெய்படத்தோன்றும் பொருட்டாகும்மே.
ஐயமும்,கரிப்பும், ஆகலுமுரித்தே.

**கடிகையென்னும்பெயர் : ௩**

கடிகை:பேதம், சமயம்,நாழிகை.

**கடுவென்னும்பெயர் : உ**

கடுவே:கடுமரம், விடமும்,ஆகும்.

**கணையென்னும்பெயர் : உ**

கணையே:திரட்சியும், பகழியும்,ஆகும்.

**கண்டமென்னும்பெயர் : ௬**

கண்டம்:மெய்புகு கருவி,கழுத்து,
துண்டம்,திரை,வாள், தேசம்,ஆகும்.

**கதலியென்னும்பெயர் : உ**

கதலி:வாழையும், துகிற்கொடியும்,ஆகும்.

**கதழ்வென்னும்பெயர்: உ**

கதழ்வு:வேகமும், கறுத்தலும்,காட்டும்.

**கனமென்னும்பெயர்: ரு**

கனமே:வட்டமும், திரட்சியும்,ஆகும்.
*கனமொடு,செறிவும், மேகமும்,ஆகும்.

**கந்தமென்னும்பெயர்: ந**

கந்தம்:புலனே, கிழங்கும்,கருணையும்.

**கந்தரமென்னும்பெயர்: ந**

கந்தரம்:மலைமுழை, கழுத்தும்,ஆகும்.
வந்துழிமேகப் பெயரும்,வரையார்.

**கயமென்னும்பெயர்: உ**

கயமே:ஆழமும், யானைக்கன்றும்.

**கயவென்னும்பெயர்: உ**

கயவே:பெருமையும், மென்மையும்,காட்டும்.

**கரிலென்னும்பெயர்: ந**

கரிலே:கொடுமையும், குற்றமும்,கார்ப்பும்.

**கரைதலென்னும்பெயர்: உ**

கரைதல்:மொழிதலும், கூவலும்,ஆகும்.

**கலித்தலென்னும்பெயர்: உ**

கலித்தல்:எழுச்சியும், ஒலித்தலும்,ஆகும்.

**கலுழியென்னும்பெயர்: உ**

கலுழி:கலங்கனீர், முல்லைநிலக்கான்யாறு.

**கலையென்னும்பெயர்: எ**

கலையே:நூல்,கல்வி, காஞ்சி,ஆடையும்,
முசுவும்,ஆனேறும், காலநுட்பமும்.

---

* பாரத்தைக் குறிக்கும்.

**கவனமென்னும்பெயர் : உ**

கவனம்:கடுப்பும், காடும்,ஆகும்.

**கவலையென்னும்பெயர் : உ**

கவலை: துன்பமும், கவர்வழியும்,ஆகும்.

**கழங்கென்னும்பெயர் : உ**

கழங்கு:ஓராடலும், கொடிக்கழலும்,ஆகும்.

**கழிதல் இறத்தல்-என்னும்பெயர் : ௩**

கழிதலும்இறத்தலும் எனவிருகிளவியும்:
மிகுத்தலும்,கடத்தலும், சாதலும்,விளம்பும்.

**கற்பமென்னும்பெயர் : உ**

கற்பம்:ஊழியும், கமலத்தோன் ஆயுளும்.

**கனலியென்னும்பெயர் : உ**

கனலி:தீபமும், கதிரவனும்,ஆகும்.

**கனவென்னும்பெயர் : உ**

கனவே:மயக்கமும், துயிலும்,ஆகும்.

**காவென்னும்பெயர் : உ**

காவே:காத்தலும், காவும்,ஆகும்.

**காசென்னும்பெயர் : உ**

காசு:மணியும், குற்றமும்,ஆகும்.

**காசையென்னும்பெயர் : உ**

காசை:நாணலும், காயாமரமும்.

**காதையென்னும்பெயர் : உ**

காதை:மொழியும், கதையும்,ஆகும்.

**காயமென்னும்பெயர் : உ**

காயம்:யாக்கையும், கார்ப்பும்,ஆகும்.

**காரென்னும்பெயர் : ச**

காரே:மேகமும், மாரிக்காலமும்,
நீரும்,கருமையும், நிகழ்த்துங்கிளவி.

**காலமென்னும்பெயர் : உ**

காலம்:நாட்கூறும், காலமும்,ஆகும்.

**கானலென்னும்பெயர் : ங**

கானல்:கதிரொளியும், கடற்சார்பின்,மலைச்சார்பின்,
தானெழுந்தநன்மரச் சோலையுந்தழுவும்.

**கானென்னும்பெயர் : உ**

கானே:விரையும், காடும்,ஆகும்.

**குயிறலென்னும்பெயர் : ங**

குயிறல்:கூறலும், செறிதலும்,குடைதலும்.

**குரலென்னும்பெயர் : உ**

குரலே:பயிர்க்கதிரும், யாழினோர்நரம்பும்.

**குரையென்னும்பெயர் : உ**

குரையே:ஒலியும், இடைச்சொல்லும்,ஆகும்.

**குலமென்னும்பெயர் : ங**

குலமே:இல்லமும், குடிமையும்,கூட்டமும்.

**குழலென்னும்பெயர் : உ**

குழலே:மயிரும், துளையும்,கூறும்.

**குழையென்னும்பெயர் : ங**

குழையே:குண்டலம், தளிர்,சேறும்,ஆகும்.

**கூலமென்னும்பெயர் : ௩**

கூலப்பெயர்:பண்டமும், பலபண்டத்தெருவும்,
வார்புனற்கரையும், வந்தழிக்கொளலே.

**கேவலமென்னும்பெயர் : உ**

கேவலம்:தனிமையும், மூத்தியும்,ஆகும்.

**கேள்வியென்னும்பெயர் : உ**

கேள்வி:கல்வியும், செவியும்,கிளக்கும்.

**கொண்டலென்னும்பெயர் : ௩**

கொண்டல்:மேகமும், கூதிர்,கீழ்காற்றும்.

**கொற்றமென்னும்பெயர் : உ**

கொற்றம்:அரசியலும், வெற்றியும்,ஆகும்.

**கோடரமென்னும்பெயர் : ௩**

கோடரக்கிளவி: கொம்பொடு,மரத்தில்
கோடும்,பொதும்பும், கூறுமென்ப.

**கோடென்னும்பெயர் : ௫**

கோடே:சங்கும், ஊதுங்கொம்பும்,
மாவின்மருப்பும், மரத்தின்பணையும்,
நீள்புனற்கரையும், நிகழ்த்துங்கிளவி.

**கோளென்னும்பெயர் : ௩**

கோளே:குணமும், கோட்பாடும்,*கோளும்.

**சிரகமென்னும்பெயர் : உ**

சிரகம்:திவலையும், கரகமும்,ஆகும்.

**சிலம்பென்னும்பெயர் : ௩**

சிலம்பே:மலையும், ஒலியும்,ஆகும்.
பொலஞ்செய்காலணியும், புணர்தற்குமுரித்தே.

---

* தீமை.

**சிறையென்னும்பெயர் : உ**

*சிறையே:காவலும், இறகும்,செப்பும்.*

**சினையென்னும்பெயர் : ங**

*சினையே:கருவும், உறுப்பும்,மரக்கோடும்.*

**சுடிகையென்னும்பெயர் : உ**

*சுடிகை:சுட்டி, மயிர்முடியும்,ஆகும்.*

**சூரென்னும்பெயர் : ங**

*சூர்:தெய்வம்,அச்சம்,நோய், ஆகுமென்ப.*

**சூழியென்னும்பெயர் : உ**

*சூழி:முகபடாம், வாவியும்,சொல்லும்.*

**செயிரென்னும்பெயர் : உ**

*செயிரே:குற்றமும், சினவலும்,ஆகும்.*

**செழுமையென்னும்பெயர் : உ**

*செழுமை:வளனும், கொழுப்பும்,ஆகும்.*

**சேணென்னும்பெயர் : உ**

*சேணே:உயர்வும், நீளமும்,ஆகும்.*

**சேத்தென்னும்பெயர் : உ**

*சேத்தென்கிளவி: கருத்தோடு,ஒப்பே.*

**ஞெள்ளலென்னும்பெயர் : உ**

*ஞெள்ளல்:தெருவே, மேன்மையும்,நிகழ்த்தும்.*

**தடமென்னும்பெயர் : ங**

*தடமே:பெருமை, கோட்டம்,மலையாகும்.*

**தண்ணடையென்னும்பெயர் : உ**

*தண்ணடை:நாடும், ஊரும்,ஆகும்.*

தபுதலென்னும்பெயர்: உ
தபுதல்:கெடுதலும், சாதலும்,ஆகும்.

தரணியென்னும்பெயர்: ௩
தரணி:நிலனும், மலையும்,இரவியும்.

தவவென்னும்பெயர்: உ
தவவென்கிளவி: மிகுதலும்,குறைதலும்.

தளிமமென்னும்பெயர்: உ
தளிமம்:அழகொடு, மெத்தையும்,ஆகும்.

தன்மையென்னும்பெயர்: உ
தன்மை:இயல்பும், தன்மையுடைப்பொருளும்.

தாவென்னும்பெயர்: ௩
தாவே:வலியும், வருத்தமும்,ஆகும்.
தாவென்கிளவி: இடையீடும்,ஆகும்.

தாமமென்னும்பெயர்: உ
தாமம்:ஒளியும், தார்மாலையுமாம்.

தாயமென்னும்பெயர்: உ
தாயம்:உரிமையும், தங்குடித்தமரும்.

தாரமென்னும்பெயர்: ச
தாரம்:அரும்பண்டம், வெள்ளி,அதனொளி,
சேருமேழ்நரம்பில் ஓர்நரம்பும்,செப்பும்.

தாலமென்னும்பெயர்: ச
தாலம்:தரை,பனை, நாவும்,உண்கலனும்.

துணங்கையென்னும்பெயர்: ௩
துணங்கை:ஆடலும், திருநாளும்,விழாவும்.

துன்னலென்னும்பெயர் : உ
துன்னல்:குறுகலும், செறிவும்,சொல்லும்.

தூங்கலென்னும்பெயர் : உ
தூங்கல்,ஆடலும், தாழ்வும்,சொல்லும்.

தேசிகமென்னும்பெயர் : உ
தேசிகம்:திசைச்சொலும், அழகும்,செப்பும்.

தோடென்னும்பெயர் : ௩
தோடே:தொகுதியும், பனையிதழ்போல்பவும்,
பூவினிதழும், புகலுங்கிளவி.

தோலென்னும்பெயர் : ௩
தோலே:யானையும், வனப்பும்,தோற்பலகையும்.

நந்தலென்னும்பெயர் : உ
நந்தல்:கேடும், ஆக்கமும்,ஆகும்.

நவமென்னும்பெயர் : உ
நவமே:புதுமையும், ஒன்பதும்,ஆகும்.

நளியென்னும்பெயர் : ௩
நளியே:பெருமையும், சீதமும்,செறிவும்.

நனவென்னும்பெயர் : ௩
நனவே:உணர்ச்சியும், அகலமும்,ஆகும்;
தெளிவும்,அதனொடு செப்பற்குமுரித்தே.

நனையென்னும்பெயர் : உ
நனை:பூமொட்டிற்கும், கள்ளிற்கும்,நாமம்.

நியமமென்னும்பெயர் : ௩
நியமம்:அங்காடியும், நியதியும்,தெருவும்.

**நிழற்றலென்னும்பெயர் : உ**
நிழற்றல்: நுணுக்கமும், நிழற்செயலும், ஆகும்.

**நீவலென்னும்பெயர் : உ**
நீவலென்பது: தடவலும், துடைத்தலும்.

**நீவியென்னும்பெயர் : உ**
நீவி: ஆடையும், கொய்சகமும், ஆகும்.

**நூலென்னும்பெயர் : உ**
நூலே: எண்ணும், பனுவலும், ஆகும்.

**நூறென்னும்பெயர் : உ**
நூறே: பொடியும், நூறும், ஆகும்.

**நெய்தலென்னும்பெயர் : உ**
நெய்தல்: ஆம்பலும், கடற்சார்நிலனும்.

**நொறிலென்னும்பெயர் : உ**
நொறிலே: அடக்கமும், விரைவும், ஆகும்.

**படரென்னும்பெயர் : ௩**
படரே: கருத்து, நெறியொடு, பரிவே.

**படியென்னும்பெயர் : உ**
படியே: பாரும், பகையும், ஆகும்.

**படிவமென்னும்பெயர் : உ**
படிவம்: விரதமும், வடிவும், ஆகும்.

**படுவென்னும்பெயர் : ௩**
படுவே: படுதலும், நன்மையும், கள்ளும்.

**பட்டிகையென்னும்பெயர் : உ**
பட்டிகை: கச்சும், தெப்பமும், ஆகும்.

**பணையென்னும்பெயர்:** ௬

பணையே:பருத்தலும், பிழைத்தலும்,பழனமும்,
முரசும்,மரக்கோடும், புரவியின்பந்தியும்.

**பதங்கமென்னும்பெயர்:** ௨

பதங்கம்:விட்டிலொடு, பறவையின்பொதுப்பெயர்.

**பதலையென்னும்பெயர்:** ௨

பதலை:தாழியும், பரந்தவாய்ப்பறையும்.

**பதியென்னும்பெயர்:** ௨

பதியே:உறைவிடம், தலைவனும்,ஆகும்.

**பரவையென்னும்பெயர்:** ௨

பரவை:கடலும், பரப்பும்,ஆகும்.

**பரிவென்னும்பெயர்:** ௨

பரிவு:துன்பமும், இன்பமும்,ஆகும்.

**பலியென்னும்பெயர்:** ௨

பலியே:ஐயமும், சோறும்,ஆகும்.

**பள்ளியென்னும்பெயர்:** ௨

பள்ளி:இடனும், துயிலும்,ஆகும்.

**பாங்கென்னும்பெயர்:** ௩

பாங்கு:அழகு,உரிமை, பக்கம்,ஆகும்.

**பாசமென்னும்பெயர்:** ௫

பாசம்:ஊசித் துளையொடு,கயிறே,
ஆசை,பிசாசம்,ஓர் ஆயுதமாகும்.

**பாடலமென்னும்பெயர்:** ௨

பாடலம்:சிவப்பும், பாதிரியும்,ஆகும்.

**பாடியென்னும்பெயர்: ௩**

பாடி:நகரமும், நாடும்,படைவீடும்.

**பாடேன்னும்பெயர்: ௩**

பாடே:பெருமையும், ஒலியும்,படுத்தலும்.

**பிரசமென்னும்பெயர்: ௩**

பிரசம்:தேன்,கள்ளே, தேனீப்பெயரே.

**பிறங்கலென்னும்பெயர்: ௩**

பிறங்கல்:உயர்வு, மலையும்,பெருமையும்.

**பிறழ்தலென்னும்பெயர்: உ**

பிறழ்தல்:ஒளிவிடலும், பெயர்தலும்,ஆகும்.

**புணரியென்னும்பெயர்: உ**

புணரி:கடலும், திரையும்,ஆகும்.

**புண்டரீகமென்னும்பெயர்: உ**

புண்டரீகம்: தாமரை,புலியே.

**புதையென்னும்பெயர்: உ**

புதை:கணைக்கட்டே, புதுமையாகும்.

**புரிதலென்னும்பெயர்: உ**

புரிதல்:விரும்பலும், செய்தலும்,ஆகும்.

**புலம்பென்னும்பெயர்: ௩**

புலம்பே:தனிமையும், நடுக்கமும்,புலம்பலும்.

**பூவென்னும்பெயர்: ௩**

பூவே:அழகும், கூர்மையும்,பொலிவும்.

**பொழிலென்னும்பெயர்: உ**

பொழிலே:சோலையும், உலகமும்,புகலும்.

பொறையென்னும்பெயர் : ௩
பொறையே:சுமத்தலும், பரித்தலும்,பொறுத்தலும்.

போற்றலென்னும்பெயர் : உ
போற்றல்:பாதுகாத்தலும்,புகழ்தலும்.

மகரமென்னும்பெயர் : உ
மகரம்:மீனேறும், தாதும்,ஆகும்.

மஞ்சென்னும்பெயர் : ௩
மஞ்சு:மேகமும், இளமையும்,வனப்பும்.

மதர்வென்னும்பெயர் : உ
மதர்வுஎன்கிளவி:மகிழ்வும்,மிகுதியும்.

மதலையென்னும்பெயர் : ரு
மதலைக்கிளவி: தூணே,மரக்கலம்,
புதல்வன்,கொடுங்கை பாவை போல்வன,
தகவிற்ரூகும் சார்பினைவையும்.

மலர்தலென்னும்பெயர் : ௩
மலர்தல்:தோன்றலும், எதிர்தலும்,விரிதலும்.

மலைதலென்னும்பெயர் : உ
மலைதல்:பொருதலும், மலர்சூடுதலும்.

மறலியென்னும்பெயர் : உ
மறலி:கூற்று, மயக்கமும்,ஆகும்.

மறையென்னும்பெயர் : உ
மறையே:வேதமும், மறைத்துமொழிகிளவியும்.

மற்றென்னும்பெயர் : உ
மற்றென்கிளவி: வினைமாற்று,அசைநிலை.

**மனவென்னும்பெயர் : ௩**

மனவே: அக்குமணி, சங்கு, மணிப்பொது.

**மாவென்னும்பெயர் : ௬**

மாவே: பெருமையுட், கருமையும், சூதமும்,
மேவியநாற்கால் உடையவும், வண்டும்,
பூவுறைதிரு, என ஆறையும் பொருந்தும்.

**மாதரென்னும்பெயர் : ௨**

மாதர்: காதலும், மகளிரும், ஆகும்.

**மாறுதலென்னும்பெயர் : ௨**

மாறுதல்: ஒப்பு, மயக்கமும், ஆகும்.

**முடலையென்னும்பெயர் : ௨**

முடலை: திரட்சியும், முருகும், ஆகும்.

**முரணென்னும்பெயர் : ௨**

முரணே: வலியும், பகையும், ஆகும்.

**முற்றென்னும்பெயர் : ௨**

முற்றே: முழுவதும், வளைத்தலும், மொழியும்.

**முனையென்னும்பெயர் : ௨**

முனையே: நுனியும், பகையும், ஆகும்.

**மூரலென்னும்பெயர் : ௩**

மூரல்: நகை, எயிறும், சோறும், ஆகும்.

**மூரியென்னும்பெயர் : ௨**

மூரி: பெருமையும், ஆனேறும், ஆகும்.

**மூலமென்னும்பெயர் : ௩**

மூலம்: ஓர்நாளும், வேரும், முதலும்.

மெய்யென்னும்பெயர் : ௩
மெய்யே:உடம்பும், உண்மையும்,மெய்யெழுத்தும்.

வசியென்னும்பெயர் : ௩
வசியே:வசியமும், வாளும்,கூர்மையும்.

வடிவென்னும்பெயர் : ௩
வடிவே:மேனியும், உருவும்,அல்குலும்.

வண்ணமென்னும்பெயர் : ௨
வண்ணம்:ஓசையும், வடிவும்,ஆகும்.

வதுவையென்னும்பெயர் : ௨
வதுவை:மன்றலும், மணமும்,ஆகும்.

வனமென்னும்பெயர் : ௩
வனமே:காடும், நீரும்,அழகும்.

வயாவென்னும்பெயர் : ௨
வயாவே:வேட்கைப் பெருக்கமும்,வருத்தமும்.

வரியென்னும்பெயர் : ௩
வரியே:பாடலும், மெழுத்தும்,வண்டும்.

வரைதலென்னும்பெயர் : ௨
வரைதல்:நீக்கலும், கொள்ளலும்,ஆகும்.

வலனென்னும்பெயர் : ௩
வலனே:வென்றியும், வலமும்,மேலிடமும்.

வல்லையென்னும்பெயர் : ௨
வல்லை:விரைவு, மதிலும்,ஆகும்.

வழங்கலென்னும்பெயர் : ௩
வழங்கல்:கொடை,செல்லல், சொல்லலும்,வரையார்.

**வழியென்னும்பெயர் : உ**

*வழியே:இடனொடு, பின்னும்,வரையார்.*

**வள்ளென்னும்பெயர் : ௩**

*வள்ளே:கூர்மையும், வாரும்,வலியும்.*

**வறிதென்னும்பெயர் : உ**

*வறிது:சிறிதாகும், அருகலும்,உரித்தே.*

**வாயிலென்னும்பெயர் : ௩**

*வாயில்:பொறியும், வாயிலும்,தூதும்.*

**வாயென்னும்பெயர் : ௩**

*வாயே:இடனும், மெய்யும்,வாக்கும்.*

**வாரமென்னும்பெயர் : உ**

*வாரக்கிளவி:ஏழ் கிழமையும்,மலைச்சார்பும்.*

**வாழியென்னும்பெயர் : உ**

*வாழி:இடைச்சொல்லும், வாழ்கவெனுஞ்சொல்லும்.*

**வாளென்னும்பெயர் : உ**

*வாளே:ஒளியும், வாட்படையும்,ஆகும்.*

**விடங்கமென்னும்பெயர் : உ**

*விடங்கம்:முகடும், அழகும்,ஆகும்.*

**விண்டென்னும்பெயர் : ௩**

*விண்டு:மாயோனும், வெற்பும்,வேயும்.*

**விம்மலென்னும்பெயர் : உ**

*விம்மல்:ஒலித்தலும், விம்முதலும்,ஆகும்.*

**விரையென்னும்பெயர் : உ**

*விரையென்கிளவி: சாந்தும்,விரையும்.*

**வில்லென்னும்பெயர் : ௩**

*வில்லே:ஒளியும், விற்படையும்,மூலமும்.*

**விளக்கென்னும்பெயர் : ௨**

*விளக்கே:ஒளியும், விளக்கும்,ஆகும்.*

**விறப்பென்னும்பெயர் : ௩**

*விறப்பே:செறிவும், வெருவலும்,பெருக்கமும்.*

**வீசுதலென்னும்பெயர் : ௨**

*வீசுதல்:கொடுத்தலும், எறிதலும்,ஆகும்.*

**வேடியென்னும்பெயர் : ௨**

*வெடியே:வெள்ளிடை, வெருவும்,ஆகும்.*

**வெம்மையென்னும்பெயர் : ௨**

*வெம்மை:வேட்கை, விரைவு,எனவிளம்புவர்.*

**வெறியென்னும்பெயர் : ௨**

*வெறியே:நாற்றமும், வேலனுடலும்.*

**வெறுக்கையென்னும்பெயர் : ௨**

*வெறுக்கை செல்வமும், விழுப்பொருளும்,ஆகும்.*

**வேயென்னும்பெயர் : ௨**

*வேயே:மூங்கிலும், ஒற்றும்,ஆகும்.*

**வேலனென்னும்பெயர் : ௨**

*வேலன்:முருகன், வெறியாட்டாளன்.*

**வேலியென்னும்பெயர் : ௨**

*வேலி:மதிலும், காவலும்,ஆகும்.*

**வேலையென்னும்பெயர் : ௩**

*வேலைதானே: கடலும்,கடற்கரையும்,*
*காலமும்,கூறும் கருவியதாகும்.*

**வேளாண்மையென்னும்பெயர் : உ**

வேளாண்மை:உபகாரம், ஈகையும்,விளம்பும்.

ஆதியிற்பொருள்

முற்றிற்று.

## அந்தத்துப்பொருள்

**அணங்கென்னும்பெயர் : ௬**

தெய்வமும்,தெய்வத் தவமைமாதரும்,
மையலும்,நோயும், வருத்தமும்,கொலையும்,
ஐயமின் றுரைக்கும் அணங்கென்கிளவி.

**அரியென்னும்பெயர் : உ௫**

கண்வரி,கடல்,பொன், கிண்கிணிப்பெய்பரல்,
பொன்,நிறம்,குதிரை, தவளை,குரங்கு,
பகை,வாள்,சயனம், வலி,வண்டு,வெம்புகை,
எனப் பதினைந்தும் அரியெனப் புகல்ப.
சிங்கம்,திருமால், திகிரி,இரவி,
இந்திரன்,காற்றே, யமனே,அங்கி,என்
றங்கண் வடமொழிச் சிதைவின் அரியாகும்.

**அளகமென்னும்பெயர் : ௩**

மாதர்மயிரையும், மாவின்முள்ளையும்,
நீரையும்,அளகம் எனநிகழ்த்துவரே.

**அளக்கரென்னும்பெயர் : ௩**

கடலும்,நிலனும், சேறும்,அளக்கர்.

**அளியென்னும்பெயர் : ௪**

வண்டின்பெயரும், மதுவும்,கொடையும்,
அன்பும்,கூறும் அளியென்கிளவி.

**ஆணையென்னும்பெயர் : ரு**

ஏவல்,மெய்ப்பாட் டிலாஞ்சனை,சூளே,
ஆவயின் விறல்,செயலும், ஆணைக்கிளவி.

**ஆரமென்னும்பெயர் : ரு**

சந்தனம்,மாலை,பூண், ஆத்தி,முத்து,என
வந்தனவைந்தும் ஆரமாகும்.

**ஆற்றலென்னும்பெயர் : ச**

வலியும்,செயலும், வல்லாராற்றலும்,
ஆள்வினையும்,உரைக்கும் ஆற்றற்கிளவி.

**இடியென்னும்பெயர் : ௩**

தகரமும்,சுண்ணமும், தருப்பணப்பிண்டியும்,
இனையவை இடியென இசைத்தல் வேண்டும்.

**இதழென்னும்பெயர் : ௩**

பூவின்றோடும், பனையிதழ்போல்பவும்,
வாயினதரமும், இதழென வைப்பர்.

**இராகமென்னும்பெயர் : ரு**

கீதமும்,நிறமும், செந்நிறக்கெழுவும்,
ஆதரவும்,முடுகியலும், இராக மெனப்படுமே.

**இவர்தலென்னும்பெயர் : ரு**

சேறலும்,எழுச்சியும், செறிவும்,விரும்பலும்,
ஏறலும்,இவர்தற் கிளவிகூறும்.

**இறும்பூதென்னும்பெயர் : ச**

வியப்பு,இராசிவம், சிறுதூறு,மலை,என
நயப்புடை நான்கும் இறும்பூதாகும்.

**உலவையென்னும்பெயர் : ௩**

மரத்தின்கோடும், மருப்பும்,காற்றும்,
உணர்த்துமென்ப உலவைக்கிளவி.

**உறையென்னும்பெயர் : அ**

நீர்முதலாகிய துளியும்,மருந்தும்,
முதலேயைநீக்கி இன்பங்கொடுக்கும்
பொருளும்,கூறை மாசுகழுவுவர்நீரும்,
பாலுறுபிரையும், காரமும்,ஒழுகலும்,
ஓரிடைச்சொல்லும், உறையெனற்குரிய.

**ஊக்கமென்னும்பெயர் : ௬**

வண்மையும்,முயற்சியும், மனத்தின்மிகுதியும்,
உண்மையும்,உரைக்கும் ஊக்கக்கிளவி.

**ஊர்தியென்னும்பெயர் : ௩**

தேரும்,மாவும், சிவிகையும்,என்றிவை
ஊர்தியென்னும் பெயரிற் றேன்றும்.

**எகினமென்னும்பெயர் : ௩**

கவரிமாவும், அன்னமும்,நாயும்,
எகினமென்பர் இயல்புணர்ந்தோரே.

**ஏமமென்னும்பெயர் : எ**

சேமம்,காவல், இன்பம்,இரவு,பொன்,
ஏமாப்பு,மயக்கம், ஏமமாகும்.

**ஓதியென்னும்பெயர் : ௩**

மாதர்மயிரும், மாலையும்,அன்னமும்,
ஓதியென்பர் உணர்ந்திசினேரே.

**ஓரியென்னும்பெயர் : உ**

ஆடவர்மயிரும், முசுவும்,ஓரி.

**ஓரையென்னும்பெயர் : ௩**

கூட்டமும்,மகளிர்விளையாட்டும்,இராசிக்
கூற்றையும்,ஓரைக் கிளவிகூறும்.

**கடியென்னும்பெயர் : ௩**

வாசமும்,பேயும், மணம்புணர்வும்,என்றிவை
காசின்றுரைக்கும் கடியென்கிளவி.

**கட்சியென்னும்பெயர் : உ**

காடும்,கூடும், கட்சியாகும்.

**கட்டளையென்னும்பெயர் : ௩**

நிறையறிகருவியும், உரையறிகருவியும்,
பிறவினையொப்பும், கட்டளைப்பெயரே.

**கண்டகமென்னும்பெயர் : ௩**

சுரிகை,உடைவாள், முள்,இவைமூன்றும்
கருதிற் கண்டகம் என்னக்கருதுவர்.

**கம்பலையென்னும்பெயர் : ௩**

இன்னுங்கோசை, நடுக்கம்,அச்சம்,
கன்னித்தமிழோர் கம்பலையென்ப.

**கரணமென்னும்பெயர் : ரு**

சொல்லியமுதற்பொருள் துணைக்காரணமும்,
பல்வகை யாடலும், மனத்தின்பகுதியும்,
கல்வியும்,எண்ணும், கரணமென் றாகும்.

**கருங்கையென்னும்பெயர் :**

கொன்றுவாழ்தொழிலினும் வன்பணித்தொழிலினும்
கன்றியதொழின்மை கருங்கை யெனப்படும்.

**கருவியென்னும்பெயர் : ௧௦**

கவசம்,பல்லியம், தொடர்பு,யாழ்,படைக்கலம்,
கனகமுதற்பூண், தொகுதி,மேகம்,
கல்லணை,உபகரணம் கழறுங்கருவி.

**கழலென்னும்பெயர் : ௩**

காலினடியும், காழெருடுதோலும்,
காலினணியும் கழலெனக் கருதுவர்.

**கழுதென்னும்பெயர் : ௩**

வண்டும், பேயும், இதணமும், கழுதாம்.

**களமென்னும்பெயர் : ௩**

மிடறு, பொருநிலம், கருமை, இம்மூன்றும்
களமென்றுரைப்பர் கருதுங்காலே.

**களரியென்னும்பெயர் : ௩**

கருமஞ்செய்யிடமும், களமும், பொருநிலனும்,
களரியென்பர் கற்றுணர்ந்தோரே.

**களனென்னும்பெயர் : ௪**

பொய்மையும், தொடர்பும், மருதநிலனே,
டெய்தியகளனெடு, நான்குங்களனே.

**கறையென்னும்பெயர் : ௪**

நிறமும், உதிரமும், உரலும், திறையும்,
கறையென்கிளவி ஆமெனக் கருதுவர்.

**கன்னலென்னும்பெயர் : ௫**

சருக்கரை, கரகம், நாழிகைவட்டில்,
உரைக்கிற்குடமும், நாழிகையுங்கன்னல்.

**காஞ்சியென்னும்பெயர் : ௪**

எதிரூன்றுதலும், நிலையின்மையும்,
அணிமேகலையும், ஒருமரப்பெயரும்,
கருதுங்காஞ்சி என்னுங்கட்டுரை.

**காரியென்னும்பெயர் : ௫**

ஆலம், நஞ்சே, சனிக்கோள், மாசாத்தனார்,
இருணிறத்தனவும், காரியெனப்படுமே.

**காரிகையென்னும்பெயர் : ௩**

அழகும், அழகுடை மாதரும், அதனொடு
கட்டளைக்கலித்துறையும், காரிகையென்ப.

**காழென்னும்பெயர் : ௫**

கொல்பரல், சேகு, மணியின்கோவை,
மாலையும், ஒளியும், காழென்றாகும்.

**கிழியென்னும்பெயர் : ௩**

எழுதுபடமும், இருநிதிப்பொதியும்,
கிழிபடுதுகிலும், கிழியெனற்குரிய.

**குயமென்னும்பெயர் : ௩**

அரிவையர்முலையும், கொடுவாளும், இளமையும்,
கருதியவிம்மூன்றும், குயமெனக் கருதுவர்.

**குவலயமென்னும்பெயர் : ௨**

நெய்தலும், நிலனும், குவலயமென்ப.

**குளிரென்னும்பெயர் : ௫**

கிளிகடிகருவி, இலைமூக்கரிகருவி,
குளிர்ச்சி, குடமுழவு, ஞெண்டும், குளிர் ஆகும்.

**குறிஞ்சியென்னும்பெயர் : ௩**

மலைச்சார்நிலனும், செம்மலர்முள்ளியும்,
குறிஞ்சிநிலப்பாடலும், குறிஞ்சியென் றாகும்.

**கூழென்னும்பெயர் : ௩**

பல்வகையுணவும், பயிரும், பொன்னும்,
கொள்பமாதோ கூழென்கிளவி.

**கூளியென்னும்பெயர் : ௩**

நட்பு,தொகுதி, பேய்,எனமூன் றும்,
வைத்தனர்கூளி ஆகவகுத்தே.

**கைக்கிளையென்னும்பெயர் : ௨**

ஒருதலைக்காமமும், யாழிலோர்நரம்பும்,
தெரியிற்கைக்கிளை எனப்பெயர்சிவணும்.

**கொன்னென்னும்பெயர் : ௪**

அச்சம்,பயனிலி, காலம்,பெருமையோ,
டப்பெயர்நான்கும் கொன்னெனவறைவர்.

**கோவென்னும்பெயர் : கக**

அந்தரம்,குலிசம், பாரியோடு,அத்திரம்,
வந்தநீர்,திசை, மலை,வேல்,மன்னவன்,
விழி,பசு,கோவென வேண்டினர்புலவர்.

**கோதையென்னும்பெயர் : ௬**

பூப்புனைமாலையும், மாலைபுனைமாதரும்,
தோற்புனைவின்னாண் தொடர்கைக்கட்டியும்,
கோச்சேரன்பெயர், மயிர்,காற்றும்,கோதை.

**கோலென்னும்பெயர் : ௬**

நிறையறிதுலாமும், அஞ்சனமெழுதுகருவியும்,
இறைவன்முறைநடாத்தலும், யாழ்நரம்பும்,அம்பும்,
குதிரைமத்திகையும், கோலென் றாகும்.

**கோளென்னும்பெயர் : ௪**

அலர்கதிர்முதலாம் அமரரும்,நாளும்,
கொலையும்,இடையூறும், கோளென்றாகும்.

**சாமமென்னும்பெயர் : ௩**

யாமம்,ஓர்வேதம், உபாயம்,சாமம்.

சாறென்னும்பெயர் : உ
விழவும்,கள்ளும், சாறென விளம்புவர்.

சிக்கமென்னும்பெயர் : ௩
உச்சியும்,மயிர்வார் சீப்பும்,உறியும்,
சிக்கமென்னும் பெயரொடு சிவணும்.

சித்திரமென்னும்பெயர் : ௩
மெய்யேபோலப் பொய்யையுரைத்தலும்,
செய்கோலவடிவும், அழகும்,சித்திரம்.

சிலையென்னும்பெயர் : உ
வில்லையும்,மலையையும், சிலையென விளம்புவர்.

சீரென்னும்பெயர் : அ
பல்வகையியங்களின் ஓசை,பாரம்,
ஒல்லுதல்,காற்றண்டை, ஒண்புகழ்,அழகு,
செல்வம்,சீர்மை, சீரென் றாகும்.

சுடரென்னும்பெயர் : ச
மதியும்,ஞாயிறும, கனலியும்,மற்றைப்
பொதுவுறுமொளியும், சுடரென் றாகும்.

செச்சையென்னும்பெயர் : உ
வெட்சியும்,வெள்ளாட் டேறும்,செச்சை.

செம்மலென்னும்பெயர் : ரு
இறைவன்,பழம்பூ, வீரர்,புத்திரர்,
அறையிற்செம்மையோ(டு), ஐந்தும்செம்மல்.

சேயென்னும்பெயர் : ச
செவ்வாய்,முருகன், இளமை,புத்திரர்,
இவ்வாறெல்லாஞ் சேயென விசைப்பர்.

**தேள்ளலென்னும்பெயர் : ௬**

சோர்வு,மிகுதல், உடன்படல்,படுகர்,
நாவினேடுஒலியும், தெருவும்,தேள்ளல்.

**தண்டேன்னும்பெயர் : உ**

தண்டும்,ஊன்று தடியும்,தண்டாம்.

**தபனனென்னும்பெயர் : உ**

அனலும்,அருக்கனும், தபனனென்ருகும்.

**தாணுவென்னும்பெயர் : உ**

குற்றியையும்,தூணையும், தாணுவென்ப.

**தாரென்னும்பெயர் : ச**

பூவும்,பூமாலையும், போர்முன்செல்கொடிப்படையும்,
மாவினுக்கணியும் கிண்கிணிமாலையும்,
தாவில்பெயர்க்கொடை தாரென்ருகும்.

**தாவரமென்னும்பெயர் :**

மரமும்மலையும் போலநிற்பன,
தருபெயர்தானே தாவரமாகும்.

**தானையென்னும்பெயர் : ௩**

கைப்படை,காலாட் படையே,ஆடை,
தப்பில்இம்மூன்றும் தானையென் ருகும்.

**திணையென்னும்பெயர் : ௩**

குலமும்,ஒழுக்கமும், ஒழுக்கநிகழ்ந்த
நிலமும்,திணையென நிகழ்த்துங்கிளவி.

**துஞ்சலென்னும்பெயர் : ௩**

சாதலும்,நிலைத்தலும், உறங்கலும்,துஞ்சல்.

**துத்தியென்னும்பெயர் : ௩**

சுணங்கும்,பொறியும், துய்ப்பனவும்,துத்தி.

**துப்பென்னும்பெயர் : ௪**

வண்ணம்,பவளம், வலியோடு,அரக்கு,என்
றெண்ணியநான்கும் துப்பெனவிசைப்பர்.

**தூவியென்னும்பெயர் :**

பசையும்,தசையும், பறவையிறகும்,
தொகுபெயர்தாமே தூவியென் றுரகும்.

**தொடியென்னும்பெயர் : ௨**

ஒருபலம்,வளையே, தொடியென்றுரகும்.

**தொய்யிலென்னும்பெயர் : ரு**

உழவுநிலத்தில் எழுவதோர்புதலும்,
குழையும்,மகிழ்ச்சியும், அழகும்,என்றிவை
தயரும்,கூறும் தொய்யிற்கிளவி.

**நகையென்னும்பெயர் :**

மகிழ்ச்சியின்,விளையாட்டின் வருநகைதானே.
இகழ்ச்சியிடத்து மெய்தற்குரித்தே.

**நவமென்னும்பெயர் : ௩**

ஒன்பதும்,கேண்மையும், புதுமையும்,நவமே.

**நவிரமென்னும்பெயர் : ௩**

மலையும்,உச்சியும், மருதயாழ்த்திறனும்,
நவிரமென்னும் நடைபெற் றியலும்.

**நாகமென்னும்பெயர் : கூ**

அரவும்,காரீயமும், அமரர்நாட்டொருபெயரும்,
மலையும்,யானையும், ஒருமரப்பெயரும்,
தெரியில்நாகம் எனப்பெயர் சிவணும்.

**நாகென்னும்பெயர் : அ**

கோடும்,எருமையும், மரையும்,நத்தும்,
மீன்பெணும்,இளைமையும், கெழுமையும்,இளைமரமும்,
நாகெனும்பெயரின் நடைபெற் றியலும்.

**நாஞ்சிலென்னும்பெயர் : உ**

எயிலுறுப்பு,உழுபடை, நாஞ்சிலாகும்.

**நாணென்னும்பெயர் : ச**

மாதர்மங்கலமும், அணியும்,மானமும்,
பாசமும்,நாணெனும், சொல்லிற் பயிலும்.

**நீலமென்னும்பெயர் : உ**

நீலமலரும், நீலநிறத்தனவும்,
நீலமென்னும் பெயரொடு நிகழும்.

**நாழிலென்னும்பெயர் : உ**

குவிற்பட்டோர், கொடிப்புல்லு,நாழில்.

**நேரென்னும்பெயர் : கூ**

உடன்படல்,உவமை, ஒத்தல்,நுட்பம்,
சமன்,பாதி,மிகுதி, தலைப்பாடு,தனிமை,என
நிகழ்ந்தவொன்பானும் நேரென்கிளவி.

**பகலென்னும்பெயர் : ரு**

நாளும்,ஒளியும், நடுவும்,பிளத்தலும்,
பாகுபடுத்தலும், பகலென்கிளவி.

**படையென்னும்பெயர் : ச**

சயனம்,பல்லணம், தானை,உழுநாஞ்சில்,
பயனென் றுரைக்கும் படையென்கிளவி.

பண்ணையென்னும்பெயர் : ௩

ஆயமும்,மகளிர் விளையாடற்றொழிலும்,
பாய்புனற்படுகரும், பண்ணையென் றாகும்.

பதமென்னும்பெயர் : அ

சோறும்,வழியும், சொல்லும்,காலும்,
ஈரமும்,சேமமும், புனலும்,காலையும்,
பாவலர்பதமெனப் பகருங்கிளவி.

பயிரென்னும்பெயர் : ரு

விதந்துகட்டியவழக்கும், விலங்கொடு,புட்குரலும்,
பசும்புல்லும்,பைங்கூழும், பயிரென் றாகும்.

பரியென்னும்பெயர் : சு

வருத்தமும்,செலவும், மாவினமும்,
பாதுகாத்தலும், பரியென்கிளவி.

பல்லமென்னும்பெயர் : ௩

காடியின்பெயரும், கணக்கிலோர்குணிப்பும்,
பகழியின்பெயரும், பல்லமென் றாகும்.

பற்றலென்னும்பெயர் : ௩

தொடலும்,வளைத்தலும், பிணித்தலும்,பற்றல்.

பனியென்னும்பெயர் : ரு

அச்சமும்,துன்பமும், நடுக்கமும்,துகினமும்,
பற்றியசீதமும், பனியெனப்படுமே.

பாணியென்னும்பெயர் : சு

நெடித்தற்பொழுதும், நீரொடு,கையும்,
பாடற்பல்லியமும், பாணியென்றாகும்.

**பாலையென்னும்பெயர் : சு**

*நீரின்றிவேனிற் றெறுநிலனும்,அந்நிலப்*
*பாடலும்,பாடற் சுவையும்,பாலை.*
*பொருள்வயிற்பிரிதலும், புணர்ந்துடன்போதலும்,*
*அதுபிரி வுணர்த்தலும், பாலையாகும்.*

**பாலென்னும்பெயர் : சு**

*பகுத்தல்,பக்கம், திசை,இயல்பு,என்ன*
*வகுத்தநான்கும் பாலென் றாகும்.*

**பாழியென்னும்பெயர் : சு**

*ஊரும்,வலியும், உறையுளும்,சயனமும்,*
*பாழியென் று பகரப்படுமே.*

**புரையென்னும்பெயர் : ௩**

*உயர்வும்,குற்றமும், உவமைச்சொல்லும்,*
*புரையென்கிளவிப் பொருளொடுபுணரும்.*

**புலவரென்னும்பெயர் : சு**

*அமரரும்,கவிஞரும், ஆடுநரும்,பாடுநரும்,*
*பொருநரும்,அறிஞரும், புலவரெனப்படுமே.*

**பூவையென்னும்பெயர் : உ**

*காயாமரமும், நாகணவாய்ப்புள்ளும்,*
*பூவையென்னும் பொருளொடு புணரும்.*

**பொதியென்னும்பெயர் : ௩**

*நிதியும்,சொற்பயனும், நிகழ்பலபண்டமும்,*
*பொதியென்கிளவிப் பொருளொடு புணரும்.*

**பொருநரென்னும்பெயர் : ௩**

*பொரும்போர்த்தலைவரும், பெருங்கூத்தின்கொடியரும்,*
*பொரும்படைவீரரும், பொருநரெனப்படுமே.*

**பொறியென்னும்பெயர்: சு**

திருவொடு,ஐம்பொறியும், செல்வம்,இலாஞ்சனையும்,
புகழ்ச்சிப்புலவர் பொறியெனப் புகல்வர்.

**பொறையென்னும்பெயர்: ரு**

மலை,சுமை,பாரம், அம்பற்சேந்தனொ
டுலவியபொறுமை,பார், ஐந்தும் பொறையே.

**மடங்கலென்னும்பெயர்: கா**

ஊழித்தீ,சிங்கம், உகமுடிவு,இடியென,
வாழித்தமிழோர் மடங்க லென்ப.
கொடுங்கூற்றின்பெயரும், நோயும்,கூறும்.

**மடலென்னும்பெயர்: உ**

பூவினிதழும், பனையிதழ்போல்பவும்,
வாய்பா டுரைக்கின் மடலென்கிளவி.

**மதுவென்னும்பெயர்: உ**

தேனும்,தேறலும், மதுவெனச்செப்புவர்.

**மருதமென்னும்பெயர்: உ**

பழனநிலனும், அந்நிலப்பாடலும்,
மருதமென்னும் பெயரின் வழங்கும்.

**மள்ளரென்னும்பெயர்: உ**

அருந்திறல்வீரர்க்கும், பெருந்திற லுழவர்க்கும்,
வருந்தகைத்தாகும் மள்ள ரெனும்பெயர்.

**மறமென்னும்பெயர்: ரு**

கொலையும்,சேவகமும், கொடுவினைச்செயலும்,
வலியும்,செற்றலும், மறமெனப்படுமே.

**மன்னென்னும்பெயர்: ங**

மன்னலும்,இடைச்சொல்லும், இறையும்,மன்னே.

**மாடேன்னும்பெயர் : ரு**

மணியும்,செல்வமும், நிறையும்,பக்கமும்,
தனமும்,மாடென் றுரைக்கத்தகுமே.

**மாலையென்னும்பெயர் : சு**

பொன்னின்மணியிற் பூவிற்சொல்லில்,
இன்னுறத்தொடுத்தலும், இரவும்,அந்தியும்,
மன்னுமியல்பும் மாலையென் றாகும்.

**மாலென்னும்பெயர் : கூ**

மாயோன்பெயரே, மயக்கம்,வேட்கை,
மேகம்,காற்று, பெருமை,கருநிறம்,
சோழன்,புதன்,எனச் சொற்றிடுமாலே.

**மாழையென்னும்பெயர் : சு**

ஆயமடமை, பொன்,உலோகக்கட்டி,
ஓலை,புளி,மா, மாழையென் றுரைக்கும்.

**முருகென்னும்பெயர் : அ**

விழவும்,குமர வேளும்,இளமையும்,
நறையும்,நாற்றமும், அகிலும்,எழுச்சியும்,
வெறியாட்டாளனும், முருகென விசைப்பர்.

**முல்லையென்னும்பெயர் : சு**

காடுசார்நிலனும், கான்மல்லிகையும்,
மோடுபடுவென்றியும், கற்பும்,முல்லை.

**முளரியென்னும்பெயர் : ரு**

எரியும்,தாமரையும், நுட்பமும்,முண்மரமும்,
உரியகாடும்,என் றைந்துமுளரி.

**மையென்னும்பெயர் : சு**

குற்றமும்,ஆடும், கருமையும்,கொண்டலும்,
மற்றிவை மையெனும் சொல்லொடு வருமே.

**வஞ்சியென்னும்பெயர் : சு**

மேற்செலவும், பாவிகற்பத்தொருபாவும்,
ஓர்கொடிப்பிறப்பும், அதனுவமைமாதரும்,
மற்றரும்பெயர்க்கொடை வஞ்சியென் ருகும்.

**வம்பென்னும்பெயர் : சு**

கச்சு,நிலையின்மை, புதுமை,கந்தம்,
ஒத்தநான்கும் வம்பென வுரைப்பர்.

**வயிரமென்னும்பெயர் : சா**

செற்றமும்,கூர்மையும், சேகும்,மணியும்,
வச்சிரமும்,வண்மையும், வயிரக்கிளவி.

**வயினென்னும்பெயர் : ந**

வயிறே,இடம்,மனை, மூன்றும் வயினும்.

**வளமென்னும்பெயர் : உ**

பண்டமும்,வளப்பாடும், வளமெனப்படுமே.

**வாகையென்னும்பெயர் : கo**

ஆள்வினைமுதலாம் செய்கையுநலனும்,
கைவலமுதலாம் கல்வியுமாண்மையும்,
சால்புமுதலாம் பண்புமீகையும்,
ஒழுக்கமுதலாம் தவமுமறத்துறையும்,
ஒருவரிெனுருவர் வென்றியும், மிகுதியும்,
வருவனவெல்லாம் வாகையென்னும்பெயர்.

**வாமமென்னும்பெயர் : சு**

குறளே,அழகு, குறங்கே,இடப்பால்,
இவையொருநான்கும் வாமமென்ப.

**வாரணமென்னும்பெயர் : ந**

யானையும்,கோழியும், சங்கும்,வாரணம்.

வாரியென்னும்பெயர் : ரு

கடலும்,நீர்மிகுதியும், கதவும்,வாயிலும்,
மடையும்,என்றிவை வாரியென்ப.

விதியென்னும்பெயர் : உ

இயல்பும்,செயலும், விதியென்றாகும்.

வியங்கோளென்னும்பெயர் : உ

எண்ணில்கொளலும், ஏவலும்,வியங்கோள்.

விருத்தியென்னும்பெயர் : உ

உரியசொல்லும், உரியபொருளும்,
விரியவுரைப்பது விருத்தியாகும்.

விழுமமென்னும்பெயர் : ௩

சிறப்பு,சீர்மை, இடும்பை,இம்மூன்றும்,
விரிக்கின்மேலோர் விழுமமென்ப.

விளரியென்னும்பெயர் : ௪

யாழினோர்நரம்பும், திறனில்யாழும்,
வேட்கைமிகுதியும், இளமையும்,விளரி.

வெள்ளையென்னும்பெயர் : ௩

வெள்ளாடு,வெண்பா, வெள்ளைவடிவின்,
வெள்ளையென்னும் பெயரின் விளம்புவர்.

வேழமென்னும்பெயர் : ௪

யானையும்,கரும்பும், கொறுக்கச்சியுடனும்,
வேயும்,கூறும் வேழக்கிளவி.

வையென்னும்பெயர் : ௩

நெல்லின்தாளும், புல்லும்,கூர்மையும்,
சொல்லின்மூன்றும் வையென்றாகும்.

வைகலென்னும்பெயர் : ௩

கழியுநாளும், புலரிக்காலையும்,
தழுவும்வைகல் தங்கலும்,உரித்தே.

வையமென்னும்பெயர் : ரு

சிவிகையும்,ஆனேறும், சகடமும்,தேரும்,
அவனியும்,வையம் எனப்பெயராகும்.

புலவி நீக்கிய கல்விச் செல்விக்
கமிழ்துசுவை யீந்த வரும்பெற லின்பத்
தொருபெருஞ் செல்வ னருவந்தைச் சேந்தன்
பகர்வுற்ற திவாகரத்துப்

பதினொன்றாவது

ஒருசொற்பல்பொருட் பெயர்த்தொகுதி

முற்றிற்று.

## ௧௨. பல்பொருட்கூட்டத் தொருபெயர்த்தொகுதி

கூறியதுகூறினுங் குற்றமில்லை
வேறொருபொருளை விளக்குமாயின்
முன்னமெய்துபதி னொருதொகுதி யுள்ளும்
வந்தன வாலொரு சொற்பல் பொருட்பெயர்த்
தொகுதியின் வந்த சொற்க ளென்னெனில்
ஆண்டுச் சிறப்புவகைக் கெய்தியவை
ஈண்டுப் பொதுவகைக் கெய்தவும் படுமே.

**ஒன்றென்னும்பெயர் :**

ஒன்றென் பதுவே: வீடுபே றாகும்.

**இருமையென்னும்பெயர் :**

இருமையென்பது: இம்மையும்,மறுமையும்.

**இருவினையென்னும்பெயர் :**

இருவினை: நல்வினை, தீவினை,ஆகும்.

**இருவகைத்தோற்றமென்னும்பெயர் :**

இருவகைத் தோற்றம்: சராசர மென்ப.

**இருவகையறமென்னும்பெயர் :**

இருவகை யறமே: இல்லறம்,துறவறம்.

**இருவகைக்கந்தமென்னும்பெயர் :**

இருவகைக் கந்தம்: நற்கந்தம்,துர்க்கந்தம்.

**இருசுடரென்னும்பெயர் :**

இருசுடர்: சந்திர, சூரியர்,ஆகும்.

**இருமரபென்னும்பெயர் :**

இருமரபு: தாய்வழி, தந்தைவழியே.

**இருவகைப்பொருளென்னும்பெயர் :**

இருவகைப்பொருள்: கல்விப்பொருள், செல்வப்பொருள்.

**இருவகையின்பமென்னும்பெயர் :**

இருவகையின்பம்: இல்லதும், உள்ளதும்.

**இருவகைவீடென்னும்பெயர் :**

இருவகைவீடு: பற்றுவீடு, பொருள்வீடு.

**மும்மையென்னும்பெயர் :**

மும்மை: உம்மையும், இம்மையும், மறுமையும்.

**முப்பொறியென்னும்பெயர் :**

மனமும், வாக்கும், காயமும், முப்பொறி.

**முச்செய்கையென்னும்பெயர் :**

படைத்தல், காத்தல், அழித்தல், முச்செய்கை.

**முக்குற்றமென்னும்பெயர் :**

முக்குற்றம்: காமம், வெகுளி, மயக்கம்.

**முக்காலமென்னும்பெயர் :**

இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம்,
எனமொழிந்த மூன்று காலமாகும்.

**மூவிடமென்னும்பெயர் :**

முன்னிலை, படர்க்கை, தன்மை, மூவிடம்.

**மூவுலகென்னும்பெயர் :**

பூமி, ஆகாயம், சுவர்க்கம், என்ப
தாமொருமூன்று நிலமெனுந் தகைய.

**மூவகைமொழியென்னும்பெயர் :**

பட்டாங்குபேசல், பழித்தல், புகழ்தல், என
முட்டின்றாகும் மூவகைமொழியே.

**மூச்சுடரென்னும்பெயர் :**

முச்சுடர்: ஆதித்தன், சந்திரன், அங்கி.

**முத்தீயென்னும்பெயர் :**

அந்தணர்முத்தீ: காருகபத்தியம்,
தென்றிசையங்கி, ஆகவநீயம்.

**முச்சீவவனமேலென்னும்பெயர் :**

உதரம், விந்து, கோபவனல், என
ஒருமூன் றாகும் சீவவனமேல.

**முக்குணமென்னும்பெயர் :**

முக்குணம்: சாத்துவிகம், இராசதம், தாமதம்.

**இவற்றுள் சாத்துவிககுணம் :**

சாத்துவிகம்: ஞானம், தவம், உண்மை, நல்லருள்,
ஆர்த்தமோனமோடு, ஐம்புல னடக்கல்.

**இராசதகுணம் :**

தானம், தவமே, தருமம் பேணல்,
ஞானம், கல்வி, நலனிவைதெரிதல்,
ஈனமில்லா விராசதகுணமே.

**தாமதகுணம் :**

தாமதம்: நிறைபேருண்டி, மடி, வஞ்சம்,
காமம், நீதிக்கேடு, உறக்கம், சலமே.

**மூவகைத்தானமென்னும்பெயர் :**

தலை, இடை, கடையென மூவகைதானம்.

**இவற்றுள் தலைப்படுதானம் :**

அறத்தினீற்றிய அரும்பெரும்பொருளை
புறத்துறைகுற்றமூன் றறுத்தநற் றவர்வயின்
உள்ளமுவந்தீதல் தலைப்படுதானம்.

**இடைப்படுதானம் :**

ஆதுலர், குருடர், மாதர்முதற்பிறர்
சிறுமையைப்பற்றி மனமிரங்கியீவது
இடைப்படுதானம் என்னப்படுமே.

**கடைப்படுதானம் :**

ஆர்வம், புகழே, அச்சம், கைம்மாறு
காரணம், கண்ணோட்டம், கடப்பாடென்றிவை
ஏழுங்கடைப்படு தானவுதவி.

**திரிகடுகமென்னும்பெயர் :**

திரிகடுகம்: சுக்கு, மிளகு, திப்பிலி.

**திரிபலையென்னும்பெயர் :**

திரிபலையாவது: கடு, நெல்லி, தான்றி.

**திரிபுரமென்னும்பெயர் :**

மும்மதில்: பொன்னும், வெள்ளியும், இரும்பும்,
அன்னசிவன்முன் னழித்தமுப்புரமே.

**சூரியன் மூவகைவீதியின்பெயர் :**

திருத்தகுமேடம், இடபம், மிதுனம்.

**நானிலத்தின்பெயர் :**

நானிலம்: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்.

**சதுரங்கமென்னும்பெயர் :**

சதுரங்கம்: யானை, தேர், குதிரை, காலாள்.

**நாற்கரணமென்னும்பெயர் :**

மனம், புத்தி, ஆங்காரம், சித்தம், நாற்கரணம்.

**நாற்கதியென்னும்பெயர் :**

நாற்கதி: உம்பர், மக்கள், விலங்கு, நரகர்.

**நால்வகை இழிச்சொல்லென்னும்பெயர் :**

பொய்,குறளை,கடுஞ்சொல், பயனில்சொல்,என
இவ்வகைநான்கும் இழித்தசொல்லே.

**நால்வகைவேதத்தின்பெயர் :**

நால்வகைவேதம்: இருக்கு,தைத்திரியம்,
சாமவேதம், அதர்வணம்தானே.

**நால்வகையரணென்னும்பெயர் :**

மலையரண்,காட்டரண், மதிலரண்,நீரரண்,
அவையேசிறப்பின் நால்வகையரணே.

**நால்வகைக்கேள்வியென்னும்பெயர் :**

அறம்,பொருள்,இன்பம் வீடெனநான்கும்
திறந்தெரிந்துகேட்டல் நால்வகைக்கேள்வி.
சொன்னநான்கினும் ஒத்தேயொழுகுதல்
ஐவகைக்கேள்வி ஆமென வறைவர்.

**நால்வகைப்புலமையென்னும்பெயர் :**

கவியே,கமகன், வாதி,வாக்கி,என
இவையொருநான்கே புலமைக்கியல்பே.

**இவற்றுட் கவியின்வகை :**

ஆசு,மதுரம், சித்திரம்,வித்தாரம்,என்
பாவகைபாடுவோன் கவியெனப்படுமே.

**கமகன்வகை :**

ஞாபகஞ் செம்பொருள் நடையினெப் பொருளும்
காசின் றுரைப்போன் கமகனாகும்.

**வாதிவகை :**

ஏதுவும் மேற்கோளும் எடுத்துக் காட்டி
போதி னளவும் செய்துதன் சொன்னிறீஇ
வாதிற் பிறர்சொன் மறுப்பான்வாதி.

**வாக்கிவகை :**

அறம்,பொருள்,இன்பம், வீடு,எனுந்திறங்கள்
கேட்க வேட்க இனியன கூறும்
ஆற்ற லுடையோன் வாக்கி யாகும்.

**அன்றியும் ஆசுகவிவகை :**

கொடுத்த பொருளில் தொடுத்த வின்பத்தில்
அடுத்த பொழுதில் பாடுவது ஆசுகவி.

**மதுரகவிவகை :**

பொருளின் பொலிவும் சொல்லின் செல்வமும்
தொடையுந் தொடைக்கண் விகற்பமுந் துதைந்து
உருவக முதலாம் அலங்காரம் உட்கொண்டு
ஓசை பொலிவுற் றுணர்வோ ருளங்கட்கும்
மாகட லமிழ்தம்போற் பாடுதல் மதுரகவி.

**சித்திரகவிவகை :**

மாலை மாற்றே, சக்கரம்,சுழிகுளம்,
ஏகபாதம், எழுகூற்றிருக்கை,
காதைகரப்பே, கரந்துறைப்பாட்டே,
பாதமயக்கே, பாவின்புணர்ப்பே,
கூடசதுக்கம், கோமூத்திரியே,
ஓரினத்தெழுத்தால் உய்த்தபாட்டே,
ஒற்றுப்பெயர்த்தல், ஒருபொருட்பாட்டே,
சித்திரப்பாவே, விசித்திரப்பாவே,
விகற்பநடையே, வினாவுத்தரமே,
சருப்பதோபத்திரம், சார்ந்தவெழுத்து,
வருக்கமும்,மற்றும் வடநூற்கடலுள்,
ஒருக்குடன்வைத்த உதாரணநோக்கி,
விரித்துமறைத்தும் மிறைக்கவிப்பாட்டுத்,
தெரித்துப்பாடுவது சித்திரகவியே.

**வித்தாரகவிவகை :**

மும்மணிக்கோவையும், பன்மணிமாலையும்,
மறமும்,கலிவெண் பாட்டும்,மடலூர்ச்சியும்,
கிரீடையும்,கூத்தும், பாசாண்டத்துறையும்,
விருத்தக்கவிதையும், இயலிசைநாடகத்தொடு
விரித்துப்பாடுவது வித்தாரகவியே.

**நால்வகைப் புண்ணியத்தோற்றமென்னும்பெயர் :**

நால்வகைப்புண்ணியத் தோற்றம்: தவத்துடன்,
மேலாமொழுக்கம், தானம்,கல்வி.

**நால்வகைநிலையென்னும்பெயர் :**

நிலையோர்நால்வகை நிலை: பைசாசம்,
ஆலீடம்,மண்டிலம், பிரத்தியாலீடம்.

**இவற்றுள் பைசாசநிலைவகை :**

ஒருகாணிலைநின் றொருகான்முடக்கும்
பரியாயமென்பது பைசாசநிலையே.

**ஆலீடநிலைவகை :**

வலக்கான்மண்டலித் திடக்கான்முந்துறும்
அதன்பெயர்ஆலீட நிலையதாகும்.

**மண்டிலநிலைவகை :**

இருகால்மண்டலித் திடுதல்மண்டிலநிலை.

**பிரத்தியாலீடநிலைவகை :**

வலக்கால்முந்துற் றிடக்கால்மண்டலிப்பிற்
பிரத்தியாலீடம் எனப்பெயர்பெறுமே.

**நான்குயிர்த்தோற்ற வகைப்பெயர் :**

நிலவுறுபையில், முட்டையில்,நிலத்தில்,
மெய்யகவியர்வையில், நான்குயிர்த்தோற்றம்.

ஐந்திணைவகைப்பெயர் :

ஐந்திணை :குறிஞ்சி, பாலை,முல்லை,
வந்தநெய்தல், மருதம்,ஆகும்.

பஞ்சவாசவகைப்பெயர் :

தக்கோலம்,ஏலம், இலவங்கம்,சாதிக்காய்,
கர்ப்பூரம்,என்றிவை கமழ்பஞ்சவாசம்.

பஞ்சாங்கவகைப்பெயர் :

திதியே,வாரம்,நாள், யோகம்,கரணம்,எனப்
பகருஞ்சோதிடப் பஞ்சாங்கமாகும்.

பஞ்சமாசத்தவகைப்பெயர் :

பஞ்சமாசத்தம் : தோல்,துளை,நரம்பு,
கஞ்சனை,பாடல், எனக்கழறினரே.

மதனன்பஞ்சபாணவகைப்பெயர் :

மதனன்பஞ்ச பாணமாவன:
முல்லை,அசோகு, முழுநீலம்,சூதப்பூ,
அல்லி[1]முளரியோ டைந்தெனமொழிப.

பஞ்சபாணச்செயல்வகை :

மதன்பஞ்சபாணச் செயல்:உன்மத்தம்,
தீரம்,சந்தாபம், வசீகரணம்,மோகனம்.

பஞ்சசயனவகைப்பெயர் :

மயிரின்சேணம், வன்பஞ்சு,தூவி,
பயிற்றுந்தண்வீப், பாய்,பஞ்சசயனம்.

சயனவகை :

மலர்ச்சயனம்,சலசயனம், தோற்சயனமாதி
பழிப்பில்பதினைந் தாகுஞ்சயனம்.

---

1. அல்லி - அகவிதழ்.

பஞ்சபாதகவகைப்பெயர் :

பஞ்சபாதகம்:கொலை, களவு,கள்ளுண்டல்,
எஞ்சலில்குருநிந்தை, பொய்யும்,என்ப.

ஐம்பால்வகைப்பெயர் :

ஒருவன்,ஒருத்தி, பலர்,ஒன்று,பல,என
அறியக்கூறிய பாலைந்தாகும்.

ஐம்பான்முடிவகைப்பெயர் :

ஐம்பான்முடியே: கொண்டை,சுருள்,குழல்,
வம்பார்பனிச்சை, வார்மயிர்முடியே.

ஐந்துண்டிவகைப்பெயர் :

கடித்துப்,பருகி, விழுங்கி,நக்கி,
எடுத்துச்சுவைத்தல், இவையைந்துண்டி.

குதிரைநடைவகைப்பெயர் :

மல்லகதி,மயூரகதி, வானரகதியொடு,
சொல்லியசசகதி, சரகதி,என்னப்
பல்லியற்பரிமாவிற் கைந்தொழினடையே.

ஐவகைவினாப்பெயர் :

அறியான்வினவல், அறிவொப்புக்காண்டல்,
ஐயமறுத்தல், அவனறிவுதான்கோடல்,
மெய்யவற்குக்காட்டலோடு, ஐவகைவினாவே.

ஈசனைம்முக வகைப்பெயர் :

சத்தியோசாதம், வாமம்,அகோரம்,
தற்புருடம்,ஈசானம்,என ஈசர்க்கைம்முகம்.

பஞ்சபூதவகைப்பெயர் :

மண்ணும்,நீரும், கனலும்,காற்றும்,
விண்ணும்,பஞ்ச பூதமென்ப.

**ஐம்பொறிவகைப்பெயர் :**

மெய்,வாய்,கண்,மூக்கு, செவி,ஐம்பொறியே.

**ஐவகைத்தாயர்வகைப்பெயர் :**

பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய்,முலைத்தாய்,
கைத்தாய்,செவிலித்தாய், ஐந்தெனக் கழறுவர்.

**அந்தணரறுதொழில்வகைப்பெயர் :**

ஓதல்,ஓதுவித்தல், வேட்டல்,வேட்பித்தல்,
ஈதல்,ஏற்றல், என்றிருமூவகை
ஆதிக்காலத் தந்தணரறுதொழில்.

**அரசரறுதொழில்வகைப்பெயர் :**

அரசரறுதொழில்: ஓதல்,வேட்டல்,
புரைதீரப்பெரும் பார்ப்புரத்தல்,ஈதல்,
கரையறுபடைக்கலம் கற்றல்,விசயம்.

**வணிகரறுதொழில்வகைப்பெயர் :**

வணிகரறுதொழில்: ஓதல்,வேட்டல்,
ஈதல்,உழவு, பசுக்காவல்,வாணிகம்.

**வேளாளரறுதொழில்வகைப்பெயர் :**

வேளாளரறுதொழில்: உழவு,பசுக்காவல்,
தெள்ளிதின்வாணிபம், குயிலுவம்,காருகவினை,
ஒள்ளியவிருபிறப் பாளர்க்கேவல்செயல்.

**இவற்றுள் குயிலுவத்தொழில்வகை :**

குயிலுவம்:வாத்தியம் கொட்டுதலாகும்.

**காருகவினைவகை :**

பருத்திநூல்பட்டுநூல் அமைத்தாடையாக்கலும்,
சுமத்தலும்பிறவும் காருகவினைத்தொழில்.

ஆறங்கவகைப்பெயர் :

ஆறங்கம்:மந்திரம், வியாகரணம்,நிகண்டு,
சந்தோபிசிதி, நிருத்தம்,சோதிடம்.

அறுசமயவகைப்பெயர் :

அறுசமயம்:வைசேடிகம்,நையாயிகம்,
மறுவின்மீமாஞ்சை,ஆருகதம்,
பௌத்தம்,பிரதிலோகாயிதம்,என்னும்பெற்றிய.

பாடாண்டத்துறைவகைப்பெயர் :

பாடாண்டத்துறையும் இவற்றுட்பலவாம்,
பேசிற் றொண்ணூற் றறுவகைப்படுமே.

ஆறுட்பகைவகைப்பெயர் :

ஆறுட்பகை:காமம், வெகுளி,உலோபம்,
மாறுகொண்மோகம், மதம்,மாற்சரியம்.

அறுவகைத்தானையின்பெயர் :

வேற்றானை,வாட்டானை, விற்றானை,மேலோர்
தேர்த்தானை,பரித்தானை, களிற்றுத்தானை,என
ஆற்றல்சான்ற அறுவகைத்தானை.

நன்னாட்டமைதியறுவகைப்பெயர் :

செல்வம்,விளைவு, பல்வளம்,செங்கோன்மை,
கொல்குறும்பின்மை, கொடும்பிணியின்மை,
இவ்வயினாறும் நன்னாட்டமைதி.

அறுசுவைவகைப்பெயர் :

அறுசுவை:தித்தித்தல், புளித்தல்,கைத்தல்,
மறுவறு துவர்த்தல், கூர்த்தல்,காழ்த்தல்.

அரசியலறுவகைப்பெயர் :

படையும்,குடியும், கூழும்,அமைச்சும்,
அரணும்,நட்பும், அரசியலாறே.

**அறுவகையரசியலின்பெயர் :**

அறநிலையறமும், மறநிலையறமும்,
அறநிலைப்பொருளும், மறநிலைப்பொருளும்,
அறநிலையின்பமும், மறநிலையின்பமும்,
எனவறுவகைத்தே உலகினடையே.

**இவற்றுள் அறநிலையறத்தின்வகை :**

வருணக்காப்பிற் பிறழாநெறிநிலை
பெறுவற்பொருளாற் பேணும்பெற்றி
அறநிலையறமென் றறைந்தனர்புலவர்.

**மறநிலையறத்தின்வகை :**

ஆநிரைமீட்டல் அரும்வகைதெறுதல்
ஊனமில்செஞ்சோற் றுதவிப்போர்வயின்
ஈனஞ்செய்தலும் மறநிலையறமே.

**அறநிலைப்பொருள்வகை :**

நெறிவழிநின்று நெறியாலுழந்து
பெறும்பொருளென்ப அறநிலைப்பொருளே.

**மறநிலைப்பொருள்வகை :**

அமருழந்துகொண்டவும் அருந்திறைகொண்டவும்
தவறுசெய்தீயோர் தண்டப்பொருளும்
கவர்சூதுவென்றவும் மறநிலைப்பொருளே.

**அறநிலையின்பவகை:**

ஒத்தகுலமும் ஒத்தவாயுளும்
ஒத்தசெல்வமும் ஒத்தநலனும்
அத்தகவுடைய தறநிலையின்பம்.

**மறநிலையின்பவகை :**

ஏறுதழுவல் இலக்கமெய்தல்
கூறுபொருள்கொடுத்தல் வலிதிற்கோடல்
மாறுபடுநிலையும் மறநிலையின்பம்.

**அறுவகைக்கருமபூமிக் குரிமைவகைப்பெயர் :**

உழவு,தொழிலே, வரைவு,வாணிகம்,
விச்சை,சிற்பம், என்றித்திறத்தறு
தொழில்கற்பநடையது கருமபூமி.

**போகபூமியின்வகை :**

பதினாறாட்டைக் குமாரனும் விதிவழிப்
பன்னீராட்டைக் குமரியுமாகி
ஒத்தவன்பினும் ஒத்தநலத்தினும்
கற்பகநன்மர நற்பயனுதவ
ஆகியசெய்தவத் தனவுமவ்வழி
போகநுகர்வது போகபூமி.

**போகபூமியறுவகைப்பெயர் :**

ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம்,
ஏமதவஞ்சம், இரணவஞ்சம்,
தேவகுருவம், உத்தரகுருவம்,என
போகபூமி அறுவகைப்படுமே.

**சக்கரவர்த்திகள் வகைப்பெயர் :**

அரிச்சந்திரன்,நளன் முசுகுந்தன்,புரூரவன்,
சகரன்,கார்த்தவீரியன்,என்ன
அறுவகைச்சக்கர வர்த்திகளாகும்.

**ஏழுதீவின் வகைப்பெயர் :**

நாவலந்தீவே, இறலித்தீவே,
குசையின்றீவே, கிரவுஞ்சத்தீவே,

பல்பொருட்கூட்டத் தொருபெயர்த்தொகுதி உகூடு

சான்மலித்தீவே, தெங்கின்றீவே,
புட்கரத்தீவே எனத்தீவேழே
எழ்பெருந்தீவிற்கும் ஏழ்பொழிலெனப்படும்.

**ஏழுசமுத்திர வகைப்பெயர் :**

உவரோடு,கரும்பு, மது,நெய்,தயிர்,பால்,புனல்,
மாகட லேழென வகுத்தனர் புலவர்.

**மேலேழுலக வகைப்பெயர் :**

உலகேழ்:பூலோகம், புவலோகம்,சுவலோகம்,
மகலோகம்,சனலோகம், தவலோகம்,சத்தியலோகம்.

**கீழேழுலக வகைப்பெயர் :**

அதல,விதல, சுதல,நிதல,
தராதல,ரசாதல, மகாதலம்,என்னப்
பாதலமோ ரேழுலகெனப்பகர்வர்
இருவகையேழ்பதி னுலகென்ப.

**சத்தகுல பருப்பதவகைப்பெயர் :**

இமயம்,மந்தரம், கைலை,வடவிந்தம்,
நிடதம்,ஏமகூடம், நீலகிரி,என
குலவரையேழும் கூறுமென்ப.

**ஏழுமேகவகையின்பெயர் :**

புட்கலாவர்த்தம், சங்காரித்தம்,
ஆவர்த்தம்,சம்வர்த்தம்,துரோணம்,
காளமுகியொடு, நீலவருணம்,என
ஏழுமுகிலின் பெயராகும்மே.

**ஏழுமழைவகைப்பெயர் :**

பொன்னும்,பூவும், புனலும்,மணியும்,
மண்ணொடு,கல்,தீ, சொரியுமதன்பெயர்.

**ஏழுநரக வகைப்பெயர் :**

பெருங்களிற்றுவட்டம், பெருமணல்வட்டம்,
எரியின்வட்டம், புகையின்வட்டம்,
இருளின்வட்டம், பெருங்கீழ்வட்டம்,
அரிபடைவட்டம்,என் றெழுவகைநரகம்.

**சத்தமாதர்கள் வகைப்பெயர் :**

அபிராமி,இந்திராணி, வைணவி,வராகி,
கௌமாரி,மயேசுரி, மாகாளி,எழுவர்.

**எழுவகைத் தாதென்னும்பெயர் :**

இரதம்,உதிரம், என்பு,தோல்,தசை,
மூளை,சுக்கிலம், எழுவகைத்தாதே.

**செங்கோல்வேந்த னெழுவகைப்பேற்றின்பெயர் :**

அறம்,பொருள்,இன்பம், அன்பு,பொறுமை,
திறம்பாப்புகழ்,மதி, என்றிவையேழும்
பெருஞ்செங் கோலின் எழுவகைப்பேறே.

**அட்டமாநாக வகைப்பெயர் :**

அட்டமாநாகம்: வாசுகி,அனந்தன்,
விட்டபற்பன், மகாபற்பன்,சங்க
பாலன்,தக்கன், கார்க்கோடகனே,
ஏனுமாகுளிகன்,என் றெண்வகைநாகம்.

**அட்டதிக்குப்பாலகர் வகைப்பெயர் :**

இந்திரன்,அங்கி, இயமன்,நிருதி,வருணன்,
வந்தவாயு, குபேரன்,ஈசானன்,
என்னவெண்டிசை உலோகபாலகர்.

**அட்டதிக்குப்பாலகர் சார்திசைவகைப்பெயர் :**

கீழ்த்திசைமுதலாக சார்ச்சியுடைமையின்
அவ்வவர்பெயரொடும் அத்திசைமொழிப.

**சூரியசந்திரர் சார்திசைப்பெயர்:**

கீழ்த்திசையருக்கற்கு வடதிசைசோமற்கு,
சார்ச்சியாகச் சாற்றினர்புலவர்.

**எண்டிசைக்குறிப்பின் வகைப்பெயர்:**

கொடியும்,பூனையும் சீயமும்,ஞாளியும்,
இடபமும்,கழுதையும், யானையும்,காகமும்,
என்பவெண்டிசை குறிப்பினதாகும்.

**அட்டமங்கல வகைப்பெயர்:**

கவரி,நிறைகுடம், கண்ணாடி,தோட்டி,
முரசு,விளக்கு, பதாகை,இணைக்கயல்,
அளவில்சிறப்பின் அட்டமங்கலவகை.

**அட்டமூர்த்தவகைப்பெயர்:**

பார்,நீர்,தேயு, வாயு,ஆகாயம்,
சூரியன்,இந்து,இயமானன்,அட்டமூர்த்தம்.

**அட்டமாசித்தி வகைப்பெயர்:**

அணிமா,மகிமா, கரிமா,இலகிமா,
பிராத்தி,பிராகாமியம், ஈசத்துவம்,வசித்துவம்,
ஆம்பெறற்கரிய அட்டமாசித்தி.

**அட்டாங்கயோக வகைப்பெயர்:**

இயமம்,நியமம், ஆசனம்,பிராணாயாமம்,
பிரத்தியாகாரம், தாரணை,தியானம்,
சமாதி,என்ப எண்வகையோகம்.

**இவற்றுள், இயமத்தின்வகை:**

கொல்லாவிரதம், மெய்ம்மைகூறல்,
கள்ளாமை,பிறர்பொருட் காதலின்மை,
இவ்வயினிந்தியம் அடக்கலுமியமம்.

**நியமத்தின்வகை :**

தவமொடுதூய்மை தத்துவநூலோர்தல்
மனமுவந்திருத்தல் தெய்வம்வழிபடல்
நினையுங்காலை நியமமாகும்.

**சிறப்பிலா வெண்பேரெச்ச வகைப்பெயர் :**

சிறப்பில்சிதடும், உறுப்பில்பிண்டமும்,
கூனுங்,குறளும், ஊமையுஞ்,செவிடும்,
முடமும்உறுப்பு, மருளும்,மக்கட்கு
திண்சிறப்பில்லா எண்பே ரெச்சம்.

**எண்வகைக் காட்சியென்னும்பெயர் :**

ஐயப்படாமை, அவாவொன்றின்மை,
அறிவுவர்ப்பின்மை, மூடமறுத்தல்,
அறப்பழியழித்தல், அழிந்தோரைநிறுத்தல்,
அறத்தைவிளக்கல், அறுசமயத்தவர்க்கன்புறல்,
ஆகுமென்ப எண்வகைக்காட்சி.

**எண்குண வகைப்பெயர் :**

அனந்தஞானம், அனந்ததரிசனம்,
அனந்தவீரியம், அனந்தசுகியே,
நாமமின்மை, கோத்திரமின்மை,
ஆயுவின்மை, அழியாவின்பம்,என்
றேயுங்காலை இறைவனெண்குணம்.

**எண்வகைக் குற்றத்தின்பெயர் :**

ஞானாவரணியம், தரிசனாவரணியம்,
வேதநீயம், மோகநீயம்,
ஆயுநாமம், கோத்திரம்,அந்த
ராயம்,[1]என்ப எண்வகைக்குற்றம்.

---

1. அந்தராயம் இரண்டு: காயவந்தராயம், வாயுவந்தராயம்.

**வணிகரெண்குண வகைப்பெயர் :**

தனிமையாதல், முனிவிலனாதல்,
இடனறிந்தொழுகல், பொழுதொடுபுணர்தல்,
உறுவதுதெரிதல், இறுவதஞ்சாமை,
ஈட்டல்,பகுத்தல், என்றிவையெட்டும்
வாட்டமில்லா வணிகரதியற்குணம்.

**எண்வகைக் கணமென்னும்பெயர் :**

நீரின்கணமும், தீயின்கணமும்,
அந்தரகணமும், இயமானன்கணமும்,
மதியின்கணமும், எரிகதிர்க்கணமும்,
மாருதகணமும், மாநிலக்கணமும்,
எட்டுமுன்னச் சீர்க்குவருங்கணம்.

**முதற்சீரிலக்கணவகை :**

அசைமூன்றதுவே முதற்சீரிலக்கணம்.

**இவற்றுள், நீரின்கணவகை :**

நேர்முதலாகி நிரையிணைபின்வரின்
நீரின்கணமென நிகழுஞ்சீரே.

**தீயின்கணவகை :**

நேர்நடுவாகி நிரையிருபாலும்
சேருஞ்சீரது செந்தீக்கணமே.

**அந்தரகணவகை :**

இறுதிநேராய் இணைநிரைமுன்னர்
வருஞ்சீரந்தர கணமென வழங்கும்.

**இயமானன்கணவகை :**

நேர்மூன்றாகிய சீரியமானன்.

**மதியின்கணவகை :**

முந்துநிரையாய் இணைநேர்பின்வரில்
இந்துவின் கணமென் றியம்பப்படுமே.

**எரிகதிர் கணவகை :**

நிரைநடுவாகி நேரிருபால்வரின்
எரிகதிர்க்கணமென் றியம்பல்வேண்டும்.

**மாருதகணவகை :**

இறுதிநிரையாய் இணைநேர்முன்னர்
வருசீர்மாருத கணமெனவைப்பர்.

**நிலத்தின்கணவகை :**

நிரைமூன் றதுசீர் நிலத்தின்கணமே.

**இவ்வேட்டினுணற்கணவகை :**

நிலனும்நீரும் மதியியமானனும்,
நலமிகுமுதல்வரில் பிறநாலூனம்.

**எண்வகைமெய்ப்பரிசத்தின்பெயர் :**

ஒட்டுதல்,பிடித்தல், தீண்டல்,தடவுதல்,
கட்டுதல்,வெட்டல், குத்தல்,ஊன்றல்,என்
றெட்டுந்தக்க மெய்ப்பரிசமென்ப.

**எண்வகைக் கணிதத்தின்பெயர் :**

சங்கலிதம்,விபகலிதம், குணநம்,பாகாரம்,
வர்க்கம்,வர்க்க மூலங்,கனமொடு,
கனமூலமென்னக் காட்டுமெண்கணிதம்.

**எண்வகைமணத்தின்பெயர் :**

பிரமம்,பிரசா பத்தியம்,ஆரிடம்,
தெய்வம்,காந்தருவம், ஆசுரம்,இராக்கதம்,
பைசாசம்,என்னப் பகருமெண்மணமே.

எண்வகைவெற்றியின்பெயர் :

வெண்பா

வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்—உட்கார்
எதிரூன்றல் காஞ்சி யெயில்காத்த னொச்சி
யதுவளைத்த லாகு முழிஞை.

சூத்திரம்

அதிரப்பொருவது தும்பையாகும்
போர்க்களத்து மிக்கார்செரு வென்றது வாகையாம்
அத்திணைத்தொழிலும் அத்திணைப்பூவும்
அப்பெயர்பெறுத லங்கிலத்துரியவே.

எண்டிசையானைப்பெயர் :

ஐராவதமொடு, புண்டரீகம்,
வாமனமோடு, குமுதம்,அஞ்சனம்,
புட்பதந்தம், சார்வபூமம்,
சுப்பிரதீபம் என்னச்சொல்லும்,
எண்டிசையானைக் கியலும்பெயரே.

நவகண்டத்தின்பெயர் :

வடபால்விதேகம், தென்பால்விதேகம்,
கீழ்பால்விதேகம், மேல்பால்விதேகம்,
வடபாலிரேவதம், தென்பாலிரேவதம்,
வடபாற்பரதம், தென்பாற்பரதம்,
மத்திமகண்டம்,என் றித்திறமென்ப
நாவலந்தீவின் நவகண்டப்பெயரே.

நவபுண்ணியத்தின்பெயர் :

எதிர்கொளல்,பணிதல், இருக்கை,கானீர்,
புதுமலர்,தூபம், விளக்கே,புகழ்தல்,

அறுசுவையுண்டி அருந்தவர்க்காற்றுதல்,
நவபுண்ணியத்தின் நாமமாகும்.

நவதாரணைப்பெயர் :

நாமதாரணை, வச்சிரதாரணை,
மாயாதாரணை, சித்திரதாரணை,
செய்யுட்டாரணை, நிறைவுகுறைவாகிய
எண்பொருட்டாரணை, சத்ததாரணை,
வத்துதாரணை, சதுரங்கதாரணை,
நவதாரணையின் நாமமாகும்.

நவதாளப்பெயர் :

அரிதாளம்,மருமதாளஞ்,சமதாளம்,
சயதாளஞ்,சித்திரதாளந்,துருவதாளம்,
நிவிர்த்ததாளம், படிமதாளம்,
விடதாளம்,இவையே நவதாளமென்ப.

நவமணிப்பெயர் :

வைரம்,வைடூரியம், முத்து,மாணிக்கம்,
பவளம்,கோமேதகம், இந்திரநீலம்,
மரகதம்,புட்பராகம், நவமணிப்பெயரே.

நாடகநவரசப்பெயர் :

சிங்காரம்,பெருநகை, கருணை,வீரியம்,
அற்புதம்,பயம்,ரௌத்திரம்,குற்சை,சாந்தம்,
என்னநாடகத்தியலுநவரசம்.

பத்துத்திசைப்பெயர் :

கிழக்கும்,தெற்கும், மேற்கும்,வடக்கும்,என
நடக்குமென்ப நாற்பெருந்திசையும்
அந்தராளம் திசைநாற்கோணம்
கீழ்மேற்றிசையொடு பத்தெனக்கிளப்பர்.

**தசாங்கத்தின்பெயர் :**

ஆறும்,மலையும், யானையும்,குதிரையும்,
நாடும்,ஊரும், கொடியும்,முரசும்,
தாரும்,தேரும், தசாங்கமெனப்படும்.
தேறினதற்குச் சின்னமுமென்ப.

**அருச்சுனன் தசநாமத்தின்பெயர் :**

பற்குனன்,சுவேத வாகனன்,பார்த்தன்,
சவ்வியசாசி, கிரீடி,தனஞ்சயன்,
விசயன்,வீபற்சு, காண்டிவன்,கிருட்டினன்,
அருச்சுனன் தச நாமங்களாகும்.

**வேளாளர் பத்துவகைத்தொழிற்பெயர் :**

ஆணைவழிநிற்றல், அழிந்தோரைநிறுத்தல்,
கைக்கடனாற்றல், கசிவகத்துண்மை,
ஒக்கல்போற்றல், ஒவாமுயற்சி,
மன்னிறைதருதல், ஒற்றுமைகோடல்,
விருந்துபுறந்தருதல், திருந்தியவொழுக்கம்,
வேளாண்மைமைந்தர்க் கோரீரைந்தே.

**அரிதசாவதாரப்பெயர் :**

மீனே,ஆமை, வராகம்,நரசிங்கம்,
வாமனன்,பரசி ராமன்,இராமன்,
பலதேவன்,வசு, தேவன்,வருகற்கி,என்
றருகுமீரைந்தும் அரியவதாரம்.

**சிற்பத்தொழிற் பத்துறுப்பின்பெயர் :**

கல்லும்,உலோகமும் செங்கலும்,மரமும்,
மண்ணுஞ்,சுதையும், தந்தமும்,வண்ணமும்,
கண்டசருக்கரையும், மெழுகும்,என்றிவை
பத்தேசிற்பத் தொழிற்குறுப்பாவன.

**ஏகாதச வுருத்திரர்பெயர் :**

மாதேவன்,சிவன், உருத்திரன்,சங்கரன்,
நீலலோகிதன், ஈசானன்,விசயன்,
வீமதேவன், பவோற்பவன்,காபாலி,
சௌமியன்,ஏகாதச உருத்திரர்க்கும்.

**துவாதசாதித்தர்பெயர் :**

தாத்துரு,சக்கரன், அரி,யமன்,மித்திரன்,
வருணன்,அஞ்சுமான், இரணியன்,பகவான்,
திவச்சுவான்,பூடன், சவித்துருதுவட்டன்,
எனச்சூரியற்கு பன்னிருபெயரே.

**உயிர்வேதனை பன்னிரண்டுவகைப்பெயர் :**

அனலும்,சீதமும், வாதமும்,பனியும்,
புனலும்,அசனியும், விடமும்,விடமருந்தும்,
பசியும்,நீர்வேட்கையும், பிணியும்,முனிவருமையும்,
உயிரின்வேதனை ஓரீராறே.

**பதினெண்பாடையின்பெயர் :**

அங்கம்,வங்கம், கலிங்கம்,கௌசிகம்,
சிந்து,சோனகம், திரவிடம்,சிங்களம்,
மகதம்,கோசலம், மராடம்,கொங்கணம்,
துளுவம்,சாவகம், சீனம்,காம்போஜம்,
பருணம்,பப்பரம்,எனப் பதினெண்பாடை.

**தேவர் பதினெண்கண வகைப்பெயர் :**

அமரர்,சித்தர், அசுரர்,தைத்தியர்,
